வரு.75 இல. 30 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24பக்கங்கள் 100/-



கருணை இல்லம் கோகுலம்

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk


# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் වාරමන්ජරි

2023 ஜுலை 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

July 30 Sunday, 2023



ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு,கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk


/ Thinakaran.lk / ThinakaranLK


03
சின்னமுத்து: தடுப்பூசி பெறாதவர்களே பாதிக்கப்படுகின்றனர்


05
அரசியல் செய்யும் நேரம் இதுவல்ல!



12
அமெ. வட்டி வீத அதிகரிப்பு இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்துமா?


24
விளையாட்டின் மறுபக்கம் சச்சினி பெரேரா

## பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோனுடன் ஜனாதிபதி ரணில் பேச்சு



பல புதிய துறைகள் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி ரணிலுடன் பிரான்ஸ் ஜனாதிபதி ஆராய்வு

# பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி மீண்டும் உறுதி

### இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்துக்கும் பிரான்ஸ் ஆதரவு

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் தனது தென் பசுபிக் பிராந்தியத்துக்கான விஜயத்தின் பின்னர் நேற்று முன்தினம் (28) இலங்கைக்கு வரலாற்று சிறப்புமிக்க விஜயமொன்றை மேற்கொண்டார். பிரான்ஸ் ஜனாதிபதியொருவர் இந்த நாட்டுக்கு வருகை தந்தமை இதுவே முதல் தடவையாகும்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன் ஆகியோர் கொழும்பில் சிநேகபூர்வ மற்றும் சாதகமான இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர். பிரான்ஸ் மற்றும் இலங்கைக்கிடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச தொடர்புகளில் பிரான்ஸின் ஈடுபாட்டுக்கு பாராட்டு தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தல், வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு மற்றும் இந்து பசுபிக் வலய பிரச்சினைகள் தொடர்பாக வழங்கப்படும் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

அண்மையில் பிரான்ஸில் நடைபெற்ற புதிய உலகளாவிய நிதி இணக்கப்பாட்டுக்கான மாநாட்டின் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தான் நடத்திய கலந்துரையாடல் தொடர்பாக ஜனாதிபதி மெக்ரோன் நினைவுகூர்ந்தார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிப்பதாக அவர் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்ததுடன், இலங்கையின் நான்காவது பெரிய கடன் வழங்குனரென்ற வகையில் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு தனது ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

மேற்படி சந்திப்பின் நிறைவில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்த பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன்,

"இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்து சமுத்திரத்தின் திறந்த, விரிவான மற்றும் சுபீட்சமான இந்து பசுபிக் பிராந்தியத்தின் பொதுவான இலக்குகளை பகிர்ந்துகொள்ளும் இரண்டு நாடுகளாகும். நாம் அதனை கொழும்பில் மீண்டும்

06

## தையிட்டி விவகாரத்துக்கு விரைவில் சுமூகமான தீர்வு

### மக்களின் காணி விடுவிப்புக்கு சாதகமான முடிவு



அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியிலுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சாதகமான முடிவு எட்டப்பட்டிருப்பதாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

06

### ஜப்பான் வெளிவிவகார அமைச்சருடன் ஜனாதிபதி சந்திப்பு



இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமசா (HAYASHI Yoshimasa), ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் நேற்று (29) சந்தித்து கலந்துரையாடினார். அவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவேற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

பதினொரு நாட்களில்

## சர்வதேச அரச தலைவர்கள், முக்கியஸ்தர்களின் வருகை

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதிக்கு கிடைத்த சிறந்த வாய்ப்பு

பதினொரு நாட்களுக்குள் சர்வதேச அரச தலைவர்கள் இருவர் மற்றும் வெளிநாடுகளின் அரச முக்கியஸ்தர்கள் இரண்டு பேரை சந்திக்க முடிந்துள்ளமை இலங்கையின் வரலாற்றில் ஜனாதிபதி ஒருவருக்கு கிடைத்த சிறந்த வாய்ப்பாகும் என்பதுடன், அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரலாற்றுப் பதிவாக்கியுள்ளார். அந்த வகையில், உலகின் ஐந்தாவது பொருளாதார வளர்ச்சியடைந்த நாடான

06

இந்தியா - இலங்கைக்கிடையே

## கடலுக்கடியில் எரிபொருள் விநியோக குழாய் திட்டம்

விரைவில் ஆரம்பிக்கப்படுமென இந்திய நிறுவனம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள குழாய் மூலமான எரிபொருள் விநியோக செயற்றிட்டம் தொடர்பான முதற்கட்ட ஆய்வுகளை

06

## சீதாவக்க ஒ.டி.சி ரயில் சேவை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்



ஆகஸ்ட் 05ஆம் திகதி முதல் ஆரம்பம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஞாயிற்றுக்கிழமைகளில் மாத்திரம் சேவையில் ஈடுபட்டு வந்த சீதாவக்க

06






வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து

### வாசிப்பும் இலக்கியமும் குன்றிச் செல்லும் துயரம்!

நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் நன்மைகளை விட தீங்கான விடயங்களே அதிகம் உள்ளனவென்று பொதுவெளியில் நிலவுகின்ற விமர்சனங்களில் உண்மை இல்லாமலில்லை. இன்றைய நவீனத்தின் தீங்கான விளைவுகளில் ஒன்றுதான் இளைய தலைமுறையினர் மத்தியில் இலக்கியம் மீதான நாட்டம் இல்லாமல் போனதாகும்.

இலக்கியம் மீதான ஈடுபாடு இப்போதெல்லாம் வெகுவாகவே குறைந்து போய்விட்டதென்பதை சொல்லிப் புரிய வைக்க வேண்டியதில்லை. இன்றைய இளையதலைமுறையினரில் எத்தனை பேர் சிறுகதை, நாவல், கவிதை போன்ற இலக்கியங்களைத் தேடி வாசிக்கின்றார்கள் என்பதை ஆராய்ந்தால் இந்த உண்மை இலகுவாகவே புரிந்து விடும்.

அக்காலத்து பிரபல இலக்கியப் படைப்பாளிகளை மாத்திரமன்றி, இக்கால இலக்கியப் படைப்பாளிகளையும் பற்றி இன்றைய தலைமுறையினருக்கு முற்றாகவே தெரியாது. அதுமாத்திரமன்றி சிறுகதை, நாவல், கவிதை போன்ற இலக்கியங்கள் தொடர்பான சிற்றறிவும் இன்றைய இளம் தலைமுறையினருக்குக் கிடையாதென்பது வேதனையான விடயம்.

இன்றைய இளைய தலைமுறையினர் சமூக ஊடகங்களிலேயே எவ்வேளையிலும் மூழ்கிக் கிடக்கின்றார்கள். தமது அந்தரங்கங்களை அடுத்தவருடன் பகிர்ந்து கொள்வதிலும், அருவருப்பானவற்றைத் தேடி அறிவதிலுமே பலருக்கும் நாட்டம் அதிகம். இளையோரை மாத்திரமன்றி வயதானவர்களையும் இவ்வாறான 'சமூக ஊடகப் பித்து'

06

மலையகம் - 200 விழா உள்ளிட்ட விடயங்கள்

## தமிழக முதல்வர் ஸ்டாலினுடன் அமைச்சர் ஜீவன் சந்தித்து பேச்சு



மலையக தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ளமையையடுத்து, அவர்களை கௌரவிக்கும் முகமாக மலையகம் 200 விழா, இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை, மலையக கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

06

13ஆவது குறித்து புதிய கோணத்தில் அணுகுதல் சிறந்தது



## அதிகாரப்பகிர்வின் போது நாம் இந்தியாவை பின்பற்ற வேண்டும்

### சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் கருத்து

நாடு முன்னோக்கி செல்ல வேண்டுமெனின் இன, மத பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை செயற்படுத்த வேண்டுமென, சிரேஷ்ட ஊடவியலாளர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

அதிகாரப்பகிர்வு என்பது நாட்டை பிரிப்பதல்ல. அது பொய்யான கூற்றாகும். சமூக முறையினுள் காணப்பட்ட பிளவுகள், சமய ரீதியிலான பிளவுகள், கலாசார ரீதியிலான பிளவுகள் காணப்பட்டன. இந்த பிளவுகள் எதிர்காலத்துக்கு அவசியமற்றதென இந்தியா உணர்ந்து, அதனடிப்படையில் செயற்பட்டது. அதன் காரணத்தினாலேயே

06

# வெள்ளவத்தை மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாக் காட்சிகள்...





# பிரான்ஸ் ஜனாதிபதியின் இலங்கை விஜயம்








இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளியுறவு அமைச்சர் ஹயாஷி யோஷிமசா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பணிக்குழாம்' பிதானியுமான சாகல ரட்ணாயக்கவினால் வரவேற்கப்படுவதையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்தித்துப் பேசுவதையும் படங்களில் காணலாம்.



சிலுமின பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் திலகரத்ன குருவிற்ற பண்டாரவைக் கௌரவிக்கும் முகமாக அண்மையில் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் 'பத்ரகலா கவி சிலுமின - திலகரத்ன குருவிற்ற பண்டார அதி சம்பாவனா' எனற பேராசிரியர் சமந்த ஹேரத்தினால் எழுதப்பட் நூல் ஓய்வுநிலைப் பேராசிரியர் சுனில் ஆரியரத்னவுக்கு வழங்கப்பட்டது. நூலாசிரியர் சமந்த ஹேரத் மற்றும் சரசவி வெளியீட்டகத்தின் முகாமைத்துவப் பணிபபாளர் எச்.டி பிறேம சிறி ஆகியோரும் உடனிருக்கின்றனர்.



சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா கல்லூரி முதல்வர் அஷ் ஷெய்க் எஸ். எச். ஆதம் பாவா மதனி தலைமையில் லீ மெரிடியன் மண்டபத்தில் கடந்த புதனன்று நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டின் கொடை வள்ளல் முஹம்மத் அலி ஐய்யூப் அஸ்ஸர் ஊனி, மௌலவியா நியாஸ் பாத்திமா நுஸ்கா (தைய்யிபியா) வுக்கு பட்டச்சான்றிதழ் வழங்குவதையும் அருகில் கல்லூரி முதல்வரையும் படத்தில் காணலாம்.





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் (நான் மறுபடியும் வந்து விட்டேன்) எனும் இசை நிகழ்ச்சி (27) வியாழக்கிழமை மாலை நிலையத்தின் ஆனந்த சமரகோன் கலையரங்கில் நடைபெற்ற போது மறைந்த பிரபல பாடகர் எச்.ஆர்.ஜோதிபாலவின் பாடல்களை பாடியவர்களுக்கான பரிசுகளை கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க நிறுவனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து வழங்குவதையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்த பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.




தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையானது பாவனையாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கி, புதிய குடிநீர் இணைப்புகளை விரைவாக வழங்குவதற்காக "தொரின் தொரட்ட ரன் தியவர" எனும் செயற்திட்டத்தை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கட்டானை அலுவலக பொறுப்பாளர் பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் பல்லேகம சனசமூக மண்டபத்தில் நடைபெற்றது. சபையின் உப தலைவர் சஞ்சீவ விஜேகோன், மேல் மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஆனந்த ஹரிஷ்சந்திர, கோவின்ன பிரதேச சபை உறுப்பினர் ஹேமந்த, வணிக பிரதி பொது முகாமையாளர் பியால் பத்மநாத், கட்டணப் பட்டியல் உதவிப் பொது முகாமையாளர், முகாமையாளர், வணிக அதிகாரி மற்றும் பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# அவுஸ்திரேலிய பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கைப் பெண் கெசென்ரா இலங்கை விஜயம்

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஃபெடரல் தேர்தலில் அந்நாட்டு தொழில் கட்சியினை பிரதிநிதித்துவம் செய்து அவுஸ்திரேலிய பாராளுமன்றத்திற்குத் தெரிவான முதலாவது இலங்கை வம்சாவளியை கொண்ட 35 வயது கெசென்ரா பெர்ணான்து இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

சிறுவயதிலேயே அவுஸ்திரேலியாவுக்கு குடியேறிய கெசென்ரா வடக்கு விக்டோரியா பிராந்தியத்தில் தென்கிழக்கு மெல்போன் நகரான டென்டினோன் பிரதேசத்தில் வசித்து வருபவர். வில்லியம் ஆன்கிலிஷ் கல்வி நிறுவனம் மற்றும் பொக்ஸ்ஹில் கல்வி நிறுவனம் ஆகியவற்றில் அவர் கல்வி கற்றுள்ளார். டென்டினோன் பிளாசா பல்பொருள்அங்காடியில்அமைந்துள்ள உலகப் பிரசித்தி பெற்ற வுல்வதர் வர்த்தக நிலையத்தில் பேஸ் ரீ தயாரிப்பு சமையல் கலைஞராக அவர் பணியாற்றினார்.



பல்வேறு துறைகளில் 15 வருடங்கள் சேவையாற்றிய அவர், அந்நாட்டின் சில்லறை மற்றும் திடீர் உணவுகள் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை பிரதிநிதித்துவம் செய்து அரசியலில் இணைந்து கொண்டார். அரசியலில் நுழைவதற்கு முன்னர் ஆங்கிலத்தைப் பேச முடியாத பின்னணி கொண்ட அவுஸ்திரேலியாவுக்கு குடியேறியவர்கள் மற்றும் அகதிகளுக்கு ஒரு தொண்டராக அது தொடர்பான அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொடுக்க முன்வந்ததோடு, கொவிட் தொற்று காலம் பூராகவும் மிகவும் சுறுசுறுப்பாக நடவடிக்கையில் ஈடுபட்டு, தொழிலாளர்களின் ஊழியம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தனது குரலை எழுப்பியவராவார்.

அயராது உழைக்கும் திறன் அர்ப்பணிப்பு மற்றும் நன்றியறிதலை தனது வாழ்க்கையின் கொள்கை என்று ஏற்றுக் கொண்ட அவர் அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ள இலங்கையர்களின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் பல சவால்களை வெற்றி கொண்ட தைரியமான பெண்ணாவார்.



யாழ். மல்லாகம் மத்திய மகா வித்தியா மாணவர்களின் போசக்கின்மையை நிவர்த்தி செய்யும் முகமாக பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கமைய யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன், நேரில் சென்று பாடசாலை அதிபரிடம் உலர் உணவு பொருட்களை கைளித்தார். கனடா மெட்ரோலேண்ட் மிடியா ஊழியரான பிரபா துரிதாவின் நிதிப்பங்களிப்பில் இவை வழங்கப்பட்டன.

(படம்: வேலணை குறூப் நிருபர்)

# சின்னமுத்து:



# தடுப்பூசி பெறாதவர்களே பாதிக்கப்படுகின்றனர்

இலங்கையில் சின்னமுத்து (Meseals) நோய் மீண்டும் பதிவாகும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நோயை ஒழித்த சில நாடுகளில் ஒன்றாக 2019 இல் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அறிவிக்கப்பட்ட இலங்கையில் சின்னமுத்து மீண்டும் பதிவாகும் நிலையை அடைந்திருக்கிறது. இது பலரையும் அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாகியுள்ளது. நோய்த்தடுப்பு மருந்தேற்றல் திட்டம் வலுவான முறையில் காணப்படும் இந்நாட்டில் 99 வீதத்தினர் நோய்த்தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

அப்படியிருந்தும் சின்னமுத்து நோய் மீண்டும் பதிவாகும் நிலையை எவ்வாறு அடைந்தது என்ற கேள்வி பலர் மத்தியில் எழுந்துள்ளன. அது நியாயமான வினாவும் கூட.

இலங்கையானது இலவச சுகாதார சேவையை முன்னெடுக்கும் நாடாகும். இந்நாட்டின் தேசிய நோய்த்தடுப்பு மருந்தேற்றல் திட்டம் பலமான முறையில் காணப்படுகின்றது. அதன் ஊடாக

## தடுப்பூசி பெற்றவர்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை

நாட்டின் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் நோய்த்தடுப்பு மருந்துகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அதன் பயனாகப் பல நோய்கள் இந்நாட்டில் கட்டுப்பாட்டிலுள்ளன. அவற்றில் சின்னமுத்து நோயும் ஒன்றாகும்.

இவ்வாறான அடைவை இந்நாடு எடுத்த எடுப்பிலேயே அடைந்து விடவில்லை. அதற்கென நீண்ட காலம் கடும் அர்ப்பணிப்புடன் இலங்கை உழைத்து வந்துள்ளது. 1970 களில் சின்ன



சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் சன்ன டி சில்வா

முத்து என்பது இந்நாட்டில் ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக விளங்கியது. அன்று சின்னமுத்து நோய்க்கு உள்ளாகாத சிறுவர்களே இல்லை என்றளவுக்கு நிலைமை காணப்பட்டது.

'இது ஒரு வைரஸ் நோய் தான். சுவாசத் தொகுதி ஊடாகவே சுகதேகிகளுக்கு தொற்றக்கூடிய இவ்வைரஸ், மிக வேகமாகப் பரவக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளது. அதாவது இவ்வைரஸானது ஒருவரில் இருந்து 16 முதல் 18 பேர் வரை தொற்றக்கூடியது' என்று சிறுவர் நோய்கள் தொடர்பான மருத்துவர்களுக்கான விஞ்ஞான நிலையத்தின் பிரதிநிதியும் லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணருமான டொக்டர் சன்ன டி சில்வா தெரிவித்திருக்கிறார். அந்தளவுக்கு வேகமாகப் பரவக்கூடியது தான் சின்னமுத்து வைரஸ்.

பொதுவாக ஒருவருக்கு இவ்வைரஸ் தொற்று ஏற்பட்டால் அதற்கான அறிகுறிகள் இரு வாரங்களுக்குள் வெளிப்படும். முதலில் தடிமன் ஏற்பட்டு மூக்கிலிருந்து நீர் ஒழுக ஆரம்பிக்கும். அத்தோடு கடும் காய்ச்சல், கண்கள் சிவத்தல் போன்றவாறான அறிகுறிகளுடன் சுமார் 4 நாட்கள் கடந்த பின்னர் முகத்தில் சிகப்பு நிறத்திலான சிறு கொப்புளங்கள் முதலில் ஏற்படும். அதன் பின்னர் உடலின் ஏனைய பகுதிகளிலும் அவ்வாறான கொப்புளங்கள் வெளிப்படலாம். இக்காலப்பகுதியில் குழந்தைகள் உணவையும் தவிர்க்கலாம்.

மேலும், இவ்வைரஸ் நுரையீரலைப் பாதிக்கக்கூடிய பண்பைக் கொண்டுள்ளது. அதன் விளைவாக நியுமோனியா ஏற்படலாம். அத்தோடு இவ்வைரஸ் மூளைக்கு செல்லுமாயின் மூளைக் காய்ச்சலையும் கூட ஏற்படுத்தலாம். அவை பலவித நெருக்கடிகளைக்கூட ஏற்படுத்தலாம். சில சந்தர்ப்பங்களில் உயிராபத்து மிக்கவையாகக் கூட அமைந்து விடலாம் என்பது தான் மருத்துவ நிபுணர்களின் கருத்தாகும்.

அதேநேரம் இவ்வைரஸ் தொற்றுக்கு உள்ளான குழந்தைகளுக்கு பக்றீரியா நோய்கள் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலும் உள்ளது.

இதுஇவ்வாறிருக்க, இந்நோய் சிகிச்சைகள் மூலம் ஆரம்ப கட்டத்தில் குணமடைந்தாலும் ஐந்து, பத்து வருடங்கள் கடந்த பின்னர் மூளையில் தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தும்.

அதனால் இவ்வைரஸின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் உலகளாவிய ரீதியில் விஷேட கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அதன் பயனாக இந்நோய்க்கான தடுப்பு மருந்து 1963 இல் கண்டுபிடிக்கப்பட்டு புழக்கத்துக்கு வந்தது. இவ்வைரஸின் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு நாடும் தத்தம் பிள்ளைகளுக்கு அதனைப் பெற்றுக்கொடுத்து வருகின்றன.

அந்த வகையில் இலங்கையின் தேசிய நோய்த்தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தில் சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்து 1984 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த 40 வருடங்களாக இந்நாட்டின் குழந்தைகளுக்கு இத்தடுப்பு மருந்து பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு தடவைகள் வழங்கப்படும் இத்தடுப்பு மருந்து, குழந்தை பிறந்து 09 மாதங்கள் நிறைவடைந்ததும் முதலாவது தடுப்பூசியும், மூன்று வயது நிறைவடைந்ததும் இரண்டாவது தடுப்பூசியும் என்றபடி பெற்றுக்கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 99 வீதமான குழந்தைகளுக்கு இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இந்நாட்டில் 40முதல் 45 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் இந்நோய்க்கு எதிரான நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.



இவ்வாறான பின்புலத்தில் தான் உலக சுகாதார ஸ்தாபனம் 2019 இல் சின்னமுத்து நோயை ஒழித்த நாடு என்ற அங்கீகாரத்தை இலங்கைக்கு வழங்கியது. இது இலங்கை அடைந்த பாரிய வெற்றியாகும்.

ஆனாலும் கொவிட் 19 பெருந்தொற்றைத் தொடர்ந்து இலங்கையில் மாத்திரமல்லாமல் உலகளாவிய ரீதியிலும் நோய்த் தடுப்பு மருந்தேற்றல் வேலைத் திட்டத்தில் பலவீனங்கள் ஏற்படலாயின. அதனால் குழந்தைகளுக்கு நோய்த் தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொடுப்பது சுமார் 10 வீதம் குறைவடைந்தது. அதன் விளைவாக சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்தைப் பெறாதவர்களாக சுமார் 25 மில்லியன் குழந்தைகள் உலகில் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் 09 மில்லியன் சிறுவர்கள் தெற்காசிய நாடுகளில் உள்ளனர்.

இந்த நிலையில், '2022 இல் கொவிட் 19 தொற்றின் தாக்கம் வீழ்ச்சியடையத் தொடங்கியதைத் தொடர்ந்து சின்னமுத்து நோய்க்கு உள்ளான குழந்தைகள் பதிவாகும் நிலை உலகின் பல பாகங்களிலும் ஏற்பட்டன. குறிப்பாக எமது அயல்நாடுகளிலும் இந்நோய்க்கு பலர் உள்ளாகினர். ஆனால் எமது நாட்டில் அவ்வாறான நிலைமை ஏற்படவில்லை. இங்கு தேசிய நோய்த்தடுப்பு மருந்தேற்றல் திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதன் பிரதிபலனே அது' என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் தடுப்பு பிரிவின் பணிப்பாளரான பிரதம தொற்று நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

ஆனாலும் நோய்த்தடுப்பு மருந்தேற்றலை நிராகரிப்பவர்கள், இந்நாட்டில் மாத்திரமல்லாமல் உலகின் எல்லா நாடுகளிலும் காணப்படவே செய்கின்றனர். அவர்கள் சிறு தொகையினராக இருந்தாலும் அவர்களது செயற்பாடு தடுப்பு மருந்தேற்றல் திட்டத்திற்கு சவாலாகும். அவர்கள் தடுப்பு மருந்தேற்றலுக்கு எதிரான அறிவுபூர்வமற்ற கருத்துக்களை நம்புவதோடு அவற்றை பரப்பவும் செயற்படுகின்றனர்.

இந்நாட்டில் வருடமொன்றுக்கு சுமார் மூன்று இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. அவற்றில் 1500 முதல் 1750 வரையான குழந்தைகளுக்கு சின்னமுத்து நோய்க்கான தடுப்பு மருந்து உள்ளிட்ட எந்தவொரு தடுப்பு மருந்தும் பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை. இது அக்குழந்தைகளின் பெற்றோரது தவறானதும் பிழையானதுமான கருத்துக்களின் விளைவாகும். அவ்வாறான குழந்தைகள் தான் தற்போது இந்நோய்க்கு உள்ளானவையாக அடையாளம் காணப்படுகின்றன. மற்றப்படி இந்நோய்க்கு எதிரான தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொண்டுள்ள எந்தக் குழந்தைக்கும் இந்நோய் ஏற்படவில்லை. அது தொடர்பில் பெற்றோர் அச்சம் கொள்ளத் தேவையில்லை' என்று குறிப்பிட்டுள்ளார் தொற்று நோயியல் நிபுணர் டொக்டர் கினிகே.

அதனால் தற்போதைய சூழலில் தங்களது குழந்தைகளது நலன்களை முன்னிலைப்படுத்த அவர்களுக்கு இத் தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொடுக்க பெற்றோரும் உறவினர்களும் முன் வர வேண்டும். அதனைத் தவிர இந் நோயைத் தவிர்த்துக்கொள்ள வேறு பாதுகாப்பு வழியில்லை. இவர்கள் சிறு தொகையினர் என்றாலும் அவர்கள் முழு சுகாதாரத் துறைக்கும் சவால் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இவர்கள் சின்னமுத்துக்கு மாத்திரமல்லாமல் ஏனைய நோய்களுக்கும் கூட தடுப்பு மருந்துகளைப் பெறாதவர்களாவர்.

அதேநேரம் நோய்த்தடுப்பு மருந்து என்பது எவருக்கும் பலவந்தமாக பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை. ஒவ்வொருவரும் சுய விருப்போடு அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள டொக்டர் கினிகே, இத் தடுப்பு மருந்தைத் தம் குழந்தைகளுக்கு உரிய காலத்தில் பெற்றுக்கொடுக்க முடியவில்லை என எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. சின்னமுத்து உள்ளிட்ட நோய்களுக்கான தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் உரிய அறிவுறுத்தல்கள் பிரதேச மருத்துவ அதிகாரி அலுவலகங்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. போதியளவு தடுப்பு மருந்துகள் கையிருப்பில் உள்ளன. அதனால் தாமதியாது சென்று தடுப்பு மருந்தை பெற்றுக்கொடுக்கப்பதில் கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும் இந்நாட்டில் நோய்த் தடுப்பு மருந்துகளைத் தவிர்த்துக் கொள்பவர்கள் தொடர்பான விபரங்கள் மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் மட்டத்தில் உள்ளன. தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சின்னமுத்து தடுப்பு மருந்தைத் தம் குழந்தைகளுக்குப் பெற்றுக் கொள்ளாதிருப்பவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு இத்தடுப்பு மருந்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி அதனைப் பெற்றுக்கொள்ளச் செய்வதற்கான ஊக்குவிப்பு வேலைத்திட்டமும் சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாகக் குழந்தைகளுக்கு உரிய நோய்த்தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களை நோய்களில் இருந்து பாதுகாக்கவே எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஆகவே தம் பிள்ளைகளுக்கு சின்னமுத்து உள்ளிட்ட நோய்த்தடுப்பு மருந்துகளை உரிய கால வேளையில் பெற்றுக்கொடுப்பதையும் அவர்கள் நோய் நொடிகளைத் தவிர்த்து ஆரோக்கிய வாழ்வு வாழ்வதையும் பெற்றோரே உத்தரவாதப்படுத்த வேண்டும்.

அது தம் பிள்ளைகளுக்கும் நாட்டுக்கும் ஆற்றும் பாரிய சேவையாக அமையும் என்பதை பெற்றோர் கருத்தில் கொள்வது அவசியமாகும்.



மர்லின் மரிக்கார்



- வருடத்திற்கு 1500 –முதல் 1750 பேர் வரையில் தடுப்பூசி பெறுவதில்லை
- இலங்கையில் 99 வீதம் பேர் தடுப்பு மருந்து பெற்றுக்கொள்கின்றனர்
- உலகில் சின்னமுத்து நோயை ஒழித்த நாடுகளில் இலங்கையும் ஒன்று

@ உலக சுகாதார ஸ்தாபனம்



பிரதம தொற்று நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் சமித்த கினிகே

## தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ளாதவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அறிவூட்ட நடவடிக்கை

# மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்குவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படப்போவதில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி வடகொழும்பு பிரதான அமைப்பாளர் சீ.வை.பி. ராம்

காணி பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படுவதாக தெரிவிக்கப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. இனவாதிகளே இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் மாகாணசபைக்குரிய முழுமையான அதிகாரங்களுடன் மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என ஜனாதிபதிக்கு தெரிவிக்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் மாகாணசபை முன்னாள் சிரேஷ்ட உறுப்பினருமான சீ.வை.பி. ராம் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை தேர்தல் விரைவாக நடத்த வேண்டியதன் தேவை குறித்து அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாகாணசபை முறைமை அமுலுக்கு வந்த காலத்தில் இருந்து அந்த சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கப்படவில்லை. அதேநேரம் மாகாணசபையில் இருந்துவந்த மேலும் சில அதிகாரங்கள் கடந்த 10 வருடங்களில் மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. பசில் ராஜபக்ஷ ஒவ்வொரு காரணங்களை தெரிவித்து, சில சட்டங்களை ஏற்படுத்தி மாகாணசபைக்குரிய சில அதிகாரங்களை பலாத்காரமாக மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருந்தார்.

அத்துடன் மாகாண சபைகள் ஆரம்பகாலத்தில் மாகாணங்களுக்கு பல சேவைகளை செய்து வந்திருக்கின்றன. மாகாணசபையின் நீண்டகால உறுப்பினராக இருந்தவன் என்றவகையில், அந்தக் காலத்தில் நாங்கள் பல சேவைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்று மாகாணசபைகள் ஆளுநர்களுக்கு கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. சில மாகாணங்களுக்கு அரசியல் தெரியாத ஆளுநர்களே நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்கு மக்களுடன் எந்த தொடர்பும் இல்லை. மக்களுக்கு அவர்களை சந்திக்க முடியாத நிலை இருந்து வருகிறது.



அதேநேரம் மாகாண சபைகளுக்கு அமைச்சுக்கள் இருக்கின்றன. அந்த அமைச்சுக்கள் ஊடாக பாரியளவில் நிதி ஒதுக்கப்பட்டு மாகாணசபை அதிகாரத்துக்கு கீழ் இருக்கும் நிறுவனங்கள் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வந்திருக்கிறன. ஆனால் தற்போது மாகாணசபை இயங்காமல் இருப்பதால், குறிப்பாக மாகாண பாடசாலைகள், வைத்தியசாலைகள் எந்த அபிவிருத்தியும் இல்லாமல் இயங்கி வருகின்றன. பாடசாலைகளில் பாரிய வளப்பற்றாக் குறை இருந்து வருகின்றது. முக்கியமான பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாமையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோன்று மாகாண வைத்தியசாலைகளிலும் பாரிய குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆளணி பற்றாக்குறை, மருந்து பொருட்களுக்கான தட்டுப்பாடு, வளப்பற்றாக்குறை என பல குறைபாடுகள் நிலவி வருகின்றன. இவை எதுவும் கண்காணிக்கப்படுவதில்லை. மாகாணசபைக்கு கீழ் இருக்கும் வீதிகள் செப்பனிடப்படாமல், குண்டும் குழியுமாக காணப்படுகின்றன எமது காலத்தில் மாகாணசபைக்கு கீழ் செயற்பட்டுவந்த சில பாடசாலைகளுக்கு தேசிய பாடசாலைகளுக்கு இருக்கும் வசதிகளை செய்துகொடுத்திருக்கிறோம்.

எனவே மாகாணசபைகள் தொடர்ந்தும் இவ்வாறு இயங்காமல் இருக்க முடியாது. மாகாண சபைகளுக்கு அதிகாரம் வேண்டுமா மாகாண சபை தேர்தல் வேண்டுமா என ஜனாதிபதி கேட்கிறார். காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்றே நாங்கள் ஜனாதிபதிக்கு தெரிவிக்கிறோம்.

அத்துடன் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதன் மூலம் தேசிய நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும் என தெற்கில் இருக்கும் அரசியல்வாதிகள் பிரசாரம் செய்துவருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை. இனவாதிகளே இவ்வாறான பிரசாங்களை மேற்கொண்டு வருகின்றனர். மாகாண சபைகளுக்கு சட்டத்தினால் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை முழுமையாக வழங்குவதன் மூலம் அது வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமல்ல. தென்பகுதிக்கும் அந்த அதிகாரம் கிடைக்கப்பெறுகிறது.

அதனால் காணி பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலாக சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு மீண்டும் வழங்கவேண்டும் என்பதுடன் மாகாணசபை தேர்தலையும் விரைவாக நடத்த வேண்டும் என தெரிவிக்கிறோம்.

INTERNATIONAL DRIVING LICENCE
Obtain Your International Driving Licence to Drive Overseas.
AA CEYLON Estd. 1904
Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk





# குறைபாடுகள் களையப்பட்டு அமுல்செய்யப்படவுள்ள மாகாணசபை முறைமை

## ஜனாதிபதி தலைமையிலான சர்வகட்சி மாநாட்டில் ஆராய்வு

- அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதே ஜனாதிபதியின் நோக்கம்
- மாகாண சபை முறையை தொடர்ந்தும் முன்னெடுப்பதாயின் தற்போதுள்ள குறைபாடுகளை சீர்செய்ய வேண்டும்
- யோசனைகளை முன்வைக்க மட்டுமே என்னால் முடியும். பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே உள்ளது

**சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி**

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல எனவும் அது முழு நாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே தனது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த புதன் (26) பிற்பகல் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தித் திட்டம் குறித்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக இந்த சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு, புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், தனக்கு மாத்திரமின்றி இதற்கு முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை என்றும் புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டுக்காக இந்த யோசனைகளை முன்வைப்பது மாத்திரமே தனது கடமை என்றும், இதனை பாராளுமன்றமே நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் ஒரேயொரு வாக்கை மட்டும் வைத்துக்கொண்டு இதனை செய்ய முடியாது என்றும் இந்தப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் கூட்டாக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இதற்கு முன்னர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை கூட்டி இரண்டு முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடினேன்.

முக்கியமாக 13 ஆவது திருத்தத்தில் நாம் அமுல்படுத்தும் விடயங்கள் தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் 1987 இல் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்றும் அது தொடர்பான பல பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இது தொடர்பாக வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நான் கலந்துரையாடிய போது 13ஆவது திருத்தத்தை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்ற கேள்விகளை அவர்கள் எழுப்பினர். எனவே முதலில் வடக்கைப் பாதிக்கும் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு அது தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல் தடுப்பு சட்டம் தற்போது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்துடன் பயங்கரவாதத்திற்கு எதிரான சட்ட வரைவு நீதி அமைச்சரினால் இன்னும் சில தினங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணையக்குழுவின் பணிகள் குறித்தும் கலந்துரையாடப்படுகின்றது. வெளிவிவகார அமைச்சர் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் பல அமைப்புகளுடன் கலந்துரையாடுகிறார்.

இதில் இழப்பீடு உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் அடங்கும். இவை தொடர்பிலும் வடக்கிலுள்ள தமிழ் எம்.பி.க்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. வடக்கின் அபிவிருத்திக்காக எதிர்வரும் 10 வருடங்களில் அமுல்படுத்தப்படவுள்ள திட்டம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அதிகாரப் பகிர்வு பற்றி பேசுவதற்காகவே இந்த மாநாடு கூட்டப்பட்டது. 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ் எம்.பிக்களுடன் கலந்தாலோசித்துள்ளோம். இருப்பினும் இது முழு நாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அதுபற்றி அனைத்து தரப்புக்களுடனும் பேசி தீர்மானிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

நாட்டிலுள்ள 09 மாகாண சபைகளில் 07 மாகாண சபைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பிரதேசங்களிலேயே உள்ளன. 02 மாகாண சபைகள் மட்டுமே சிறுபான்மை மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ளன. வடக்கில் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றனர். நாம் அதிகளவிலான மாகாண சபைகளை தெற்கிலேயே செயற்படுத்தியுள்ளோம் என்ற அடிப்படையில் அதிக அனுபவங்கள் எமக்குள்ளன. எனவே அவற்றை தொடர்ந்தும் நடத்திச் செல்ல வேண்டும் எனில் அவற்றின் குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டியது அவசியமாகும்.

1987 இல் கொண்டு வரப்பட்ட மாகாண சபைச் சட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. அவற்றில் நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் தொடர்பிலான எந்தவொரு சரத்துக்களும் இல்லை. அதில் ஒரு அதிகாரி தொடர்பில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் மாகாண அமைச்சர்களின் அதிகாரம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபை முதலமைச்சர்கள் மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமெனக் கோரி அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தனர். அதற்கு ஏழு மாகாண சபைகளினதும் எதிர்க்கட்சித் தலைவர்களும் ஆதரவைத் தெரிவித்திருந்தனர். அதற்கமைய மேற்படி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதோடு, அதற்கு அவசியமான சட்டங்களையும் அரசாங்கம் அமுல்படுத்தும்.

குறிப்பாக பிரதேச செயலாளரை தெரிவு செய்தல் மற்றும் நீக்குதல் தொடர்பிலான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான முறைமையொன்றும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில் அதனை அரச சேவை ஆணைக்குழுவிடம் தெரியப்படுத்துங்கள்.

அதேபோல் கல்விச் செயற்பாடுகள் தொடர்பிலான அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு முழுமையாக பெற்றுக்கொடுத்தல் மற்றும் அனைத்து மாகாணங்களிலும் மாகாண கல்விச் சபைகளை உருவாக்குதல், தொழில் பயிற்சி நிறுவனங்கள் தொடர்பிலான அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பெற்றுக்கொடுத்தல், 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதற்கான அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கான சட்டங்களை அமுல்படுத்துதல், விவசாயத்திற்கு அவசியமான அடித்தள சேவைகளை செயற்படுத்துதல் தொடர்பிலான விடயங்களை மாகாண சபைகளின் ஊடாக செய்துகொள்வதற்கு அவசியமான திருத்தங்களை நிறைவேற்ற முடியும்.

அதேபோல் அனைத்து மாகாணங்களுக்குமான சுற்றுலா சபைகளையும் நிறுவ வேண்டும். சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பிலான விடயங்களை, மாகாண சபை மற்றும் மாவட்ட சபைகளின் ஊடாகவே பல நாடுகளும் முன்னெடுத்து வருகின்றன.

அதேபோல் தற்போது 10 இலட்சத்துக்கும் அதிகமான மூலதனத்தை கொண்டுள்ள வியாபாரங்கள் மாத்திரமே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. அதனை குறைந்த பட்சம் 250 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையாக மாற்றிக்கொள்ளும் அவசியம் இருக்குமாயின் அது தொடர்பிலான திருத்தங்களை பாராளுமன்றத்தில் ஆலோசிக்க இயலுமை உள்ளது. அதேபோல் அனைத்து மாகாணங்களிலும் மாவட்ட அபிவிருத்தி குழுக்களை மீள ஆரம்பிக்க முடியும்.

மாகாண சபைகளின் கீழ் இருக்க வேண்டிய பல்வேறு விடயங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகிறது. அது தொடர்பிலும் ஆலோசித்து தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. அமுலில் உள்ள பொலிஸ் கட்டளைச் சட்டத்தை கொண்டு எதனையும் செய்ய முடியாது என்பதால் அதில் திருத்தத்தை மேற்கொண்டு புதிய சட்டமொன்றை கொண்டுவர வேண்டியது அவசியமாகும்.

அதேபோல், பொலிஸ் அதிகாரங்களை எவ்வாறு அமுல்படுத்தலாம் என்பது குறித்து நாம் கலந்தாலோசிக்க வேண்டும். அதன்படி பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்ட பின்னர் அதற்கு அவசியமான சட்டத் திருத்தங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகிறது.

மாகாண சபைகளை தொடர்ந்தும் நடத்திச் செல்வதாயின் உரிய வகையில் அதனை செய்ய வேண்டும். கடந்த 10, 15 வருடங்களில் மாகாண மட்டத்தில் எவ்வித அபிவிருத்தியையும் காண முடியவில்லை. மாவட்ட அபிவிருத்தி சபைகள் நடைமுறையில் இருந்த காலத்தில் இதற்கு மேலான செயற்பாடுகளை காண முடிந்தது. துரித அபிவிருத்தியை நோக்கி நாட்டை கொண்டு செல்வதற்கான கொள்கை வகுப்பையே அரசாங்கம் செய்ய வேண்டும். ஏனைய பொறுப்புக்களை மாகாண சபைகளிடத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மாகாண சபை உறுப்பினர்கள் பதவியை வகித்துக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர் அந்தப் பதவியை வகித்தவாறே மாகாணசபை உறுப்பினராக செயற்படுவது தொடர்பிலும் முன்மொழியப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடி தீர்மானத்தையும் எடுக்கவும் முடியும்.

எவ்வாறாவது இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். இந்த முறைமையுடன் நாம் முன்னேறிச் செல்வதற்கான இயலுமை காணப்படுகின்றது. அதனால் ஏனைய உலக நாடுகளைப் போல மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பிரித்துக் கொடுப்போம். தற்போதும் 07 மாகாண சபைகள் இயங்குகின்ற நிலையில் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் ஏனையவற்றையும் செயற்படுத்த முடியும். அது தொடர்பிலான யோசனைகளை முன்மொழியுங்கள். குறிப்பாக அது தொடர்பில் ஆலோசிப்பதற்கு சுசில் பிரேமஜயந்த, விஜேதாச ராஜபக்ஷ, பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட மூன்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த பணிகளில் பிரதமரும் பங்கெடுத்துக்கொள்வார்.

இரண்டு அல்லது மூன்று வாரங்களில் இதுகுறித்த யோசனைகள் எமக்கு கிடைக்குமாயின் அது தொடர்பிலான முன்மொழிவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எமக்கு இயலுமை உள்ளது. அதேபோல் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரையும், இந்தப் பணிகளில் இணைத்துக் கொள்ள எதிர்பார்ப்பதோடு, பொலிஸ் அதிகாரம் வழங்குவதை தனியொரு திருத்தமாக சமர்ப்பிக்கவும் முடியும். அதேபோல் பொலிஸ் தொடர்பிலான புதிய சட்டங்களையும் நாம் கொண்டுவர உள்ளோம். அதற்கு இணையாகவே மேற்படி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

நாம் அந்த பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும். அதற்கான சட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும். அது தொடர்பில் உங்கள் அனைவரினதும் நிலைப்பாடுகளை அறிந்துகொள்ளவே இன்றைய கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கலந்துரையாடலின் பின்னர் உரிய தரப்பினருடனும் கலந்தாலோசித்து மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குள் முடிவொன்று எட்டப்பட்டு அந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

அது தொடர்பிலான எனது நிலைப்பாட்டை உங்களுக்கு அறிவித்துள்ளேன். அதேபோல் அமைச்சரவைக்கும் அறிவித்துள்ளேன். இந்த செயற்பாடுகளை என்னால் தனியாக மேற்கொள்ள முடியாது. எனக்கு பாராளுமன்றத்தில் ஒரு ஆசனம் மட்டுமே உள்ளது. அதனால் இதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு எனக்கு அவசியப்படுகின்றது. அதனாலேயே உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பைக் கோருகிறேன்.

அதேபோல் இதற்கு அவசியமான சட்டங்களை கொண்டு வருவதற்கான அதிகாரம் எனக்கு இல்லை. எனக்கு மாத்திரமல்ல எனக்கு முன்பிருந்த 07 ஜனாதிபதிகளுக்கும் அதற்கான அதிகாரம் இருக்கவில்லை. சட்டம் தயாரிப்பதற்கான அதிகாரம் பாராளுமன்றத்துக்கு மாத்திரமே உள்ளது. அதனை சமர்ப்பிப்பது மட்டுமே எனது பொறுப்பு. அது தொடர்பிலான யோசனைகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் நாம் சட்டத்தை அமுல்படுத்த முடியும்.

இந்நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு மிகக் குறுகிய காலத்தில் தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்காகவே ஜனாதிபதி பதவியை நான் ஏற்றுக்கொண்டேன். அதனால் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதா அல்லது அதனை முழுமையாக நீக்குவதா என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.



### முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

அரசியல் கட்சிகளை பலப்படுத்தும் நோக்கத்துக்காகவன்றி நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டே அதிகாரப் பகிர்வைச் செய்ய வேண்டும். இன்று எமது நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் கூட்டாக அர்ப்பணிப்புச் செய்யத் தவறினால் எதிர்கால சந்ததியின் சாபத்துக்கு ஆளாக வேண்டியிருக்கும்.

அதேபோல் அரசியலமைப்பின் அதிகாரத்தை அரசியல் நோக்கங்களுக்கு அன்றி நாட்டின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்த வேண்டும். அதனால் அதற்காக, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்ற வகையில் ஒத்துழைப்பை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

கட்சி என்ற வகையில் இறுதியான யோசனைகளை நாங்கள் முன்மொழியவில்லை. அரசாங்கம் முன்வைக்கும் யோசனையை ஆராய்ந்து பார்த்த பின்னர் அதற்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

(17ஆம் பக்கம் பார்க்க)



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# அரசியல் செய்யும் நேரம் இதுவல்ல!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் சந்திப்பு

**'நாட்டை பொருளாதாரத்தில் ஸ்திரப்படுத்துவதற்கும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமே தற்பொழுது முன்னுரிமை அளிக்க வேண்டும். அதனை விடுத்து அரசியல் செய்வதற்கான நேரம் இதுவல்ல' என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் குறித்து எமக்கு அவர் பேட்டியளித்தார்.**

**கே: உலகில் பல நாடுகள் போராட்டங்களால் வீழ்ச்சியடைந்த போதிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு வருட குறுகிய காலப்பகுதியில் இலங்கையை நிலையானதொரு சூழலுக்குக் கொண்டுவந்துள்ளார். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: பேரண்டப் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப, அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களைப் பகுப்பாய்வு செய்வது மற்றும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படுவதன் மூலம் இது சாத்தியப்பட்டுள்ளது. இவற்றைச் செய்யும்போது தகவல்தொடர்புகளில் வெளிப்படைத்தன்மை மிகவும் முக்கியமானது. பொருளாதார சவால்களை எதிர்கொள்ளத் தேவையான மாற்றங்களை நாங்கள் செய்துள்ளோம். இந்த வெற்றிக்குப் பின்னால் உள்ள காரணிகள் இவையாகும். சில முடிவுகள் சரியான நேரத்தில் மற்றும் சரியாக எடுக்கப்பட்டன. எந்தவொரு தலையீடு காரணமாகவும் சரியான முடிவுகளில் இருந்து பின்வாங்கவில்லை.

**கே: பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ள நாடாக சர்வதேச சமூகத்திற்கு இலங்கை முன்மாதிரியாக மாறியுள்ளது, 2027ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு தேவையில்லை என நீங்கள் கூறியுள்ளீர்கள். இதனை விளக்க முடியுமா?**

பதில்: உண்மையில், அது சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பமும் கூட. நாங்கள் எங்கள் கடன் வழங்குநர்களுடன் கடினமாக ஒத்துழைத்து, பெரிய பொருளாதார வளர்ச்சிக்கு மாற்றியமைத்தால், நான்கு வருட வேலைத்திட்டத்தின் கீழ் நாட்டின் முன்னேற்றத்திற்காக செய்யப்படும் சீர்திருத்தங்களை உறுதிசெய்தால், அந்த நேரத்தில் எங்கள் நாடு சரியான நிலையில் இருக்குமாக இருந்தால் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு மேலும் தேவைப்படாது.

## ஊழலுக்கு எதிரான சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருப்பதன் ஊடாக ஊழல் அற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நடவடிக்கை

நிலைமை சரியாக இருக்கும்போது கடன் நிலைத்தன்மை, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை அடைய முடியும். இதுவே எங்களின் நோக்கமாகும். ஸ்திரத்தன்மையை அடைந்தவுடன் அனைத்து ஒப்பந்தங்களிலிருந்தும் தடம்புரளும் அரசாங்கத்திற்கு சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து உதவ முடியாது. இது கடன் வழங்குபவர்களிடையே நம்பிக்கையை மீறுவதாகும். நாடுகள் இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்நோக்கும்போது அவர்களுக்கு உதவுவதில் சர்வதேச நாணய நிதியம் மகிழ்ச்சியடைவதுடன், அவ்வாறான நாடுகள் மீண்டும் மோசமான நிலைக்குச் செல்லாது உறுதிப்படுத்தலையும் அது மேற்கொள்கிறது.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் அளவுகோல்களைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையில் பணவீக்கம் அடுத்த மாதம் 8 சதவீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: செப்டம்பர் 2022 இல் பணவீக்கம் 70 சதவீதமாகக் குறைந்தது. தற்போது அது 12 சதவீதமாக குறைந்துள்ளது. ஜூலை மாதத்தில் இது 7 அல்லது 8 சதவீதமாக குறையும் என்று எதிர்பார்க்கிறோம். பொருளாதாரம் சரியான திசையை நோக்கி நகர்வதால், வருட இறுதிக்குள், இலங்கையில் விலை நிர்ணய பொறிமுறையில் அதிக ஸ்திரத்தன்மை ஏற்படும். விவசாயத்துறைக்கும், சுறுசுறுப்பான பொருளாதார இயக்கத்திற்கும் தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், சிறிய மற்றும் நடுத்தரத் தொழில்துறையைப் பற்றி நாங்கள் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம், மேலும் அதற்குச் சில நிவாரணங்களைக் கொண்டுவர முயற்சிக்கிறோம். அரசாங்கத்தை சிலர் கடுமையாக விமர்சித்தாலும், அவர்களில் பெரும்பாலானோர் கடந்த ஆண்டு மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நாட்டின் அவலநிலையையும் 2022 என்ன வகையான பேரழிவு ஆண்டு என்பதையும் மறந்து விட்டனர்.

மக்கள் எதிர்கொண்ட சிரமங்கள், விரக்திகள் மற்றும் நம்பிக்கையற்ற சூழ்நிலைகள் தற்போது நீங்கியுள்ளன. இது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தக் கூடிய கூட்டு முயற்சியாகும். அமைதியான மற்றும் ஸ்திரமான பொருளாதாரத்தின் கொள்கை வகுப்பாளர்களுக்கான தேவைகளும் இரு வேறு திசைகளில் செல்ல முடியாது.

அத்துடன், இது அரசியல் செய்வதற்கான நேரமில்லை. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யவும் இதுவே நேரம். அதைத்தான் அரசாங்கம் செய்கிறது, ஆனால் நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம். உண்மையில், இது சிறந்த நிலைப்படுத்தல் அல்ல. நாம் அந்தச் சவாலை எதிர்கொண்டு, இப்போது இருப்பது போல் பொருளாதார நெருக்கடிக்குள் செல்லாமல் இருப்பதை உறுதி செய்வோம்.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் முதலாவது ஆய்வு செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ளது.**

## பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவுமே தற்பொழுது முன்னுரிமை அளிக்க வேண்டும்!

**அதனை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான பின்னணியை அரசாங்கம் தயாரித்துள்ளதா?**

பதில்: சர்வதேச நாணய நிதியத்தின் திட்ட மதிப்பாய்வுகளுக்குள் எங்களை நாங்கள் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. இது ஒரு தொடர்ச்சியான செயலாகும். கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒப்பந்தத்தை நாம் மீறினால், தேவையான மாற்றங்களைச் செய்வது எங்கள் பொறுப்பு. எனவே, இது ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருக்கும், இது மதிப்பாய்வுக்கு மட்டுப்படுத்தப்படப் போவதில்லை. நீங்கள் ஒரு புள்ளியில் தடம் புரள முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளை இலங்கை பூர்த்தி செய்யவில்லை என்றும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு குறித்து மக்களிடையே மிகவும் எதிர்மறையான கருத்தை உருவாக்க முயற்சிப்பதாகவும் சில நிறுவனங்கள் கூறுவதை நான் பார்த்திருக்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு என்பது 190 உறுப்பு நாடுகளைக் கொண்ட அமைப்பாக இருப்பதால், எங்களின் அனைத்து கடன் வழங்குநர்களின் ஆதரவையும் குறிக்கிறது. சில நபர்கள் இந்த நேர்மறையான உணர்வை எதிர்மறையான உணர்வாக மாற்ற முயற்சிக்கின்றனர். சில இலக்குகள் அல்லது கட்டமைப்பு வரையறைகள் அடையப்பட்டதா இல்லையா என்று நீங்கள் கூறினாலும், அது குறிப்பிட்ட காலத்துடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும். சில வரையறைகள் அல்லது மாற்றங்கள் ஜூன் முதல் டிசம்பர் 2023, 2024 மற்றும் 2025 வரை செய்யப்படும்.

நீங்கள் முழு நிரலையும் எடுத்துக் கொண்டால், யாராவது காலக்கெடுவைக் குறிப்பிட்டு அவற்றை வெளியிடுவது எப்போதும் நல்லது. பொருளாதார இலக்குகளின் சாதனைகள் குறித்து, நமது சட்ட ஆலோசகர்கள் மற்றும் நிதி ஆலோசகர்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தினர். சில தகவல்கள் மூன்றாம் தரப்பினரால் அறியப்படவில்லை. பொருளாதார மீட்சியை விமர்சிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கை அரசாங்கத்திற்கோ அல்லது மக்களுக்கோ தாங்கள் எதிர்கொண்ட சவால்களை வெற்றிகொள்ள ஆதரவளிக்காதவர்கள்.


சில அரசியல் கட்சிகள் மற்றும் பொருளாதார மீட்சியை விமர்சிக்கும் சில நபர்களை விட மக்கள் உறுதியாக இருந்தனர். அடிப்படையில், மக்கள் தங்கள் வெளியீடுகளில் நியாயமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம், மேலும் எந்தவொரு ஆக்கபூர்வமான விமர்சனத்தையும் ஏற்றுக் கொண்டு அவற்றைத் திருத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இருப்பினும், நியாயமற்ற விமர்சனங்கள் நாட்டைப் பின்னோக்கியே கொண்டு செல்லும். உண்மையில், இது உள்நாட்டுக் கடனை மேம்படுத்துவதுடன், இருதரப்பு மறுசீரமைப்பு என்பதே மிகவும் முக்கியமானது. நாங்கள் வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவந்துவிட்டோம் என்பதை உறுதி செய்வதற்காக செப்டம்பர் மாதத்திற்குள் உள்நாட்டுக் கடன்களின் இருதரப்பு மறுசீரமைப்பு மேம்படுத்தலை முடிப்போம். எனவே, செப்டம்பர் மாதத்திற்குள் நாம் வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவந்துவிடுவோம்.

இரண்டாவதாக, இலங்கையில் இதுவரை நடைமுறையில் இல்லாத ஊழலுக்கு எதிரான சட்டத்தை கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியிருப்பதன் ஊடாக ஊழல் அற்ற நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(19ஆம் பக்கம் பார்க்க)



**நாங்கள் வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவந்து விட்டோம் என்பதை உறுதி செய்வதற்காக செப்டம்பர் மாதத்திற்குள் உள்நாட்டுக் கடன்களின் இருதரப்பு மறுசீரமைப்பு மேம்படுத்தலை முடிப்போம். எனவே, செப்டம்பர் மாதத்திற்குள் நாம் வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவந்து விடுவோம்**



## மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொறகொட

# நாடுகளை இணைக்கும் நெடுஞ்சாலையினால் மக்களின் வாழ்க்கையும் முன்னேற்றமடையும்

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் இருந்து மியன்மார் வழியாக தாய்லாந்து செல்லும் நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. அடுத்த ஆண்டு பொதுமக்கள் இவ்வீதியைப் பயன்படுத்த முடியும். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய தீபகற்பத்தில் இருந்து மத்திய, தெற்கு மற்றும் பிற பகுதிகளுக்கு இடம்பெயர்வு மற்றும் கலாசார பரிமாற்றம் மணிப்பூர் பகுதி வழியாக இடம்பெற்றதாகக் கருதப்படுகிறது. மேலும் இந்தப் பாதை ஆசியாவின் பிறபகுதிகளுக்கிடையே வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னர், எல்லைக் கட்டுப்பாடு, துறைமுகம் மற்றும் விமானப் போக்குவரத்து வளர்ச்சியுடன், தரைவழிகளின் பயன்பாடு குறைந்து போய்விட்டது.

மூன்று நாடுகளை இணைக்கும் தரைவழிப்பாதையை அமைக்கும் யோசனை 2002 ஆம் ஆண்டு விவாதிக்கப்பட்டது. இந்தியாவின் அன்றைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் இந்த யோசனையை முன்வைத்து சாத்தியவள அறிக்கைகளைக் கோரியிருந்தார். இந்தியா, மியன்மார், தாய்லாந்து ஆகிய நாடுகளின் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்கள் ஒன்றுகூடி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்ததோடு, கல்கத்தாவில் இருந்து பாங்கொக் வரை புதிய பொருளாதார விரிவாக்கத்துக்கும் திட்டமிட்டனர். கட்டுமானத்தின் முடிவில், நாடுகளின் பொருளாதாரம் ஆண்டுக்கு நூறு பில்லியன் அமெரிக்க டொலர் என்றவாறு விரிவடைவதோடு, குறைந்தபட்சம் இருபத்தைந்து மில்லியன் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். அதிவேக நெடுஞ்சாலை நான்கு வழிச்சாலையைக் கொண்டுள்ளது, மேலும் இது மியன்மார் வழியாக தாய்லாந்தின் பாங்கொக் வரை தொகுதி தொகுதியாக கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. வெவ்வேறு இனங்கள், வெவ்வேறு கலாசார தனித்தன்மை மற்றும் அரசியல் தோற்றங்கள் இந்தப் பாரிய பணியில் சவால்களாக வெளிப்பட்டுள்ளன.

2015 இல் நடைபெற்ற மியன்மார் தேர்தல் இத்திட்டத்தை பின்னடையச் செய்தது. ஆனால் இந்தியாவுக்கு விஜயம் செய்த மியன்மார் ஜனாதிபதி பின்னர் ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு மீண்டும் பணியை ஆரம்பிக்க ஒப்புதல் அளித்தார்.

மியன்மார் எதிர்கொண்டுள்ள முதலீட்டுச் சிக்கல்களும் எழுந்துள்ள பிரச்சினைகளாகும். சமீபத்தில் அறிவிக்கப்பட்டபடி, கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததாகக் கூறப்பட்டதையடுத்து, பயணிகள் போக்குவரத்திற்காக சாதாரண பஸ்வண்டிகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. எல்லையில் வீசா அனுமதி பெறப்பட்ட பின்னர் பதினாறு முதல் பதினெட்டு மணி நேரத்திற்குள் இந்தியாவில் இருந்து தாய்லாந்திற்குள் நுழைய முடியும். விமான சேவை விரைவானது என்றாலும் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாத் தேவைகளுக்கு இப்பாதை பயனுள்ளதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரம் மற்றும் அதிக மக்கள் தொகையைப் பயன்படுத்திக் கொள்ள ஆசியாவின் பல நாடுகள் தயாராகவுள்ளன. இந்த நெடுஞ்சாலையை ஆசியான் அமைப்பு லாவோஸ், கம்போடியா மற்றும் வியட்நாம் ஆகிய மூன்று நாடுகளுக்கு செல்ல நீடிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. பங்களாதேஷ் இந்த நெடுஞ்சாலையை அந்த நாட்டிற்கும் நீடிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளது. அதனை இந்திய வெளிவிவகார அமைச்சு கவனத்தில் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுபோன்ற தரைவழிகள் மூலம், தீவுகள் எதிர்காலத்தில் தனிமைப்படுத்தப்பட மாட்டாது என்ற எண்ணம் உருவாகியுள்ளது. நாடுகள் விமானம் மற்றும் கடல் வழியாக மட்டுமல்ல, வீதிகள் மூலமாகவும் இணைக்கப்படும். பிரித்தானியாவிலிருந்து கடலுக்கு அடியில் ஆங்கிலேயர்கள் அமைத்த சுரங்கப்பாதை அதற்கு நல்ல சான்றாகும். ஹீத்ரோ விமான நிலையத்தை அடைந்து அங்கிருந்து பிரஸ்ஸல்ஸ் நகருக்குச் செல்ல சுமார் நான்கு மணி நேரம் ஆனது, ஆனால் தற்போது எடுக்கும் நேரம் சுமார் ஒன்றரை மணித்தியாலயமாகும். சுரங்கப்பாதை 1802 இல் முன்மொழியப்பட்டது, ஆனால் ஒப்புதல் பெற நீண்ட காலம் எடுத்தது. கட்டுமானம் 1988 இல் தொடங்கப்பட்டது. 1994 இல் திறக்கப்பட்டது. 2014 இல் இருபத்தொரு மில்லியன் மக்கள் சுரங்கப்பாதையைப் பயன்படுத்தியிருந்தார்கள். இரு நாடுகளுக்கிடையேயான உறவை முற்றிலுமாக மாற்றியமைத்துள்ள இந்த கடலுக்கடியிலான வீதியை அமைக்க ஒன்பது பில்லியன் பவுண்கள் செலவிடப்பட்டுள்ளது. தற்போது அதனை அமைப்பதானால் சுமார் முப்பது பில்லியன் பவுண்கள் செலவழிக்க நேரிடும் என ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் வகையில் தரைப்பாலம் அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. அது அமைக்கப்பட்டால் சாதாரண மக்கள் வாழ்க்கைக்கு அது ஒரு பெரிய நிவாரணமாகும். கொழும்பிலிருந்து பயணத்தை ஆரம்பித்து தரை வழியாக தாய்லாந்துக்கு மாத்திரமல்ல இன்னும் சில நாட்களில் வியட்நாமுக்கும் செல்லலாம். தொடர்புகள் வாழ்க்கை முறையை மாற்றுவதோடு கொள்கைகளிலும் மாற்றம் ஏற்படும். எதிர்கால மாற்றங்களுக்கு அமைய நாடுகள் இணைக்கப்பட்ட பின்னர் உருவாகும் பின்னணியை கருத்தில் கொள்ளாவிட்டால் அது தனிமைப்படுத்தலுக்கு வழிவகுக்கும், இது பொருளாதாரப் பாதிப்புக்கும் காரணமாகும்.

இந்திய_ இலங்கை வரலாற்றைப் படிக்கும்போது, ஒரு நிலப்பரப்பு பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது, அனுமான் பாலம் அதற்குச் சான்று. இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட பூகோள நிலைமை பற்றி நவீன விஞ்ஞானிகள் விடயங்களை ஆய்வு செய்துள்ளார்கள். இலங்கையில் முதன் முதலாக குடியேற்றங்கள் கிழக்கிலிருந்து வந்த மக்களால் ஏற்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த ஆய்வுகளின் மூலம் நாகரிகத்தின் விரிவாக்கம் வெளிப்படுத்தப்படுகிறது. அனுராதபுரம் இராச்சியம் உருவானதன் மூலம் வர்த்தக தேவைகள் அதிகரித்ததனால் இலங்கையர்கள் பல்வேறு பிராந்தியங்களின் வர்த்தகக் குழுக்களுடன் கொடுக்கல் வாங்கல்களை கையாண்டது தெரியவந்துள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் ஆக்கிரமிப்புக்குப் பின்னர் அவர்கள் இலங்கையர்களை தீவுக்குள் அடைத்து, கடற்படை அதிகாரத்தையும் அண்டை நாடுகளுடனான தொடர்புகளையும் தங்கள் நிறுவனங்களிடம் ஒப்படைத்தனர். இதன் விளைவாக இலங்கையர்கள் வெளியுலகம் குறித்த அவதானம் இல்லாமல் தனிமைப்படுத்தப்பட்டவர்களானார்கள்.

சலுகை பெற்ற உயர்குடியினர் படிக்க, வியாபாரம் செய்ய அல்லது சிகிச்சை பெற வெளிநாடு செல்லக் கூடியதாக இருந்தது. திறந்த பொருளாதாரத்தால் இந்த நிலைமைகள் மாறிவிட்டன. சாதாரண மக்களும் வெளிநாடுகளுக்குச் சென்று அனுபவத்தைப் பெறவும் எதிர்காலத்தை வெற்றி கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

சமூக மாற்றம் தவிர்க்க முடியாதது. வாய்ப்புகளைத் தேடி அலையும் சமூகத்தைக் கட்டிப்போடும் முயற்சி வீணானது. குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள் சர்வதேச சமூகத்துடனான தங்கள் உறவுகளை அவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முயற்சிக்கின்றனர். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே தரைவழி எல்லை இருந்தால் இலங்கைக்கு இந்தியர்கள் வந்துவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்பட்டாலும், இலங்கையர்கள் விரிவடைவதற்கும், விரிவடைந்து வாய்ப்புகளைப் பெறுவதற்கும் உள்ள மாற்றம் குறித்து பேசப்படுவதில்லை.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

'கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை ஏற்கிறோம்'

# கனேடிய தூதுவரின் கூற்றிலிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும்

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்

கனடாவில் இன அழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோமென கனேடிய தூதுவர் பகிரங்கமாகவே ஏற்றுக்கொண்டுள்ளார். அதேபோன்று அவரது கூற்றிலிருந்து இலங்கையில் அரசியல், மத, சமூக தலைவர்கள் பாடம் கற்க வேண்டுமென, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் என் பக்கத்தில் அமர்த்திருந்தபடி பகிரங்கமாக இதனை ஏற்றுக்கொண்டார்.

"கனடாவில் எங்களின் சொந்த அனுபவம் இருக்கிறது. ஆதிக்குடிகள் தொடர்பில் கனடாவில் இனவழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். ஆதிக்குடிகளுடனான இன நல்லிணக்க முயற்சிகள் நடைபெறுகின்றன. அது தொடர்பில் நாம் பணியாற்றுகிறோம். அது சுலபமல்ல. அது நீண்ட பணி" என்று கூறினார். அதாவது தவறு, குற்றம் நிகழ்ந்ததை அந்நாட்டு அதிகாரபூர்வ தூதுவர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.



இதிலிருந்து இலங்கை கற்க வேண்டிய பாடம் என்ன? வரலாற்றில் தவறுகள், குற்றங்கள் எங்கும் நிகழும். ஆனால் அந்த தவறுகள், குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க முதலில் நாம் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மன்னிப்பு கோருவது என்பதுகூட இரண்டாம் பட்சம் தான். ஆனால் முதல் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்ற உண்மை ஏற்கப்பட வேண்டும். இதுவே இன, மத, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்ற பாடத்தை கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷின் கூற்றிலிருந்து இலங்கை அரசியல், மத, சமூக தலைவர்கள் கற்க வேண்டுமென்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற கனேடிய தமிழர் பேரவை ஊடக சந்திப்பில் கனேடிய தூதுவர் நிகழ்த்திய உரை தொடர்பிலேயே த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ள போது,

"கனேடிய தூதுவரின் நிலைப்பாடுகள் எனக்கு புதிதல்ல. அவையே எனது நிலைப்பாடுகளும் ஆகும். தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை எல்லா தரப்பும் வரலாற்றில் செய்கின்றன. அரசு நிறுவனமும் செய்கிறது. அரசற்ற நிறுவனமும் செய்கிறது. இங்கு யாரும் புனிதரல்ல.

காலம் ஓடுகிறது. இந்த கால ஓட்டத்தில் ஓரிடத்திலேயே தேங்கி தெப்பமாக நிற்க முடியாது. காலம் அனைத்தையும் கடத்தும். இங்கே அனைத்தும் கடந்து போகும். அப்போது புதிய பார்வைகள் தோன்றுகின்றன. புதிய சிந்தனைகள் உதிக்கின்றன. காலம் காட்டும் மாற்றங்களை ஏற்காவிட்டால், காலம் எம்மை தூக்கி வீசிவிட்டு போய்க்கொண்டே இருக்கும். அது யாருக்காகவும் காத்திருக்காது. எனது பார்வை இதுதான்.

நண்பர் எரிக் வோல்ஷ் தொடர்ந்தும் சொன்னார். "பல்லின, பன்மத, பன்மொழி என்ற பன்மைத்துவத்தை நாம் கொண்டாடுகிறோம்" என்று சொன்னார். அதுவே எமது பலம்" என்று சொன்னார். அதையே அவருக்கு முன் பேசும்போது நானும் சொன்னேன். இவற்றை என் சமூக ஊடக தளங்களில் பாருங்கள்.

இலங்கை பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்க கூடாது.

அதுவே எமது எதிர்கால மீட்சிக்கு ஒரே வழி. எனது வழி. எமது வலியை போக்கும் வழி" என்றார்.

# 'ஓயாத ஆளுமைகள்' நூல்; காலியில் வெளியீட்டு விழா

காலி மாவட்ட ஓய்வுபெற்ற கல்வியியலாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள 'ஓயாத ஆளுமைகள்' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி காலை 9.00 மணிக்கு காலி முஸ்லிம் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நூலை முன்னாள் ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.ஹிசாம் தொகுத்துள்ளார்.

மேற்படி அமைப்பின் தலைவர் கலாபூஷணம் ஏ.சி.எம்.ஜிப்ரி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். அனீஸ் பிரதம அதிதியாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் நுர் ரிஸ்னா அனீஸ் விசேட அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ அதிதிகளாக தென்மாகாண முன்னாள் பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.மொகமட், தென்மாகாண பிரதி கல்விப் பணிப்பாளர் (தமிழ்) அஷ்ஷெய்க் எம்.ஏ. எம்.மசாயிர், பிரதம பொறியியலாளர் மொஹமட் இஸ்மத், எலிஜன் ஜுவலரி உரிமையாளர் எஸ்.எச்.எம். நிசாம், சீ பெயார் நிறுவன பணிப்பாளர் ஏ.எச்.எம்.அம்ஜத், லங்கா ஜெம் என்ட் ஜுவலரி முகாமைத்துவ பணிப்பாளர் இப்லால் குத்தூஸ், மாணிக்கக்கல் வர்த்தகர் ஏ.டபிள்யூ. எம்.பாரூக், தௌபீக் செரமிக் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ரீ.அக்ரம், லங்கா ஹாட்வெயார் உரிமையாளர் சப்ராஸ் மொஹமட் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கார் பள்ளத்தில் வீழ்ந்து விபத்து:

# ரஷ்ய இளைஞர் உட்பட இருவர் பலி; மேலும் இருவருக்கு காயம்

## கண்டி, உன்னஸ்கிரிய பகுதியில் சம்பவம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கண்டி, உன்னஸ்கிரிய பகுதியில் நேற்று காரொன்று வீதியை விட்டு விலகிச் சென்று, பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ரஷ்யப் பிரஜை ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் இந்த விபத்தில் ரஷ்ய பிரஜையான இளைஞர் ஒருவரும் எமது நாட்டு பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளதுடன், அந்தக் காரில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்து மெதமகநுவர வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் உயிரிழந்துள்ள ரஷ்ய நாட்டு இளைஞர் 28 வயதுடையவர் என்றும் இலங்கைப் பெண் 51 வயதுடையவர் என்றும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

### அதிகாரப்பகிர்வின் போது...

இந்தியா இன்றிருக்கின்ற நிலைக்கு வரக்கூடியதாக இருந்தது. நாங்கள் இந்தியாவுடன் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டுமென்றும், அவர் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கடந்த புதன் (26) கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த போது,

"13ஆவது சட்டத்தின் மூலம் அதிகாரத்தை பகிரும் போது நாம் இந்தியாவை பின்பற்ற வேண்டும். ஏனெனில் இந்தியா, அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியான அதிகாரங்களை வழங்கவில்லை. சில இடங்களுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கியுள்ளது. சில மாநிலங்களுக்கு குறைவான அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் அதிகாரப்பகிர்வு ஒரே மாதிரியாக இருக்க வேண்டியதில்லை என்பது புலனாகின்றது. வேண்டுமெனின், வடக்குக்கு சில வருடங்கள் அதிகாரத்தை பகிர்ந்தளித்து அதனை அவர்கள் எவ்வாறு நிர்வகிக்கின்றனர் என்பதை அவதானிக்கலாம். சரியான முறையில் நிர்வாகம் நடைபெறுமெனின், தேவையான மற்றவர்களுக்கும் அவ்வாறே அதிகாரத்தை பகிர்ந்தளிக்க முடியும். சில சந்தர்ப்பங்களில் எமது பக்கத்திலும் தளர்வு கொள்கையை பின்பற்ற வேண்டும். நாம் இதனை புதிய கோணத்தில் பார்க்க வேண்டும். தற்போதுள்ள சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு அதனை நாம் புதிய கோணத்தில் நோக்க வேண்டும். அவ்வாறு நோக்குவதால் நாட்டுக்கு நன்மை ஏற்படுமெனின், சிறுபான்மையினருக்கு நன்மை ஏற்படுமெனின் இந்தியா உட்பட ஏனைய நாடுகள் எமது நாட்டுக்குள் தலையிடாது" எனத் தெரிவித்தார்.

"அதிகாரப்பகிர்வு தொடர்பாக அனைத்துக் கட்சிகளும் ஒன்றாக சேர்ந்து கலந்தாலோசிக்க வேண்டும். கலந்தாலோசித்து, விவாதித்தே ஒரு நல்ல தீர்மானத்தை எடுக்க வேண்டும். அதிகாரப்பகிர்வு என்பது நாட்டை பிரிப்பதல்ல. அது பொய்யான கூற்றாகும். அத்துடன், தவறான வாதமுமாகும். அப்படியென்றால் அதிகாரங்களை பகிர்ந்தளித்துள்ள இந்தியாவுக்கு என்ன நடந்துள்ளது. மேலும், சுவிட்சர்லாந்திலும் அதிகாரப்பகிர்வே காணப்படுகின்றது. அதுவும் எம்மை போன்ற சிறிய நாடாகும். மேலும் பெல்ஜியமும் எம்மை விட சிறிய நாடாகும். அங்கும் கடுமையான அதிகாரப்பகிர்வே காணப்படுகின்றது. எனினும், நாடு பிளவுபடவில்லை. அந்த நாடுகளில் அதிகாரம் பகிரப்பட்டுள்ள விதம் தொடர்பாக நாம் ஆராய வேண்டும். நாம் அந்த இடத்துக்கு செல்லும் போது அரசியல் முறை, சமூக முறை, பொருளாதார முறை தொடர்பில் ஆழமாக கலந்துரையாட வேண்டும். அது தனியாக செய்யும் பணியல்ல. அனைத்து கட்சிகளும் சேர்ந்து செய்ய வேண்டிய செயலாகும். அவ்வாறு செய்வதன் மூலமே அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு அதிகாரப்பகிர்வை நோக்கி செல்லக்கூடியதாக இருக்கும். அவ்வாறானதொரு கூட்டு உருவாகினால், அரசியல் முறைமையில் காணப்படுகின்ற சிக்கலான நிலைமைகளை எமக்கு தீர்த்துக்கொள்ள முடியும். தேவையான புதிய அரசியலமைப்பை உருவாக்கிக்கொள்வதற்கும் அதனை பயன்படுத்திக் கொள்ளமுடியும்" என, விக்டர்ஐவன் மேலும் தெரிவித்தார்.

ஏதேனுமொரு விடயத்தை மாற்ற முற்படும் போது, அது தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கிடையில் மாத்திரம் கலந்துரையாடி எவ்வித பலனுமில்லை. அதில் பொதுமக்களை இவ்விடயம் தொடர்பாக அறிவுறுத்துவது மிக முக்கியமான விடயமாகும். அதற்கு சிறந்த உதாரணமாக இந்தியாவும் தென்னாபிரிக்காவும் திகழ்கின்றன.

அதேபோன்று இலங்கை வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ள பிரச்சினை, அனைவரும் ஒன்றிணைந்து விவாதித்து, அதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை உருவாக்கி வெற்றி பெற்றிருக்க வேண்டிய ஒரு பிரச்சினை என்பதை சொல்ல வேண்டியுள்ளது. இது அரசாங்கம் மாத்திரம் முகங்கொடுக்க வேண்டிய பிரச்சினையல்ல. ஏனைய அனைத்து கட்சிகளும் இந்த பிரச்சினை தொடர்பில் தமது பங்களிப்பை செலுத்த வேண்டியிருந்தது. இதனை தவறவிட்டிருக்க கூடாது. குறைந்தபட்சம் நாம் தற்போதாவது இதனை அறிவார்ந்த ரீதியில் தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும்.

உலக வல்லரசு சமநிலையில் எதிர்காலத்தில் இந்தியா முக்கிய இடத்தை வகிக்கும். அதேபோன்று, இந்தியாவுடன் இணைந்து செயற்படும் பட்சத்தில் எமக்கும் முன்னேறுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதாகவும், சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார்.

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

# வாசிப்பும் இலக்கியமும் குன்றிச் செல்லும் துயரம்!

ஆட்கொண்டு விட்டதால் இலக்கிய ஆர்வமும், பயனுள்ள வாசிப்புகளும் குன்றிப் போய்விட்டன.

அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்ற இலங்கை எழுத்தாளரான லெ. முருகபூபதி கடந்த மாதம் இலங்கைக்கு வருகை தந்து ஒருமாத காலம் இங்கு தங்கியிருந்து விட்டுத் திரும்பியிருந்தார். அவர் அக்காலத்தில் இலங்கையின் தேசியப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகளை ஏராளமாகப் படைத்தவர். இன்றும் உலக தமிழ் இலக்கியப் பரப்பிலும், ஊடகவெளியிலும் முருகபூபதியைத் தெரிந்திருக்காத இலக்கிய ஆர்வலர்கள் இல்லை எனலாம். அன்று போல இன்றும் சுறுசுறுப்பாக இயங்கி வருபவர் அவர்.

அத்துடன் நின்று விடாமல் இலங்கையில் ஆதரவற்ற சிறார்களான மாணவர்கள் நூற்றுக்கணக்கானோரின் கல்விக்கு உதவும் தொண்டு அமைப்பொன்றையும் அவுஸ்திரேலியாவில் நடத்தி வருபவர் அவர்.

ஒரு மாதகாலமாக இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் இலக்கிய சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு அவுஸ்திரேலியா திரும்புகையில் அவர் வேதனையுடன் கூறிய தகவல் இது.

"இளவயதினரிடம் மாத்திரமன்றி, வயதானவர்களிடமும் வாசிப்பு மீதான நாட்டமும் அக்கறையும் அருகியே போய்விட்டன. எமது தலைமுறையுடன் இலக்கியமும் வாசிப்பும் முற்றாகவே இல்லாமல் போய்விடுமோ என்று அச்சமாக உள்ளது" என்றார் வேதனையுடன் எழுத்தாளர் முருகபூபதி.

கலையும் இலக்கியமும் நம் வாழ்வுடன் பின்னிப்பிணைந்தவை என்பதால் அவரது அக்கருத்தை புறந்தள்ளிவிட முடியாது.

### பொருளாதார மீட்சிக்கு...

உறுதிப்படுத்தினோம். எங்களது 75 வருடகால இராஜதந்திர உறவுகள், எங்களின் ஒருமைப்பாட்டுக்கான வலுவான இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது" என குறிப்பிட்டிருந்தார்.

அரசியல், பொருளாதாரம், சுற்றுலா, காலநிலை மாற்றம், நிலையான வளர்ச்சி மற்றும் கடல்சார் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக இரு தலைவர்களுக்குமிடையேயான கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவையொட்டி, ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான முக்கிய அம்சங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக்கான பாடசாலையொன்றை நிறுவுதல், இலங்கையில் அபிவிருத்திக்கான பிரான்ஸ் பணியகமொன்றை (AFD) நிறுவுதல், உயர்மட்ட இராஜதந்திர கலந்துரையாடல்களை ஆரம்பித்தல், கல்வித்துறையில் ஒத்துழைப்பு மற்றும் கடல்வழி ஆள்கடத்தல் செயற்பாடுகளை தடுப்பதற்கான முயற்சிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் தற்போதைய உலகளாவிய நகர்வுகள், பிராந்திய மற்றும் பலதரப்பு நலன்கள் தொடர்பாகவும் இரு நாட்டு தலைவர்களும் கருத்து பரிமாறிக்கொண்டனர். பிரான்ஸ் அங்கம் வகிக்கும் இந்திய பெருங்கடல் பிராந்திய சம்மேளனத்தின் (IORA) எதிர்வரும் தலைமை பதவிக் காலத்தில் இலங்கையுடன் ஒத்துழைத்து செயற்பட ஆர்வமாக இருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்தார். பிரான்ஸ் பங்கேற்கும் இந்து சமுத்திர சம்மேளனத்துக்கான தனது அர்பணிப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதன்போது வெளிப்படுத்தினார்.

2023 ஜூன் 22 முதல் 23 வரை பிரான்ஸ் ஜனாதிபதியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு காலோசிதமானது என்பதை அதனில் பங்கேற்றவர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நிலையான எதிர்காலத்துக்கான உலகளாவிய முயற்சிகளுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்தி, பாரிஸ் நிகழ்ச்சிநிரலில் இணைவதற்கான இலங்கையின் இணக்கப்பாடு தொடர்பாகவும் இங்கு அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸின் ஐரோப்பிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் கேத்தரின் கொலோனா, இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிரானகோசிஸ் பெக்டட் (JeanFrancoise Pactet), பிரான்ஸ் ஜனாதிபதியின் ஆலோசகர்களான பெபியன் மெண்டன்( Fabien Mandon), வலிட் பவூக் (Walid Fouq) மற்றும் ஜோஸ் செரஸ் (Josue Serres) பிரான்ஸ் வெளியுறவு அமைச்சின் ஆசிய வலய தலைவர் பெனாய்ட் கைடி, பிரான்ஸ் ஜனாதிபதியின் ஊடக ஆலோசகர் ஜோன்ஸ் பயார்ட், வெளிக்கள வலயங்கள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் பிலிப் விஜீயர், வெளிவிவகார அமைச்சரின் ஆலோசகர் பிலோமியன் கார்டினொக்ஸ் ஆகியோர் பிரான்ஸ் ஜனாதிபதியின் தலைமையில் இருதரப்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, இலங்கை வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா) ஷோபினி குணசேகர ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான இலங்கைக் குழு சார்பில் கலந்துகொண்டனர்.

### சீதாவக்க ஒ.டி.சி ரயில்...

ஒ.டி.சி. சுற்றுலா ரயில் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமையும் சேவையில் ஈடுபடவுள்ளதாக, ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாண சுற்றுலாசபை மூலம் மேல் மாகாணத்தில் சுற்றுலாத் தளங்களை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த ரயில் சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக, அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. அந்த வகையில் சனிக்கிழமைகளில் சீதாவக்க ஒ.டி.சி. ரயில், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காலை 7.15 மணிக்கு பயணிக்கவுள்ளதுடன், ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 5.10 மணிக்கு அந்த ரயில், வக ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தை நோக்கி பயணிக்கவுள்ளதாகவும், அந்த திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### தையிட்டி விவகாரத்துக்கு...

தையிட்டி விகாரையின் விகாரதிபதி ஜின்தோட்ட நந்தாராம தேரருடன் நேற்று (29) நடத்திய சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அமைச்சர் இதனை தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

"திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான காணிகள் தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் ஏற்கெனவே ஜனாதிபதியுடன் கலந்துரையாடி இருக்கின்றேன். அதன் தொடர்ச்சியாக விகாராதிபதியை சந்தித்தும் கலந்துரையாடினேன்.

விகாரை அமைந்துள்ள பகுதியிலுள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பாக சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதுடன், மாவட்ட கட்டளை தளபதி, பிரதேச செயலாளர் மற்றும் நில அளவையாளர் ஆகியோருடன் தொலைபேசியூடாக கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுள்ளது. விரைவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு பரிகாரம் காணப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கடலுக்கடியில் எரிபொருள்...

அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக, இந்திய எரிபொருள் நிறுவனம் இலங்கைக்கு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் சிரேஷ்ட ஆலோசகருமான முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவுடனான பேச்சுவார்த்தையின் போதே, இந்திய எரிபொருள் நிறுவனம் இதனை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலும் இலங்கையிலும் நடந்த இரண்டு பேச்சுவார்த்தைகளின் போதே, இந்திய எரிபொருள் நிறுவனத்தின் உயரதிகாரிகள் அது தொடர்பில் சாகல ரத்நாயக்கவிடம் தெரிவித்துள்ளனர்.

தென்னிந்தியாவின் நாகபட்டிணத்தை அண்டிய பிரதேசத்திலிருந்து கடலுக்கடியில் இலங்கைக்கு மேற்படி எரிபொருள் விநியோக குழாய் தொகுதியை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், அந்த குழாய் தொகுதியை வவுனியாவரை கொண்டு செல்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அதில் ஒரு குழாய்த்தொகுதி திருகோணமலை வரை கொண்டு செல்லப்படவுள்ளதுடன், மற்றுமொரு குழாய்த்தொகுதி மன்னார்வரை கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து கொழும்புவரை கொண்டு வருவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய எரிபொருள் நிறுவனம் இந்திய தரப்பில் மேற்கொள்ள வேண்டிய பெரும்பாலான நடவடிக்கைகளை இதுவரை நிறைவு செய்துள்ளதுடன், இலங்கை தரப்பினர் தமது ஆய்வு நடவடிக்கைகளை தாமதப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு காரணம் தனியார் காணிகள் அந்தத் திட்டத்தில் சம்பந்தப்படுவதே என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வெகுவிரைவில் இந்த எரிபொருள் குழாய்த்தொகுதி நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்திய நிறுவனம் தயாராகவுள்ளதாக ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்கவுடனான பேச்சுவார்த்தையில் அந்த நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச அரச தலைவர்கள்...

இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி, உலகின் ஏழாவது பொருளாதார வளர்ச்சியை கொண்ட நாடான பிரான்ஸ் ஜனாதிபதி, உலகின் மூன்றாவது பொருளாதார வளர்ச்சி கொண்ட நாடான ஜப்பானின் வெளிவிவகார அமைச்சர் அத்துடன், உலகின் இரண்டாவது பாரிய பொருளாதார நாடான சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி முக்கியஸ்தர்கள் இந்த மாதத்தின் கடந்த 11 நாட்களில் ஜனாதிபதியை சந்தித்துள்ளமையே இந்த வரலாற்றுப் பதிவாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த 21ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய ஜனாதிபதி திரௌபதி மூமர் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அதனையடுத்து, இரண்டு தினங்களுக்கு பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் சபை முக்கியஸ்தர் யுவான் பியாஜுன் தலைமையிலான சீனத் தூதுக் குழுவை சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அதற்கு பின்னர் நேற்று முன்தினம் (28) இரவு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோனை சந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அத்துடன், பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்தமை இதுவே முதல் தடவையாகும்.

கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரான்ஸுக்கான விஜயத்தை மேற்கொண்ட போது, இலங்கைக்கு வருகை தருமாறு பிரான்ஸ் ஜனாதிபதிக்கு விசேட அழைப்பு விடுத்திருந்தார்.

அதற்கிணங்க, பிரான்ஸ் ஜனாதிபதி பப்புவா நியூகினியாவில் இருந்து பிரான்ஸுக்கு செல்லும் வழியில் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அத்துடன், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யொஷிமசா (HAYASHI Yoshimasa) தலைமையிலான ஜப்பானிய தூதுக்குழு இலங்கைக்கு வருகை தந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நாட்டின் முக்கிய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தமிழக முதல்வர் ஸ்டாலினுடன்...

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் இல்லத்தில் மரியாதை நிமித்தம் இந்த சந்திப்பு நேற்றுக் (29) காலை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களின் மேம்பாட்டுக்காக தமிழக அரசாங்கத்தின் பங்களிப்பும் அவசியம் என்ற கோரிக்கையை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்வைத்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடந்த வருடம் இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடியின் போது தமிழக அரசாங்கம், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் நன்கொடையாக அரிசி வழங்கியிருந்தது. இதற்கு இலங்கை மக்கள் சார்பாக தனது நன்றியையும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

இந்த சந்திப்பின் போது, சென்னையிலுள்ள இலங்கை தூதரகத்தின் துணைத் தூதர் டாக்டர் வெங்கடேஸ்வரன் மற்றும் அரச உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

அமைச்சரின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இரு நாட்டு மீனவர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுமூக தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என முதல்வரிடம் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், இவ்விவகாரம் சம்பந்தமாக இலங்கை அமைச்சரவையிலும் பேசவுள்ளதாக அவரிடம் தெரிவித்துள்ளார்.

மலையக கல்வி அபிவிருத்தி சம்பந்தமாக தமிழக அரசாங்கத்திடம் 4 கோரிக்கைகளை முன்வைத்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக மாணவர்களுக்கு தமிழகத்திலும் பட்டப்படிப்பை நிறைவுசெய்வதற்கான புலமைப்பரிசில் திட்டங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடியுள்ளார்.

மலையக தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அம்மக்களின் இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கிய, வழங்கி வரும் பங்களிப்பை பாராட்டும் வகையில் அவர்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையிலான மலையகம் 200 விழா அரச அனுசரணையுடன் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ளமை பற்றியும் தமிழக முதல்வருக்கு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெளிவுபடுத்தியுள்ளார்.

கலைஞரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு பல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டமையை நினைவுகூர்ந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், தொடர்ந்தும் தி.மு.க. அரசு முன்னெடுக்கும் திட்டங்களுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்தார்.

# நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வு



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்

**இலங்கை அரசாங்க செலவினங்களின் பின்னணியில் நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வுகளை நடத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.**

சமீப ஆண்டுகளில் பொது நிதியின் சரியான பயன்பாடு ஒரு மிகப்பெரிய கேள்விக்குறியாகவும் கவலையாகவும் மாறியுள்ளது. மேலும், இந்த நிதியின் ஒதுக்கீடு மற்றும் பயன்பாட்டில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயற்திறனை உறுதி செய்வதில் நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வு மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

'நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வு' என்பது ஒரு விரிவான மதிப்பீட்டுக் கருவியாகச் செயற்படுகிறது. இது அரசாங்கச் செலவுகள் குறைந்த செலவில் விரும்பிய விளைவுகளை அடைகிறதா என்பதை ஆய்வு செய்கிறது. அரசாங்கத் திட்டங்கள், சேவைகளின் திறன், செயற்திறன் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை ஆராய்வதன் மூலம் இந்தத் தணிக்கைகள் பொது முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஒட்டுமொத்த மதிப்பின் சிறந்த தரவுகளை வழங்குகின்றன.

இலங்கையில் நிலையான அபிவிருத்திக்கு நிதிசார் விவேகமும் பொறுப்பான நிதி முகாமைத்துவமும் இன்றியமையாததாக இருக்கும் நிலையில் பணத்திற்கான பெறுமதியானது கூடுதலான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அவை விரயங்கள், மோசடி அல்லது தவறான நிர்வாகத்தின் எந்த நிகழ்வுகளையும் அடையாளம் காண உதவுகின்றன. இதன் மூலம் பொது வளங்களைப் பாதுகாக்கின்றன மற்றும் அரசாங்கத்தின் நிதிசார் முடிவுகளை எடுப்பதில் பொதுமக்களின் நம்பிக்கையை வளர்க்கின்றன.

மேலும், நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வுக் கொள்கை வகுப்பாளர்களை மேம்படுத்துதல் அல்லது வளங்களின் மறுஒதுக்கீடு தேவைப்படும் பகுதிகளை முன்னிலைப்படுத்துவதன் மூலம் தரவு சார்ந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது. திறமையின்மைகளை கண்டறிந்து செலவு,சேமிப்பு நடவடிக்கைகளை பரிந்துரைப்பதன் மூலம் இந்தத் தணிக்கைகள் மேம்பட்ட சேவைகளை வழங்குவதோடு அரசாங்க செலவினங்களை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கின்றன.

நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வு என்பது ஒரு வகையான நிதி கணக்காய்வு ஆகும். இது அரசாங்க நிதி அல்லது பொது சொத்துக்கள் போன்ற பொது வளங்கள் திறமையாகவும் திறம்படவும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் பயன்படுத்தப்பட்டதா என்பதை மதிப்பிடுவதிலும் கவனம் செலுத்துகிறது. நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வின் முதன்மை நோக்கமானது பொது வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள், செலவுகளை நியாயப்படுத்துகிறதா என்பதைத் தீர்மானிப்பதாகும்.

அரசாங்க வசதிகளில் நாணயப் பெறுமானம் என்பது பொது மக்களுக்கு உறுதியான நன்மைகளை வழங்கும் உயர்தர சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பை வழங்குவதாகும். அதேநேரத்தில் பொது வளங்கள் பொறுப்புடனும் திறமையாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது. இதற்கு செலவுசெயற்திறன், சேவைத் தரம், வெளிப்படைத்தன்மை, நிலைத்தன்மை மற்றும் பொது ஈடுபாடு ஆகியவற்றுக்கு இடையே சமநிலை தேவைப்படுகிறது.

### பொது மக்களுக்கு அரசு வசதிகளில் நாணய பெறுமானம் என்றால் என்ன?

'அரசாங்க வசதிகளில் நாணய பெறுமானம்' என்பது பொது மக்களுக்குச் சிறந்த சேவைகள் மற்றும் நன்மைகளை வழங்க பொது வளங்கள் மற்றும் வரி செலுத்துவோர் பணம் திறமையாகவும் முறையாகவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் குறிக்கிறது. அதாவது அரசாங்கம் உயர்தரச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பை வழங்குவதை உறுதி செய்யும் அதேநேரத்தில் நன்மைகளை அதிகப்படுத்துகிறது மற்றும் செலவுகளைக் குறைக்கிறது.

அரசாங்க வசதிகளில் நாணய பெறுமதி அடைய பல காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அவற்றுள் சில:

செலவுசெயற்திறன்: அரசாங்க வசதிகள் செலவு குறைந்த முறையில் கட்டப்பட்டு, இயக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். இது வளங்களின் ஒதுக்கீட்டை மேம்படுத்துதல், புதுமையான கொள்முதல் நடைமுறைகளைப் பயன்படுத்துதல் மற்றும் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்தல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

சேவையின் தரம்: பொது மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் உயர்தர சேவைகளை அரசு வசதிகள் வழங்க வேண்டும். அணுகல், நம்பகத்தன்மை, பாதுகாப்பு, தூய்மை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி போன்ற காரணிகள் இதில் அடங்கும்.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்: அரசாங்கங்கள் பொது நிதியைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து அவற்றின் வசதிகளின் விளைவுகளுக்கும் செயற்திறனுக்கும் பொறுப்புக்கூற வேண்டும். இது முறையான நிதி மேலாண்மை, வழக்கமான தணிக்கைகள் மற்றும் வளங்கள் திறமையாகவும் திறம்படவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வழிமுறைகளை உள்ளடக்கும்.

நீண்ட கால நிலைத்ததன்மை: பராமரிப்பு, ஆயுள், ஆற்றல் திறன் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு அரசாங்க வசதிகள் நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் வடிவமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட வேண்டும். இது விலையுயர்ந்த பழுதுபார்ப்புகளைத் தவிர்க்கவும், மற்றும் வசதிகள் செயற்படுவதை உறுதி செய்யவும், காலப்போக்கில் பொதுமக்களுக்கு பயனுள்ளதாகவும் இருக்கும்.


பொது மக்களின் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு: முடிவெடுக்கும் செயன்முறைகளில் பொது மக்களை ஈடுபடுத்துவது, மற்றும் அரசாங்க வசதிகளில் அவர்களின் உள்ளீட்டைப் பெறுவது சிறந்த விளைவுகளுக்கு பங்களிக்கும். பொது மக்களின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளைப் புரிந்துகொள்வதன் மூலம் அரசாங்கங்கள் வளங்களை மிகத் திறம்பட ஒதுக்கலாம் மற்றும் அவர்கள் சேவை செய்யும் சமூகங்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்ப வசதிகளை உருவாக்கலாம்.

### பொதுச் சேவைகளை நோக்கிய அரசு சேவைகளில் உள்ள பலவீனம் என்ன?

பொதுச் சேவைகளை நோக்கிய அரசாங்க சேவைகளில் பல குறைபாடுகள் இருக்கலாம். அவற்றுள் சில:

அதிகாரத்துவம் மற்றும் திறமையின்மை: அரசு நிறுவனங்கள் பெரும்பாலும் அதிகாரத்துவக் கட்டமைப்புகள் மற்றும் தாமதமாக முடிவெடுக்கும் செயன்முறைகளால் பாதிக்கப்படுவதால் சேவை வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது. அத்துடன் திறமையின்மையானது பொதுத் தேவைகளுக்குப் பதிலளிக்கும் தன்மையைத் தாக்குவதோடு குடிமக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்துகிறது.

பொறுப்புக்கூறல் இல்லாமை: பொதுச் சேவைகளில் பொறுப்புக்கூறலுக்கான தெளிவான வழிமுறைகள் இல்லாமல் இருக்கலாம். இதனால் அரசு அதிகாரிகளை மற்றும் நிறுவனங்களை அவர்களின் செயல்கள் அல்லது செயலற்ற தன்மைகளுக்குப் பொறுப்பாக்குவது கடினம். இது ஊழல் , பாகுபாடு காட்டும் தன்மை மற்றும் வளங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்றனவற்றிற்கு வழிவகுக்கும்.




போதிய நிதியின்மை: அரசாங்க சேவைகள் போதிய நிதியில்லாமல் பாதிக்கப்படலாம். இது பொதுக் கோரிக்கைகளைத் திறம்பட நிறைவேற்றும் திறனைக் குறைக்கும். வரையறுக்கப்பட்ட வளங்கள் சேவைகளின் தரம் மற்றும் கிடைக்கும் தன்மையைப் பாதிக்கலாம். இது குடிமக்கள் மத்தியில் அதிருப்திக்கு வழிவகுக்கும்.

வரையறுக்கப்பட்ட அணுகல்: சில பொதுச் சேவைகள் அனைத்து குடிமக்களுக்கும், குறிப்பாக கிராமப்புற அல்லது ஒதுக்கப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்கு எளிதில் அணுகப்படாமல் இருக்கலாம். புவியியல் கட்டுப்பாடுகள், போதிய உட்கட்டமைப்பு அல்லது வரையறுக்கப்பட்ட முயற்சிகள் காரணமாக அணுகல் சிக்கல்கள் ஏற்படலாம்.

வெளிப்படைத்தன்மை இல்லாமை: அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கு வெளிப்படைத்தன்மை மிகவும் முக்கியமானது. அரசாங்க சேவைகளில் வெளிப்படைத்தன்மை இல்லாதபோது எப்படி முடிவுகள் எடுக்கப்ப டுகின்றன? எப்படி வளங்கள் ஒது க்கப்படுகின்றன? மற்றும் அவர்களின் தேவைகள் எவ்வாறு கவனிக்கப்படுகின்றன? என்பதைப் புரிந்துகொள்வது குடிமக்களுக்கு சவாலாகின்றது.

ஒழுங்கமைப்பு / ஒருங்கிணைப்பு இல்லாமை: பல்வேறு அரசு நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுவதாலும், ஒழுங்கமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு இல்லாமையினாலும் வளங்களை வீணாக்குவதற்கும் செயற்திறன் குறைவதற்கும் வழிவகுக்கும்.

வரையறுக்கப்பட்ட குடிமக்கள் பங்கேற்பு: உள்ளடக்கிய நிர்வாகத்திற்கு அர்த்தமுள்ள குடிமக்கள் பங்கேற்பு நிச்சயம் அவசியம். இருப்பினும், முடிவெடுக்கும் செயன்முறைகளில் குடிமக்களை ஈடுபடுத்துவதற்கும், அவர்களின் கருத்துக்களை இணைப்பதற்கும் அரசாங்க சேவைகள் பெரும்பாலும் வழிமுறைகளைக் கொண்டிருக்கவில்லை. இது பொதுத் தேவைகள் மற்றும் விருப்பங்களுடன் முழுமையாக ஒத்துப்போகாத கொள்கைகள் மற்றும் சேவைகளுக்கு வழிவகுக்கும்.

டிஜிட்டல் / எண்முறைப் பிளவு: அதிகரித்து வரும் டிஜிட்டல் உலகில் டிஜிட்டல் பிளவானது அரசாங்க சேவைகளை அணுகுவதில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கலாம். வரையறுக்கப்பட்ட இணைய அணுகல் அல்லது டிஜிட்டல் கல்வியறிவு உள்ளவர்கள் ஆன்லைன் சேவைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம். மேலும், மக்கள் தொகையில் சில பிரிவினரை ஓரங்கட்டலாம்.

புதுமை மற்றும் பின்பற்றும் திறன் இல்லாமை: புதிய தொழில்நுட்பங்கள், புதுமையான அணுகுமுறைகள் அல்லது மாறிவரும் சமூகத் தேவைகளுக்கு ஏற்ப அரசு சேவைகள் சில சமயங்களில் தாமதமாகலாம். இது திறமையான மற்றும் பயனுள்ள பொதுச் சேவைகளை வழங்குவதில் தடையாக இருக்கும்.

இந்தப் பலவீனங்கள் வெவ்வேறு அரசாங்க அமைப்புக்களிலும் வேறுபடலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சீர்திருத்தங்கள், கொள்கை மாற்றங்கள் மற்றும் குடிமக்கள் ஈடுபாட்டின் முன்முயற்சிகள் மூலம் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகள் அடிக்கடி மேற்கொள்ளப்படவேண்டும்.

நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வுகள் பொதுவாக அரசு தணிக்கையாளர்கள் அல்லது தணிக்கை முகவர்களால் பொதுத் திட்டங்கள் அல்லது நிறுவனங்களின் செயற்திறனை மதிப்பிடுவதற்காக நடத்தப்படுகின்றன. கணக்காய்வு செயன்முறை, கணக்காய்வு செய்யப்படும் திட்டங்கள் அல்லது செயற்பாடுகளில் பின்வரும் அம்சங்களை ஆராய்வதை உள்ளடக்கும்.

பொருளாதாரம் (செலவுகளைக் குறைத்தல்)

திறன் (கொடுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு வெளியீட்டை அதிகப்படுத்துதல்)

செயற்திறன் (இலக்குகளை அடைதல்)

நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வின் போது பின்வரும் காரணிகளை கணக்காய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்;

திட்டமிடல் மற்றும் பட்ஜெட் / வரவு செலவுத் திட்டச் செயன்முறை

கொள்முதல் நடைமுறைகள்

செயற்பாட்டுத் திறன்

இடர் முகாமைத்துவம்

விரும்பிய முடிவுகளை அடைதல்

இவற்றின் மூலம் பொது வளங்கள் மிகவும் செலவு குறைந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதா? மாற்று விருப்பங்கள் போதுமான அளவில் பரிசீலிக்கப்பட்டுள்ளதா? எதிர்பார்த்த பலன்கள் எட்டப்பட்டுள்ளனவா? என அவை ஆய்வு செய்கின்றன.

நாணயப் பெறுமானத்திற்கான கணக்காய்வுகளின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள் பொது அதிகாரிகள் / முடிவெடுப்பவர்களுக்கு சிறந்த விழிப்புணர்வு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

பொது வளங்களின் பயன்பாட்டை எவ்வாறு மேம்படுத்தல்?

பொறுப்புணர்வை மேம்படுத்துதல்

பணத்திற்கான மதிப்பை அதிகரித்தல்

பின்வருமாறு கணக்காய்வு அறிக்கைகள் பொதுத் திட்டங்களில் பங்களிக்க முடியும்.

செலவு சேமிப்பிற்கான பகுதிகளைக் கண்டறிதல்

செயற்பாட்டுத் திறனை அதிகரித்தல்

ஒட்டுமொத்த செயற்திறனை மேம்படுத்தல்

மொத்தத்தில், நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வானது பொது வளங்கள் அவற்றின் பயன்பாட்டிலிருந்து பெறப்பட்ட நன்மைகளை மேம்படுத்தும் விதத்தில் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே நேரம் பொதுத் துறையில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வையும் ஊக்குவிக்கிறது.

இலங்கை அரசாங்கச் செலவினங்களில் பணத்திற்கான மதிப்பின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயற்திறனை உறுதி செய்வதன் மூலம் பொறுப்பான நிதி நிர்வாகத்தை மேம்படுத்துவதிலும் பொது நிதியிலிருந்து பெறப்பட்ட மதிப்பை அதிகரிப்பதிலும் இந்த நாணய பெறுமானத்திற்கான கணக்காய்வுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை கொள்கை வகுப்பாளர்களுக்கு மதிப்புமிக்க நுண்ணறிவுகளுடன் வலுவூட்டுகின்றன. இது சிறந்த முடிவினை எடுப்பதற்கு வழிவகுப்பதுடன் இறுதியில் இலங்கையின் குடிமக்களுக்கு பலவகைகளில் நன்மை பயக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



# பேசாப் பொருள் எல்லாம் பேசு பொருளாக்கிய ஆசிரியர் சிவகுருநாதன்

"இப்பிடி வாடாப்பா கொஞ்சம்"

தினகரன் விளம்பர பீடத்தில்தான் நான் வேலை பார்த்து வந்தேன். அங்கிருந்தபடியே வாரம் ஒரு கட்டுரை வாரமஞ்சரிக்கு எழுதுவேன். அப்படி பல்வேறு விஷயங்கள் பற்றி எழுதும்படி தினகரன் ஆசிரியர் சிவகுருநாதன் என்னிடம் கேட்டிருந்தார்.

மாலை மூன்றரை மணியளவில் அவரை சந்திக்கச் செல்வேன். அனேகமாக அச்சமயத்தில் வேலைப்பளுவின்றி அமர்ந்திருப்பார். அப்படி ஒரு நாள், ஆனந்தி அக்காவிடமோ அல்லது அருளானந்தத்துடனோ பேசிக் கொண்டிருப்பதை அவதானித்த அவர் "இப்படி வாடாப்பா" என்றார்.

கதவைத் தள்ளியபடி உள்ளே சென்றேன்.

"அடேப்பா, உன் கட்டுரைக்கு எதிராக பத்திரிகை கமிஷனில் முறைப்பாடு செய்திருக்கிறார்கள். நாளைக்கு விசாரணைக்கு வருது, நானும் அதில் ஒரு மெம்பர் தெரியுமோ, உன் விஷயம் எடுத்துக் கொள்ளப்படும் போது நான் அங்கே இருக்கக் கூடாதெல்லோ? நான் எழும்பி வெளியே போய் விடுவேன்"

என்று அவர் சொல்லத் தொடங்கியதும் எனக்கு நெஞ்சு படக் படக் என்றது.

"அதுக்கு நீ அலட்டிக் கொள்ளாதே, அத நான் பார்த்துக் கொள்றன், உவங்கள் இப்படித்தான், நான் ஒரு information க்காக சொன்னேன், நீ கவலைப்படாமல் எழுது, பேயன்கள் உப்படித்தான்" என்று என்னை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

தொண்ணூறுகளில், சரியாகச் சொன்னால் 91 இல் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை வெளியிட்டு வந்த தவஸ நிறுவனம் நிர்வாக சிக்கல்கள் காரணமாக மூடப்பட்டுவிட்டது. அதனால் தமிழ்ப் பத்திரிகை வாசிப்பு சந்தையில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருந்தது. தவஸ நிறுவனத்தில் பணியாற்றிய தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகையாளர்கள் வெவ்வேறு பத்திரிகை அலுவலகங்களில் கிடைத்த தொழில்களில் அமர்ந்து கொண்டார்கள். அப்படி தினபதியில் இருந்து தினகரன் விளம்பரப் பிரிவுக்கு கிளார்க்காக வந்தேன். ஏற்கனவே தினபதியில் இருந்து விலகிய கணேசன், தினகரன் ஆசிரிய பீடத்தில் பத்திரிகையாளராக வேலை செய்து வந்தார். அப்போது தினகரன் 12 பக்கங்களிலும் வாரமஞ்சரி 16 பக்கங்களிலும் வெளியாகிக் கொண்டிருந்தது.

தினகரன் ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் ஆரம்பத்தில் தமிழக ஆசிரியர்களே அங்கே பணியாற்றி வந்தனர். முன்னாள் பிரதமர் ஜோன் கொத்தலாவலையின் சிபாரிசின் பேரில் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனுடைய பேரன் முறை




உறவு கொண்ட சுக்குராஜா தினகரனில் செய்தியாளராக தொழில் செய்த வரலாறும் தினகரனுக்கு உண்டு. அக்கால இதழ்களை எடுத்துப் பார்த்தால், உள்ளூர் செய்திகள் மிகக் குறைவாகவும், இந்திய, ஐரோப்பிய செய்திகள் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்ததையும் பார்க்கலாம்.

இதை மாற்றி அமைத்தவர் பேராசிரியர் கைலாசபதி. 1959ஆம் ஆண்டு முதல் 1961 வரை அவர் தினகரன் ஆசிரியராக விளங்கினார். அதை தினகரனின் பொற்காலம் என்பார்கள். அதற்கு காரணம் உள்ளது. அவர்தான் பல்வேறு துறை சார்ந்த உள்ளூர் தமிழ் அறிஞர்களை, சிந்தனையாளர்களை தினகரனுக்கு எழுதத் தூண்டியவர், வடக்கு கிழக்கில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகையாக தினகரன் விளங்கியது.

"காலை ஆறு, ஆறரை மணிக்குள் யாழ்.தேவி யாழ். நகர் வந்துவிடும். கைநிறைய தினகரனை தூக்கிக் கொண்டு காலையிலேயே பஸ் நிலையத்தில் கூவிக் கூவி விற்பேன். சுடச்சுட விற்பனையாகிவிடும். பின்னர் யாழ். ஆஸ்பத்திரி வார்டுகளுக்கும் சென்று விற்பனை செய்வேன்" என்று பூபாலசிங்கம் ஸ்ரீதர் சிங் என்னிடம் ஒருமுறை கூறினார். மக்களின் வாசிப்பு மற்றும் அறிவுப் பசிக்கு தினகரன் தீனி போட்டுக் கொண்டிருந்தது என்றால் அதற்குக் காரணம் கைலாசபதிதான். தினகரன் வாரமஞ்சரியை ஒரு இலக்கியம் சார்ந்த பத்திரிகையாக மாற்றி அமைத்தவர் பேராசிரியர் கைலாசபதி.

கைலாசபதி சிறந்த அறிவாளி. அவருக்குக் கீழ் சிவகுருநாதன், சபாரட்ணம், பாலசிங்கம் ஆகியோர் தினகரனில் பணியாற்றி வந்தனர் என்றால் அது பொற்காலமாகத்தானே இருக்க வேண்டும்! பின்னர் சபாரட்ணமும் பாலசிங்கமும் டெய்லி நியுஸ் பத்திரிகைக்கு மாற்றலாகி சென்றுவிட்டார்கள். நீண்ட காலமாக உயர் பதவிகளில் பணியாற்றவும் செய்தார்கள். சபாரட்ணம் அமிர்தலிங்கத்தின் வரலாற்றை 425 பக்க நூலாக ஆங்கில நூலாக எழுதி வெளியிட்டவர். வம்சாவளித் தமிழர் பிரச்சினைகளை மையப்படுத்தி Out of Bondage என்ற பெயரில் மற்றொரு நூலையும் அவர் ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்தார். பாலசிங்கம் தன் எண்பதுகளிலும் ஆங்கில பத்திரிகை நிறுவனமொன்றில் பரபரப்பாக தொழில் செய்து கொண்டிருக்கிறார். தினபதி பாரம்பரியத்தில் வந்தவர் என்ற வகையில் அசோக்குமார் மட்டுமே தினகரனில் இன்று பணியாற்றி வருகிறார்.

இவ்வாறானவர்களை உருவாக்கிய தினகரனில் கைலாசபதியின் பின்னர் அந்தப் பாரம்பரியத்தை முன்னெடுத்த மிகச் சரியான நபராக பதவியேற்றவர் தான் ரட்ணதுரை சிவகுருநாதன். மிக நீண்ட காலம், 32 ஆண்டுகள் என நினைக்கிறேன் பதவியில் இருந்தவர்.

அவர்மீது பலருக்கு பல்வேறு விதமான விமர்சனங்கள் இருக்கலாம். அதைத் தவிர்ப்பதற்கில்லை. தமிழ் மக்கள் விரும்பி வாசிக்கும் பத்திரிகையாகவும், உள்ளூர் எழுத்தாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த களத்தை விரிவுபடுத்தியவராகவும் எழுச்சி பெற்றுக் கொண்டிருந்த இஸ்லாமிய எழுத்துலகுக்கு இடமளித்து ஊக்குவித்தவராகவும், தனது வெறுப்பு விருப்புகள் எவ்வாறிருந்த போதிலும் அவற்றை உட்புகுத்தாமல் பல்வேறு சிந்தனைகளுக்கு மேடை அமைத்தவராகவும் அவர் விளங்கினார். இப்பண்பு சமகாலத்தவரான எஸ். டீ.சிவநாயகத்திடமும் காணப்பட்டது.

அது தலித் இலக்கியம் என்ற ஒரு இலக்கிய பிரிவு முகிழ்ந்து கொண்டிருந்த காலம். தலித் என்றால் என்ன அர்த்தம் என்பதே பலருக்கும் தெரியாது. அச் சூழலில் தலித் இலக்கியத்துக்கு மேடை தந்தவர் சிவகுருநாதன் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

நான் பாடசாலை மாணவனாக இருந்தபோது வாரமஞ்சரியில் குறுக்கெழுத்துப் போட்டி வெளியாகும். அம்மா குறுக்

## பிரச்சினை வந்தால், நீர் எழுதும் ஐசே; நான் பார்த்துக் கொள்கிறேன் என ஊக்கம் தந்தவர்

கெழுத்து பிரியர் என்பதால் வாரமஞ்சரி வாங்கிக் கொடுப்பேன். ஒருமுறை வாரமஞ்சரியை புரட்டிப் பார்த்தபோது பகுத்தறிவாளர் ஆபிரகாம் டி. கோவூரின் மூடநம்பிக்கை எதிர்ப்பு கட்டுரை ஒன்று தொடரும் என்ற அறிவித்தலோடு வெளியாகியிருக்கக் கண்டேன். பேய், பிசாசு என்றால் யார் தான் வாசிக்க மாட்டார்கள்! மக்களின் பேய், பூதம், மந்திர தந்திர நம்பிக்கைகள் போலியானவை என்பதை நிரூபிக்கும் வகையில் கோவூரின் அனுபவங்களை மையப்படுத்தி சிலுமினவில் வெளியான கட்டுரைகளின் தமிழாக்கம் அவை. பேய் பிடித்தவரை நேரில் சந்தித்து அவரை மனோவியல் ரீதியாக ஆராய்ந்து, அது பேயின் வேலை அல்ல; மனோவியல் ரீதியானது




என்பதை ஆராயும் முழுப்பக்க உண்மைச் சம்பவங்கள்.

வாரமஞ்சரி கட்டுரைகளை வரிவரியாகப் படித்து, அப்பக்கங்களை சேகரித்து ஏறக்குறைய கோவூர்தாசனாகிப் போனேன். என்னுள் முதன் முதலில் பகுத்தறிவு சிந்தனைகளை விதைத்தது அண்ணா – பெரியார் பகுத்தறிவு சிந்தனைகள் அல்ல. வாரமஞ்சரியின் கோவூர் கட்டுரைகள்தான்!

மக்களின் பொதுவான நம்பிக்கைகளை ஒட்டியதாகவே இதழ் நடத்த வேண்டும் என்று இன்று ஒரு கருத்து பரவலாக இருந்து வருகிறது. அறுபதுகளிலேயே அதைத் தகர்த்தவர் ஆர். சிவகுருநாதன். அவரது பத்திரிகையில் வெளியான கட்டுரைகளால் சிந்தனை விருத்திபெற்று முக்கியமான விஷயங்களில் புரட்சிகரமான முடிவுகளை நான் எடுத்த போதிலும், அவர் தன் திருநீற்று கோலத்தை இறுதிவரை கைவிடவில்லை. அதாவது, தொழில் என்றுவரும்போது தன் சொந்த விருப்பு வெறுப்புகளை தன் பணிமேசைக்கு கொண்டுவராமல், கருத்து சுதந்திரத்துக்கு விசால இடமளித்தார். இன்றைய பத்திரிகையாளர்கள் அல்லது ஊடகவியல் பயிலும் மாணவ ஊடகவியலாளர்கள் கவனமெடுக்க வேண்டிய முக்கிய அம்சம் இது.

அக்காலத்தில் குரலற்றவர்களுக்கு குரல் கொடுப்பதே பத்திரிகை தர்மத்தின் பொருள் என்ற எண்ணம் ஆழமாக வேரூன்றி இருந்தது. அதை சிவகுருநாதன் புரிந்து வைத்திருந்தார்.

அதனால்தான் சிவகுருநாதன் கோவூரின் அனுபவங்களுக்கு தமிழ் ஊடக வெளிச்சம் தந்தார். பேய், பிசாசு, சாஸ்திரம், மந்திரம், அற்புதம் எல்லாம் பம்மாத்து என்ற கட்டுரைகளை வெளியிட்டு முடித்த தினகரன் ஆசிரியர், அடுத்ததாக பேய், ஆவி, சாஸ்திரம் எல்லாம் உண்மை என்பதை அடித்துச் சொல்லும் முழுபக்க கட்டுரைத் தொடரை வெளியிட ஆரம்பித்தார். வாசகர்களுக்கு இவை, சபாஷ், சரியான போட்டி! என்பதாக அமைந்தது. இது மட்டக்களப்பு மாந்திரிகம் சம்பந்தப்பட்ட மெய்கூச்செறியச் செய்யும் கட்டுரைகள். மூன்றாளங் கன்றடியான் என்ற புனைப் பெயரில் ஒருவர் மாந்திரிகக் கதைகளை எழுதினார். இது பரபரப்பு வாசிப்பாக அமைந்தது.


1967இல் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சென்னையில் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றபோது அம்மாநாட்டில் எஸ்.டி.சிவநாயகம் நேரில் கலந்து கொண்டு தமிழகத்தில் பொலிவுற்ற செந்தமிழ் என்ற தலைப்பில் அருமையான கட்டுரைத் தொடரை வெளியிட்டார். அவ்வாறான ஒரு சூழலில், அம்மாநாட்டுக்கு சென்று வந்த இலங்கை தமிழறிஞர்களை வாரமஞ்சிரியில் ஆய்வுக் கட்டுரைகளாக எழுதச் செய்தார் சிவகுருநாதன். ம.மு. உவைஸ் போன்றோர் எழுதினார்கள்.

தமிழ் பத்திரிகைத் துறையில் அவருக்கென ஒரு பார்வை இருந்தது. தமது நம்பிக்கைகளை ஒருபுறம் வைத்துவிட்டு வாசகர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்; புதிய சிந்தனைக் கோணங்களை அவர்கள் மத்தியில் விட்டுப் பார்க்க வேண்டும் என்று உளமாற நம்பியவர் அவர்.

கண்டி முத்துலிங்கம் அப்போது தொடர்ச்சியாக புதுப்புது கருத்துகளை வைத்து கட்டுரைகளைத் தீட்டுவார். நானோ, காதலர்களுக்கு தனிப் பூங்கா அமைக்க வேண்டும். முக்திக்கு குறுக்கு வழி காட்டும் கல்ட் சாமியார்கள், வன்முறையை விரும்பும் மனிதன் என்பனபோன்ற வித்தியாச கோணங்களில் எழுதிக் குவித்தேன். ஆனால் முத்துலிங்கத்துக்கு கட்டுரைக்கு 250 ரூபாவும் (இன்றைக்கு ஐயாயிரம் என்று சொல்லலாம்) எனக்கு 30 ரூபாவும் தந்தார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

அருள் சத்தியநாதன்
arulnathan53@ymail.com



# நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையான ஊழல் மோசடிக்கு வைக்கப்பட்டுள்ள வேட்டு!

**நாட்டில் கட்டமைப்பு மாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும், ஊழல் நிறுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே கடந்த வருடம் மக்கள் பலர் வீதியில் இறங்கிப் போராடியிருந்தனர்.**

இலங்கை பொருளாதார ரீதியில் இவ்வாறு மோசமாகப் பாதிக்கப்படுவதற்கு ஊழலும் பிரதான காரணமாகக் காணப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் ஊழலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் அக்கறை காண்பித்துள்ளது. இதன் முதலாவது படியாக ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமூலம் குழுநிலையில் 193 திருத்தங்களுடன் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியினரின் ஏகோபித்த ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டிருப்பது நம்பிக்கை தரும் ஒரு விடயமாகப் பார்க்கப்படுகிறது.


சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டிருந்த ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதனை சாதகமான முறையில் நோக்கியிருந்ததுடன், எதிர்க்கட்சியினர் குழுநிலையில் ஆக்கபூர்வமான திருத்தங்களை முன்வைத்திருந்தனர். இதில் சில திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும், அவர்களால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களில் பெரும்பாலானவற்றை அரசாங்கம் உள்ளீர்த்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலகிலேயே ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் காணப்படுவதால், தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டமூலத்தின் ஊடாக அந்த நிலையிலிருந்து முன்னேற்றம் அடைய முடியும் என எதிர்பார்க்கலாம். இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன இந்தச் சட்டமூலத்தைத் தயாரித்திருந்தார்.

பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணியை நீண்ட இழுபறிகளின் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடிந்துள்ளமை சாதகமானதொரு விடயமாகும்.

ஊழலை ஒழிப்பதற்குக் காணப்படும் சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பதால் புதிய சட்டமொன்றை உருவாக்க வேண்டிய தேவை பல வருடங்களுக்கு முன்னர் உணரப்பட்டிருந்தாலும், பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடிய பின்னர் அவர்கள் விதித்த நிபந்தனைகளின் விளைவாகவே குறுகிய காலத்துக்குள் குறித்த சட்டமூலத்தை நிறைவேற்ற முடிந்துள்ளது.

நிபந்தனைக்கு அமைய கொண்டுவரப்பட்டிருந்தாலும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட விடயம் என்பதால் இதனை ஒரு ஆசீர்வாதமாகக் கொள்ள முடியும். பாரிய திட்டங்களை முன்னெடுக்கும் போது சம்பந்தப்பட்ட அரசியல் தரப்பினர் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்குத் தலைமை தாங்கும் உயர்அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய மோசடிகள் தொடர்பில் கைதுகளை மேற்கொள்வதற்கு இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளின் முடிவு பூச்சியமாகவே இருந்துள்ளது.





குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு எதிரான பதில்கள் வழங்கப்பட்டதுடன், தண்டனையின்றி மேற்கொள்ளப்பட்ட ஊழல்களால் அது வளர்ந்து சென்றது. எனினும், தற்பொழுது ஊழல் மோசடி விடயத்தில் நாம் சர்வதேச ரேடாரின் கண்காணிப்புக்குள் வந்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியைப் பெறும் காலம்வரை நிச்சயமாக எமது நாட்டின் ஊழல் மோசடிகள் சர்வதேச மட்டத்தில் கண்காணிக்கப்படுவதுடன், ஒவ்வொரு மதிப்பாய்வின் போதும் நிச்சயமாக இது கவனத்தில் கொள்ளப்படும்.

இந்தப் புதிய சட்டத்தில் சாதகமான அம்சங்களில் ஒன்று என்னவெனில் இலஞ்ச ஊழல் தொடர்பில் ஏற்கனவே நடத்தப்பட்டுவரும் வழக்குகள் பழைய இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் முன்கொண்டு செல்லப்படும் என்பதாகும். பொதுவாகப் புதிய சட்டமூலங்கள் நடைமுறைப் படுத்தப்படும்போது அது தொடர்பான பழைய சட்டங்கள் தொழில்நுட்ப காரணங்களைக் காட்டி கைவிடப்படும் நிலைமை காணப்படுகிறது. எனினும், இப்புதிய சட்டமூலத்தின் அதற்கு இடமளிக்கப்படவில்லை.

## சர்வதேசத்தில் இலங்கை மீதான அவப்பெயரை நீக்க மேற்கொள்ளப்பட்டுள்ள உறுதியான நடவடிக்கை!

புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், பழைய சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களில் தற்போது விசாரிக்கப்பட்டு வரும் ஊழல் வழக்குகள் காலாவதியாகுமா என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது நீதி அமைச்சரிடம் வினவியிருந்தார். அதற்குப் பதிலளித்த அமைச்சர், தற்போது பழைய சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படும் அனைத்து வழக்குகளும் புதிய சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும் எனப் பதிலளித்தார்.

அதேநேரம், புதிய சட்டமூலத்துக்கு அமைய உருவாக்கப்படவுள்ள சுயாதீன இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களின் நியமனம் தொடர்பில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றிருந்தன. ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுபவர்கள் அரசியல் நோக்கத்துக்காக நியமனம் பெறும் போது ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை குறித்து கேள்வியெழுப்பப்பட்டிருந்தது. எனினும், அரசாங்க சேவையில் தற்பொழுது பணியாற்றும் நபர்களையே ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என்ற விடயத்தை அமைச்சர் உள்ளடக்கியிருந்தார்.

## பல வருட கால இழுபறிக்குப் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேறியது ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம்!

விசேடமாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக ஓய்வுபெற்றவர்களை நியமிக்கும்போது அவர்கள் தமது அரசியல் தலைவர்களுக்கு ஏற்ற விதத்தில் செயற்படுவதற்கான போக்குகள் காணப்படுகின்றமையால், அமைச்சரின் இந்தத் தீர்மானம் சாதகமானதொரு விடயமாகவுள்ளது. சட்டமானது அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு ஒரு மாதிரியாகவும், எவ்வித அதிகாரமும் இல்லாத அப்பாவி மக்களுக்கு பிறிதொரு விதமாகவும் இருக்க முடியாது.

வங்குரோத்து நிலையை அடைந்துள்ள நாடொன்று பொருளாதார ரீதியில் மீட்சிபெற முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் ஊழல் மோசடி என்பவை முற்றாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும். ஊழல் மோசடியைக் கட்டுப்படுத்தாமல் எடுக்கப்படும் ஏனைய எந்தவொரு நடவடிக்கையும் பொருளாதார மீட்சிக்கு உதவியாக இருக்காது. இலங்கையைப் பொறுத்தவரையில் அடிமட்டத்திலிருந்து உயர்மட்டம் வரை இலஞ்ச ஊழல் என்பது நிறைந்து போயுள்ளது. சாதாரணமாக அரசாங்க வைத்தியசாலையொன்றில் நோயாளிக்கான கட்டிலைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட சில சந்தர்ப்பங்களில் இலஞ்சம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இலஞ்ச ஊழலை ஒழிப்பதற்கு சட்டங்களை மட்டும் கொண்டுவருவது தீர்வாக அமையாது. மக்கள் மத்தியில் நிலைப்பாட்டு ரீதியான மாற்றமும் அவசியம்.

**பி.ஹர்ஷன்...**

---

**இந்தியா, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் முத்தரப்பு ஏற்பாட்டின் கீழ், இந்தியாவின் மின்சாரத் தொடரமைப்பைப் பயன்படுத்தி பங்களாதேஷுக்கு நேபாளம் மின்சாரம் விநியோகிப்பதற்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளமை ஏற்கனவே வெளிவந்த செய்தியாகும். இது தொடர்பான உத்தேச ஒப்பந்தமானது மேற்படி மூன்று நாடுகளுக்குமே நன்மை பயப்பதாக உள்ளது என்று பொருளாதார நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.**



# அயல்நாடுகளுடன் மின்பரிமாற்ற வலையமைப்பை உருவாக்குவதில் அதிக ஆர்வம் செலுத்தும் இந்தியா!

இந்தியாவின் இந்த நடவடிக்கையானது விரிவான பிராந்திய ஒத்துழைப்பில் குறிப்பிடத்தக்க அம்சமாக நோக்கப்படுகின்றது. இந்தியாவின் மின்கட்டமைப்பைப் பயன்படுத்தி பங்களாதேஷுக்கு மின்சாரத்தை விற்பனை செய்வதற்கு இந்தியா ஒப்புதல் அளிக்க வேண்டுமென இந்தியாவிடம் நேபாளம் கோரிக்கை விடுத்து வந்தது. இவ்வாறான நிலையில் அக்கோரிக்கைஇந்தியாவினால்ஏற்கப்பட்டுள்ளது.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் வைத்து சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் சம்மதத்தை நேபாளப் பிரதமரிடம் நேரில் தெரிவித்திருந்தார். அதுமாத்திரமன்றி, இதற்கான முத்தரப்பு ஒப்பந்தத்துக்கான வரைவு தற்போது இறுதி செய்யப்பட்டுள்ளது.

இது ஒருபுறமிருக்க போக்குவரத்து, நீர்மின் சக்தி, பெட்ரோலிய உட்கட்டமைப்பு, எல்லை கடந்த பணப்பரிவர்த்தனை இணைப்புமுறை, ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் கட்டுமானம் உள்ளிட்டவை தொடர்பாக இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையில் ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும், அந்த ஒப்பந்தங்களின் பயனாக இருதரப்பு உறவுகள் மேலும் பலமடையுமென்றும் இருநாடுகளின் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

இருநாடுகளுக்கும் இடையே ரயில் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்துவது மட்டுமன்றி நேபாளத்தின் பல்வேறு நகரங்களில் இருந்து இந்தியாவுக்கு வான்வழி தொடர்பை ஆரம்பிப்பது குறித்தும் இருநாடுகளும் ஆலோசித்து வருகின்றன.

இந்தியா_சீனா இடையே கைச்சாத்திடப்பட்ட ஏழு ஒப்பந்தங்களில் போக்குவரத்து உடன்படிக்கை திருத்த ஒப்பந்தம் முக்கியமானதாகும். இதன்மூலம் இந்திய உள்நாட்டு நீர்வழித் தடங்களை நேபாளம் பயன்படுத்த முடியும். இதேபோல், நேபாள மக்களுக்காக புதிய ரயில் வழித்தடங்களும் அமைக்கப்படும். ரூ.5,598 கோடி கடன் திட்டத்தின்கீழ், நேபாளத்தில் 3 முக்கிய மின்சார தொடரமைப்பு வழித்தடங்கள் அமைக்க இந்தியா நிதியுதவி வழங்குகிறது.

எல்லை கடந்த பணப்பரிவர்த்தனை இணைப்புமுறையானது இந்தியாவுக்கு வரும் நேபாள மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள் உள்ளிட்டோருக்கு பெரிதும் நன்மையளிக்கும். இதேவேளை இந்தியா_ நேபாளம் இடையிலான நீண்டகால மின்வர்த்தக ஒப்பந்தமும் ஏற்கனவே கைச்சாத்தாகியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் எதிர்வரும் 10 ஆண்டுகளில் நேபாளத்திடமிருந்து 10,000 மெகாவாட் மின்சார இறக்குமதிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளும் முத்தரப்பு மின்வர்த்தக ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளன. இது அண்டை நாடான பங்களாதேஷுக்கு அதிக எரிசக்தி இணைப்பை உருவாக்குவதற்கு இந்தியா மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. அயல்நாட்டின் மின்சக்தித் தேவையில் இந்தியா அதிக அக்கறை கொண்டுள்ளதை இந்த இணக்கப்பாடு எடுத்துக் காட்டுகின்றது.

இந்த இணக்கப்பாட்டில் சம்பந்தப்பட்டுள்ளவை நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய இருநாடுகளும் ஆகும். அதாவது மின்சாரத்தை விற்பனை செய்கின்ற நாடாக நேபாளமும், மின்சாரத்தை வாங்கிக் கொள்கின்ற நாடாக பங்களாதேஷும் உள்ளன. ஆனால் மின்சாரத்தை நேபாளத்தில் இருந்து பங்களாதேஷுக்கு கொண்டு செல்வது இந்தியாவின் ஊடாக என்பதால் இந்தியாவின் சம்மதம் அதில் சம்பந்தப்பட்டுள்ளது. எனவே இந்தியாவின் இணக்கப்பாட்டுடனேயே நேபாளம் தனது மின்சார உற்பத்தியை பங்களாதேஷுக்கு விற்பனை செய்ய முடியும்.

இது போன்ற முதல் ஒப்பந்தம் மூன்று நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்டு எதிர்வரும் மாதங்களில் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளதால் இந்த ஒப்பந்தமானது நேபாளம் மற்றும் பங்களாதேஷின் நீண்டகாலக் கோரிக்கையை பூர்த்தி செய்கின்றது.



## இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் முத்தரப்பு ஒப்பந்தத்தை இலங்கை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டியது அவசியம்

கடந்த ஜூன் மாதத் தொடக்கத்தில் நேபாளப் பிரதமர் புஷ்ப கமல் தஹால் புதுடில்லிக்கு விஜயம் செய்திருந்த போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நேபாளத்தில் இருந்து பங்களாதேஷுக்கு நீர்மின்சாரம் ஏற்றுமதி செய்வதற்கான இந்தியத் திட்டங்களை வெளியிட்டிருந்தார்.

பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் ஆகியவற்றின் மின்சார முத்தரப்பு ஒப்பந்தமானது இலங்கையுடன் சமாந்தரப்படுத்திப் பார்க்கக் கூடியதாக உள்ளது. அதாவது இந்தியாவுடன் மின்சாரக் கட்டமைப்பு கூட்டமைப்பொன்றை இலங்கை உருவாக்கிக் கொள்ளுமாக இருந்தால் அது இலங்கைக்கு மிகவும் பயனுள்ளதாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை.

இந்தியா தனது அயல்நாடுகளுடன் மின்சாரப் பரிமாற்ற வலையமைப்புகள் மற்றும் எரிபொருள் விநியோகம் மூலம் ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதில் பெரிதும் முயற்சி மேற்கொண்டு வருகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. இந்தியா கடந்த காலங்களில் இருதரப்பு ஒப்பந்தங்களின் கீழ் அண்டை நாடுகளுடன் மின்சார வர்த்தகத்தில் கூடுதல் ஆர்வம் காண்பித்தும் வருகின்றது.

தற்போது மின்சாரத்தை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு அனுப்புவதற்கு இந்தியா உதவி புரிகின்றது.

இவ்விடத்தில் இலங்கைக்கு இந்தியா கடந்த காலத்தில் வழங்கிய உதவியையும் இங்கு நினைவூட்டுதல் பொருத்தமாகும். கடந்த ஆண்டு ஜூன் மாதம் இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் செயலிழந்தபோது, இந்திய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் இந்தியா எரிபொருளை விநியோகித்தது. இலங்கைக்கு டீசல், பெற்றோல் போன்ற எரிபொருட்களை இந்தியா உதவியாக வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிலையில் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கிடையிலான முத்தரப்பு ஒப்பந்தத்தை இலங்கை தனது எதிர்கால நலனுக்கான முன்மாதிரியாக எடுத்துக் கொள்வது அவசியமாகின்றது.

பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் மற்றும் இலங்கையுடன் அதிக எரிசக்தி இணைப்பை உருவாக்குவதற்கான இந்தியாவின் முயற்சிகளுடன் இந்த நடவடிக்கை பொருந்துகிறது.





இந்திய துணைக் கண்டத்தில் உள்ள இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளும் ஏற்கெனவே முத்தரப்பு மின்வர்த்தக ஒப்பந்தத்தின் வரைவை இறுதி செய்துள்ளன.

மின்சார உற்பத்தி மற்றும் மின்சார ஏற்றுமதிக்கு நேபாளம், இந்தியா மற்றும் பங்களாதேஷ் இடையேயான முத்தரப்பு ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை நல்லதொரு விடயத்தை பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது தெரிகின்றது.

**எஸ்.சாரங்கன்...**

# அனைத்துத் தரப்பு நல்லிணக்கப்பாட்டுடன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை!

வார இறுதி

## அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

### பாராளுமன்றம் ஊடாக, ஜனநாயக வழியில் பொதுஇணக்கப்பாட்டு ஆதரவு பெறுவதற்கு ஜனாதிபதி முயற்சி

**பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையின் அவசியம் குறித்து வலியுறுத்தப்படுகிறது. இது விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியான நிலைப்பாட்டில் இருப்பதைப் பல தடவை வெளிப்படுத்தியுள்ளார்.**



இதன் ஓர் அங்கமாக நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதிருக்கும் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் அவரது தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த டிசம்பர் மாதம் முதல் தடவையாக சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்டியிருந்த அவர், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் தான் உறுதியாக உள்ளார் என்பதை அனைத்துத் தரப்பினருக்கும் கூறியிருந்தார். அரசியலமைப்பின் ஊடாகத் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயார் என்ற விடயத்தையும் அவர் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடல்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயத்துடன் இணைந்ததாக மேலும் தீவிரப்படுத்தப்பட்டன. இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னர் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் தரப்பினரைப் பாராளுமன்றத்தில் சந்தித்திருந்த ஜனாதிபதி, பொலிஸ் அதிகாரம் தவிர 13 ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தத் தயார் என்பதை மீண்டும் வலியுறுத்தியிருந்தார்.



இதன் தொடர்ச்சியாக இந்திய விஜயத்தின் பின்னர் கடந்த புதன்கிழமை மற்றுமொரு சர்வகட்சி மாநாட்டை ஜனாதிபதி கூட்டியிருந்தார். தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் வடக்குகிழக்கு அபிவிருத்தித் திட்டம் குறித்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கருத்துகளைப் பெறுவதற்காகக் கூட்டப்பட்ட இந்த சர்வகட்சி மாநாட்டில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல எனவும், அது முழுநாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.





புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், தனக்கு மாத்திரமன்றி இதற்கு முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை என்றும் புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

'ஒன்பது மாகாண சபைகளில் ஏழு மாகாணசபைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ளன. எதிர்காலத்தில் மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்ப்பதானால், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும்' என ஜனாதிபதி இந்த சர்வகட்சி மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஆராய்ந்து முன்மொழிவொன்றைத் தயாரிப்பதற்கான பொறுப்பை ஜனாதிபதி அமைச்சரவைக்கு வழங்கியுள்ளார்.

இதற்காக அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, பிரசன்ன ரணதுங்க மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் விசேட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு விரைவில் தனது யோசனைகளை முன்வைக்கும் பட்சத்தில் அதனைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்பதையும் ஜனாதிபதி இங்கு தெரிவித்துள்ளார்.

'அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும்.

மாகாண சபை உறுப்பினர்கள் அப்பதவியை வகித்துக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்தப் பதவியை வகித்தவாறே மாகாண சபை உறுப்பினராக செயற்படுவது தொடர்பிலும் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கலந்துரையாடி முடிவு எடுக்க முடியும்' என்பதும் ஜனாதிபதியின் நிலைப்பாடாக இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது திருத்தத்துக்கு அமைவான அதிகாரப் பகிர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பது இது முதல் தடவையல்ல என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தின் பின்னர் இவ்விடயம் அடிக்கடி பேசப்பட்டு வருகிறது.

## தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பையடுத்து ஏற்பாடு செய்யப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கூடுதல் கரிசனை

உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்திருந்த காலப்பகுதியில் 13 இற்கு அப்பால் சென்று தீர்வு காணப்படும் என்ற உறுதிமொழியை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கியிருந்தார். அப்போதைய ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீ மூனுக்கு இந்த உறுதிமொழியை அவர் வழங்கியிருந்தபோதும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் எதனையும் முன்னெடுத்திருக்கவில்லை.

இது விடயத்தில் இந்தியா எப்பொழுதும் உறுதியாகவே இருந்து வந்துள்ளது. இந்திய மத்திய அரசாங்கத்தில் பா.ஜ.க ஆட்சியில் இருந்தாலும் சரி காங்கிரஸ் ஆட்சியில் இருந்தாலும் சரி தமது தலையீட்டுடன் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பது இந்தியாவின் உறுதியான நிலைப்பாடாகும்.

இதன் தொடர்ச்சியாகவே அண்மையில் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது பற்றி வலியுறுத்தியிருந்தார்.

இவ்வாறான நிலையில் அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாடு தொடர்பில் கட்சிகள் தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்துள்ளன. ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தபோதும், அதிகாரப் பகிர்வு குறித்த அரசாங்கத்தின் தெளிவான திட்டம் முதலில் முன்வைக்கப்பட வேண்டும் என்றும், அதன் பின்னர் அந்த அடிப்படையில் கலந்துரையாடல்களை நடத்த முடியும் என்றும் பெரும்பாலான தென்னிலங்கைக் கட்சிகள் கூறியுள்ளன.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல், மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுவது அர்த்தமற்றது என தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட தரப்பினர் கூறியுள்ளனர். மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்காமல் ஏனைய அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் மாறுபட்ட நிலைப்பாடு இருந்துள்ளது. பொலிஸாருக்கு ஆயுதங்களுடனான அதிகாரம் இன்றி சமூகம் சார்ந்த பொலிஸ் சேவையில் வடக்கு, கிழக்கு இளைஞர்களையும் நிர்வாகத்தில் இணைப்பதற்கான ஏற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதின் நிலைப்பாட்டுடன் யாரும் முரண்பட மாட்டார்களாயினும், தீர்வுக்கான சூத்திரத்தை அவரால் மாத்திரம் முன்வைக்க முடியாது. பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் மூலம் இந்த முடிவை எடுக்க வேண்டியதே மக்களுக்கு இருக்கும் பாதுகாப்பாகும்.

சிறந்த தீர்வை எட்டுவதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முழுமையாகப் பலனளிக்காத நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முயற்சியை முன்கொண்டு செல்வதற்கு நாட்டில் சாதகமான சூழல் இருப்பது பிரதான காரணமாகும்.

குறிப்பாக அதிகாரப் பகிர்வு மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் பேச்சுக்கள் வரும்போது எதிர்க்கட்சிகள் பிளவுபட்டுவிடும். கடந்த காலங்களில் அனைத்துத் தலைவர்களும் 13 இற்கு மேல் தீர்வு வரும்போது இறுக்கமான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தனர். 13 ஆவது திருத்தம் என்பது இந்தியாவின் நலன்களுக்காக சேவைசெய்யும் வகையில் உருவாக்கப்பட்டது என்றும், தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆரம்பப்படி என்றும் பெரும்பான்மை சமூகத்தினர் மத்தியில் இனவாதக் கருத்துகள் விதைக்கப்படுவதாலேயே தென்னிலங்கை மக்கள் தொடர்ச்சியாக இதனை எதிர்த்து வருகின்றனர்.

அது மாத்திரமன்றி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களின் கோரிக்கை என்றும் தென்னிலங்கையில் ஒருதரப்பினர் வாதிட்டு வருகின்றனர்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனவாத அரசியலுக்கு அப்பால் சிந்திக்கும் ஒரு தலைவர் என்பது அனைவரும் அறிந்த விடயம். அது மாத்திரமன்றி தமிழர்களின் அபிலாஷைகளில் அதிக அனுதாபம் கொண்ட மற்றொரு தேசியத் தலைவர் என்ற எண்ணம் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

சிறுபான்மையினருக்கு ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படையாகக் காண்பித்ததால் கடந்த காலங்களில் அவருக்கு தேர்தல்களில் கூட பாதிப்பு ஏற்பட்டது.

இந்தப் பின்னணியில் தன்னால் மாத்திரம் தேசியப் பிரச்சினைக்குப் பதிலைக் கண்டுபிடிக்க முடியாது. எனவே அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, அரசியல் கட்சிகள் ஏதாவது ஒரு துரும்பைப் பற்றிக் கொண்டு தமது அரசியல் இருப்புக்காகக் காலத்தைக் கடத்தாமல், நாட்டின் எதிர்கால நன்மைக்காக ஒன்றிணைந்து பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண முன்வர வேண்டும் என்பதுதான் ஐக்கிய இலங்கையை நேசிக்கின்ற மக்களின் விருப்பமாக உள்ளது.

**அரசியல் பேதங்களுக்கு அப்பால் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டுமென்பதே ஐக்கிய இலங்கையை நேசிக்கின்ற மக்களின் விருப்பம்**

# BUDGET ADZ

It suits your budget


WAREHOUSE FOR RENT SAPUGASKANDA
70,000 sqft Good Quality Very Clean Warehouse for Rent At Lanka Industrial Estate, Sapugaskanda
Contact : 074 032 2929
Email : indoitalia.nagaraja@gmail.com

0777 394 679 | 070 663 33 88

MAHEESHA TRANSPORT SERVICE
Hekitta Road, Wattala

වේයන්
Solution to Get rid of Termites
Hotline: 074 031 5517
Leemaka Industries (Pvt) Ltd.

PRIME COMMERCIAL LAND FOR SALE
8.6 Perch
Close to HNB Towers
Very Clear Deeds
No. 114, Vinayalankara Mawatha
Colombo 10
0777 325 141

APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING 14.5 PERCH
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

BISCUIT CUTTING MATCHINE
FROM INDIA & CHINA
CONTACT WHATSAPP
0706 723 953

COOK WITH JOY
3 MONTHS COOKERY COURSE
CONDUCTED IN 3 LANGUAGES
Classes on Fridays and Saturdays
9:30 AM to 12:30 PM
COMMENCE FROM 9TH SEPTEMBER 2023
HEALTH TIPS, COOKING TIPS, BAKING TIPS AND MORE
Ms. Hasna Thasneem
077 138 5122 / 077 723 7575

2 மாடி வீடு விற்பனைக்கு
பேராதனை கண்டி
31 பேர்ச்சஸ்
அமாயா ஹில்ஸ் இற்கு அருகில்
சிறந்த 360 டிகிரி காட்சிகள்
35 மில்லியன்
விசாரணைகள் - 0702 353 043

ARIYARATHNE CONSTRUCTIONS
Polycarbonate
0777 24 23 19 / 0711 24 23 19

பட்ஜெட் போட்டோ குறும் விளம்பரம்

கொழும்பு 7 சொத்து விற்பனைக்கு
4 அறைகளுள்ள 5 தொகுதி வீடுகள்
50மூ பங்காளரொருவர் தேவைப்படுகின்றார்
மாதாந்த நிலையான தேறிய இலாபம் 15 மற்றும் 42 மில்லியனுக்கு இடைப்பட்டது
தொடர்புகள்: 0702 353 043

Looking for Your Life Partner..,
Marriage Proposals
Pay online and save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்



# ஹென்றி கீசிங்கரது இரகசிய சீன விஜயம்

## அமெரிக்க, சீன உறவில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

**● இடங்கொடுத்து ஒத்துழைத்தல் கொள்கை மூலம் மேற்குலகத்தை வீழ்த்த முடியாது என்பதனால், சந்தை மூலம் மேற்குலகத்தை எதிர் கொள்வதுடன் உலகத்–துக்கு தலைமை தாங்க முடியுமென சீனா நகர்கிறது.**



உலகளாவிய அரசியலில் இரகசிய நகர்வுகளும் ஊடறுப்புத் தாக்குதல்க ளு ம் விஞ்ஞான தொழிநுட்பப் புரட்சிகளும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன. அதற்கு இரையாவதும் கட்டுப்படுவதும் அல்லது அதனை எதிர்த்துப் போரிடுவதும் ஆட்சியாளர்களின் இயல்பாக மாறிவருகின்றது. அரசுகளை ஆளும் ஆட்சியாளர்கள், தமது இருப்பினை மட்டுமல்ல தேசத்தின் இருப்பினையும் மேலாதிக்கத்தையும் பாதுகாப்பதில் கவனம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். பலவீனமான அரசுகளின் ஆட்சியாளர்களைவிட வல்லரசுகளின் ஆட்சியாளர்களும் அவர்களது நகர்வுகளின் கருத்தியலும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. அந்த வரிசையில் கடந்த 18.07.2023 அன்று 52 வருடங்களுக்கு பின் அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஹென்றி கீசிங்கரது சீனாவுக்கான இரகசிய விஜயத்தின் பின்னணியை தேடுவதாக இக்கட்டுரை வடிவமைக்கப்பட்டுள்ளது.

1971ஆம் ஆண்டு யூலை 9முதல் 11 வரை ஹென்றி கீசிங்கர் சீனாவுக்கான இரகசிய விஜயத்தை மேற்கொண்டார். அதன் பிரகாரம் இரு நாட்டுக்குமான உறவு உதயமானது. 1972 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த நிக்சனின் உத்தியோகபூர்வ சீனா விஜயத்துடன் அத்தகைய உறவு விரிவடைந்தது. அந்த உறவை ஆரம்பித்து வைத்ததில் அப்போது அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளராக இருந்த ஹென்றி கீசிங்கர் முதன்மையானவராக காணப்பட்டார். அவர் மீளவும் 101 வது வயதில் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஏற்கனவே 100 தடவைகளுக்கு மேல் சீனாவுக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜதந்திரியாக அவர் கருதப்படுகிறார். சீனாவின் ஜனாதிபதி ஜின் பிங் மற்றும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் லீ ஜிங்பூவை சந்தித்து உரையாடியுள்ளார். இவரது விஜயத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் காலநிலை மாற்றத்திற்கான ஆலோசகரான ஜோன் ஹரியும் பங்கேற்றிருந்தார்.

சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமான உறவு அதிக முரண்பாடுடையதாக மாறிவருகிறது. குறிப்பாக வர்த்தக ரீதியில் ஏற்பட்ட போட்டித்தன்மை இரு நாடுகளது பொருளாதாரத்திலும் அதிக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே தாய்வான் விவகாரமும் இரு நாட்டுக்குமான உறவை பாதித்துள்ளது. உக்ரைன் போரில் ரஷ்ய_ சீன நெருக்கமும் அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமான உறவை குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இதனால் மீளவும் சீனா அமெரிக்காவுக்கு இடையில் புதிய பனிப்போருக்கான யுகம் ஆரம்பித்துள்ளதாக உரையாடப்படும் சந்தர்ப்பத்தில் ஹென்றி கீசிங்கரது சீன பயணம் நிகழ்ந்துள்ளது. அது மட்டுமல்லாது சீன ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சருடனான உரையாடலின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் சுமுகமான உறவை நோக்கியதாகவே தெரிகிறது. முழுமையான தகவல்களை ஊடகங்கள் தரத்தவறிய போதும் வெளியான விடயங்கள் இரு தரப்புக்கும் இடையில் சுமூகத் தன்மை நிலவியதாகவே தெரிகிறது. குறிப்பாக சீனப் பாதுகாப்பு அமைச்சர் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான நட்புறவு அழிந்துவிட்டது என்றார். காரணம் அமெரிக்கர்களில் சிலர் சீனாவை பாதியிலே கைவிட்டு விட்டார்கள் என்றார். அப்போது கீசிங்கர் அமெரிக்கா சீனாவின் நண்பர் என்றார். அமெரிக்காவோ சீனாவோ எதிரியாக நடத்த முடியாது. இரு நாடுகளும் போருக்குச் சென்றால் இரு நாட்டு மக்களுக்கும் எந்த அர்த்தமுள்ள விளைவையும் ஏற்படுத்தாது என்றார் கீசிங்கர். இரு நாட்டுக்குமான இராணுவ ஆயுததளபாட கொள்வனவு தொடர்பில் உரையாடப்பட்டதாகவும் 2018 முதல் ரஷ்ய, சீன இராணுவ உறவு சுமுகமாக உள்ளதாகவும் அதற்கான அடிப்படையாக அமெரிக்காவின் சீனா மீதான தடைகளே அமைந்ததென்பதும் தெரியவருகிறது. இதே நேரம் சீன ஜனாதிபதியுடனான கீசிங்கரின் உரையாடலில் பழைய வரலாற்றை நினைவு கொண்டதுடன் ஜின்பிங் இது இரு நாட்டுக்கும் பயனளிப்பது மட்டுமல்லாது உலகையே மாற்றத்திற்கு உள்ளாக்கக் கூடியது என்றார். இரு நாடுகளும் நெருக்கடி நிலையிலுள்ளன. இதில் இரு தரப்பும் சரியான தெரிவை மேற்கொள்ள வேண்டும் என்றார். இவ்வாறு உலகளாவிய ரீதியில் முதல் இரண்டு வல்லரசுகளது இராஜதந்திர உரையடல் மீளவும் ஒரு புதிய அத்தியாயத்துக்கான தொடக்கமாக கொள்ள முடியும் என கீசிங்கர் கருதுவதாகவே ஊடகங்கள் காண்பிக்க முயலுகின்றன. ஆனால் அதன் யதார்த்தம் எதுவாக அமையும் என்பதனை விரிவாக நோக்குவது அவசியமானது.

முதலாவது, முன்னாள் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னர் அமெரிக்கா தனது சமபலக் கொள்கையின் அடிப்படையான முடக்கல் (Containment)கொள்கைக்கு பதிலாக பங்குகொண்டு பலன்பெறல் (Engagement)கொள்கையை முதன்மைப்படுத்தத் தொடங்கியது. அதாவது நாடுகளின் அரசியல் பொருளாதாரத்தில் தானும் ஒரு பகுதியாக பங்குவகிப்பதன் மூலம் தன் அரசியல் பொருளாதாரத்தை பலப்படுத்தவும் அத்தகைய பலம்பொருந்திய நாட்டின் மீது அரசியல் பொருளாதார இராணுவ ரீதியில் தலையீட்டைச் செலுத்துவதன் வாயிலாக, தான் தனது பிடியை பலப்படுத்த முடியுமெனவும் அமெரிக்கா திட்டமிட ஆரம்பித்தது. சீனாவும் நாடுகளைப் பகைத்தல் (Confrontation) கொள்கையிலிருந்து விலகி இடங்கொடுத்து ஒத்துழைத்தல் (Accommodation) கொள்கைக்கு தன்னை மாற்றிக் கொண்டது. கீசிங்கரது விஜயமும் மீளவும் பங்கு கொண்டு பயன்பெறல் எனும் கொள்கையில் ஏற்பட்ட விரிசலை சரி செய்யவும் சீனாவின் அணுகுமுறை இடங்கொடுத்து ஒத்துழைப்பது என்ற முடிவையும் நோக்கியதாகவும் அமைந்துள்ளது. இது பற்றி சீன அறிஞரான LuYenChung குறிப்பிடுவதை கவனிப்பது பொருத்தமானதாக அமையும். வெளிப்படையாக ஆதிக்க சக்தி கொண்ட அரசின் தவறுகளை, பிழைகளை, தீமைகளை இடையறாது அறிக்கையிடுவது ஒருபுறம். ஆனால் அத்தகைய அறிக்கைக்கு அப்பால் சென்று பகைமை நிலைப்பாட்டை எடுக்காமல் அந்த அரசுடன் செயல்பூர்வமாக தனது தேவையின் பொருட்டு இணைந்து போவது சீனாவின் நடைமுறைசார் கொள்கை என்று குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு, சீனா இன்னோர் கொள்கையைக் கொண்டுள்ளது என அறிஞர்கள் விவாதிக்கிறார்கள். அதாவது சந்தை வெடிகுண்டு கோட்பாடு (Market Bomb Theory) அதாவது இடங்கொடுத்து ஒத்துழைத்தல் கொள்கை மூலம் மேற்குலகத்தை வீழ்த்த முடியாது என்பதனால், சந்தை மூலம் மேற்குலகத்தை எதிர் கொள்வதுடன் உலகத்துக்கு தலைமை தாங்க முடியுமென சீனா நகர்கிறது. அதுவே கீசிங்கரது சீன விஜயத்தின் பிரதிபலிப்பாகும். அதாவது அமெரிக்காவுடன் ஒத்துழைத்து சந்தைப் பொருளாதாரத்தில் ஈடுபட்டு உலகளாவிய வர்த்தகத்தை ஆதிக்கம் செய்வதன் மூலம் அரசியலை ஆதிக்கம் செய்யலாம் என்பதே சீனாவின் இலக்காக உள்ளது. சீனாவின் புதிய பட்டுப்பாதை மார்க்கம் அதுவாகவே உள்ளது.

மூன்று, அமெரிக்காவின் கொள்கை வகுப்பாளராக செயல்பட்ட ஜோசப் நை சீனாவின் மாற்றத்துக்கு அமைவாக Ideas Realism Constructivism எனும் சூத்திரத்தை அமெரிக்காவின் இயல்பாக கொண்டுவந்தார். அதாவது யதார்த்த நிலையை தமது எண்ணக்கருக்களால் மாற்றியமைத்து தமது இலக்கை அடைவதாகும். இதில் யதார்த்தவமானது சூழ்நிலை சார்ந்து சமூக, அரசியல், இராணுவ பலக் கொள்கையை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனையே அமெரிக்கா உலகளாவிய பிராந்தியங்களுக்கு பிராந்தியம் வேறுபட்ட தளத்தில் தனது நகர்வை உறுதி செய்து வருகிறது.

எனவே சீன, அமெரிக்கப் போட்டிக்குள் அகப்பட்டுள்ள உலக ஒழுங்கு, ஒத்துழைப்பினையும், பங்கெடுத்து பயன்பெறல் கொள்கையையும் பிரயோகித்துவருகிறது. அத்தகைய போக்கே நடைமுறை யதார்த்தமென அடையாளப்படுத்தப்படுகிறது. இதற்குள் உக்ரைனும் தாய்வானும் அகப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. சீனா, அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பும் பயன்பெறல் கொள்கையும் சாத்தியமாகுமாயின் உக்ரைனைவிட தாய்வான் விடயம் நேரடியான விளைவை ஏற்படுத்தும். கீசிங்கரது விஜயத்தை அடுத்து தாய்வான் தனது இராணுவப் பயிற்சியை அதிகரித்துள்ளதாக தகவல்கள் உள்ளன. ஆனால் மேற்கு ஊடகங்களின் அணுகுமுறையில் அதிக மாற்றம் நிலவுவதாகத் தெரிகிறது. அதாவது இரு போர்க்களத்தையும் பற்றிய மேற்குலக ஊடகப் பார்வை மாற்றமுறத் தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது. அதற்கு பின்னால் பயன்பெறல் கொள்கை வழிகாட்டுவதாகவே உள்ளது.


# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

செலவிடுதல் 17000/ = ஒரு முறையில். வருமானம் மாதாந்தம் 12000/= இரவு 8 9 ஒரு மணி நேரம் வேலை. விபரங்கள் வட்ஸ்அப் 0765740553. 044508

## வேலைவாய்ப்பு

### 306 வெற்றிடங்கள் மருத்துவம்

கண்டிக்கு அருகில் உள்ள ஓர் மருத்துவ ஆலோசனை நிலையத்திற்கு MBBS/ SLMC பதிவுசெய்த வைத்தியர் தேவை. (முழு நேரம்/ பகுதி நேரம்) தங்குமிடம் உண்டு. 07775 66105/ 0765479510 041710

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

பண்டாரகம ரைகமவில் அமைந்துள்ள வாகன பழுதுபார்த்தல் நிலையத்திற்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் தேவை. 0761206639. 046333

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

காலி நகரத்தில் வீட்டு வேலைக்காக சிங்களம் பேசக்கூடிய தமிழ் தம்பதியினர் அல்லது தமிழ் பெண்கள் இரண்டு பேர் தேவை. ஒரு வருக்கான சம்பளப் பணம் 37500/=. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0777239173, 0777239174. 046644

கொழும்பிலுள்ள பங்களாவிற்கு வீட்டு வேலையாள்/ தோட்டக்காரர் தேவை. வயது 45 60 இடையில். (ஆண்கள்) சிபாரிசு களுடனான மலைநாட்டு தமிழர். தொடர்பு 0773009090. 046296

தலாஹேன வீட்டில் தங்கியிருந்து சேவை செய்வதற்கு ஆரோக்கிய மான பெண் ஊழியர் தேவை. 0773912303, 0770780975. 046531

பத்தரமுல்லயில் 2 நபர்கள் கொண்ட வீட்டிற்கு, தங்கி வேலை செய்ய பெண் வேலையாள் 54 மற்றும் 58 வயதிற்கிடையில் தேவை. சமையல், சலவை, அயன், வீடு சுத்திகரிப்பு மற்று ம் ஏனைய வேலைகள். உணவு, தங்குமிடம் முன்னைய அனுபவம் கட்டாயம். கவர்ச்சியான சம்பளம். அழையுங்கள். 0777562555 046756



### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

எமது ஹோட்டலுக்கு திறமையான சோடீஸ், ரொட்டி பாஸ்மார், உடன் தேவை. உணவு தங்குமிடம் இலவசம். கூடுதல் சம்பளம். (வெளிப் பிரதேசங்கள் விரும்பத்தக்கது ) கம்பஹா செத்சிரி பேக்கர்ஸ். 0768039890. 046742

கம்பஹா உடுகம்பொல கெஸ்ட் ஹவுஸ் இல் தங்கி வேலை செய்வதற்கு நடுத்தர வயது கணவன் மனைவி தம்பதி தேவை. (சிங்கள எழுத்து வாசிப்பதற்கு மற்றும் சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் எழுதுவதற்கான திறமை அவசியம்) 0761337538 046749

சீகிரியவில் வெளிநாட்டவர்கள் வருகை தரும் சுற்றுலா ஹோட்டலுக்கு ஆங்கிலம் கதைக்கக்கூடிய திடகாத்திரமான இளைஞர்கள் தேவை. (Room Boys) தங்குமிடம், உணவு பானங்கள் வழங்கப்படும். ரூ. 50,000 மேற்பட்ட சம்பளம். 07 64200178 046638

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

விலங்குப் பண்ணைக்கு ஊழியர்கள் தேவை. 0754484628. 046448

### 325 தொழில்துறை பொது

குருநாகலை பன்னலையில் அமைந்துள்ள விலங்குப் பண்ணை ஒன்றில் ஆடு, மாடு மற்றும் ஏனைய விலங்குகளை ப ரா மரிப்பதற்கு கருணை உ ள்ளம் கொண்ட சேவகர் ஒருவர் தேவை. தொடர்புகளுக்கு 0717742774 திரு சமன், 0711863408 திரு. தனுஷ்க. 046647

முஅத்தின் தேவை. களுத்துறை மாவட்டத்தில் உள்ள பள்ளி ஒன்றுக்கு முஅத்தின் தேவை. சுன்னத் ஜமாத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். எந்த தரீக்காவாக இருந்தாலும் வரவேற்கப்படுவர். தொடர்புகளுக்கு Rizwan - 0777100395, Rigwer - 0769995657. 046309

## காணி/தோட்டம்

### 601 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் விற்பனைக்கு

களனி விஹாரை மற்றும் வோட்டர் வேர்ள்ட் இற்கு இடையில் இரண்டு மாடி ஆடம்பர வீடு விற்பனைக்கு 1800 சதுர அடி ரூ. 16.0மீ தொடர்பு 0112915263/ 0716348325 046770

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

கட்டுபொத்த, குருநாகல் பிரதான வீதிக்கு எல்லையாக அமைந்துள்ள 35 ஏக்கர் மற்றும் 15 ஏக்கருடனான காணிகள் இரண்டு உடன் விற்பனைக்கு. ஒரு ஏக்கர் 85 லட்சம். 0714402439, 0766424834. 046500

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

எத்துல்கோட்டே ஜயவீர மாவத்தை பிரதான வீதிக்கு 50 மீற்றர் தூரத்தில் 8 பேர்ச் சிறந்த காணித் துண்டுகள் விற்பனைக்கு. ஒரு பேர்ச் 3.8 மில்லியன். 0716033180. 046070

மீப்பே, ஆட்டிகல 23 பேர்ச் இரு மாடி வீடு. படுக்கையறைகள் 5, குளியலறைகள் 3, அமருமிடம் 2, தென்னை மரங்கள் 4, இளநீர் மரங்கள் 2, சுற்றிவர சுவர், கமராவும் உண்டு. 01121 41770, 0766645523. 045886



### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

ராகம நகரிற்கு 500 மீட்டர் தூரத்தில் 58 பேர்ச் சதுர வடிவ காணி 60 மூன்று சுற்று மின்சாரம், சுற்றாடல் அனுமதிப்ப த்திரத்துடன், தொழிற்சாலை கட்டிடம் 4 அறைகளுடனான விசாலமான வீட்டுடன். விமான நிலையம் மற்றும் கடவத்த அதிவேக வீதிக்கு 10 விநாடிகள். சிக்கலற்ற உறுதி. (தரகர்கள் அழைக்க வேண்டாம்) 0777156177/ 0778619940. 046864

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

பாணந்துறை வடக்கு தல்பிட்டிய காலி வீதிக்கு 30m விசாலமான இருமாடி 34 பேர்ச் கெஸ்ட் ஹவுஸ் ஒன்றிற்குப் பொருத்தமானது. 600/ இலட்சம். 0704869438. 046329

### 622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு

23 பேர்ச்சஸ் காணி விற்பனைக்கு உண்டு. மாத்தளை களுதாவளையில். தொடர்பு கொள்க 066/ 2050231. 046325

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரத்மலானை, சென்ட் ரீட்டா வீதி, 46/5 வீடு வாடகை (2) படுக்கையறை, (2) பாத்ரூம், கார் பா க்கிங் நெடிய சாலை (6) மாதம் முற்பணம் வாடகை 45/ = ஆயிரம். அஷ்ரப் ஏ. சமத் 0773 073796. 046337

கொழும்பு15, அளுத்மாவத்தை முதன்மையான அமைவிடத்தில் நவீன அனெக்ஸ் போதுமா ன தங்குமிட வசதி, படு க்கையறைகள். நவீன சமையலறை, ஓய்வுப் பிரதேசம் ஓர் வீட்டின் முதலாம் மாடியில். வாடகை 30,000/ = முற்பணம் 200,000/ = பிரத்தியேக உ ள்நுழைவு ம ற்றும் ப ற்றுச்சீட்டுக்கள். தொடர்பு 0773551416, 0773516708. 046289

கொழும்பு15, அளுத்மவத்தையில் அழகிய, நவீன மூன்று மாடி வீடு ஒரு அறை A/ C ரோலா் கேட், தோட்ட இடவசதி வாடகை 65,000/ = முற்பணம் 350,000/ =. தொடர்பு 07735 51416 , 0773516708. 046284

தெஹிவளை வீடு வாடகைக்கு. 02 படுக்கையறைகள், 01 குளியலறை , வாகன நிறுத்துமிடம். 07 73309337. 046447

பொல்கள் ஓவிட்ட 120 பாதைக்கு 200M மற்றும் கொட்டாவவிற்கு 5KM தூரத்தில் 342 பஸ் பாதையில் அமைந்துள்ள 3 அறைகள் மற்றும் குளியலறை 2 உடன் முழுமையான வீடு குத்தகைக்கு. ரூ. 48,000/. தொ.பே. 07771227 30, 0701 782433 046836

வாரமஞ்சரி
திருமண சேவைகள்
classified@lakehouse.lk
077 7278 948 - 0112 429 347
- 0112 429 383 - 0112 429 342/343

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# வட்டி வீதங்களை அதிகரித்த அமெரிக்கா

## இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்துமா?

கடந்த ஜூன் மாதத்தில் டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி சடுதியாக உயர்ந்து சென்று இலங்கையர்களைக் குஷிப்படுத்தியது. ஒரு தரப்பினர் ஆஹா நாட்டின் பொருளாதாரம் வலுப்பெற்று விட்டது. நாம் கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு உரியபலன் கிடைக்க ஆரம்பித்த விட்டது என்று மார் தட்டிக்கொள்ள இன்னொரு தரப்பினர் இது நரகத்தின் இடைவேளை என்றனர். மிக இறுக்கமான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நாட்டிலிருந்து அந்நியச் செலாவணியை வெளியே கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட தீவிரமான கட்டுப்பாடுகள், ஏற்றுமதி சம்பாத்தியங்களை ரூபாவுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று மத்தியவங்கி விதித்த நிர்வாகக் கட்டுப்பாடுகள் என்பன ஒன்றிணைந்து நாட்டில் டொலர் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தின. அதேவேளை உல்லாசப் பயணிகளின் உள்வருகை அதிகரித்தமை, இலங்கையர்கள் வெளிநாடுகளிலிருந்து மேற்கொள்ளும் பண அனுப்பல்கள் அதிகரித்தமை போன்ற தற்காலிகமான சில வரவுப்பக்க முன்னேற்றங்களும் இலங்கையில் டொலர் கையிருப்புகளை அதிகரித்தன. இன்னொருபுறம் அரசாங்கத்தின் தீவிரமான வரி அதிகரிப்புக் கொள்கைகள் காரணமாக மக்களின் செலவிடத்தக்க வருமானம் மிகக் கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்து பொருட்கள் சேவைகளின் மீதான மக்களின் கேள்வியை குறைத்தது. வெளிநாட்டு இறக்குமதிகளின் விலைகள் இருமடங்கு, மும்மடங்கு அதிகரித்துச் சென்ற போது முன்னர் வழமையாக அவற்றை கொள்வனவு செய்த மத்தியதரவர்க்கத்தினர் அவற்றின் கொள்வனவை முற்றாக நிறுத்தினர். இதனால் டொலருக்கான கேள்வி சந்தையில் வீழ்ச்சியடைந்தது. மிக முக்கியமாக இலங்கை அரசாங்கம் வெளிநாட்டுக் கடன் மீளச் செலுத்தலை நிறுத்தி வைத்துள்ள காரணத்தினால் டொலருக்கான கேள்வி சந்தையில் வீழ்ச்சியடைந்தது. ஆகவே டொலருக்கான கேள்வியில் ஏற்பட்டுள்ள தற்காலிகமான ஒரு வீழ்ச்சி மறுபுறம் டொலர் உள்வருகையில் ஏற்பட்டுள்ள தற்காலிகமான அதிகரிப்பு என்பன ஒன்றிணைந்து டொலரின் விலையை குறைத்தன. நாட்டில் காணப்பட்ட டொலரின் மிகைக் கையிருப்பை கொள்வனவு செய்வதன் மூலம் டொலரின் விலை மேலும் குறைவடைவதை மத்தியவங்கி தடுத்து நிறுத்தியது. அதேவேளை அரசாங்கம் இதுவரை காலமும் விதித்திருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்தப்போவதாக அறிவித்தது. வாகனங்கள் நீங்கலாக ஏனைய இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஜூலை மாத இறுதிவாரத்தில் இலங்கையிலிருந்து டொலரை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. இவற்றின் காரணமாக ஜூலை மாதத்தில் டொலரின் கேள்வி அதிகரித்துச் சென்றமையைக் காண முடிகிறது. இதனால் 300 ரூபாவுக்கும் கீழ் வீழ்ச்சியடைந்து சென்ற டொலரின் பெறுமதி 332 ரூபா வரையில் மிகச் சிலநாட்களுக்குள் அதிகரித்துச் சென்றது. குறுகிய காலத்தில் தீவிரமான தளம்பல்களுக்குட்படும் நாணய மாற்றுவீதம் ஒரு நாட்டுக்கு மிகப்பெரிய தீங்கினை ஏற்படுத்தும் என்பதை இலங்கையின் கடந்த கால அனுபவங்களை வைத்து ஒருவர் உய்த்தறிய முடியும். சுதாகரித்துக் கொண்ட மத்திய வங்கி சந்தையில் தலையீட்டினை மேற்கொண்டமையினால் கடந்த 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை டொலரின் பெறுமதி 328.75 ரூபாவாக சற்று வீழ்ச்சியினைப்பதிவு செய்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. ஆகவே இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி செலாவணிக் கட்டுப்பாடுகளையும் தளர்த்தினால் ரூபாவின் பெறுமதி குறுகிய கால வீச்சினுள் தீவிரமான தளம்பல்களுக்கு உட்படும் என்பதை ஜூலை மாத அனுபவங்கள் காட்டுகின்றன. மறுபுறம் நாட்டின் கைத்தொழில் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்துள்ளன. விவசாயத்துறையில் சற்று வளர்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. சேவைகள் துறையில் கல்விச் சேவைகள் தவிர ஏனையவற்றில் மந்தநிலை தொடர்வதான அரச புள்ளி விபரங்கள் கடந்த காலாண்டில் காட்டின. ஆகவே நாட்டின் உற்பத்தித் துறையில் மிகப்பாரிய வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் முதன்மைக் கொள்கைத் தெரிவாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதே அமைந்திருந்த படியினால் பொருளாதாரம் வீழ்ச்சியடைய அனுமதிக்கப்பட்டது. இப்போது பணவீக்கம் 10 சதவீதமாகக் குறைந்து விட்டதாக மத்தியவங்கி கூறுகிறது. இனி வளர்ச்சிக் குறிக்கோளை அடைவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென அது கூறுகிறது. அது மட்டுமன்றி சர்வதேச நாணய நிதியம் வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டுமென வலியுறுத்துகிறது. ஒருபுறம் உயர்வரிகளை அறவிட்டு மக்களின் கொள்வனவு ஆற்றலைக் குறைக்குமாறு விதந்துரைக்கும் அது மறுபுறம் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென இரட்டை நிலைப்பாட்டை எடுத்துள்ளது. கொவிட் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட எல்லா நாடுகளினதும் அரசாங்கங்களும் தமது மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பேணி பொருளாதார நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு அரச செலவினங்களை அதிகரித்து வரிக் குறைப்புகளையும் சலுகைகளையும் பொதுமக்களுக்கும் உற்பத்தி நிறுவனங்களுக்கும் வழங்கி பொருளாதார மந்த நிலையில் இருந்து மீட்சியடையும் செயற்பாட்டை முன்னெடுத்தன. இதில் வளர்ச்சிடைந்த மேற்குலக நாடுகள் மாத்திரமன்றி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் குறிப்பாக தெற்காசிய வட்டகையில் உள்ள நமது அயல் நாடுகளும் உள்ளடக்கம். கொவிட் பெருந்தொற்றின் பின்னர் தெற்காசிய நாடுகள் காத்திரமான பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன. அதேவேளை பிழையான பொருளாதாரக் கொள்கைத் தெரிவுகளை மேற்கொண்டு நாட்டின் உற்பத்திக் கட்டமைப்புகளைச் சிதைத்து வங்குரோத்து நிலையை அடைந்த இலங்கை அதற்கான விலையையும் பொதுமக்களே செலுத்தும்படி பொருளாதாரக் கொள்கைகளைத் தெரிவு செய்தது. இதனால் பொருளாதாரம் தொடர்ச்சியாக பொருளாதாரச் சுருக்க நிலையை அடைந்துள்ளது. இனி பொருளாதார வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய முன்னுரிமை வழங்கப்படுவதாகக் கூறப்பட்டாலும் அதற்கான வெளிப்படையான கொள்கைத்திட்டம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக எப்படியாவது சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்று இப்போதைய நெருக்கடியிலிருந்து மீண்டால் போதும் என்ற சொல்லப்படாத இலக்கு இருப்பதாகவே தெரிகிறது. அண்மையில் அமெரிக்க அரசாங்கம் தனது வட்டி வீதங்களை அதிகரித்தது. இதனால் டொலரின் பெறுமதி அதிகரிக்கும். இது இலங்கை ரூபாவின் மீது மேலும் அழுத்தங்களை உருவாக்கும் அது மட்டுமன்றி அண்மையில் ரஷ்யா, உக்ரைனின் தானிய ஏற்றுமதிகளை மீண்டும் தடைசெய்யும் வகையில் அதன் துறைமுகங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. அதனால் உணவுப் பொருள் விலைகள் உலக சந்தையில் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் பிரகாசமாக உள்ளன. ஆகவே இலங்கை ரூபாவின் தற்காலிக எழுச்சியானது நரகத்தில் விடப்பட்ட இடைவேளை என்ற கருத்து உண்மையாகக் கூடிய வாய்ப்புண்டு.

1. நாட்டில் காணப்பட்ட டொலரின் மிகைக் கையிருப்பை கொள்வனவு செய்வதன் மூலம் டொலரின் விலை மேலும் குறைவடைவதை மத்தியவங்கி தடுத்து நிறுத்தியது.
2. வாகனங்கள் நீங்கலாக ஏனைய இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.
3. இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி செலாவணிக் கட்டுப்பாடுகளையும் தளர்த்தினால் ரூபாவின் பெறுமதி குறுகிய கால வீச்சினுள் தீவிரமான தளம்பல்களுக்கு உட்படும் என்பதை ஜூலை மாத அனுபவங்கள் காட்டுகின்றன.
4. சேவைகள் துறையில் கல்விச் சேவைகள் தவிர ஏனையவற்றில் மந்தநிலை தொடர்வதான அரச புள்ளிவிபரங்கள் கடந்த காலாண்டில் காட்டின.
5. இப்போது பணவீக்கம் 10 சதவீதமாகக் குறைந்து விட்டதாக மத்தியவங்கி கூறுகிறது. இனி வளர்ச்சிக் குறிக்கோளை அடைவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென அது கூறுகிறது.
6. கொவிட் பெருந்தொற்றின் பின்னர் தெற்காசிய நாடுகள் காத்திரமான பொருளாதர வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
7. அண்மையில் அமெரிக்க அரசாங்கம் தனது வட்டி வீதங்களை அதிகரித்தது. இதனால் டொலரின் பெறுமதி அதிகரிக்கும். இது இலங்கை ரூபாவின் மீது மேலும் அழுத்தங்களை உருவாக்கும்.




# உயிருக்குப் போராடிய

# 480 g எடையுடைய குழந்தை உயிர் பிழைத்தது எப்படி?



ஐக்கிய அரபு அமீரகத்தில் வாழும் இலங்கையைச் சேர்ந்த காலஞ்சென்ற கலையன்பன் ரபீக்கின் மகள் ருசானா ரபீக்கின் அனுபவம்

கலையுலகில் மிகவும் பிரபலமான இலங்கையைச் சேர்ந்த கலையன்பன் ரபீக் துபாய் நகரில் சங்கமம் வானொலி, சங்கமம் தொலைக்காட்சி ஆகியவற்றை வெற்றிகரமாக நடத்தியவர். ஏறக்குறைய 45 வருடங்களுக்கு முன்பு துபாயில் தனது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்தவர். சில வருடங்களுக்கு முன்பு அவர் எம்மை விட்டும் பிரிந்தார். மிக நீண்ட காலம் அவரது குடும்பமும் அங்கேயே வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கலையன்பனின் மகளான ருசானா ரபீக் (26 வயது) முஹம்மத் முதஸ்ஸிர் என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்திருந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 23 ந் திகதி தனது தலைப்பிரசவத்துக்காக உரிய காலத்துக்கு முன்பே துபாய் லத்தீபா மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். ருசானாவும் அதே மருத்துவமனையில் பிறந்தவர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறைமாதப் பிரசவத்தில் பிறந்த குழந்தையின் எடை வெறும் 480 கிராம்தான். அதாவது அது ஒரு பெரிய மாங்காயின் எடையை விட குறைவானது என மருத்துவர்கள் தெரிவித்தனர். பிரசவத்திற்கு முன்பே டாக்டர்கள், குழந்தையை எவ்விதத்திலும் காப்பாற்ற முடியாது என்ற அதிர்ச்சித் தகவலை தாய் ருசானாவிடம் தெரிவித்திருந்தனர்.

சர்வதேச தரவுகளின்படி 22,23 வாரங்களில் பிறந்த 50 வீதமான குழந்தைகள் உயிருடன் வாழ்வதில்லை.

இருப்பினும் குழந்தை பிறந்த பின்பு லத்தீபா வைத்தியசாலையின் வைத்தியக்குழுவினர் காட்டிய அக்கறை அந்தத் தாயின் மனதின் ஒரு மூலையில் நம்பிக்கையை துளிர் விடச் செய்திருந்தது.



பெப்ரவரி 25 ந் திகதி 23 வாரமே ஆன அந்தக் குழந்தை பிறந்த போது குழந்தையின் எடை 480 கிராமே.

எனினும் பிரசவம் சுகப் பிரசவமாகவே அமைந்தது. பெண் குழந்தை. மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. உடனடியாகவே குழந்தை அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டது.

ருசானா மூன்று வாரத்தில் மருத்துவ மனையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், டாக்டர்கள் தங்களுடன் குழந்தையை வைத்துக் கொண்டு அதனை உயிர் வாழ வைக்க பகீரதப் பிரயத்தனம் எடுத்தனர்.

"எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று டாக்டர்கள் எனக்கு அறிவித்தனர். நான் கண்ணீரோடு இரவும் பகலும் வல்ல அல்லாஹ்விடம் மன்றாடிக் கொண்டிருந்தேன்" என்று அந்தத் தாய் தனது பதற்ற நிலையை வர்ணித்தார்

உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அந்த மழலையை உயிர் வாழ வைக்க வைத்தியர்கள் போராடிக் கொண்டிருந்தனர்.

அந்தப் போராட்டத்தைப் பார்த்து ருசானாவும், கணக்காளராகப் பணி புரியும் அவரது கணவர் முதஸ்ஸிரும் கலங்கிப் போனார்கள். எனினும் அவரது தாயார், சகோதர சகோதரிகள் உறவினர்கள் அவர்களுக்கு தைரியமூட்டிக் கொண்டேயிருந்தனர்.

நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும் மாறிக் கொண்டிருக்கும் போதே அந்த சின்னப் பிஞ்சு வைத்தியசாலையில் மெது மெதுவாய் வளர்ந்து கொண்டிருந்தது.


121 நாட்களை அந்த வைத்தியசாலையில் கழித்த அந்த சிசுவுக்கு வைத்தியசாலையிலிருந்து விடுதலை கிடைத்தது. ஆம் ஏங்கித் தவித்த தாயின் கரங்களுக்கு அது வந்து சேர்ந்தது. பல போராட்டங்களுக்குப் பிறகு சுகம் பெற்ற அக் குழந்தைக்கு "காஷியா" என்று பெயர் சூட்டி பெற்றோர் மகிழ்ந்தனர். காஷியா என்றால் போராளி என்று அர்த்தம்.

இப்போது "காஷியா" 2.3 கிலோ எடையுடன் சுகதேகியான குழந்தையாக இருக்கிறது.

காஷியாவின் பெற்றோரான ருசானாவும், முதஸ்ஸிரும் தங்கள் பிள்ளை தங்களுக்கு முழுமையாக கிடைத்ததற்காக வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல இரவு பகல் பாராது அயராது பாடுபட்ட துபாய் லத்தீபா மருத்துவ மனையின் மருத்துவர்கள், ஊழியர்களுக்கு இன்றும் கண்ணீர் மல்க மனப்பூர்வமான நன்றியை தெரிவித்து மகிழ்கின்றனர்.

# சாரல் நாடன் ஒரு சகாப்தம்

**சாரல் நாடன் மறைந்த ஜூலை 31, 2014 நினைவாக இக் கட்டுரை பிரசுரமாகிறது.**



சாரல் நாடனின் எழுத்துக்கள் தென்றலாக வீசி, புயலாக மலையக இலக்கியத்திற்கு வலிமை சேர்த்துள்ளது என்பது உண்மையே. மலையக இலக்கிய வரலாற்றில் அவருக்கு தனி அத்தியாயம் எழுதப்பட வேண்டும். கவிமணி சி.வி.யின் பன்முக ஆற்றலை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணம் 'சி.வி. சில சிந்தனைகள்' என்ற படைப்பையும் சாரல் நாடன் தந்துள்ளார்.

தேனீக்கள் பறந்து பறந்து பூக்களில் மகரந்தத்தை சேகரிப்பது போல நூல் நிலையங்களை தேடி சாரல் நாடன் போனார். கொழும்பு தேசிய சுவடிக்கூடம், நூதனசாலை நூலகம், கண்டி சத்தியோதய நூலகம் அட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவ நூலகம், நுவரெலியா நூலகம், போன்றவற்றில் அதிக நூல்களைத் தேடிப் படித்தார். தேசிய சுவடிக்கூடத்தில் பழம் பத்திரிகைகளையும் நுணுகி ஆராய்ந்தார். மாதக் கணக்கில் விடுமுறை எடுத்து ஆங்கில, தமிழ் பத்திரிகைகளில் குறிப்புக்கள் சேகரித்தார். இதனாலேயே அவரது படைப்புக்கள் அதிகமாக ஆய்வு இலக்கியங்களாகவே இருந்திருக்கின்றன.

இலக்கியத்தின் எல்லைகளை விசாலித்ததாக்கும் முயற்சிகளில் இளம் வயதினர் இன்று மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர். நம் நாட்டின் சமகால அரசியல் நடவடிக்கை இதற்கு மேலும் உந்துதல் தருவதாக அமைந்துள்ளது என ஹைக்கூ கவிதை தொகுதி முன்னுரையில் சாரல்நாடன் குறிப்பிட்டுள்ளார். சாரல்நாடன் என்ற பெயரில் எழுதிய கருப்பையா நல்லையா (மறைவு: ஜூலை 31, 2014) இலங்கையின் மலையக எழுத்தாளர்களுள் முக்கியமானவர். மலையகம், மலையக இலக்கியம் தொடர்பில் பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். சாரல் வெளியீட்டகம் என்ற பதிப்பகம் மூலம் நூல் வெளியீட்டிலும் ஈடுபட்டவர். சிறுகதை, புதினம், மற்றும் ஆய்விலக்கியங்களை எழுதியவர்.

அத்துடன் ஈழத்து மலையக இலக்கிய வளர்ச்சியை ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள், விமர்சகர்கள் காலக்கணக்கெடுப்பு நடத்தும் பொழுது 1930 களின் பின்னர் நடேசய்யர் யுகம் என்றும், 1950களின் பின்னர் சி.வி. வேலுப்பிள்ளை யுகம் என்றும் 1980களின் பின்னர் சாரல் நாடன் யுகம் என்றும் கணிக்க வேண்டும்.

## மலையக மண்ணின் மைந்தன்

சாரல்நாடன் நுவரெலியா மாவட்டம், சாமிமலை, சிங்காரவத்தை தோட்டத்தில் கருப்பையா, வீரம்மா ஆகியோருக்கு 1944 மே 9 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் நல்லையா. அப்கொட் தோட்டப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியையும் கற்றார். கண்டி அசோகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி பின்னர் ஓய்வு பெற்றார்.

ஹட்டனில் படித்த போது பாடசாலை இதழ்களில் கவிதைகள் எழுதி வந்தார். பின்னர் மலைமுரசு, வீரகேசரி, தினகரன் இதழ்களில் எழுதத் தொடங்கினார். 1962இல் வீரகேசரி நடத்திய மலையக எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் இவருடைய கால ஓட்டம் என்ற சிறுகதைக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. புனைவுகளை விட இவரது ஆய்வு நூல்களே இவருக்குப் புகழ் தேடிக் கொடுத்தது. மலையகத்தை மையமாக வைத்து இவர் 14 நூல்களை எழுதியுள்ளார். மலையக எழுத்தாளர்கள் எவரும் அதிகம் ஆர்வம் காட்டாத ஆய்வுத்துறைகளில் அக்கறை காட்டியவர் சாரல் நாடன். அடுத்தவர்களின் கட்டுரைகளின் குறிப்புக்களை சேகரித்து எழுதுவதில் இவருக்கு விருப்பம் இல்லை. தகவல்கள் சரியானவையா ஆதாரங்கள் உண்மையானவையா என்பதை நேரில் தேடிப்பிடித்து விளக்கம் பெற விரும்பிய சாரல் நாடன், மலையகத் தமிழர் (1990) மலையக வாய்மொழி இலக்கியம் (1993), மலைக் கொழுந்தி (சிறுகதைகள், 1994), சி. வி. சில சிந்தனைகள் (1986), தேசபக்தன் கோ. நடேசையர் (1988), பத்திரிகையாளர் நடேசைய்யர் (1998) ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

மலையக மண்ணின் மைந்தனான சாரல் நாடனின் தேடலின் அற்புத அறுவடை தான் 'தேசபக்தன் கோ. நடேசய்யர்' என்ற மலையகத்தின் மாமனிதரைப் பற்றிய நூல். ஒரு காலத்தில் மலையகம் பற்றிய தகவல்களைப் பெற சி.வி.யிடம் தான் போவார்கள். அவர் இல்லாத கால கட்டத்தை நிறைவு செய்தவர் சாரல். அவரது இடத்தை நிரப்ப கருத்துக்கெட்டிய வரை மலையகத்தில் எவரும் இல்லை என்பதே உண்மை நிலையாகும். அத்துடன் மலையகம் வளர்த்த தமிழ் (1997), இன்னொரு நூற்றாண்டுக்காய் (1999), மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும் (2000), மலையகத் தமிழர் வரலாறு (2004), பேரேட்டில் சில பக்கங்கள் (2005), பிணந்தின்னும் சாத்திரங்கள் (2002), இளைஞர் தளபதி இரா. சிவலிங்கம் (2010) ஆகிய நூல்களையும் சாரல் நாடன் எழுதியுள்ளார்.

## விருதுகளை விரும்பாத விருட்சம்:

சாரல் நாடன் எழுதிய "தேசபக்தன் கோ. நடேசய்யர்'", "பத்திரிகையாளர் கோ. நடேசய்யர்" ஆகிய இரு நூல்களும் இலங்கை சாகித்திய விருதைப் பெற்றன. வீரகேசரி பத்திரிகை நடத்திய மலைநாட்டு எழுத்தாளர்களுக்கான முதலாவது சிறுகதைப் போட்டியில் இவரது "கால ஓட்டம்" என்ற சிறுகதை இரண்டாம் இடத்தைப் பெற்றது.

ஆயினும் அவர் விருதுகளை விரும்பாத விருட்சமாகவே மலையக மண்ணில் மிளிர்ந்தார்.

## சாரல் நாடன் கவிதைகள்:

சாரல் நாடன் எழுதிய கவிதைகள் தொகுப்பாக வெளிவராவிட்டாலும் அவரின் கவிதைகள் அனைத்துமே தேர்ந்த கவிஞனுக்கான கவிதை மொழியின் அடையாளமாக உள்ளன. அவை சொல்லி நிற்கும் உள்ளர்த்தங்களும் கனதியானவை. ஆனால் அவை நூலுருவம் பெறவில்லை என்பது துரதிர்ஷ்ட வசமே. மலையக மண்ணின் மைந்தனான சாரல் நாடனின் கவிதை வரிகள் அவரின் கவிப்புலமை ஆற்றலை எமக்கு வெளிக்காட்டி உள்ளது. சாரல் நாடனின் எழுத்துக்கள் தென்றலாக வீசி, புயலாக மலையக இலக்கியதுக்கு வலிமை சேர்த்துள்ளமை எனபதும் உண்மையே.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# புதிய அரசியல் செல்நெறியைநோக்கி நகருமா மலையக இளைய தலைமுறை?





**புதிய சிந்தனைகள் முளைவிட்டாலும் அதன் ஆணிவேர் பாரம்பரியத்தை அடியொட்டியதாகவே மாற்றமடைகிறது.**

புதிய அரசியல் முன்னகர்வினை மலையக இளைய தலைமுறையினர் இப்போதே கண்டடைய வேண்டும் என முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ் 'மலையகம் 200' கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார். அதற்கு மலையகம் 300 ஐ எதிர்கொள்ள வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

ஆனால் சுமார் ஒரு தசாப்தமாக புதிய அரசியலை நோக்கி மலையகம் நகர வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டாலும் அது நடைமுறையில் சாத்தியப்படவில்லையெனக் கூற வேண்டும். திலகரும் தொழிற்சங்க அரசியலில் கால் பதித்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு பல பிரச்சினைகளுக்கு மத்தியில் அவர் இருந்த கட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். அன்று அவர்களின் நல்லாட்சியில் தோட்டங்களும் உள்ளூராட்சி மன்றங்களுக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்னகர்த்தியவர் திலகராஜ் என்பதே யாவரும் அறிந்த உண்மையாகும். தமது மக்களுக்கு ஏதோ ஒன்றை செய்ய வேண்டும் என ஆழமாக சிந்தித்தவர் அவருக்கும் பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வோம்.

மலையகத்துக்கு புதிய அரசியல் பாதை தேவை என்று கூச்சலிடுபவர்கள் இன்று அரசியலில் இருக்கும் குறைபாடுகளை சரிவர அறியாமலே கதைக்கிறார்கள். இன்றைய நிலையில் மலையக அரசியல்வாதிகள் தமது அதிகாரங்களை மக்களின் நலனுக்காக பயன்படுத்த சற்று தயக்கம் காட்டுகிறார்கள்.

அது அன்று முதல் இன்றுவரை நடந்து கொண்டு தான் வருகிறது. மலையக அரசியலில் புதிய கட்சிகள் உருவாக்கப்பட்டாலும், புதிய சிந்தனைகள் முளைவிட்டாலும் அதன் ஆணிவேர் பழைய சிந்தனையாகும். அதில் இருந்தே அனைவரின் அரசியல் ஆரம்பமும் அமைந்திருக்கிறது. அதில் வளர்ந்தவர்கள் அதன் சாயலை ஒத்ததாகவே இருப்பார்கள். இவர்கள் தமக்கு கிடைத்திருக்கும் அரசியல் பலத்தால் பயனடையமாட்டார்கள். அதிகார பலம் அற்றுப்போய் விடும் என்ற பயத்தால் இதற்கு நான் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர்களை நோக்கினால் அவர்களுக்கு கிடைத்திருக்கும் அரசியல் அதிகாரத்தை பயமின்றி மக்களின் நலனுக்காக பயன்படுத்துவார்கள் உதாரணத்துக்கு மர்ஹூம் ஏ.எச்.எம்.அஷ்ரப் அமைச்சராக இருக்கும் போது அவரவரின் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப அரசுத் தொழில்களை வழங்கியவர். அதில் தமிழ் மக்களுக்கும் அரசாங்க தொழில் வழங்கினார். அதை எமது தலைவர்கள் கூட செய்யவில்லை.

அவரது காலத்தில் மலையத்துக்கு அமைச்சு பதவி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த அமைச்சர் அவ்வாறு செய்யவில்லை என்ன காரணம் என்று உறுதியாக கூற முடியாதுள்ளது. மர்ஹூம் ஏ.எச்.எம்.அஷ்ரப் கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழகமும் அமைத்து கொடுத்துள்ளார். நாம் இன்னும் ஒரு தசாப்தங்கள் மலையக பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பில் கதைத்துக் கொண்டிருப்போம். ஒரு சமூகம் முன்னேற பொருளாதாரம் முக்கிய இடத்தை வகிக்கிறது. மலையக வம்சாளி மக்களில் பலர் சிறந்த வருமானம் இன்மையால் முன்னேற்றமடையாமல் இருக்கின்றது என்பது தெட்டத்தெளிவாக தெரிகின்றது. மர்ஹூம் அஷ்ரப் அவர் சார்ந்த மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தினார். அவர்கள் அதைக் கொண்டு இன்று முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

மலையக அரசியல்வாதிகள் தம்மைச் சார்ந்த மக்களுக்கு அரசாங்க தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கிறார்கள். மலையகம் 200' ஐ கடந்து விட்டோம் எமக்கான புதிய அரசியலை கண்டடைய முடியாவிட்டால் ஏனைய சமூகத்திலிருந்து பாடங்களையாவது படிப்பினையாக கொள்ள வேண்டும்.

அரசியல் அதிகாரம் இன்றி எமக்கு எதையும் இலங்கையில் பெற்றுக் கொள்ள முடியாது, ஆகையால் நாம் அரசியல் அதிகாரத்தை சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டும். இந்திய வம்சாவளி மக்கள் உழைப்பில் உயர்ந்தவர்கள். இந்தியாவில் இருந்து வந்த சிலர் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்றால் புதிய அரசியல் பாதையையும் தேர்ந்தெடுக்க அவர்களால் முடியும்.

# தன்னை அதிகம் விளம்பரப்படுத்தாத கவிஞன்: சண்முகம் சிவலிங்கம்


ஈழத்தின் தென்கிழக்குப் பிரதேச மூத்த கவிஞர்களுக்கு ஒரு முண்டாசுக் கவிஞன் சண்முகம் சிவலிங்கம். 'சசி மாஸ்டர்' என்றழைக்கப்படும் இந்த மூத்த ஆசிரியர் ஈழத்தின் முக்கிய கவிஞராக மதிக்கப்படுகிறார். 1960களின் மத்தியில் எழுதத் தொடங்கிய அவர் பல்லாண்டாய் பன்முக இலக்கியங்களைப் படைத்துள்ளார். 1988இல் 'நீர் வளையங்கள்' என்ற அவரது முதலாவது கவிதைத் தொகுப்பு தமிழியல் வெளியீடாக வெளிவந்தது. "சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்" என்ற கவிதைத் தொகுப்பை 2010ல் கலைச்சுவடு பதிப்பகம் வெளியிட்டது. 2014ல் வெளிவந்த "காண்டாவனம்" என்ற அவரது நூல் தமிழுக்கு ஒரு புதிய முகத்தையும் வளத்தையும் சேர்த்தது.

கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளை ஈழத்து இதழ்களை விட தமிழக பத்திரிகைகளே அதிகம் வெளியிட்டன. வியூகம் தெரிதல் ஆகவே – எனவே இனி – காலச்சுவடு ஆகிய தமிழிதழ்கள் அவரது கவிதைகளை விரும்பிப் பிரசுரித்தன. நவீன தமிழிலக்கியத்தில் கிழக்குத் தமிழ்க்கவி நீலாவணனுக்கு அடுத்தபடியாக ஈழக்கவியாக அதிகம் மதிக்கப்பட்டவர்தான் சண்முகம் சிவலிங்கம். கவிஞர் சண்முகம் சிவலிங்கம் (1939) கிழக்கிலங்கையின் கல்முனை நகருக்குப் பக்கத்தில் உள்ள 'பாண்டிருப்பு' எனும் ஊரில் பிறந்தார். இந்தியாவின் கேரள மாநிலத்தில் உயர் கல்வி கற்று விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றார். ஈழத்தில் பல்வேறு பாடசாலைகளில் உயர்தர வகுப்பாசிரியராகப் படிப்பித்தார். கடைசியில் அவர் பாண்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றார். 2012ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி மரணமானார்.

தன்னை அதிகம் விளம்பரப் படுத்திக்கொள்ளாத சண்முகம் சிவலிங்கம் ஒரு நல்ல கவிஞர் மட்டுமல்ல நல்ல மனிதரும் கூட. 'எல்லோரும் சரிசமாய் வாழவேண்டும்' என்ற கொள்கைக் கோட்பாட்டுடன் நவீன தமிழ்இலக்கியம் படைத்த அவர் அன்பானவர், அமைதியானவர், அடக்கமானவர். பிறரிடம் அதிரப் பேசாதவர். ஆனால் கவிதை, கதை, ஆய்வுரை, விமர்சனம் என அவரது படைப்பிலக்கியங்கள் அதிரப் பேசுபவை என்பதால் பல படிப்பாளிகளாலும் படைப்பாளிகளாலும் பாராட்டப்பட்டார். தன் மனிதநேய மாண்பை பலபரிமாணங்களில் வெளிக்காட்டிய அவர் பிறமொழிக் கவிதைகளை ஆங்கிலத்திலும் பெயர்த்திருக்கிறார்.

.

பேராசிரியர் கவிஞர் எம்.ஏ. நுஃமான், சு. யேசுராசா ஆகிய இருவரும் தொகுத்து வெளியிட்ட 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' நூலில் (கிரியா, 1984 மற்றும் காலச்சுவடு பதிப்பகம் 2003) 'சசி'யின் கவிதையும் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அவரது கவித்துவம் இரண்டாயிரமாண்டுத் தமிழ்க்கவிதை வரலாற்றில் தனித்துயர்ந்து நிற்கிறது. அக்டோபர் 2003ல் வட, கிழக்கு மாகாண மக்கள் நிகழ்த்திய தமிழ் இலக்கியப் பெருவிழாவில் ஆளுனர் விருது வழங்கிப் பாராட்டப்பட்டார்.



கவிஞர் சண்முகம் சிவலிங்கம் ஒரு பொற்காலக் கவிஞர். அவரது கவிதைப் போக்கு வித்தியாசமானது. அவர் தன் சமூகத்தின், தன் சூழலின், தன் மக்கள் வாழ்வின் அவலத்தை வெளிக்கொணர்ந்திருப்பதன் மூலம் அவரது வாழ்வின் அனுபவம் உணரப்படுகிறது. மொழிஉரிமை, இனஉரிமை என்று மனித உரிமை மறுக்கப்படும் தன் தாயகத்தில் மகாகவி பாரதிபோல் தன் எழுத்தை அரசியல் ஆதிக்கத்திற்கெதிரான ஒரு ஆயுதமாகவே பயன்படுத்தினார். அப்படியான பாதிப்பின் அடியாக அவர் இப்படிப் பாடுகிறார்.

"எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன
எங்கள் இமைகள் கவிழ்ந்துள்ளன
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன
எங்கள் பற்கள் கண்டிப்போயுள்ளன
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்
தாழ்ந்த புருவங்கள் ஒருநாள் நிமிரும்
கவிழ்ந்த இமைகள் ஒருநாள் உயரும்
இறுகிய உதடுகள் ஒருநாள் துடிக்கும்
கண்டிய பற்கள் ஒருநாள் நறுக்கும்
அதுவரை நீங்கள் எங்களை ஆண்டு நடத்தும்
இதுவரை உங்கள் வல்லம் ஓங்குக"

இப்படித்தான் அடக்குமுறைக் கெதிரான அவரது உரத்த குரல் அதிரப் பேசுகின்றன. இக்கவிதையில் செறிந்துள்ள உணர்ச்சிகள் சொந்த மண்ணின் ரணகாயங்களோடு எச்சரிக்கின்றன. அவரது எழுதுகோல் மொழியையும் கவிதையையும் ஒருங்கிணைத்துச் செதுக்கிய இக்கலைச் சித்திரம் பிரமிக்க வைக்கிறது.

தன் சொந்த நாட்டில் சொந்த வாழ்வில் கஷ்டப்பட்ட அவர் அதிகம் நஷ்டப்பட்டார். அவர் நிலத்தை இழந்தார். இனத்தை இழந்தார். சுகத்தை இழந்தார், அமைதியை இழந்தார். நிம்மதியை இழந்தார். கடைசியில் தன் தனயனையும் இழந்து தவித்தார். அவரது மொத்த இழப்பின் சோகத்தை "போருக்குப் போனாய் போ" என்று இப்படி எழுதித் தீர்த்தார்.

"போனாய் நீ
போருக்குப் போனாய்
போ
ஓநாய்களுக்குப் பயந்து
உன்னை
வாயில் கவ்வி, வழி தேடிய
பூனை நான்
போனாய் நீ
போருக்குப் போனாய்
போ
வானில்
பனையின் வைர ஓலைகளில்
கூடுகள் நெய்தால்
குண்டர் உன்னைக் கொல்வார் என
பூமிக்கடியில் பொந்து கிண்டி
உன்னை
என் சிறகு தோலுக்குள் போர்த்திய
தூக்கணாங் குருவி நான்
என் துணையையும் மீறி
போனாய் நீ
போருக்குப் போனாய்
போ"

பேராசியர் கவிஞர் எம்.ஏ. நுஃமான் சசியின் கவிதைப்போக்கு பற்றிக் குறிப்பிடும்போது "மேற்படி வரிகள் அவரது கவிதைகள் பற்றி தெளிவானதொரு சித்திரத்தை வரைகின்றன. தனது நுண்ணிய உணர்திறன் காரணமாய் பல்வகைத் தன்மைகொண்ட ஏராளமான கவிதைகளை இதுவரை 'சசி' எழுதியுள்ளார். எனினும் அவருக்கே உரிய தனி இயல்பு காரணமாய் அவற்றை வெளியிடுவதில் அக்கறை காட்டாமையால், சில கவிதைகளே சில இதழ்கள் மூலம் வாசகர்களுக்குக் கிடைத்தன.

2013ஆம் ஆண்டில், நான் சவுதியிலிருந்து இலங்கைக்கு விடுமுறையில் வந்தபோது ஒரு நாள் நானும் ஆசுகவி அன்புடீனும் சசி அய்யாவின் வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசினோம். நீண்ட காலம் சந்திக்காததால் அவர் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. பேசிக்கொண்டிருந்தபோது அன்புடீன் என்னை அவரிடம் அறிமுகப்படுத்தினார். அவரிடம் நான் "உங்களிடம் படித்ததை விட உங்களையே அதிகம் படித்தேன், உங்கள் மாணவனாய் இருந்ததை விட உங்கள் வாசகனாய் இருப்பதே பெரும்பேறு" என்றேன். அதை அவர் ரசித்தார். எனது பேச்சை உற்றுக்கவனித்த அவர் முகம் மலர்ந்தபோது நானும் மனம் மகிழ்ந்தேன். என்னுடைய தொழில் குடும்பம் வெளிநாட்டு வாழ்க்கை பற்றி அவர் விசாரித்தபோது, விபரம் சொல்லி என்னுடைய 'மழை நதி கடல்' கவிதை நூலையும் அவரிடம் கையளித்தேன்.

அவரது கவிதைகளில் போருக்குப் போனாய் போ – ஆறாத ஆறுகள், உறவும் நினைவும் ஒரு பாலைவனத்தின் குரலும் தீராமை – நிழல் கோடுகள் நீக்கல்கள், குருவிமனம் இரவின் இறங்கு துறையில் கைகுலுக்கும் காலம்வரை – சிதைந்துபோன தேசமும், தூர்ந்துபோன மனக்குகையும் ஆகிய கவிதைகள் இயல்பான அவரது சமீபத்தைய சொந்த அனுபவங்களைப் பிரதிபலிக்கின்றன. எல்லாக் கவிதைகளும் அவரது வாழ்க்கையையும் சமுதாயத்தையும் சாடுகின்றன. அவரது கவிதைகள் முற்றிலும் சமூக விமர்சனக் கவிதைகளாகவே இருப்பது வரலாறாய் இருந்தாலும் அவரது வாழ்க்கை நியாயங்களுக்கு காது கொடுங்கள் என்ற தொனியிலேயே அவை வாசகர்களை வாசிக்க வைக்கின்றன.

கவிதை என்பது மொழியின் சொற்களையும் ஓசைகளையும் படிமங்களையும் பயன்படுத்தி உணர்ச்சியை வெளிப்படுத்தும் கலைத்துவத்தின் இலக்கிய வடிவம். ஒரு நல்ல கவிதையை, ஒரு பாமரனிடம் படித்துக் காட்டினால் கூட அவனது மனத்தில் அது நிச்சயம் பதியும், பாதிக்கும் என்பதே உண்மை. இந்த அவசர இயந்திர உலகிலும் ஓர் அந்தஸ்தும், இடமும், இருப்பும் கவிதைக்கு இருக்கிறதென்பது கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைளில் காணப்படுகிறது.

அவரது கவிதைகள் உலக மானுடம் உள்ளவரை வாழும் வளரும்.

**கனடாவிலிருந்து இனியவன் இசாறுதீன்**






# வருக முஹர்ரமே!



வாழை நிஹாரா

வா முஹர்ரமே
வந்து நில்!

உன் பட்டாடை நீக்கிப் பார்!

மூன்றாம் பிறையின்
முன்னே நிற்கும்

என் குழந்தையைக் கேள்!

வறுமையின் கோடுகள்
அவன் அடி வயிற்றில் தெரிகிறது அழி!

செந்நிறத்தில் வறுமை
அவன் இல்லறத்தில் விழுகிறது கிழி!

நேற்று வரையிலும்
வரன்கள் தேடி
இன்று வரையிலும்
பருவங்கள் இழந்த
முதிர் கன்னிகளுக்கு
முஹர்ரமே நீ
முத்திரையிடு!

காடுகள் அளவில்
காணிகள் வேண்டி
கோடுகள் ஏறும்
கொள்கையுள்ளோரைக்
கொளுத்து!

சத்தமில்லாத சலசலப்பில்லாத
யுத்தங்கள் நீங்கிய
யுகமொன்றைத் தா!

புற்றீசல் போல
புலம்பெயர் வாழ்வில்
அகதிகளாகும் அந்தஸ்த்தை நீக்கு!

கறுப்பு வெள்ளை
சிகப்பு என்றும்
உயரம் பணிவு
குள்ளம் எனவும்
மனிதர்கள் மீது
நிறங்களை அப்பும்
ஈனரின் உபாயங்களுக்கு
இடுவாயா முற்றுப்புள்ளி?

சுதந்திரம் என்ற பெயர்
பின் மனித உயிர்
அனந்தரம் ஆன கதை..
படித்துப் படித்து
அழுது அழுது..
பொஸ்னியாவிலும்
பஹ்தாத்திலும்
எத்தியோப்பியாவிலும்
யெமனிலும்
தல்பியாக்களுக்குப் பதிலாக
தலைகள் உருண்டோடும்
பேரிடியை நிறுத்து முஹர்ரமே!

''உம்மத்''களின் உன்மத்தங்கள்
அழிந்து
பாலரசிகள் பதறி நிற்க
மாதரசிகளின் கல்பை நொய்து,
கருவை நொறுக்கி
வதை நீண்ட போதும்!

அரபுலகின் ரசவாதத் தலைவர்கள் முடி
களுக்கு
இன்னும் எண்ணெய் தேய்த்துவிடும்

லியோனிஸக் கழுகுகள்...

முஹர்ரமே!
நீ ஒரு தரமேனும் இவர்கள்மேல்
சிஜ்ஜீல்கள் போலாகிப் பற!

கனவுகள் விடிகின்ற தேசம் தா!

முஹர்ரமே...
உன் பின்வரும்
ஸபர் தொடக்கம்
துல்ஹஜ் வரையான
வசந்தத்தின் மாதங்களின் கைகளில்
பூச்செண்டு கொடு!

நிலாவொளியில் நின்று பேச
கருமுகிலை விலக்கி விடு!

சீரிய தேசங்கள்
சிலிர்த்துக் கொள்ளட்டும்!

கள்ளமும் கபடமும்
கானகம் செல்லட்டும்

பெருமான் நபிகளின்
பேருரை பதியட்டும்!

முஹர்ரமே!
பணிவைத் தா
பரிவைத் தா

பண்பாய் வந்த
பாசமிகு முஹர்ரமே..

சினத்தை வெட்டு
சீனத்தை ஒளிர விடு!

ஈனத்தை ஆற்று
நெஞ்சில் ஈரத்தை ஊற்று!

கோணமாய் மனிதர்
கோலத்தை மாற்று!

எங்கள் காயத்தை ஆற்று!

வா முஹர்ரமே
வந்து நில்!
உன் பட்டாடை நீக்கிப் பார்!

# வீடற்ற சிறுவன்

அப்துல்லாஹ் முபர்ரிஜ்

நடமாடும் பிணமாய்
உயிருள்ள ஜடமாய்
அலைந்து திரிகிறான்
உணர்வுகளற்று

வெறித்த முகமும்
கலைந்த சிகையும்
களைத்த உடலும்
அவன் அகத்தின் மொழியை பேசின

இமைகள் விரித்து
புருவம் உயர்த்தி
உதடு சுழித்து
காற்றில் சில வார்த்தை உதிர்த்தான்

அவன் மொழியைப் பற்றிக்கொள்ளப்
பற்றற்ற காற்றோ
மறுபக்கமாய் வீசி
கலைத்து விட்டிருந்தது
அவன் வார்த்தைகளை

அவ்வப்போது வீசிய வெப்பக்காற்றோ
உப்புக்காற்றாய் ஆகிப்போனது
இவன் கண்ணீரை உலர்த்தி உலர்த்தி

ஆயிரமாயிரம் பேர் மத்தியிலும்
அநாதரவாய்
தனிமையின் கொடுமையை
மென்று துப்பிக்கொண்டிருக்கிறான்
வீடற்ற சிறுவன்

# புகை...



கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்

புகைத்துப் புகைத்துப் புகையால் வாழ்வை
பகைத்துக் கொள்ளாதீர் பல்லாண்டு வாழ
அவனிக்கு வந்தீர் மறவாதீர் அதனை
சவமாகி போகிடாதீர்

பணத்தால் பகட்டால் பரவசம் கொண்டு
குணத்தை மறந்தீர் குவலயம் தன்னில்
குண்டுப் புகையை குவித்துப் பரப்பியே
நண்டுபோலே இன்பமாய்இணையாய்

தொடர தொடருமே தொல்லை இதையுணரா
உடலினை தீய்க்கும் உயிரை விடவைக்கும்
விடத்தினை விட்டு விரும்பி வெளியேறி
கடல்போலே அன்பாலிணை

# என்ன விலை அழகே...!

ஷினாஸ் "காகிதம்" அநாமிகா



என் விரல்பட்டு
ஒளிப்பிழம்பு புலர்ந்திடக்
கண்டேன்...!
புதியதோர் உலகினில்
நான் புலம்பெயர்ந்து
நின்றேன்...!
என் விழிவிரித்து உருட்டிட
வியப்புக்குள் சென்றேன்...!

பலநூறு பசும்மரங்கள்
பல்வேறு மலரினங்கள்
என் எண்ணங்கள் தாண்டி
எங்கேயோ பாயும்
மலையருவியும் அதில்
விளையாடித் திளைத்திடும்
பல்வேறு குருவியும்...!
பருவங்கள் கடந்தும்
காய்த்துச் சொரியும்
தீங்கனியினங்களும்...!

சிறப்புற வரையத் தெரியா
சிறுபிள்ளைக் கோடாய்
அவ்விடம் ஊடுருவும்
சர்ப்பம் சார்ந்த சாயலில்
செம்மண் தோய்ந்த
ஒரு வீதியும்...!
அது பிரிக்கும் பாதியில்
குறிஞ்சியும்...
மீதியில் மருதமும்
வானுடன் கூடிக் குலவிட
அது பிளவுறும் இடமெல்லாம்
முல்லை முன்வந்து
பச்சைக் கொடியசைக்க
நீலப்பந்தியில் நிறைந்த
பட்சணமாய் பஞ்சுமேகங்கள்

பார்வைப் பசி தீர்க்க...!
வண்ணத்துப் பூச்சியெல்லாம்
வானுக்கும் மண்ணுக்குமாய்
வந்து போனதினில்
சிந்திய வர்ணமெல்லாம்
சிறு பூக்களாய் புல்லாய்ப்
புனலாய்ப் புவி புத்துயிர்க்க
புல்லரித்த என் புலன்களும்...!

இத்தெரு திரியும்
ஊர் எதுவெனத் தெரியாத
வியப்பில் என் விழிகளும்
மழைபொழிய ...
மண் வாசனை வரமறுக்கும்
யோசனையில்...!
மேலும் விரித்திட முடியா
பெருவருத்தத்தில்
என்னைப்போலவே
நகரமுடியா அடுக்குமாடி
அறைகளில் சிறைப்பட்ட
பலரும்...
கைபேசித் திரையின்
விசைப்பலகைக்குள்
சிக்கிய சில விரல்களும்
நாமிழந்த பசுமையின்
பல வண்ணம் சொல்லும்...!

# நீர்த்துளியில் ஓர் உருவம்



வரிகள் அர்ச்சனா

பல்லுருவ கடற்கரைகளால்
சூழ்ந்ததாதம் ஓர் நாடு
அங்கே பல்லாயிரம்
பனிமலைத்தொடர்களாம்
அழகான வயல்வெளிகள்
பார்த்திடலாம் இங்கே
அங்கு வயல்விதைத்து
அறுவடையை முடித்திடலாம்
போகம் தனில்
வானில் இருந்து ஒளிக்கதிர்கள்
வருமாம் எத்தனை அழகுடன்

அத்தனை அழகுடன்
நீர்வீழ்ச்சிகளில் இருந்து
நீரலைகள் வழிகின்றன
வருகின்ற நீர்த்துளிகள்
நிலத்தில் பட்டு தெறிக்கின்ற
அழகுதான் அழகு
தெறிக்கும் நீர்த்துளியில் ஓர்
அழகான உருவம் தென்பட்டதே
இத்தனை அழகுடன் சூழ்ந்ததே
அவ் அழகான நீர்த்துளியாம்
நம் நாடு இலங்கை

# அக்கினி பறவை

தேவா

சிறு கீரலே எனினும் அக்கணம்
என் மன அறையில்
பெரும் ரணமாய்
பாய்ந்தோடும் உதிரமும்

பேரிருளில்
பல நினைவுகளை
ஒளியாய் சிந்தும் என் கண்ணீரும்
ஏனோ வழிகிறது அருவியாய்
அர்த்தமில்லா ஓர் சிறு கீரலிற்கு

சூழ்நிலைகளை ஏற்கவும் மறுக்கவும் தள்ளாடும்
என் மனம், மதி இரண்டிற்கிடையிலும்
போராடும் போர்க்கலைஞனாய் எனை நோக்கி
தொடுக்கப்படும் தீக்கணைகளால் சாம்பலாகிறேன்
யுத்த களத்திலே

எனினும் சாம்பலிலிருந்து உயிர் பெற்று
பிறப்பெடுக்கும் அக்கினிப்பறவையினை
அக்கினியானது அழித்துவிட முடியாதல்லவா

# வீதி ஒழுங்கைப் பேணுவோம்!



உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்

"வேகம் விவேகம் அல்ல"
ஆங்காங்கே பதாகைகள்
அழகாகக் காட்சியளித்தும்
தீங்காக விபத்துகள்
தினந்தோறும் நடக்கின்றன

சாலைகளின் ஒழுங்குவிதியை
சாரதிகள் மீறுவதால்
சடுதியாக விபத்துகளும்
சங்கமித்து விடுகின்றன

"நில் கவனி புறப்படு"
விதம் விதமான அறிவுரைகள்
வீதிகள்தோறும் காணக்கிடைத்தும்
விந்தையான சாரதிகளால்
விபத்துகள் நபந்தேறுகின்றன

அவசரமும் அதிவேகமும்
ஆபத்தைத் தரும் என்றிருந்தும்
அலட்சியத்தைக் காட்டுவதால்
ஆபத்துகள் ஓங்குகின்றன

"தொடர்ந்து வா தொட்டு விடாதே"
இயன்றவரை இடர்களை
முயன்றே தடுப்பதற்கு
இனியதாய் வாசகங்கள்
தனிரகமாய் ஒளிர்கின்றன

ஓட்டுநரின் உதாசீனம்
ஓராயிரம் உயிர்களைக்
கேள்விக்குள்ளாக்கி
சாவுக்கும் காயத்துக்கும்
சான்றுகளைத் தந்து விடுகின்றன

பிரத்தியேகப் பிரார்த்தனையுடனே
பிரயாணங்களும் நடக்கின்றன
பயத்துடனே பாதசாரிகளும்
பாதையைக் கடந்து செல்கின்றனர்

நிதானமும் அவதானமும்
நிதர்சனமாய் இருந்திட்டாலே
விலாசமின்றியே விபத்துகள்
விரைந்தே ஓடிவிடும்

# தொழில்நுட்ப பசி...!

சீ. எம். சங்கர் பண்டாரவளை

இல்லற வாழ்வில் இணைதல் குறைவு
பிள்ளை பெற்றுக்கொள்வதில் சரிவு
என சில வளர்முக நாடுகளின்
செய்திகளை வாசிக்கையில் புரிகிறது
மனிதன் தொழில்நுட்ப பசியால்
தாசியாய் அதை
நேசிக்கின்றான் என்பது

அச்சுறுத்தலுக்குரிய விலங்கினங்கள்
அறுகி வருவதாய்
ஆய்வுகள் சொல்லுகையில்
அதுவாக மனிதன் ஆகி வருவதும்
இந்த இயந்திரங்களின்
மந்திரங்களினால் இவன்
இயங்கிக்கொண்டிருப்பதாலேயே

அன்று மனங்கள் பற்றி மகான்கள்
அதிகம் பேசினர்
அதில் மனம் செம்மையானது
அதனால் உலகம்
உண்மையானதாக இருந்தது

இன்று இயந்திரங்களுக்குள் இவர்கள்
மனங்களும் இறுகிப் போனதால்
பிறரின் வலிகளை உணராமல் தன்
வலிமையை உணரச்செய்ய
தொழில்நுட்ப துணைகொண்டு
ஆயுதங்களை ஆக்கி
தன் இனத்தையே ஆக்கிரமித்து
அழிக்கவும் துணிந்து விட்டான்

இனியும் உலகம் உய்வு பெற
மனித பண்புகளை மறுபடி நேசிப்போம்
தொழில்நுட்பத்துக்குள் தொலையாமல்
மனிதம் நிறைந்த மனிதர்களாவோம்

இல்லையேல் ...
பிரபஞ்சத்துக்குள் அழிந்து போனதாய்
அறியப்பட்ட பறவை இனமொன்று
அண்மையில் உலகின் ஒரு தீவில்
கண்டுபிடிக்கப்பட்டதுபோல்
மனித பண்புமிக்க மனிதனும்
கண்டுபிடிக்கப்படும் நிலை கூட
நாம் வாழும் இந்த
உலகுக்குள் உருவாகலாம்...!

# உலை வைப்பு



இரா.ஜெயக்குமார்

உலை வைக்க வழியற்ற
தாயற்ற பெண் பிள்ளை
தரங்கெட்ட தந்தையினால்
'படித்தவர்கள்' வீட்டுக்கு
பணி செய்ய வந்தாள்!

பழி கொண்ட நெஞ்சத்தார்
பிழிந்தெடுத்தார் நாளும்...
பேசிய சம்பளமும்
காற்றிலே பறக்க விட்டு
படியளந்தார் பாரும்!

உறவுகளுடன் பேசின்
உண்மைகள் கிளம்புமென
'குரு'வான எசமான்
அலை பேசி மறைத்தார்!
வீட்டுக்குள் வாட்டினார்!

எத்தனை கயமைகளால்
அச்சிறுமி வெந்தாளோ?
கழுத்திலே கயிறு மாட்டி
உயிருக்கே வைத்தாளே உலை!

கற்ற பின் நிற்க
அதற்குத் தக வென்ற
வள்ளுவன் ஆவி கூட
விழிநீர் சொரிந்திடுமே
சட்டமெனும் இருட்டறையில்
ஏற்றாத ஒளி கண்டு..!



# சூழல்

கலாபூஷணம்
கல்லொளுவை பாரிஸ்

தூரக் குயில் ஒன்று ஏங்கி
குளிர் காற்று இதயம் நிரப்பி
சில்லிட்ட ஜன்னல் கம்பியில்
கன்னம் சிலிர்த்து
மரங்கள் தலை துவட்டி
செடிப் பூக்கள் முகம் கழுவி
கடலில் கப்பல்கள் கவிழ்ந்து
மனப் புழுக்கம் அத்தனையும் அடித்
துச் சென்ற
நேற்றைய ரம்மிய மழை நாளில் வந்து
உன் காதலைச் சொல்லியிருந்தால்
சரி என்றிருப்பேன் நானும்!

# மனமே தலையணையாகு...

மூதூர் றிஸ்வின்

மொக்குக் கட்டையை
கொத்துவது போன்று
கழுத்தை கொத்தினாலும்
நோகக் கூடாது

தண்டவாள
காதுகளின் மேல்
ரயில் சென்றாலும்
தூக்கம்
நிலைக்கனும்

ஓ!...

குறட்டைகளும்
நிம்மதியாய் தூங்கனும்

# APIIT விருது வழங்கும் விழா



மிகவும் எதிர்பார்க்கப்பட்ட NCUK மற்றும் APIIT Sri Lanka விருது வழங்கும் விழா ஜூலை 12, 2023 அன்று Monarch Imperial இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் NCUK இன் மரியா மக்கண்ணா பிரதம அதிதியாக கலந்து கொண்டார், அவர் NCUK மற்றும் APIIT Sri Lanka வணிகம், சட்டம் மற்றும் கணிப்பியல் ஆகியவற்றில் வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவர்களின் சிறந்த சாதனைகளைக் கொண்டாடும் இந்நிகழ்வில் இணைந்து கொண்டார்.

மாணவர்களை இளங்கலைக் கல்வியை மாத்திரமன்றி வாழ்வாதாரத்துக்கும் ஏற்ற வகையில், APIIT Sri Lanka கணனி, வணிகம் மற்றும் சட்டம் ஆகிய மூன்று பிரிவுகளில் கல்வியை வழங்குகிறது. APIIT இல் வழங்கப்படும் UK, Staffordshire University இலிருந்து அந்தந்த பட்டப்படிப்புகளின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

APIIT வழங்கும் கல்வி பொதுத்தராதர சாதாரண தர தகைமைகளைக் கொண்ட மாணவர்கள் க.பொ.த உயர்தரப் படிப்பைத் தொடர விரும்பாத அல்லது போதிய க.பொ.த உயர்தர தகைமைகளைக் கொண்ட மாணவர்களுக்கு ஒரு பெறுமதியான வாய்ப்பாகும். ஒரு பொதுவான இலக்கை மனதில் கொண்டு, APIIT Sri Lanka இல் வழங்கப்படும் Staffordshire பல்கலைக்கழக பட்டப்படிப்புகளில் நுழைவதற்கு மாணவர்களைத் தயார்படுத்துகின்றன. உயர்கல்விக்கு மாற்று வழியை வழங்குவதன் மூலம், APIIT பலதரப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த துறையில் தங்கள் கல்வி அபிலாஷைகளைத் தொடர வழி வகுத்துள்ளது.

APIIT ஆனது, NCUK IFY ஐ வழங்கும் முதல் இலங்கை நிறுவனமாகும், இது இரண்டாம் நிலையிலிருந்து மூன்றாம் நிலைக் கல்விக்கு மாறுவதை எளிதாக்கும் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாகும்.

# பெண்கள் பணிபுரிவதற்கான சிறந்த பத்து இடங்களில் ஒன்றாக NSB

பெண்கள் நட்பு பணியிட விருதுகளின் (WFWP விருதுகள்) மூன்றாவது பதிப்பினை Satynmag.com மற்றும் CIMA ஸ்ரீலங்கா இணைந்து அண்மையில் Marriott Colombo ஹோட்டலில் இலங்கைக்கான UNDP வதிவிடப் பிரதிநிதியான Azusa Kubota பங்கேற்புடன் நடத்தின.

Satynmag.com CIMA WFWP விருதுகள் இலங்கையின் பணியிடங்களில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதிலும் நிறுவன, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களை வலுவூட்டுவதிலும் பெரும் ஆர்வத்தை உருவாக்கியுள்ளன. இந்த விருதுகள் பெண் நட்பு, செயல்படுத்தும், சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய பணியிட கலாசாரத்தின் தேவை பற்றிய மேம்பட்ட விழிப்புணர்வை ஊட்டியுள்ளன.

தேசிய சேமிப்பு வங்கி (NSB) உட்பட 10 சிறந்த நிறுவனங்களுக்கு பெண் நட்பு பணியிடங்கள் என விருது வழங்கப்பட்டது. இந்த விருதுகள் புகழ்பெற்ற நடுவர் குழுவால் மதிப்பிடப்பட்டது மற்றும் நியாயமான மற்றும் துல்லியமான முடிவை உறுதி செய்வதற்காக எர்ன்ஸ்ட் & யங் மூலம் தணிக்கை செய்யப்பட்டது.




NSB, இலங்கையின் முன்னணி வங்கிகளில் ஒன்றாக இருப்பதால், அனைத்து அம்சங்களிலும் பெண்களை வலுவூட்டுவதில் வங்கிக்கு கணிசமான பங்கு உண்டு என்று எப்போதும் நம்புகிறது. NSB வங்கியியலில் பெண்களை ஊக்குவித்து வலுவூட்டுகிறது, தேசத்திற்கு சிறந்த சேவையை வழங்குவதற்கான மகத்தான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அவர்கள் வீட்டில் அவர்கள் வகிக்கும் பாத்திரத்தில் வெற்றியடைகிறார்கள்.

# இரண்டு விருதுகளை வென்ற Janashakthi Life



இலங்கையில் ஆயுட் காப்புறுதி வழங்குனர்களில் முன்னோடியாய்த் திகழும் Janashakthi Life, Insurance Asia Awards விருதுகள் வழங்கும் நிகழ்வில் மதிப்புமிக்க இரண்டு விருதுகளை வென்று இத்தொழிற்துறையில் தமது சிறப்பினை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இந்நிகழ்வானது ஆசியாவில் முன்னணி வகிக்கும் காப்புறுதி நிறுவனங்களை ஒன்று கூடச் செய்வதுடன் அவர்களது அதிசிறந்த முன்னெடுப்புக்களை, புத்தாக்கம் மிக்க தயாரிப்புக்களை மற்றும் உறுதியான தீர்வுகளை கொண்டாடுகின்றது.

அவ்வாறு பெறப்பட்ட இரண்டு பெருமைமிகு விருதுகளாக ஆண்டுக்கான சிறந்த உள்நாட்டு ஆயுட் காப்புறுதியாளர் இலங்கை மற்றும் ஆண்டுக்கான சிறந்த டிஜிட்டல் காப்புறுதி முன்னெடுப்பு இலங்கை என்பவை காணப்படுகின்றன. இந்த பாராட்டுக்கள் சவால்கள் நிறைந்த மெக்ரோ பொருளாதார நிலைமைகளின் மத்தியிலும் வலுவான நிதிச்செயற்பாட்டின் விளைவாக முன்னோடியான காப்பீட்டுத் தீர்வுகளுக்கான நிறுவனத்தின் நிலையான உறுதிப்பாட்டினை இது பிரதிபலிக்கிறது.

Janashakthi Life ஆனது Insurance Asia Awards விருதுகள் வழங்கும் நிகழ்வில் ஆண்டுக்கான சிறந்த உள்நாட்டு ஆயுட் காப்புறுதியாளர்கள் இலங்கை என்ற விருதினை தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டிலும் சுவீகரித்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இலங்கையின் காப்புறுதிச் சேவை துறையில் மிகச்சிறந்த சேவைகளை வழங்குவதில் கம்பனியின் உறுதியான அர்ப்பணிப்பிற்கு இது சான்று பகர்கின்றது. மேலும் இந்த அங்கீகாரமானது நாட்டின் ஆயுட் காப்புறுதித் துறையில் முன்னோடியாக Janashakthi Life இன் நிலையை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

# மீளவும் கௌரவிக்கப்பட்டுள்ள லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிரைவட் லிமிட்டெட்




இலங்கையின் முதற்தர சுகாதாரசேவை வழங்குநரான லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிரைவட் லிமிட்டெட்டானது ஐக்கிய அமெரிக்காவின் ஜொயின்ட் கமிஷன் ஒப் இன்டர்நேஷனலிடமிருந்து பெருமைமிகு 'கோல்ட் சீல்' எனும் பூகோள அங்கீகாரத்தினை மீளவும் பெற்றுள்ளது. இப்பெரும் விருதானது ஜொயின்ட் கமிஷன் ஒப் இன்டர்நேஷனலினால் வடிவமைக்கப்பட்ட ஒவ்வொரு கடுமையான சிகிச்சை தர நிர்ணயங்களையும் வைத்தியசாலை முறையாக உறுதிப்படுத்துகின்றது என்பதனை பல்துறை சர்வதேச சுகாதாரசேவை நிபுணர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட கடும் மதிப்பீட்டின் இறுதியிலேயே வழங்கப்பட்டுள்ளது.

"லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிரைவட் லிமிட்டெட்டானது ஜொயின்ட் கமிஷன் ஒப் இன்டர்நேஷனல் எனும் நன்கறியப்பட்ட நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட அனைத்து தேவைப்பாடுகளையும் வெற்றிகரமாக பூர்த்திசெய்ததன் பின்னர் அந்நிறுவனத்தினால் மீளவும் கௌரவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறிவிப்பது பெருமகிழ்வையும் பெருமையையும் தருகின்றது. உச்சபட்ச சர்வதேச நியமங்களிற்கு இணங்க சிறப்பான தரங்களுடன் எமது பராமரிப்பினை வழங்குவதற்கான எம்முடைய அர்ப்பணிப்பிற்கு இது சான்றாகும்." என்றார் லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிரைவட் லிமிட்டெட்டின் குழும பிரதம நிறைவேற்றதிகாரி தீப்தி லொக்குவாராய்ச்சி.

ஐக்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஜொயின்ட் கமிஷன் ஒப் இன்டர்நேஷனல் என்பது சுகாதார சேவை விருதுவழங்கல்களின் உலகத் தலைமை என்பதுடன் லங்கா ஹொஸ்பிடல்ஸ் பிரைவட் லிமிட்டெட்டானது 2014 ஆம் ஆண்டில் ஜொயின்ட் கமிஷன் ஒப் இன்டர்நேஷனலின் விருதினை இந்நாட்டில் முதன் முதலாகப் பெற்றமையினால் இலங்கையில் சர்வதேச விருதுகளிற்கானவொரு வரலாற்றுத் தடத்தினையும் பதித்துள்ளது.

# இந்திய வர்த்தக சபையால் கௌரவிக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி

இந்திய வர்த்தக சபை அண்மையில் ஆறு கீர்த்திமிக்க விருதுகளை வழங்கி கொமர்ஷல் வங்கியை கௌரவித்துள்ளது. இவற்றுள் இரண்டு இலங்கைக்கானதும் ஏனைய நான்கும் வங்கியின் பங்களாதேஷ் செயற்பாடுகளுக்கு உரியதுமாகும். இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கி வலையமைப்பான கொமர்ஷல் வங்கியை இவ்வாண்டு விருதுகள் பல வழங்கி ஏற்கனவே கௌரவித்துள்ள சர்வதேச அமைப்புக்களுடன் இப்போது இந்திய வர்த்தக சபையும் இணைந்துள்ளது.

இந்திய வர்த்தக சபை இலங்கையின் மிகச் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியை அங்கீகரித்துள்ளது. மற்றும் இலங்கையிலுள்ள வங்கிகள் மத்தியில் 'இடர் முகாமைத்துவ சிறந்த செயற்பாடு' க்குரிய சிறந்த வங்கியாகவும் கொமர்ஷல் வங்கியை அங்கீகரித்துள்ளது. அத்தோடு பங்களாதேஷின் கொமர்ஷல் வங்கிக்கு 'சொத்து தரத்தில் சிறந்த செயற்பாடு' 'வளர்ச்சியில் சிறந்த செயற்பாடு' 'இடர் முகாமைத்துவத்தில் சிறந்த செயற்பாடு' மற்றும் 'இலாபமீட்டலில் சிறந்த செயற்பாடு' என்பனவற்றுக்கான விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இம்மாதம் இந்தியாவின் கோவாவில் இடம் பெற்ற வளர்ந்துவரும் ஆசிய வங்கிகளின் மாநாடு மற்றும் விருது வழங்கல் விழாவில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

# அதிகம் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமமாக பஜாஜ் தொடர்ந்தும் தெரிவு

இலங்கையில் அதிகம் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தக நாமமாக ஐந்தாவது ஆண்டும் பஜாஜ் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. பிரான்ட் பைனாஸ் லங்கா நிறுவனம் 2011ஆம் ஆண்டு முதல் தனது மதிப்பாய்வில் பஜாஜ் வர்த்தகநாமத்தை அங்கீகரித்திருப்பதுடன், 'அதிகம் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள்' என்ற பிரிவு 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு வருடமும் இதற்கான அங்கீகாரம் உறுதிப்படுத்தப்படுகிறது.

மிகப்பெரிய வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனம் நான்கு தசாப்தங்களுக்கு மேலாகவும் பஜாஜ் உற்பத்திகளுக்கான இலங்கையின் ஏக முகவராக விளங்கி வருகிறது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாகப் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்திலும் சிறப்புத்தன்மை, விற்பனைக்குப் பின்னரான சேவைக்கான அணுகல் போன்ற பிரதான விடயங்களால் மிகவும் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தக நாமம் என்ற பட்டத்தை தக்கவைக்க முடிந்துள்ளது.




இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக ஏறத்தாழ மூன்று வருடங்களின் பின்னர் 2022ஆம் ஆண்டு வாகன உற்பத்தி/ஒருங்குசேர்த்தல் தொழில் துறை மற்றும் வாகன உதிரிப்பாக உற்பத்தித் தொழில்துறைக்கு கைத்தொழில் அமைச்சினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான செயற்பாட்டு நடைமுறையின் கீழ் உள்நாட்டில் பெறுமதி சேர்த்தல் திட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட புத்தம் புதிய பஜாஜ் CT 100 மோட்டார் சைக்கிள்களை டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறுவனம் அறிமுகப்படுத்தியிருந்தது.

# போலி வர்த்தகத்திற்கு எதிராக இலங்கை நுகர்வோரை எச்சரிக்கும் Hive Energy

ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட உலகளாவிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உருவாக்குநரான Hive Energy, இலங்கையில் மக்களை ஏமாற்றும் முயற்சியில் Hive Energy இன் வர்த்தகநாமம் மற்றும் இலச்சினையை முறைகேடு செய்தல் மற்றும் தவறாகப் பயன்படுத்துதல் குறித்து எச்சரிக்கையை விடுத்துள்ளது.

Hive Energy க்கு இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகள் கிடையாது, மேலும் அறிமுகமற்ற மற்றும் இனங்காணப்படாத நபர்களால் Hive Energy என்று பொய்யாகக் கூறி உருவாக்கப்பட்ட போலி இணையத்தள பக்கங்கள் மற்றும் சமூக ஊடக கணக்குகள் குறித்தும் அறியக்கிடைத்துள்ளது.

இணையத்தின் மூலமாக இரகசியமாக செயல்படும் இந்த நபர்கள், Hive Energy இன் இலச்சினை மற்றும் வர்த்தகமுத்திரையை தவறாகப் பயன்படுத்துவதன் மூலமும், பொது வெளியில் கிடைக்கும் Hive Energy இன் நிறுவன தகவல் விபரங்களைப் பயன்படுத்துவதன் மூலமும், சந்தேகத்திற்குரிய முதலீட்டுத் திட்டமொன்றை ஊக்குவிப்பதாகத் தெரிகிறது. இந்த சட்டவிரோத நடவடிக்கையானது, Hive Energy இன் இலச்சினை மற்றும் அதனுடன் தொடர்புடைய படங்களை தவறாகப் பயன்படுத்தும் செயலியொன்றை (App) உருவாக்கி, இலங்கை மக்கள் தமது பணத்தை முதலீடு செய்வதற்கும் அவர்களின் நிதியியல் தகவல் விபரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் அவர்களை தவறாக வழிநடத்துகிறது. மேலும், Hive Energy இலங்கையில் வர்த்தகத்தை மேற்கொள்வதாக, போலியான நிறுவனப் பதிவு ஆவணங்களின் படங்களும் பரப்பப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மை அதுவல்ல.

# லக்தரு சேமிப்பு கணக்கினை மீள அறிமுகப்படுத்தும் SDB வங்கி



இலங்கையின் முன்னணி உரிமம்பெற்ற விசேட வங்கியான, SDB வங்கியானது, இலங்கை சிறுவர்களிடையே சேமிப்பு எனும் ஆரோக்கியமான பழக்கத்தினை வினைத்திறனாக பதியமிடச்செய்வதனை நோக்காகக் கொண்டு, புதிய மற்றும் விஸ்தரிக்கப்பட்ட அம்சங்களின் தொகுப்புடன் தன்னுடைய மிகப்பிரபலமான லக்தரு சேமிப்பு கணக்கினை மீளஅறிமுகப்படுத்துவதில் புளகாங்கிதமடைகின்றது. SDB வங்கியானது 2012ஆம் ஆண்டில் தன்னுடைய முதலாவது அறிமுகம் தொட்டே லக்தரு சேமிப்பு கணக்கின் மூலம் குறிப்பிடத்தக்க வெற்றியினை அடைந்துள்ளதுடன், அதனது வெற்றிக் கட்டுமானங்களினால், வங்கியானது சந்தையில் சிறந்த சிறுவர் சேமிப்பு கணக்குகளில் ஒன்றாக லக்தருவினை நிர்மாணிக்க அதனை வளப்படுத்தும் மேலதிக படிகளையும் மேற்கொண்டுள்ளது.

"உங்களது குழந்தைகளது எதிர்காலத்துக்கான ஒரு திறன்மிக்க தேர்வாக" வினைத்திறனான சேமிப்பு தீர்வுகளை தேடும் பெற்றோருக்கு ஒரு முழுநிறைவான வாய்ப்பாகும் முகமாக சந்தையில் அதிக வட்டிவீதத்தை SDB வங்கியின் லக்தரு வழங்குகின்றது. மேலும், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக செயலாற்றுபவர்களிற்கான பிரத்தியேகமான புலமைப்பரிசில்கள் மற்றும் பெருந்தொகையான பரிசில்கள் மற்றும் விருதுகள், காப்புறுதி திட்டங்கள் என்பவற்றையும் SDB லக்தரு வழங்குகின்றது.

SDB லக்தருவினை தெரிவுசெய்வதன் மூலமாக பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளிற்கான ஒளிமயமான நிதியியல் எதிர்காலத்தினை பாதுகாப்பது மாத்திரமின்றி அவர்களுக்காக உலகின் நன்மைகளையும் திறந்துவிடுகின்றனர். சிறுவர்களது சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவிக்கும் அதேகணம் அச்செயன்முறையை சிறுவர்களிற்கென சுவாரஸ்யமிக்கதாக்கி, சேமிப்பு பயணத்தின் மைல்கற்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

# Brandix குழுமத்திடமிருந்து உயிர்காக்கும் அன்பளிப்பு

தொடர்ச்சியாக 11ஆவது வருடமாகவும் இலங்கையின் மாபெரும் கூட்டாண்மை குருதி நன்கொடை வழங்குநராக Brandix கௌரவிக்கப்பட்டிருந்தது. தேசிய குருதி மாற்றீட்டு சேவைகளினூடாக (NBTS) இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு நாடு முழுவதையும் சேர்ந்த Brandix ஊழியர்கள் 5,700 பைன்ட்களுக்கு அதிகமான குருதியை நன்கொடையாக வழங்கி, உயிர் காக்கும் அன்பளிப்பைச் செய்திருந்தனர். அதனூடாக 2011ஆம் ஆண்டு முதல் மொத்தமாக 42,041 பைன்ட் குருதி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள ஒவ்வொரு 100 குருதி நன்கொடையாளர்களிலும் ஒரு அங்கத்தவர் Brandix குடும்பத்தைச் சேர்ந்தவராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலுள்ள NBTS இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில், மாபெரும் கூட்டாண்மை குருதி நன்கொடை வழங்குநராகவும், மாபெரும் நடமாடும் குருதி வழங்கும் திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தமைக்காகவும் Brandix கௌரவிக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பிலுள்ள Brandix தொழிற்சாலை சிறந்த நடமாடும் நன்கொடை திட்டத்தின் ஏற்பாட்டாளர் மற்றும் கிழக்கு மாகாணத்தின் உயர் பங்களிப்பு வழங்குநராக கௌரவிக்கப்பட்டிருந்தது. அவிசாவளையைச் சேர்ந்த தொழிற்சாலை, பிராந்தியத்தின் சிறந்த நடமாடும் நன்கொடை முகாம் ஏற்பாட்டாளருக்கான விருதையும் பெற்றுக் கொண்டது.

NBTS இன் பணிப்பாளர் கலாநிதி. லக்ஷ்மன் எதிரிசிங்க கருத்துத் தெரிவிக்கையில், "Brandix மற்றும் அதன் ஊழியர்களிடமிருந்தான பங்களிப்புகளினூடாக இலங்கையின் பல ஆயிரக் கணக்கான உயிர்களுக்கு வளமூட்டப்பட்டுள்ளது. இதில் சுகாதாரத் துறையைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

# கிழிந்த காசு

வழமையாக காலைச்சாப்பாடு சாப்பிடும் போது எனது கடைக்குட்டி செல்ல மகன் அஸாதி என்கூட வந்தமர்ந்திடுவான். இரண்டு வயதாக அவனுக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. அஸாதி சின்னச் சின்ன வார்த்தைகளை பேசுவான். வாயிலிருந்து முழுமை பெறாத அவனது வார்த்தைகள் எங்களுக்குப் பழகிப் போனதால் அவன் சொல்ல வரும் செய்தியை நாங்கள் புரிந்து கொள்வோம்.

இன்று கூட, சாப்பிடும் போது எனக்கு விக்கல் ஏற்பட்டது. உடனே சமையல் அறைக்கு ஓடினான். உம்மாவைத் கண்டதும், உம்மா! உம்மா! வாப்பா தனி! தண்ணி என்பதை தனி: என்று சுருக்கிக் கொண்டான். அஸாதியின் சைகை கலந்த பேச்சு, சொல்ல வருகின்ற விடயத்தை சொல்லுகின்ற போது அவன் படுகின்ற அவஸ்தைகள் ஏராளம்.

மனைவி வேலைக்குப் போனால் என்கூடவே இருந்திடுவான். வேலைவிட்டு வரும்வரை அஸாதிக்குப் பிடித்த வாழைப்பழம் மற்றும் மிட்டாய்கள் கொடுத்து சமாளிப்பேன். இன்னும் அவனுக்குப் பிடித்த டவுசரும் டீ சேட்டும் போட்டாகணும். இப்படி விரும்பியது எல்லாம் செய்து நித்திரையாக்கும் வரை விடுமுறை தவிர்ந்த எல்லா நாட்களுமே எனக்கு பெரும் சவாலாக இருக்கும்.

எனது மூத்த மகன் பத்திலும் இரண்டாவது மகன் தரம் ஏழிலும் மூன்றாவது மகள் தரம் ஆறிலும் கல்வியைத் தொடர்கின்றனர். பாடசாலைகள் கொரோனா தொற்றால் கொஞ்சகாலம் மூடிக்கிடந்தது. மீண்டும் பாடசாலை தொடங்கிட பிள்ளைகளுக்கு இப்போது வீட்டில் இருக்கவும் நேரமில்லை. பாடசாலை விட்டு வீடு வந்தால் டீயுசன் என்று கிளம்பி விடுவார்கள். இக்காலத்தில் படிப்புத்தான் சோறு போடும்! அவர்கள் நல்ல படியாக படித்து சமூகத்தில் நல்ல நிலைக்கு வரணும் இறைவா! நீதான் எனக்கு வழியைக் காட்டு: என்ட உயிரையும் கொஞ்சம் நீட்டிக்கொடு: உள்ளம் இறைவன்பால் கொஞ்சம் நீந்திக்கொண்டது.

இரண்டாவது தடுப்பூசி போடுமாறு பள்ளியிலே அறிவிக்கிறாங்க. காலை 09:00 மணி தொடக்கம் மாலை 04:30 மணிவரையாம். முதல் ஊசி போட்ட அதே பாடசாலைதான். மூன்றாவது ஊசிக்கு கை கொஞ்சம் வலிதாங்க முடியாமல் இருந்தது. பிறகு சரியாயிட்டு, ஆரம்பத்தில் பாரமான பொருளை தூக்க முடியல, அதனால் என் கடையில் உள்ள பொருட்கள் எல்லாம் வெச்ச வெச்ச இடத்திலே தான் கிடக்கிறது. ஒழுங்குபடுத்தி ராக்கையிலே அடுக்கிவைக்கணும் ஆறுதலாகச் செய்வோம் என்று மனசு சொன்னது.



இரண்டு நாளாக கடைச் சாப்பாடுதான். அது, அரை அவியல் சோறு சமிபாடு ஆகல. வருமானம் தேடும் வழி இல்லாததால் வாழ்வு கஷ்டத்திலும் நஷ்டத்திலும் செல்லுது. மக்களுக்கு இப்ப கொஞ்சம் வாழ்வாதார உதவிகள் கிடைப்பதாலே வாழ்வு தேறி வருகிறது.

கஷ்டப்பட்டு கடைக்காரனுடன் சண்டையிட்டு ஒரு சிலிண்டர் எரிவாயு கிடைச்சது. பகல் சாப்பாட்டு நேரம். மனைவி சிலிண்டருக்குப் பக்கத்தில் போகவும் பயம் கொள்றா, கேஸ் பறக்குதாமே, என்னையும் தூக்கிக் கொண்டு பறந்தால் என்கெதி என்னாவது? நினைச்சுப் பார்க்கவே முடியல. அழாத குறையாக மனைவி சொல்லிக் கொண்டிருந்தாள். நான் சமைச்சுத் தாரேன் கொள்ளிக்கட்டு எங்குசரி பார்த்து வாங்கிட்டு வாங்க. கேஸ் சிலிண்டர் பிரச்சினையாலே விறகுக் கொள்ளிக்கும் தட்டுப்பாடு நிலவியது. காட்டுத்தொழிலுக்கும் இப்ப அனுமதியில்லையாம். இனி மக்கள் என்ன தொழில் செய்வது? வளவுக்குள் காய்ந்து கிடந்த சின்ன சின்ன மரக்குற்றிகளை பொறுக்கியதில் ஒரு அடுப்பு எரிக்க போதுமாக இருந்தது. மனைவியிடம் கொண்டுபோய்க் கொடுத்தேன்.

ஊதி ஊதி பத்த வைத்து ஒரு மாதிரி சமையலை மனைவி செய்து முடிச்சிட்டா. நீண்ட நாளைக்குப் பின் கொள்ளி அடுப்புச்சோறு, தாமதமானாலும் நாவுக்கு சுவையாக இருந்தது. இப்படி சமைச்சுச் சாப்பிட்டால் மனிசனுக்கு எந்தநோயும் வராதுபோல. கிராம மக்களது ஆயுட்காலம் நகர மக்களைவிட நீடித்திருப்பதற்கு அவர்கள் சாப்பிடுகின்ற மருந்து கலக்காத உடன் காய்கறிகளே காரணமாக இருக்கலாம். நானும் கிராமத்தான் தான் நகர வாழ்க்கை பழகிவிட்டது. காலங்கள் மாற அதற்கு பின்னால் பயணிக்க வேண்டிய சூழ்நிலைகள் வந்து சேருகின்றன.

பாடசாலை விடுகின்ற நேரமாச்சு. பிள்ளைகளும் பசியோடு வருவாங்க. வீதியை எட்டிப்பார்த்தேன்.

மூத்தமகன் சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தான். என்னப்பா நடந்திச்சி? வாப்பா! எத்தனை நாள் உங்களிடம் சொல்றன் டயர் தேய்ச்சிட்டு மாத்தித் தாங்க என்று, நீங்க கேட்டிங்களா? இப்ப பாருங்க ஸ்கூல்ல இருந்து உருட்டிக்கொண்டு வருகிறேன். சரிப்பா நாளைக்குச் செய்வோம். விடுமுறை நாள் தானே, முணுமுணுத்துக் கொண்டு தன் பாதணிகளை கழற்றினான்.

இரண்டாவது மகனும் வந்தான். இஞ்ச பாருங்க வாப்பா என் இடுப்ப, டவுஸர் வெட்டுது, இனி எனக்கு இதைப்போட முடியாது. உனக்கும் பிரச்சினையா? மனசுக்குள் கேட்டுக் கொண்டு சரி, புதுசா வெள்ளத்துணியெடுத்து தைக்க கொடுப்போம். பிள்ளைகள் வளர, வளர அவர்களது வளர்ச்சிக்கு ஏற்றபடி தேவைகளும் கூடிச் செல்கிறது. என்ன செய்வது அவர்களுக்காகத்தானே இந்த வாழ்க்கை. முடியும் வரை அவர்களது சின்னச்சின்ன தேவைகளை செய்து கொடுப்பது தகப்பனின் கடமையல்லவா?

தனியார் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்தபோது கொஞ்சமும் கஷ்டம் தெரியவில்லை. மாதம் நல்ல சம்பளம் கையில் கிடைச்சது. அதைக் கொண்டு காலம் கடந்தது. இருந்த வேலையும் இப்போது இல்ல வேலையிலிருந்து நின்றபோது; கொஞ்சக்காசு தந்தார்கள். அதைவைத்து சின்னதாய் ஒரு சில்லறைக் கடை போட்டுள்ளேன். ஏறிப்போகும் விலைக்கு லாபம் பெரிதாக இல்ல. கிழமைக்கு ஒரு விலை என்பதால் வாங்கும் போது ஒவ்வொரு தடவையும் மேலதிகமாக காசு கொடுத்து வாங்கும் நிலையில் இன்றைய காலம் கிடக்கிறது.

ஊர்ல ஒருவருக்கும் ஒழுங்கான தொழில் இல்லை. வருமானத்துக்கு ஏற்றமாதிரி அவர்களும் வாழ்வையும் வயிற்றையும் சுருக்கிக் கொண்டார்கள். வறுமை சிலரது வாழ்வில் வாடிக்கையாகிவிட்டது, போல காலத்துக்குக் காலம் வந்து போகிறது, அவர்களை நொந்து போகிறது.


நான் கடை திறந்த காலப் பகுதியில் கோரோனா தொற்று தீவிரமாக எங்கும் பரவிய நேரம். கடைகளை மூட வேண்டியிருந்தது. அதனால் வியாபாரமும் தடைப்பட்டுப் போயிற்று. வீதிகளைத் தாண்டி யாரும் கடைக்கு வரமுடியாது. அத்தியாவசியமாகத் தேவையான பயணங்கள், வைத்தியசாலை அனுமதி, மருந்துக் கடைகளுக்கான, போக்குவரத்துக்கான சீட்டுகளுடன் போனால் மாத்திரமே பாதையில் நின்ற படையினர் அனுமதி வழங்கினர். இவ்வாறு இறுக்கமான ஒரு நிலையை கொரோனா ஏற்படுத்தியது.

பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து சில பொருட்களை வாங்கி செல்வார்கள். முகக்கவசம் இல்லாமல் அவர்களையும் உள்ளே எடுக்க முடியாமல் வெளியில் நிறுத்தி இடைவெளி பேணி, பொருட்களை வழங்கினேன். அன்று பக்கத்து வீட்டிலிருந்து ஒரு சின்ன பொடியன் மிட்டாய் இருபது ரூபாவுக்கு வாங்கிச் சென்றான். நானும் காசைப் பார்க்காமல் வாங்கி வெச்சிட்டேன். அவனுக்குப் பின்னால் இன்னொருத்தர் கடைக்கு சாமன்கள் வாங்க வந்தார். வாங்கிய பின் தந்த மிகுதிப் பணத்தை அவரிடம் கொடுத்தேன். அவர் என்னைப் பார்த்து; என்னப்பா? பார்த்து தருவதில்லையா? இருபது ரூபா கிழிஞ்சுள்ளதே! மன்னிசிடுங்க. தாங்க, அந்த காசை வேறு காசு தருகிறேன். அவர் வாங்கிக் கொண்டு சென்றார்.

எழுதப்பட்ட, கிழிந்த தாள்கள் இன்னும் புழக்கத்தில் உள்ளது. எது எப்படியோ? இனி காசு வாங்கும்போதும் கொடுக்கும் போதும் கவனமாக நல்ல பணமா? கிழிந்த பணமா? பார்த்து வாங்கணும் என்று மனசுக்குள் முடிவெடுத்தபோது ஒருவர் வந்து கிழிந்த காசை முன்னால் நீட்டினார்.

கவிச்சுடர் ஏ.எம்.கஸ்புள்ளா

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 80




திரு/திருமதி.செல்வி ..............................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

..............................

..............................

.............................. ..............................

திகதி கைியொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 80
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 80

### இடமிருந்து வலம்

1. சந்நியாசி
8. உள்ளம்
6. பாதுகாப்பு
8. கிரகம்
9. இராமாயணக் கதையில் வரும் பாத்திரங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)
10. கீழிருந்து ஒன்றின்மேல் ஒன்றாக அமைந்திருக்கும் கட்டட அமைப்பு (குழம்பியுள்ளது)
11. காடு (திரும்பியுள்ளது)
13. பொதுநலச் செலவை ஈடு செய்ய அரசு வசூலிக்கும் கட்டணம் (திரும்பியுள்ளது)
15. செல்வம் (திரும்பியுள்ளது)
17. காணி தொடர்பான ஆவணப் பதிவு
19. பூமி
21. வெப்பமான நிலை (குழம்பியுள்ளது)
22. நீர்வழிப் போக்குவரத்து வாகனம் (குழம்பியுள்ளது)
24. வீடு (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. மனதை வருத்தும் நிலை
2. அவலட்சணம்
3. இதிலிருந்தே அரிசி பெறப்படுகின்றது.
4. உடன் பிறந்தவள்
5. சிறுதோணி உடைந்து விட்டது
7. முகம்
12. அழகு (குழம்பியுள்ளது)
14. கணை (தலைகீழ்)
16. ஒரு வாத்தியக் கருவி
17. வெற்றிபெற முடியாத நிலை
18. நீர்
20. புத்திரன் (தலைகீழ்)
23. பூலோக கற்பகதரு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 79

### விடைகள்

#### இடமிருந்துவலம்

1. நிரபராதி
4. மாசி
6. ஜாடி
7. வரிசை
9. வேதனம்
11. மாம்பழம்
14. பூச்சியம்
17. திடம்
19. ராகம்
20. பல்
21. சிசு
23. சேவை
24. ஆதி
25. கரி

#### மேலிருந்து கீழ்

1. நிராசை
2. படிவம்
3. ராஜா
5. சிரம்
8. மாரி
9. வேழம்
10. தம்பூரா
12. பசி
13. அதிபதி
15. கச்சேரி
16. வையகம்
18. ஆடல்
22. சுவை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 79

### பரிசு பெறுவோர் விபரம்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு ரூ. 500.00<br>**சித்தி அயிஷா**<br>இல. 38/1 வெலகெதர வீதி,<br>பதுளை | இரண்டாம் பரிசு ரூ. 350.00<br>**எம். கோகிலாதேவி**<br>ஹல்கொல்ல<br>பரகாதுவ | மூன்றாம் பரிசு ரூ. 150.00<br>**ஏ.கே. அப்துல் வாஹித்**<br>இல. 35, கொலட் லேன்,<br>கோட்டைமுனை<br>மட்டக்களப்பு |

### பாராட்டு பெறுவோர்

**1. எம். டபிள்யூ. ஷனாஸ்,**
துல்ஹிரிய

**2. கே. தர்மரட்ணம்**
கரடியனாறு

**3. எஸ்.எம். மௌசூன்**
உக்குவளை

**4. சின்னையா செல்வராஜ்**
கொழும்பு 11

**5. என் கே. வேணி**
பலாங்கொடை

**6. எம்,ஏ.எம். சித்தீக்**
வெலிகம

**7. எம். ஏ . அத்தாஸ்**
மாத்தறை

**8. எம்.பி.எம். ஆசுஹடி**
காலி

**9. எஸ். தவநாயகி**
மட்டக்களப்பு

**10. ஹப்ஸா முஜீப்**
பண்டாரகம

## குறைபாடுகள் களையப்பட்டு... (04ஆம் பக்கத் தொடர்)

### பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம்

முன்பிருந்த எந்தவொரு ஜனாதிபதியும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தாமல் இருந்தமைக்கான காரணம் இருக்கலாம். அதனை பற்றிப் முதலில் ஆராய வேண்டும். ஒரு விடயத்தை விரைந்து செய்வதை விட சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் ஆலோசித்து செய்வது சிறந்ததாகும் என்ற வகையில், இது தொடர்பிலான விரிவான அறிக்கையை பெற்றுக்கொள்ளுங்கள் என்ற யோசனையை முன்வைக்கிறேன்.

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

ஒரு நாட்டின் நல்லிணக்கத்தை வலுப்படுத்த அந்த நாட்டில் வாழும் அனைத்து குடிமக்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். இல்லையெனில் முதலில் தேசிய பாதுகாப்புக்குத் தான் அச்சுறுத்தல் ஏற்படும்.

இன்று இந்த நிகழ்வுக்கு என்னை அழைத்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நல்லெண்ணத்துடன் தொடர்வது மிகவும் முக்கியமானது. மேலும் இது அரசியல் தந்திரமாக இருக்கக் கூடாது. அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதி இந்தப் பதவிக்கு தெரிவாகியிருக்கிறார். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் அவர் ஜனாதிபதியானார். எனவே அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு அரசாங்கத்தில் முரண்பட்ட கருத்துகள் இருக்க முடியாது. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தில் நாம் ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். மேலும் இந்த வேலைத்திட்டம் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

### பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும

இங்குள்ள பெரும்பான்மையான எதிர்க்கட்சிகள் உங்கள் அழைப்பை ஏற்று சில சந்தேகங்களுடன் இங்கு வந்துள்ளன. இந்தத் திட்டம் நல்லெண்ணத்துடன் செய்யப்படுகிறதா என்ற சந்தேகம் எங்களுக்கு உள்ளது. அதிகாரப் பகிர்வுக்கான அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் எமது ஆதரவைப் பெறுமா என்பதில் எமக்கு நியாயமான சந்தேகம் உள்ளது. எங்களிடம் இருக்கும் இந்த சந்தேகத்தை நீக்கும் திறன் உங்களுக்கு மட்டுமே உள்ளது.

### பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க

இங்கு முன்வைக்கப்பட்டுள்ள யோசனை சிறந்தது. அதற்கு எவரும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. எவ்வாறாயினும் இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையா அல்லது தற்போதைய அரசாங்கத்தின் யோசனையா என்பதை தெளிவுபடுத்த வேண்டும், பொதுஜன பெரமுனவின் செயலாளர் ஆற்றிய உரை எங்களுக்கு மேலும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. அதனால் இதனை அரசாங்கத்தின் யோசனையாக சமர்ப்பியுங்கள், அரசாங்கத்தின் வேலைத் திட்டமாக்குங்கள். அந்த வரைபை எங்களுக்கும் அறிவியுங்கள், அது தொடர்பிலான விரிவான கலந்துரையாடலுக்கு நாம் தயாராகவே இருக்கிறோம்.

குறிப்பாக பிரதமர் மற்றும் சபாநாயகரை இரு புறமும் அமர்த்திக்கொண்டு அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஆராய்வது மகிழ்ச்சிக்குரியது. காரணம் நான் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு ஆதரவளிக்கும் கட்சியின் உறுப்பினராவேன். அதற்காக உயிர்த்தியாகம் செய்த கட்சியொன்றின் உறுப்பினராவேன். அந்த வகையில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் நாம் கொண்டுள்ள நிலைப்பாட்டில் கடுகளவும் மாற்றமில்லை. இது தொடர்பில் காணப்படும் தவறான கோணம் மாற வேண்டும். அதேபோல் நீங்கள் குறிப்பிட்டுள்ள விடயங்களில் வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் கூறப்பட்டுள்ளமை மிக முக்கியமானதாகும். அந்த மக்கள் பொலிஸ் அதிகாரத்தையோ, காணி அதிகாரத்தையோ கேட்கவில்லை. அவர்கள் வயல்களுக்கு தண்ணீரையும், வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளையும் பிள்ளைகளுக்கு கல்வி வசதிகளையுமே கேட்கிறார்கள்.

### பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச

அரசியலமைப்பின் 13வது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது, முன்னாள் பிரதம நீதியரசர் ராஜா வனசுந்தர, "13ஆவது திருத்தமானது நாட்டின் தலையில் தொங்கும் ஆபத்தான வாளைப் போன்றது என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கு எதிராக அரசியலமைப்பின் மிகவும் மெலிந்த கயிற்றால் அது பிணைக்கப்பட்டுள்ளது. இந்த கயிறு வெட்டப்பட்டால் தான் உண்மையான வடிவம் தெரிய ஆரம்பிக்கும். இது மிகவும் தீவிரமான விடயம்.

### பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்

ஜனாதிபதி கூறியது போல், அதிகாரப் பகிர்வின் நோக்கம் மாகாண சபை மட்டத்திலான பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை வழங்குவதாகும். எவ்வாறாயினும், தற்போது நாட்டின் ஒன்பது மாகாண சபைகளில் எவற்றிலும் பிரதிநிதிகளை தெரிவு செய்யப்படவில்லை. எனவே, அதிகாரப் பகிர்வு குறித்த விவாதங்கள் அர்த்தமற்றவை என்றே கூற வேண்டும். எனவே, மாகாண சபைகளில் உரிய மக்கள் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதே இங்கு முக்கிய விடயமாக இருக்க வேண்டும்.

### பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

கடந்த கலந்துரையாடலில் பிரதமர் தலைமையில் தெரிவுக்குழு அமைப்பது தொடர்பான உண்மைகளை நான் சுட்டிக்காட்டியிருந்தேன். இதன்படி, மாகாண சபைத் தேர்தலை முன்னைய விகிதாசார வாக்கு முறையின் கீழ் நடத்த பரிந்துரைக்கப்பட்டது. மேலும் முறையான எல்லை நிர்ணயம் கொண்ட கலப்பு முறைமையை நாடுவதற்கு பொருத்தமான சட்டத்தை உருவாக்குமாறும் குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்காக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த விரும்புகின்றேன். ஆனால், அதே கட்சியின் பொதுச்செயலாளர் அதிகாரப் பகிர்வு குறித்து மாறுபட்ட நிலைப்பாட்டை அறிவித்தது குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்றே கூற வேண்டும்.

### பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தில் உள்ள பெரும்பாலான அதிகாரங்களை நாம் இப்போது இழந்துள்ளோம். இதனால் தான் மாகாண சபையில் இருந்து நீக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீள வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தோம்.

13ஆவது திருத்தச் சட்டத்தை தேர்தலுக்கு முன்னர் உள்ளதை விட பலமாக்குவதே எமது இலக்காகும். எனவே, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை வலுப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவது மாகாண சபைகளை பலப்படுத்தும்.

வணக்கத்திற்குரிய அத்துரலியே இரத்தின தேரர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான கெவிது குமாரதுங்க, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, சரத் வீரசேகர, அனுர பிரியதர்ஷன யாப்பா, லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்டோர் இங்கு பேசினர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் பல்வேறு கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர்.

---

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

SMIB

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

**உதவி முகாமையாளர் - தரவுத்தள நிர்வாகம்**

**Assistant Manager-Database Administration**

**முக்கிய பொறுப்புகள்**

அனைத்து தரவுத்தள சேமிப்பகங்களையும் அதன் சேவைகளையும் நிர்வகிப்பதற்கான பொறுப்பு, வழக்கமான காப்புப்பிரதிகளை (Backup) எடுப்பது, சமீபத்திய இணைப்புகளைப் பயன்படுத்துதல், செயல்திறன் கண்காணிப்பு மற்றும் சரிசெய்தல். அனைத்து முக்கியமான தரவுத்தளங்களும் எந்த இடையூறும் இல்லாமல் இயங்குவதை உறுதி செய்து, சுமை சமநிலை, HA (அதிக கிடைக்கும் தன்மை) மற்றும் DR (இடர் மீட்பு) நுட்பங்களுடன் அதிக கிடைக்கும் தன்மையை வழங்க வேண்டும். அனைத்து தரவுத்தள சேமிப்பகங்களுக்கும் ஒழுங்குமுறை, இணக்கம் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் என்பன முழுமையாக நிரப்பப்பட வேண்டும்.

**தகைமைகள்**

தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம்

தரவுத்தள முகாமைத்துவம் தொடர்பான தொழில்சார் சான்றிதழ்கள் மேலதிக நன்மையாக இருக்கும்

**அனுபவம்**

ஒட்டுமொத்தமாக 4 வருட அனுபவம், வங்கி மற்றும் நிதித் துறையில் தரவுத்தள நிர்வாகத்தில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் நிர்வாக நிலை. Postgre SQL/Enterprise DB வெளிப்பாடு இருப்பது சாதகமானது.

**உதவி முகாமையாளர் - சேமிப்பக நிர்வாகம்**

**Assistant Manager-Server Administration**

**முக்கிய பொறுப்புகள்**

வழக்கமான காப்புப்பிரதிகளை (Backup) எடுப்பது, சமீபத்திய இணைப்புகளைப் பயன்படுத்துதல், செயல்திறன் கண்காணிப்பு மற்றும் சரிசெய்தல். அனைத்து முக்கியமான தரவுத்தளங்களும் எந்த இடையூறும் இல்லாமல் இயங்குவதை உறுதி செய்து, சுமை சமநிலை, HA (அதிக கிடைக்கும் தன்மை) மற்றும் DR (இடர் மீட்பு) நுட்பங்களுடன் அதிக கிடைக்கும் தன்மையை வழங்க வேண்டும். அனைத்து பயன்பாட்டு சேமிப்பகங்களுக்கும் ஒழுங்குமுறை, இணக்கம் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் என்பன முழுமையாக நிரப்பப்பட வேண்டும்.

**தகுதிகள்**

தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம்.

சேமிப்பக முகாமைத்துவம் தொடர்பான தொழில்சார் சான்றிதழ்கள் மேலதிக நன்மையாக இருக்கும்.

**அனுபவம்**

AD (Active directory), DNS (Domain Name Systems), Application server clusters, Virtual machines போன்றவற்றை உள்ளடக்கிய சேமிப்பக நிர்வாகத்தில் குறைந்தபட்சம் 2 வருடங்கள் நிறைவேற்றுத்தர மட்டத்தில் ஒட்டுமொத்தமாக 4 வருட அனுபவம் இருக்க வேண்டும்.

**உதவி முகாமையாளர் - IT செயலிகள் மற்றும் கிளை ஒத்துழைப்பு**

**Assistant Manager-IT Applications & Branch Support**

நிறுவனத் தேவையின்படி உயர்தர, துல்லியமான பயன்பாட்டு மேம்பாடு, பராமரிப்பு, செயற்படுத்தல் மற்றும் இறுதிப் பயனர் ஒத்துழைப்பு ஆகியவற்றிற்குப் பொறுப்பு. பயன்பாட்டு மேம்பாடு, பராமரிப்பு செயற்படுத்தல் மற்றும் கிளை ஒத்துழைப்பிற்கான கொள்கைகள் மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பை வரையறுத்து, நிறுவனம் முழுவதும் தொழில்நுட்ப கட்டமைப்பு பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். அனைத்து செயலிகளுக்கும் ஒழுங்குமுறை, இணக்கம் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும். தொழில் துறையில் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில், நிறுவன IT செயலி மற்றும் ஒத்துழைப்பு தேவைகளை பூர்த்தி செய்ய பொருத்தமான தொழில்நுட்ப உத்திகளை வழங்க வேண்டும்.

**தகைமைகள்**

**தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம்**

மென்பொருள் அபிவிருத்தி, செயற்றிட்ட முகாமைத்துவம், தர உத்தரவாதம் மற்றும் வியாபார பகுப்பாய்வு தொடர்பான தொழில்சார் சான்றிதழைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகும்.

**அனுபவம்**

மென்பொருள் அபிவிருத்தியில் ஒட்டுமொத்தமான 4 வருடகால அனுபவம். இதில் குறைந்தபட்சம் 2 வருடங்கள் நிர்வாக மட்டத்தில் இருத்தல் வேண்டும். Java, dotNet, AS400 மற்றும் PostgreSQL/Enterprise DB ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு வங்கி / நிதி நிறுவனத்தில் மென்பொருள் அபிவிருத்திக்கான வெளிப்பாடு சாதகமானது.

கீர்த்தி வாய்ந்த வங்கி / நிதி நிறுவனம் / பாரிய அளவிலான கூட்டுத்தாபனத்தில் நிறைவேற்றுத் தரத்தில் குறைந்தபட்சம் 7 வருடங்கள் அனுபவம் இதில் 4 வருடங்கள் இடர் முகாமைத்துவத் துறையில் சிரேஷ்ட நிலையில் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

சம்பள அளவு: ரூபா 79,740-1,500x20-109,740/- ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் வாடகைக் கொடுப்பனவு). மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக 173,870.00 ரூபாவாக இருக்கும்.

வயது: 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**மென்பொருள் பொறியியலாளர்**

**Software Engineer**

**முக்கிய பொறுப்புகள்**

நிறுவனத் தேவைகளுக்காக உயர்தர மென்பொருள் தீர்வுகளை (இணையம், windows, மொபைல் செயலிகள் மற்றும் interfaces உட்பட) உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பு கூறல். உருவாக்கப்பட்ட அனைத்து மென்பொருள் செயற்பாடுகளும் துல்லியமானவை மற்றும் பயனர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

**தகுதிகள்**

தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம்

மென்பொருள் அபிவிருத்தி தொடர்பான தொழில்சார் தகுதி பெற்றிருப்பது சாதகமாகும்.

**அனுபவம்**

ஒட்டுமொத்த நான்கு (04) வருடகால அனுபவம். இதில் மென்பொருள் அபிவிருத்தி நிர்வாக மட்டத்தில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகளாக இருத்தல் வேண்டும். வங்கி/நிதி நிறுவனத்தில் Java, dotNet, AS400 மற்றும் PostgreSQL/Enterprise DB ஆகியவற்றைப் பயன்படுத்தி மென்பொருள் அபிவிருத்திக்கான வெளிப்பாடு சாதகமானது.

சம்பள அளவு: ரூபா 62,060 – 980x20-81,660/- ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் வாடகைக் கொடுப்பனவு). மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக 151,000.00 ரூபாவாக இருக்கும்.

வயது: 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**முறைமை இயக்குநர்**

**System Operator**

**முக்கிய பொறுப்புகள்**

பயனாளர்களுக்கு பயனுள்ள தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்காக பொறுப்புக்கூறல். வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளும் கொள்கைகள் மற்றும் அமைப்புகளின் சீராக இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். நாள் இறுதி செயற்பாடுகள், காப்புப்பிரதிகளை எடுத்து காப்புப்பிரதிகளை சரிபார்த்தல், DR (இடர் மீட்பு) /BCP (வணிக தொடர்ச்சித் திட்டம்) செயற்பாடுகள், கண்காணிப்பு நடவடிக்கைகள் போன்ற தினசரி IT செயற்பாட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

**தகுதிகள்**

க.பொ.த உயர்தரத்தில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா (குறைந்தபட்சம் 1 வருட காலம்)

**அனுபவம்**

கணனி இயக்குநராக ஒட்டுமொத்தமாக மூன்று வருடகால அனுபவம். வங்கி/கணினி முறைமை இயக்கத்தில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வங்கித் துறையில் பல்வகை தொழில்நுட்ப தளங்களில் அனுபவம் - AS/400, Windows, UNIX, Oracle, PostgreSQL, dotNet போன்றன.

சம்பள அளவு: ரூபா 57,700 – 820x20-74,100/- ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் வாடகைக் கொடுப்பனவு). மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக 116,000.00 ரூபாவாக இருக்கும்.

வயது: 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 14/08/2023

**பொது நிபந்தனைகள்**

தேர்வு முறை - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பிக்கும் முறை**

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து வங்கியின் www.smib.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசிக்கவும்.

---

UNIVERSITY HOSPITAL

General Sir John Kotelawala Defence University

## பல்கலைக்கழக வைத்தியசாலை

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்காக தகுதி வாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிகின்றது. (நிரந்தர அடிப்படை)

❖ **தாதியர் பதவிகள் (Post of Nursing Staff)**

சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு 'நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர' என்ற முகவரிக்கு 2023.08.14க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.kdu.ac.lk) தொ.பேசி. இல. 011-2044555

www.kdu.ac.lk

---

## சுகாதார அமைச்சு

## விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை, சீதுவ

# வெற்றிடம்

சீதுவ, விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிலவும் பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 2. மருத்துவ அதிகாரிகள்

**தகைமைகள்** - இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரிகள்

- அரசாங்க அல்லது தனியார்துறை வைத்தியசாலையொன்றில் மருத்துவ அதிகாரியாக 02 வருட கால அனுபவம்
- முழுமையான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் இல்லாத பட்சத்தில் பயிற்சிக்குப் பின்னரான (Post intern) மருத்துவ அதிகாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

**சம்பள அளவு** - **ஆரம்பத்தர சம்பள அளவு**

ரூபா 67,862.50 - 2 x 1,668.75 - 71,200.00 (மாதாந்தம்)

**தரம் 02 சம்பள அளவு**

ரூபா 772,881.25 - 6x1,681.25 - 12x2,037.50 - 107,418.75 (மாதாந்தம்)

**வயது** - 60 வயதிற்குக் குறைந்தவர்கள்.

- அரசாங்கத் துறையிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- மேற்படி சம்பளத்தில் தற்போதைய அரச சேவை சம்பள அளவைவிட 25% சம்பள அதிகரிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.
- விண்ணப்பங்களை 2023 ஆகஸ்ட் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**சீதுவ.**

---

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ளதுடன், சிவில் விமானப் போக்குவரத்து விடயங்களை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சட்டம் ஆக்குகிறது.

வணிக விமானி உரிமம் (CPL) அல்லது வான் போக்குவரத்து முன்னோடி உரிமம் (ATPL) கொண்டிருக்கும் விமானிகள் மற்றும் வானூர்தி பராமரிப்பு உரிமம் (AML) பொருட்டான விண்ணப்பதாரிகள் தொடர்பிலான அளவீடு.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (இ.சி.வி.போ.அ.), வணிக விமானி உரிமம் (CPL) அல்லது வான் போக்குவரத்து முன்னோடி உரிமம் (ATPL) கொண்டிருக்கும், வகை நியமப்படுத்தல் & வரிசை பயிற்சியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விமானிகள் மற்றும் இ.சி.வி.போ.அ.இனால் நடாத்தப்பட்ட ஏற்புடைய எல்லா அறிவு பரீட்சைகளை நிறைவுசெய்து வானூர்தி பராமரிப்பு உரிமமொன்றை பெறுவதற்கு இரு வருட செயல்முறைப் பயிற்சியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வானூர்தி பராமரிப்பு உரிமம் (AML) பொருட்டான விண்ணப்பதாரிகள் ஆகியோரை இனங்காணுவதற்காக அளவீடு ஒன்றை நடாத்துகிறது.

இந்த அளவீட்டின் குறிக்கோள் யாதெனில், நாட்டினுள் அல்லது நாட்டிற்கு வெளியே செயல்முறைப் பயிற்சியை வழங்குவதற்கான இயலுமைகளை பரிசீலனை செய்யும், அதற்காக வசதியளிக்கும் நோக்கில் விடயம் பற்றிய துல்லியமான தரவுகளை நிச்சயப்படுத்திக்கொள்வதாகும்.

இந்தச் சூழ்நிலையில் பின்வரும் தகைமைகளையுடைய இலங்கை பிரசைகள் இந்த அதிகாரசபையில் பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

- **விமானிகள் :**
  - (அ). இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் வழங்கப்பட்ட நடப்பு CPL அல்லது ATPL உரிமத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
  - (ஆ). இ.சி.வி.போ.அ.இனால் நடாத்தப்பட்ட வான் போக்குவரத்து முன்னோடி உரிமம்(ATPL) அறிவு பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- **AML விண்ணப்பதாரிகள் :**
  - (அ). இ.சி.வி.போ.அ.இனால் நடாத்தப்பட்ட ஏற்புடைய எல்லா AML அறிவு மொடியூல் மற்றும் பரீட்சைகளை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
  - (ஆ). செயல்முறைப் பயிற்சியை எதிர்பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும்.

பதிவு: பதிவுப்படிவத்தை www.caa.lk எனும் இ.சி.வி.போ.அ. இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்பதுடன் முறையாக நிரப்பப்பட்ட படிவங்கள் 2023 ஆகஸ்ட் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**பி.ஏ. ஜயகாந்த**
**சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் & பிரதம நிறைவேற்று அலுவலர்**
**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை**
**இல. 152/1, மினுவங்கொடை வீதி,**
**கட்டுநாயக்க.**

110 PARLIAMENT ROAD
**ICONIC**
Exclusive Living

## 110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ள ICONIC தொடர்மாடி குடியிருப்பில் பொது வசதிகளின் பராமரிப்புக்காக சேவைகளை வழங்குவதற்கு ஆர்வ வெளிப்பாட்டை (EOI) சமர்ப்பிப்பதற்கான அழைப்பு

110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ள ICONIC தொடர்மாடி குடியிருப்பில் பொது வசதிகளின் பராமரிப்புக்காக பின்வரும் எந்த ஒரு சேவையையும் வழங்குவதில் நிபுணத்துவம் பெற்ற தகுதிபெற்ற மற்றும் அனுபவமுடைய புகழ்பெற்ற வழங்குநர்களிடம் இருந்து MCCP இல. 13047 இன் சார்பில் முகாமைத்துவ சபையினால் ஆர்வ வெளிப்பாட்டுக்கு (EOI) அழைப்பு விடுக்கப்படுகிறது.

(01). பாதுகாப்பு சேவைகள்
(02). தினசரி வீட்டு பராமரிப்பு

பின்வரும் விபரங்களை மற்றும் ஆவணங்களைக் கொண்டதாக ஆர்வ வெளிப்பாடுகள் இருத்தல் வேண்டும்.


a) வாடிக்கையாளர் பெயர்களுடன் இதனையொத்த துறைகளில் தொடர்புடைய அனுபவம்.
b) அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப திறன்.
c) நிறுவன பதிவு சான்றிதழ் மற்றும் படிவம் 1 இன் பிரதிகள்.
d) நிறுவனத்தின் நிதி வலுத்தன்மை.

தமது விலைமனுக்கள், கூட்டு வலுத்தன்மை, அனுபவம் மற்றும் தாம் நிபுணத்துவம் பெற்ற சேவையை வழங்குவதில் உள்ள திறன் அடிப்படையில் முன்மொழிபவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

ஆர்வ வெளிப்பாட்டை கொண்ட முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் "MCCP இல. 13047 இற்கான சேவை வழங்கலுக்கு ஆர்வ வெளிப்பாடு" என்று குறிப்பிட்டு 2023 ஒகஸ்ட் 15ஆம் திகதி 17.00 மணி அல்லது அதற்கு முன்னர் "ICONIC தொடர்மாடி குடியிருப்பு, MCCP இல. 13047, 110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0774470292|011-2073700/704 என்ற தொலைபேசி இலக்கங்களில் முகாமைத்துவ அலுவலகத்தை தொடர்புகொள்ளவும்.

**ICONIC தொடர்மாடி குடியிருப்பு,**
**MCCP இல. 13047,**
**110, பாராளுமன்ற வீதி, ராஜகிரிய.**



கடற்றொழில் அமைச்சு
இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம்
CEYFISH

## பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பழைய பொருட்கள் விற்பனைக்கான விலைமனுக்கோரல்

### ஒப்பந்த இலக்கம் : CFC/SD/Redundant/2023-05

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் காணப்படும் **செப்பு, இரும்பு மற்றும் வெள்ளை இரும்பு** உள்ளிட்ட பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பழைய பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

மீளச்செலுத்தப்படாத ரூ.3,000/- கட்டணத்தினை பணமாக செலுத்தி 2023.07.31 ஆம் திகதி தொடக்கம் 2023.08.21 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.1.00 விலைமனுக்கோரலை சமர்ப்பிப்பதற்கு குறித்த விண்ணப்பப்படிவம் மற்றும் விலைமனுக்கோரல் நிபந்தனைகளுடன் ஆவணம் வழங்கும் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். வாரநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.2.00 மணிவரை பொருட்களை பரீசீலனை செய்யலாம். முத்திரையிடப்பட்ட மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பழைய பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கோரல் கோரப்படுகின்றது"** எனக் குறிப்பிட்டு 2023.08.21 ஆம் திகதி **பி.ப.2.00 மணி** அல்லது அதற்கு முன்பாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். மேலதிக தகவல்களை www.cfc.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள் பரீசீலனை மற்றும் மேலதிக தகவல்களை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விநியோக முகாமையாளர் : 071-8736941 / 011-2540092 அல்லது களஞ்சியசாலை முகாமையாளர் : 071-8736917 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம்,
இல- 15, றொக் ஹவுஸ் ஒழுங்கை,
மோதர, கொழும்பு 15.
தொலைபேசி (0112-540455 / 011-2523689)


Repeat Your Ad For Better Offers

The Housewives' companion
Classifieds on
Daily News


பாதுகாப்பு அமைச்சு

## விலைமனுக்கோரல்

### இருதய மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு வளாகத்தின் கட்டுமானம் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை - கொழும்பு 08 (மருத்துவ எரிவாயு அமைப்பினை வழங்குதல் மற்றும் நிறுவுதல்)

### ஒப்பந்த இல : MOD/SLN/03/2023

1. இருதய மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு வளாகத்தின் கட்டுமானம் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை கொழும்பு - 08 (மருத்துவ எரிவாயு அமைப்பினை வழங்குவற்கு மற்றும் நிறுவுதற்கு தகுதியினை கொண்ட மனுதாரர்களை தேர்வு செய்வதற்காக பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, பாதுகாப்பு அமைச்சின் தலைவரினால் முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட தொகை அண்ணளவாக முன்நூற்று என்பதாறு மில்லியன் ரூபாயாகும் (ரூ.386 மில்லியன்) முடிவுறும் காலம் 180 நாட்களாகும். கட்டுமான வளாகம் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அமைந்துள்ளது.

2. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய **(NCB)** நடைபெறும்.

3. ஒப்பந்தந்திற்கு தகுதிபெறும் மனுதாரர்கள் கருப்புபட்டியல் நிரலில் இடம்பெறாதவரும் பின்வரும் தகுதி மற்றும் திறன்களை பூர்த்தி செய்யக்கூடியவருமாக இருத்தல் வேண்டும்.

அ. மனுதாரர்கள் கட்டுமான தொழில் அபிவிருத்தி ஆணைக்குழுவில் **(CIDA)** மருத்துவ எரிவாயு அமைப்பு **(MG)** வேலைகள் மற்றும் **(EM )1** தரத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

ஆ. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளின் சராசரி வருடாந்திர அளவு குறைந்தபட்சம் **ரூ.700 மில்லியனாக** இருத்தல் வேண்டும்.

இ. குறைந்தபட்சம் ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் நீர்மைச்சொத்து மற்றும் / ஒப்பந்தத்திற்கான கடன் வசதிகள் ஏனைய ஒப்பந்த பத்திரங்கள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் முன்கூட்டியே கொடுப்பனவுகளைத் தவிர்த்து குறித்த ஒப்பந்தம் **ரூ.150 மில்லியனாக** இருக்க வேண்டும்,

ஈ. கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரதான ஒப்பந்ததாரராக ஒத்த இயல்பு மற்றும் சிரமமான கட்டிட கட்டுமானத் திட்டமொன்றில் தீ பாதுகாப்பு மற்றும் தீயை கண்டறிதல் செயற்பாட்டினை வெற்றிகரமாக நிறைவேற்றிய அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உ. ஒப்பந்ததாரர் பின்வரும் ஊழியர்களை நியமிக்க வேண்டும்.

- இயந்திர பொறியியளாலர் (தளம் - பகுதி நேரம்) - இயந்திர பொறியியளாலர் பட்டம் அல்லது அதற்கு சமமான தகைமையினைக் கொண்டிருத்தல் மற்றும் குறித்த துறையில் 2 வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- பொறியியல் உதவியாளர் (மெக்கானிக்கல்) (தளம் - முழு நேரம்) - NDT / HNDE / NDES அல்லது அதற்கு சமமான தகைமையினைக் கொண்டிருத்தல் மற்றும் குறித்த துறையில் 3 வருட அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

4 இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.07.31** ஆம் திகதியிலிருந்து **2023.08.21** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூல விண்ணப்பத்தை தலைமை நிதி அதிகாரி ஐ அலுவலகம் 2ஆம் மாடி, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, பாதுகாப்பு அமைச்சில் மீள்ச்செலுத்தப்படாத கட்டணமாக **ரூ.50,000.00 (வட்வரி உள்ளடக்கப்படாத)** சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

5. தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளவதுடன், தலைமை நிதி அதிகாரி ஐ அலுவலகம் 2ஆம் மாடி, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, பாதுகாப்பு அமைச்சில் **2023.07.31** ஆம் திகதி முதல் **2023.08.21** ஆம் திகதி வரை வார நாட்களில் காலை **09.00** மணி முதல் மாலை **15.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

| | |
|---|---|
| பொறியியல் பணிப்பாளர் நாயகம், | தொலைப்பேசி இல - 0117194211 |
| இலங்கை கடற்படை தலைமையகம், | தொ.நகல் - 0112441456 |
| த.பெ.இல.593, | மின்னஞ்சல் - nhqdge@gmail.com |
| கொழும்பு 01. | |

மனுக்கள் **2023.12.18** ஆம் திகதி வரை (முடிவுறும் திகதியிலிருந்து **119 நாட்களுக்கு**) செல்லுபடியாகும்.

6. மனு பிணையானது **ரூ.5,800,000.00** பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியிடமிருந்து பெறப்பட்ட அங்கீகார படிவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. குறித்த மனுப்பாதுகாப்பு தொகையானது **2024.01.15** ஆம் திகதி வரை, (மனுக்கள் முடிவுறும் திகதியிலிருந்து **147 நாட்கள்**) செல்லுபடியாகும்.

8. இது தொடர்பான முன்மனுக் கூட்டமானது **2023.08.11** ஆம் திகதி **1100** மணிக்கு கொழும்பு - 08 சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் நடைபெறும். பங்கேற்கும் நபரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தினை **2023.08.10** ஆம் திகதி **1600** மணிக்கு முன்னர் slnavylrh@gmail.com அனுப்புதல் வேண்டும்.

9. மனு ஆவணங்களை நகல் பிரதி மற்றும் அசல் பிரதி ஒன்றுடன் **2023.08.22** ஆம் திகதி **1100** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அமைச்சின் கொள்முதல் குழுவின் தலைவர், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் நேரடியாக அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

10. தாமதமாக கிடைக்கப்பெறும் மனுக்கள் நிராகரிக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் நேரம் முடிந்தவுடன் **2022.08.22** ஆம் திகதி மாலை **1100** மணிக்கு பங்கேற்க விரும்பும் மனுதாரரகள் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும். தலைமை நிதி அதிகாரி I அலுவலகம் 2ஆம் மாடி, பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே, பாதுகாப்பு அமைச்சில மனுதாரர் சார்பாக கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் மனுதாரரின் உரிமம் பெற்ற கடிதத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும். மனுக்கள் திறக்கப்படுவதற்கு குறைந்தது மூன்று அலுவலக நாட்களுக்கு முன்னர் பங்கேற்கும் நபரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தினை பாதுகாப்பு அமைச்சின் தலைமை நிதி அதிகாரிக்கு தெரியப்படுத்தவும்.

11. தேவையான ஆவண சான்றுகள் முழுமையடையாத மற்றும் அவற்றுடன் இணைக்கப்படாத மனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு மனு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை தலைவர், கொள்முதல் குழு, இலங்கை கடற்படை தலைமையகம் கொண்டுள்ளது.

12. இப்பத்திரிகை விளம்பரத்தை இலங்கை கடற்படை www.navy.lk மற்றும் www.defence.lk பாதுகாப்பு அமைச்சி வலைத்தளத்தில் பார்வையிடலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரி :

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு **(MPC),**
தலைமை நிதி அதிகாரியின் I அலுவலகம்,
2ஆம் மாடி, பாதுகாப்பு அமைச்சு,
பாதுகாப்பு தலைமையக கட்டிடத்தொகுதி,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கோட்டே.

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD - IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு**
IDA Credit No.: 5873 LK

## பெறுகை அறிவித்தல்

### வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள கெவின்டிஷ் வாழைப்பழம், மாதுளை, மா, உருளைக்கிழங்கு மற்றும் இயற்கை மரக்கறி கொத்தணிகளுக்கு பதப்படுத்தும் இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள கெவின்டிஷ் வாழைப்பழம், மாதுளை, மா, உருளைக்கிழங்கு மற்றும் இயற்கை மரக்கறி கொத்தணிகளுக்கு பதப்படுத்தும் இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள கெவின்டிஷ் வாழைப்பழம், மாதுளை, மா, உருளைக்கிழங்கு மற்றும் இயற்கை மரக்கறி கொத்தணிகளுக்கு பதப்படுத்தும் இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கெவின்டிஷ் வாழைப்பழ கொத்தணி பதப்படுத்தல் நிலையத்திற்கான பதப்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-366011-GO-RFB | 480,000.00 | 10,000.00 |
| மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாதுளம்பழ கொத்தணி பதப்படுத்தல் நிலையத்திற்கான (2 நிலையங்கள்) பதப்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-366012-GO-RFB | 240,000.00 | 7,500.00 |
| மொனராகலை மாவட்டத்திலுள்ள மாம்பழ கொத்தணி பதப்படுத்தல் நிலையத்திற்கான பதப்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-366009-GO-RFB | 240,000.00 | 7,500.00 |
| யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள உருளைக்கிழங்கு மற்றும் சின்ன வெங்காயம் பதப்படுத்தல் நிலையத்திற்கான பதப்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-314435-GO-RFB | 240,000.00 | 7,500.00 |
| பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள இயற்கை மரக்கறி சேகரிப்பு நிலையத்திற்கான பதப்படுத்தல் இயந்திராதிகள் | LK-MOA-PMU-365794-GO-RFB | 360,000.00 | 7,500.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக 2023-07-30ஆம் திகதியிலிருந்து 2023-08-21ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. 2023-08-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2023-08-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் உள்ள கெவின்டிஷ் வாழைப்பழம், மாதுளை, மா, உருளைக்கிழங்கு மற்றும் இயற்கை மரக்கறி கொத்தணிகளுக்கு பதப்படுத்தும் இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**
**திகதி: 2023-05-14**

## சீனன்கோட்டை பவுன்டேஷன் ஏற்பாட்டில்

# கைப்பணி கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்

அஜ்வாத் பாஸி

பேருவளை சீனன்கோட்டை பிரதேசத்தில் பொதுப் பணிகளை மேற்கொண்டு வரும் 'China Fort Foundation' நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை கைப்பணி கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

பெண்களுக்கு சுயதொழில் பயிற்சியை வழங்கும் நோக்கில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக தையல்கலை பயிற்சி நெறியை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. இந்தவகையில் இம்முறை தையல் கலை பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 110 மாணவிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கைப்பணி கண்காட்சி மற்றும் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

பெண்களுக்கு மாத்திரம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சியை பேருவளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையின் முன்னாள் உப அதிபர் ஜனாபா மிஸ்பா ஷம்ஸுதின் அன்ஸார் ஆசிரியை திறந்து வைப்பார். பவுன்டேஷன் நிறுவனத்தின் கௌரவ தலைவர் பஸால் ஷரீப்பின் தலைமையில் மாலை 4.00 மணிக்கு நடைபெற இருக்கும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷாமிலா தாவூத் கலந்து சிறப்பிப்பார். கௌரவ அதிதியாக முஸ்லிம் சேவை பணிப்பாளர் ஜனாபா ரினூஸியா கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் தையல் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்த 110 மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் கைப்பணி கண்காட்சியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவிகள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## அரசியல் செய்யும் நேரம்... (05ஆம் பக்கத் தொடர்)

எந்தவொரு நாட்டிற்கும் பொது நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொது நிதிஒதுக்கீட்டை செயல்படுத்துவதற்கான முக்கிய அளவுகோல்கள் இவை.

உள்நாட்டுக் கடன் மேம்படுத்தல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஜூலை 1 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது, அது பலரால் எதிர்பார்க்கப்படவில்லை. நாங்கள் வங்கிக் கணக்குகளில் குறைப்புக்களை மேற்கொள்வோம் என அனைவரும் நினைத்தார்கள்.

**கே: 'அஸ்வெசும' திட்டத்தின் தொடர் குறைபாடுகள் குறித்து கவலைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 'அஸ்வெசும திட்டத்தின்' மேல்முறையீடுகள் மற்றும் நோக்கங்கள் மீதான மதிப்பீடுகள் தொடங்கப்பட்டுள்ளனவா?**

பதில்: இரண்டரை தசாப்தங்களுக்கும் மேலாக வெளிப்படையான மற்றும் சரியான இலக்கை நோக்கி நாம் அடியெடுத்து வைப்பதால் குறைபாடுகள் இருக்கலாம். இலங்கையில் நலன்புரி நலன்கள் ஒருபோதும் வெளிப்படையான அமைப்பைக் கொண்டிருக்கவில்லை. நலத்திட்ட உதவிகள் பெறத் தகுதியற்றவர்கள் வலைக்குள் இருந்தனர். இது அரசாங்கம் செய்து வரும் உள்ளடக்கத் திருத்தம் மற்றும் விலக்குத் திருத்தம் ஆகும். எனவே, குறைபாடுகள் இருக்கலாம் என்பதை நான் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனால் சமூக நலன்கள் தேவைப்படும் ஒவ்வொரு நபரும் கருத்தில் கொள்ளப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம்.

ஆனால், அரசியல் கண்ணோட்டத்தில் அதைச் செய்ய முடியாது. நீங்கள் ஒரு தற்காலிக அடிப்படையில் நபர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது. அது ஒரு வெளிப்படையான செயல்முறையாக இருக்க வேண்டும். சவால்கள் இருக்கும் வகையில் 25 ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றத்தை ஏற்படுத்துகிறோம் என்பதுதான் அரசு தரக்கூடிய ஒரே உறுதி. தற்போது, ஒரு மில்லியனுக்கும் அதிகமான முறையீடுகள் மற்றும் 100,000 ஆட்சேபனைகள் உள்ளன. நாங்கள் அவற்றை மறுபரிசீலனை செய்வோம் மற்றும் அனைவருக்கும் தீர்வு காணப்படுவதை உறுதி செய்வோம், யாரும் பின் தங்கியிருக்க மாட்டார்கள். இந்த மாதத்திற்குள் அவர்களின் நலன்புரிப் பலன்களைப் பெறுவதை நாங்கள் உறுதி செய்வோம் மற்றும் ஓகஸ்ட் கட்டணத்துடன் மறுஆய்வு செயல்முறை முடிந்ததும், ஜூலை மாத கட்டணத்தை நாங்கள் சரிசெய்வோம்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.07.27
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5188 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 26,131,200.00
ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 2 9 6 0 2 6

**லக்கி 7 (Lucky 7)** — திகதி: 27.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம்: 0014
வெற்றி இலக்கினம்: துலாம் — வெற்றி இலக்கங்கள்: 8 2 3 8 1 0
L7 இலக்கம்: 3 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 10,225,720.80

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம்: 1536 — 27/07/2023 — 45524
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 402,507,728.00
ஆங்கில எழுத்து: A — சுப்பர் இலக்கம்: 26 — வெற்றி இலக்கங்கள்: 05 26 31 79
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

**ராசி சுப பலன் (Handahana)** — சீட்டிழுப்பு இலக்கம்: 497 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 3,896,223.80
வெற்றி இலக்கினம்: மிதுனம் — வெற்றி இலக்கங்கள்: 02 04 20 26 — விசேட இலக்கினம்: மிதுனம்

**தன நிதானய** — திகதி: 2023/07/27 — சீட்டிழுப்பு இலக்கம்: 1218 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 101,988,549.60
ஆங்கில எழுத்து: M — வெற்றி இலக்கங்கள்: 02 09 11 26 — விசேட எழுத்து: M
Double Chance இலக்கம்: 13976

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம்: 3430 — சீட்டிழுப்பு திகதி: 2023.07.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: Rs. 70,558,049.60
ஆங்கில எழுத்து: X — வெற்றி இலக்கங்கள்: 13 31 74 77 — விசேட எழுத்து: X
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 62817


## ரீகேஎஸ் பினான்ஸ் லிமிட்டெட் (TKSFL)
## வைப்பாளர்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

ரீகேஎஸ் பினான்ஸ் லிமிட்டெட்டிற்கு நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு வழங்கப்பட்ட உரிமம் 2019 செப்தெம்பர் 19 ஆம் திகதியன்று இரத்துச்செய்யப்பட்டதுடன், இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் ரூ.1,100,000 உயர்ந்தபட்சத் தொகைக்குட்பட்டு வைப்பாளர்களுக்கு இழப்பீடளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி வழிமுறைகளையும் எடுத்திருந்தது.

2021ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய ரீகேஎஸ் பினான்ஸ் லிமிட்டெட்டின் காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களிடமிருந்து **உரிமைக் கோரல்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2023 செப்தெம்பர் 19 ஆகும்.**

இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய ஆயினும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான தமது உரிமைக் கோரல்களை இதுவரை சமர்ப்பித்திராத ரீகேஎஸ் பினான்ஸ் லிமிட்டெட்டின் அனைத்து வைப்பாளர்களும்/ சட்ட ரீதியான பயன்பெறுநர்களும் **முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட பிரகடனங்களுடனான உரிமைகோரல் படிவங்களை அல்லது ஒப்புதல் படிவங்களைக் குறித்துரைக்கப்பட்ட படிவங்களின் அறிவுறுத்தல்களில் தரப்பட்டவாறு வேண்டப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து** இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் அஞ்சல் அறைக்கு நேரடியாகவோ அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ **2023 செப்தெம்பர் 19 ஆம் திகதிக்கு** முன்னர் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். மேலும், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தயவுசெய்து "TKSFL" எனக் குறிப்பிடவும்.

பணிப்பாளர்
தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01.

'பிரகடனத்துடனான உரிமை கோரல் படிவம்' மற்றும் 'ஒப்புதல் படிவம்' என்பன https://www.cbsl.gov.lk/ta/அறிவிப்புகள் என்ற இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் கிடைக்கப்பெறுவதுடன் அவற்றின் பிரதிகளை இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்திலும் மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 011 2477261, 011 2477276, 011 2477273

* 2023 செப்தெம்பர் 19 ஆம் திகதிக்கு முன்னர் ரீகேஎஸ் பினான்ஸ் லிமிட்டெட்டினைத் தீர்த்துக்கட்டுதல் தொடர்பில் தகைமைவாய்ந்த நீதிமன்றத்தினால் தீர்த்துக்கட்டுபவர் நியமிக்கப்படின் தீர்த்துக்கட்டுபவரின் அத்தகைய நியமனத் திகதி முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட உரிமைக் கோரல்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதியாகவிருக்கும்.



## கட்டுமான கைவினைஞர்களுக்கான தேசிய கைவினை அடையாள அட்டை வழங்குதல் மற்றும் திறமையான கைவினைஞராக கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்தல்.

2014 இலக்கம் 33 கீழ் கட்டுமானத் தொழில் அபிவிருத்தி சட்டத்தின் படி திறமையான கட்டுமானத் தொழிலாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் தொழில்முறை அணுகுமுறைகளைப் பரிசீலனைசெய்து கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல் மற்றும் அவர்களின் தகவல்களை பராமரிக்கும் நோக்கத்துடன், திறமையான கட்டுமானத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் 27 துறைகளின் வகைப்படுத்தப்படுகிறார்கள் "பிரதான கட்டுமான கைவினைஞர்கள்" மற்றும் "கட்டுமானத் கைவினைஞர்கள்" என 2 முக்கிய பிரிவுகளின் கீழ் தனித்தனியாக பின்வரும் திறன் தரத்திற்காக தொழில்நுட்ப அடையாள அட்டை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கட்டுமானத் கைவினைஞர்கள்**

- MSN கட்டுமானத் கைவினைஞர் (கொத்தனார்) (Construction Craftsman (Masonry))
- WCB தச்சுவேலை (கட்டிடம்) (Wood Craftsman (Buildings))
- WCF தச்சுவேலை (தளபாடம்) (Wood Craftsman (Furniture))
- TIL டைல் நிறுவுனர் (Tile Layer)
- PNT வர்ண பூசுபவர் (கட்டிடம்) (Painter (Buildings))
- ELC மின் வல்லுநர் (Electrician)
- PLB குழாய் பணியாளர் (Plumber)
- BBD கம்பி வளைக்கும் வல்லுநர் (Bar Bender)
- WLD ஒட்டுனர் (Welder)
- ALF அலுமினியம் கட்டமைத்தல் (Aluminum Fabricator)
- OTH வேறு (Other)

**கட்டுமான இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்கள்**

- CEM கட்டுமான இயந்திர வல்லுநர் (Construction Equipment Mechanic)

**கட்டுமான இயந்திரங்களை இயக்குபவர்**

- LE இலகு கட்டுமான இயந்திரம் இயக்குபவர் (Light Equipment Operator)
- T ட்ரக்டர் இயக்குபவர (Tractor Operator)
- SPVR தன்னியக்க அதிர்வு உருளை இயந்திரம் இயக்குபவர் (Self-propelled Vibrator Roller Operator)
- BL பெக்கோலோடர் இயந்திரம் இயக்குபவர் (Backhoe Loader Operator)
- WL வீல்லோடர் இயந்திரம் இயக்குபவர் (Wheel Loader Operator)
- HE ஹைட்ரோலிக் இயந்திரம் இயக்குபவர் (Hydraulic Excavator Operator)
- MG மோட்டர் கிரைன்டர் இயக்குபவர் (Motor Grader Operator)
- CT கிரவல் ட்ரக் இயக்குபவர் (Crawler Tractor Operator)
- MC நடமாடும் கிரேன் இயக்குபவர் (Mobile Crane Operator)
- DT ட்ரம்ப் ட்ரக் இயக்குபவர் (Dump Truck Operator)
- FLT போர்க்லிப்ட் ட்ரக் இயக்குபவர் (Forklift Truck Operator)
- PT இயந்திரகளை இடமாற்றும் இயக்குனர் (Plant Transporter Operator)
- SSL ஸ்கிட் ஸ்டையர் லோடர் (Skid Steer Loader Operator)
- TMC ட்ரக் இணைப்பு கிரேன் இயக்குபவர் (Truck Mounted Crane Operator)
- OTH වෙනත් (Other)

**திறமையான கட்டுமான கைவினைஞர்களாகப் பதிவு செய்யும் உங்களுக்காக**

- உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப வலுவூட்டல் மூலம் உள்ளுர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அணுகுதல்.
- திறமையான கைவினைஞராக சமூக அங்கீகாரம் பெறுதல்.
- தொழில்முறை தரத்தை மேம்படுத்துதல்.
- அதிக உற்பத்தி மற்றும் தரம் வாய்ந்த திறமையான பணியாளர்களின் ஒரு அங்கம் வகிப்பதற்கான வாய்ப்பு.

**பதிவுக்காக விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்**

- 18 வயதுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.
- ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- தேசிய தொழில் திறன் தகுதி (NVQ) சான்றிதழ் மற்றும் அனுபவம். (NVQ இல்லாத கைவினைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.)
- அரச/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயமாக கட்டுமானத் துறையில் பணிபுரிபவர்கள்.

**தேர்வு செய்யப்படும் முறை**

விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உங்கள் துறைத் திறன்களை மதிப்பிடுவதற்கான திறன் பரீட்சைக்கு (Skills Test) உட்படுத்தப்படுவீர்கள்.

**அனுகூலங்கள்**

- உங்கள் அனுபவம் மற்றும் அனைத்து தகவல்களுடன் QR குறியீட்டுடன் தேசிய கட்டுமான கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல்.
- கட்டுமானத் துறையில் உங்களைப் பற்றிய தொழில்முறைத் திறனை அங்கீகாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- உங்கள் பதிவு தொடர்பான தகவலை CIDA இணையதளத்தில் உள்ளிடுவதன் மூலம், உங்கள் சேவையைப் பெற விரும்பும் தரப்பினர் உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள உதவுகிறது.
- பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் கைவினைஞர்களை அடையாளம் கண்டு கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதை உறுதி செய்தல்.

**NVQ சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல்**

NVQ சான்றிதழ்கள் இல்லாத கைவினைஞர்களுக்காக முன் அறிவுடன் சான்றளிக்கப்பட்ட RPL (Recognition of prior learning) முறையின் கீழ் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விசாரணைகள் | ஏ.ஏ. லத்தீப் அவர்கள் : 011-3119002 / 070-2731990

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

"செவ்சிரிபாய" இல-123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி : 011-2699801, 011-2695965, 011-2686092 பெக்ஸ் : 011-2699737
மின்னஞ்சல் : cidatraining@gmail.com இணையம் : www.cida.gov.lk



இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் வீமான சேவைகள் அமைச்சு

## சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல்

## கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி செயற்றிட்டம்

**கிழக்குக் கொள்கலன் முனையத்தில் (ECT) (J-17, J-18 and J-19) ஜயா கொள்கலன் முனையத்திற்கு (JCT –V) மூன்று எண்ணிக்கையான கப்பலிலிருந்து கரைக்கு (STS) மாற்றும் பாரந்தூக்கிகளின் பெறுகை**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள சேவைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்வி கோரல் முறை | கேள்விப் பிணைத் தொகை | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக்கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| EW/08/PT/235/A/2023/1 | Procurement of Transferring of three (03) Nos. Ship to Shore (STS) Cranes at East Container Terminal (ECT) (J-17, J-18 and J-19) to Jaya Container Terminal (JCT –V) | சர்வதேச போட்டி ரீதியிலான விலைக் கோரல் | 8.5 மில்லியன் இல. ரூபா | 100,000.00 இல. ரூபா | 2023-09-11 பி.ப. 2.00 மணி |

**விலைமனுதாரர்களுக்கான அறிவுரைகள்:**

1. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. குறைந்தபட்சம் கப்பலிலிருந்து கரைக்கு (STS) ஒவ்வொரு கப்பலினதும் 650 மெ. தொன்னுக்குக் குறையாத கிரென்றி பாரந்தூக்கி மற்றும் அதில் குறைந்தபட்சம் 05 எண்ணிக்கையான கப்பலிலிருந்து கரைக்கு (STS) 1300 மெ.தொன்னுக்குக் குறையாத கிரென்றி பாரந்தூக்கி சகிதம் உலகளாவிய ரீதியில் கடந்த ஐந்து (05) வருடங்களில் கனரக பாரந்தூக்கி (STS பாரந்தூக்கி) கப்பல்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு கப்பல்களுக்கும் குறைவான பாரத்துடன் கிரென்றி பாரந்தூக்கிகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்காக, குறைந்தபட்சம் 25 கப்பல்களை கரைக்குக் கொண்டுவருவதில் விலைமனுதாரர் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, பணிப்பாளர் (தொழில்நுட்பம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0094 11-2326523/ தொலைநகல்: 0094 11-2440754 மின்னஞ்சல்: chandra@slpa.lk என்பதுடன் விலைமனு ஆவணங்களை 2023-08-02ஆம் திகதி முதல் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இதே முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, மத்திய நூலகத்தில் 2023-08-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-09-11ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00) மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை 100,000.00 ரூபா (ரொக்கப் பணமாக) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி மற்றும் மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள பொறியியல் வேலை கிளைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியுடனான விலைமனுக்களை விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நேரமான 2023-09-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிந்தாமல் தலைவர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPC), துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு விலைமனுதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தலின் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர் - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,
துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,
இல. 19, சைத்திய வீதி,
கொழும்பு-01.**

உலக வங்கியின் நிதியுதவியில்

# மட்டக்களப்பில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்





காலநிலை மாற்றத்தால் உலகுக்கே உணவளிக்கும் உழவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்காக உலக வங்கி இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னகர்த்தியுள்ளது.

அந்த வகையில் உலக வங்கியின் நிதி உதவியில் நீர்ப்பாசன அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி அணுகுமுறை (CResMPA – 2023) வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் கற்சேனைக் கிராமத்தில் விநாயகர் அணைக்கட்டுக்குரிய மீள்நிர்மாணப் பணிகள் அண்மையில் நடைபெற்றன.

இதன்போது கிராமிய வீதி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சினி ஸ்ரீகாந், பெரியியலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள், என ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் இலங்கையிலேயே நெல்லுற்பத்தியில் முன்னணியில் திகழ்கின்றது. அதற்காக மட்டக்களப்பிலே உள்ள இராஜாங்க அமைச்சர்கள் இருவரும் விவசாயம் தொடர்பில் அதிகளவு அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கதாகும். இந்த அணைக்கட்டின் மூலம் அதிகளவு விவசாயிகள் நன்மையடையவுள்ளார்கள் என்பதோடு, இப்பகுதி விவசாயிகளை பாதுகாக்க வேண்டும். அத்துடன் விளைச்சலை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த தெரிவித்தார்.

காலநிலை மாற்றம் ஏனைய தரப்பினரைப் போன்று விவசாயிகளையும் வெகுவாகப் பாதித்துள்ளது. அதற்காக காலநிலை மாற்றம் தொடர்பில் சேவையாற்றுகின்ற பலரும் தமது செயற்பாடுகளை முடுக்கி விட்டுள்ளனர்.

அரசாங்கம் எடுத்த பகீரதப் பிரயத்தனத்தால் இந்த நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மேல் நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் 4 பேர் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து பாராளுமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்டு அதில் 2 பேர் அமைச்சர்களாகவுள்ளோம். இந்நிலையில் நாம் பல அபிவிருத்திகளைச் செய்து வந்தோம். அவை அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுவிட்டன. ஆனாலும் அரசின் முயற்சியினால் அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட வீதி புனரமைப்பு, அணைக்கட்டு வேலைகள், வீடமைப்புக்கள், என பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் மெல்ல மெல்ல மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்காக நாம் பல அமைச்சுக்களுடனும், பிரமதர், ஜனாதிபதி உள்ளிட்டோரிடமும் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம். இருளை அகற்றி ஒளியைக் கொடுப்பதற்காகத்தான் இந்த நாட்டில் ஆட்கள் தேவையாகவுள்ளது. என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவிக்கின்றார்.

முன்னைய காலத்தை விட தற்போது காலத்திற்கு காலம் கடும் வெயில், மழைவெள்ளம், பனி, என காலநிலைகளிலும் மாற்றம் ஏற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

காலநிலை மாற்றத்திற்கு ஏற்றாற்போல் தரவுகள் கணனி மயப்படுத்தப்படல் வேண்டும்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விவசாய இராஜாங்க அமைச்சர் வருகை தந்திருந்தார். இதன்போது 530 மில்லியன் ரூபாய்க்குரிய வேலைத்திட்டங்களை நாங்கள் இனம்கண்டிருந்தோம். விவசாய அமைப்புக்கள், மற்றும் மாவட்ட பொறியியலாளர்கள் உள்ளிட்டோரின் வேண்டுகோளின் பேரில் சுமார் 22 திட்டங்களுக்குரிய அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதில் விவசாய அமைப்புக்கள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும். எதிர்காலத்திலே மிகக் கவனமாக விவசாயிகளை ஒருக்கிணைக்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்திலே திடீரென வெப்பநிலை அதிகரித்திருக்கின்றது. சிவப்பு நெல் விதைத்தவர்களுக்கு இம்முறை வேளாண்மையில் அதிக நட்டம் ஏற்பட்டுள்ளது. அதுபோல் மழைவீழ்ச்சியிலும் தாக்கம் ஏற்படலாம் என நம்பப்படுகின்றது.

எனவே சிறுதுளி நீரையும் கடலிலே சேராமல் பாதுகாக்க வேண்டும். இருக்கின்ற வளங்களை அதிகரிப்பதற்கு நெற்செய்கையை மெல்ல மெல்ல அதிகரிக்க வேண்டும். அதிலே மக்கள் உறுதியான நன்மையை பெறவேண்டும். விவசாயம் என்பது ஒரு தர்மப் பணியாகும். விவசாயிகளால்தான் ஏனையவர்கள் வாழ்கின்றார்கள்.

கால நிலை மாற்றம் தொடர்பில் விவசாயிகளும், மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்களும், கிழக்குப் பல்கலைக் கழகத்துடன இணைந்து மட்டக்களப்பு கச்சேரியில் இயங்குகின்ற கணனிப் பிரிவின் பங்களிப்புடன் செயற்பட வேண்டும். தரவுகள் கணனி மயப்படுத்தப்படல் வேண்டும். தரவுகளை வைத்துக் கொண்டுதான் எதிர்காலத்தில் நாங்கள் தீர்மானங்களை எடுக்க முடியும். இனிமேலும் விவசாயிகள் நட்டமடையக்கூடாது. அதற்காக சரியான திட்டமிடல்களை நாம் மேற்கொள்கின்றோம் என கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவிக்கின்றார்.

**வ.சக்திவேல்**

## றுஹுண பல்கலைக்கழகம் - மாத்தறை

## விலைக்கோரல் அழைப்புக்கான விசேட அறிவித்தல்

**றுஹுண பல்கலைக்கழகத்திற்கு பொறித்தொகுதிகள், இயந்திராதிகள், கணனி மென்பொருள் மற்றும் வன்பொருள், ஆய்வுகூட உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாட உபகரணங்கள் மற்றும் ஏனையவற்றை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்பட வைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல்**

**விலைக்கோரல் இலக்கம்:** RUH/SUP/MENA/NCB/2023/01

மேற்கூறப்பட்ட கேள்வி தொடர்பில் 2023 ஜூலை 09ஆம் திகதி பிரசுரமான பத்திரிகை விளம்பரம் சம்பந்தமானது. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியானது பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

| விலைக்கோரல் ஆவணக் குறிப்பீடு | விபரங்கள் | திருத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| | விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் | 2023 ஆகஸ்ட் 28ஆம் திகதி |
| ITB 23.01 | விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் இறுதி நாள் | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி மு.ப. 11.00 மணி |
| ITB 26.01 | விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் | 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி மு.ப. 11.00 மணி |
| ITB 19.01 | விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் | விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்கள் |
| ITB 20.02 | விலைக்கோரல் பிணை முறியின் காலம் | விலைமனுக்கள் செல்லுபடிக் காலத்தின் பின்னரான 30 நாட்கள் |

உங்களுக்கு மேலதிக தகவல்கள் தேவையாயின் தயவுசெய்து பொறியியல் பீடத்தின் உதவி நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 041-2245765 மின்னஞ்சல்: ab@eng.ruh.ac.lk.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**கல்வி அமைச்சு,**
**உயர்கல்விப் பிரிவு,**
**இல. 18, வார்ட் பிளேஸ், கொழும்பு 07.**
2023 ஜூலை 28ஆம் திகதி.

## சுற்றாடல் அமைச்சு

**GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்**

## டிப்பர்களை பதிவு செய்தல்

**GSMBTS/PUR/REG/2023-47**

டிப்பர்களைப் பதிவு செய்வதற்காக தகுதி மற்றும் ஆர்வமுள்ள தரப்பினரிடமிருந்து GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் தலைவர் விண்ணப்பங்களைக் கோருகின்றார்.

ஆர்வமுள்ள தரப்பினர் மேலதிக தகவல்களை GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011-2824025)

ஆர்வமுள்ள தரப்பினர் 2023 ஜூலை 31ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 22ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் பி.ப. 1.00 மணி வரையில் மன்னம்பிட்டிய மணல் திட்ட அலுவலகத்தில் அல்லது GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் இணையதளத்தில் (www.gsmbts.gov.lk) பதிவுக்கான மூலப்பிரமாணம் சகிதம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியிலான முழுமையான விண்ணப்பப் படிவத் தொகுதியொன்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 ஆகஸ்ட் 22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது மன்னம்பிட்டிய மணல் திட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் காலம் முடிவுற்றதன் பின் மன்னம்பிட்டிய மணல் திட்ட அலுவலகத்தில் சமுகம் தந்துள்ள விண்ணப்பதாரர்களின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**மணல் அகழ்தல் திட்டம்,**
**GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,**
**யக்குரே சந்தி,**
**மன்னம்பிட்டிய.**
**2023 ஜூலை 30ஆம் திகதி.**

## இலங்கைப் பாராளுமன்றம்

## வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நல்ல உடலாரோக்கியமும் மற்றும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பணிப்பாளர் தொடர்பாடல்
2. ஊடக அலுவலக ஒருங்கிணைப்பாளர் (சிங்களம்)
3. ஊடக அலுவலக ஒருங்கிணைப்பாளர் (தமிழ்)
4. ஊடக அலுவலக ஒருங்கிணைப்பாளர் (ஆங்கிலம்)
5. பொது வெளிக்கள அலுவலக ஒருங்கிணைப்பாளர் (ஆங்கிலம்)
6. வரவேற்பு உத்தியோகத்தர்
7. பயிற்சி பெற்ற தொழிலாளர் சிவில்

விண்ணப்பங்கள் அழைக்கப்படுவது தொடர்பான இந்த விளம்பரம் 2023ஆம் ஆண்டு யூலை மாதம் 28ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி விளம்பரத்தில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரித்த விண்ணப்பப் படிவங்கள் 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் 'பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும் இந்தப் பதவி வெற்றிடங்கள் தொடர்பான விளம்பரத்தை www.parliament.lk எனும் இணையதளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**
**2023 யூலை மாதம் 30ஆம் திகதி**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## வெற்றிடங்கள்

## மருத்துவ அதிகாரி பதவி

**(POST OF MEDICAL OFFICER)**

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்** : மருத்துவ பேரவையின் முழுமையான பதிவு சகிதம் MBBS அல்லது அதற்குச் சமமான தகைமை

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : ஆரம்ப தரம் - ரூபா 71,490 - 3x1800 - 76,890.00 மாதாந்தம்.

தரம் II - ரூபா 78,705 - 6x1815 - 2x2,200 - 93,995.00 மாதாந்தம்.

தரம் I - ரூபா 96,925 - 15x2930 - 140,875.00 மாதாந்தம்.

இதற்குப் புறம்பாக அரசாங்கத் துறைக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**வேலைவாய்ப்பின் நியதிகள்** : நிரந்தரம் / ஒப்பந்த அடிப்படையில்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனக் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். தயவு செய்து உங்கள் தெரிவை தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பதாரர்கள் 2023-08-14ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**
**2023.07.28**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## வெற்றிடங்கள்

## பேர்பியூனிஸ்ட் பதவி

**(POST OF PERFUSIONIST)**

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்** : ஒரு (01) வருட கால அனுபவம் சகிதம் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட விஞ்ஞான இளமாணிப் பட்டம் (Bsc.) மற்றும் அரசாங்க மருத்துவ பேரவையில் Perfusionist ஆக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 46715 - 10x890 - 55615/= மாதாந்தம்.

இதற்குப் புறம்பாக அரசாங்கத் துறைக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**வேலைவாய்ப்பின் நியதிகள்** : நிரந்தரம் மற்றும் சேமநல நிதி அடிப்படையில்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவன தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2023 ஆகஸ்ட் 14ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

## பேசாப் பொருள் எல்லாம்...

(07 ஆம் பக்கத் தொடர்)

நான் அவரிடம் சென்று "அதெப்படி எனக்கு மட்டும் 30 ரூபா" என சண்டை போட்டேன். "சரி 50 ரூபா தருகிறேன், விடாமல் எழுது" என்றார் சிவகுருநாதன்.

சிவகுருநாதன் தான் புன்னகைக்காமல் செம பகிடிக் கதைகளை சொல்வார். அவர் தமிழ் எழுத்தாளர்களை, கல்விமான்களை தன் வசம் ஈர்த்திருந்தார். பழம்பெரும் தினகரன் வாசகர்கள் அனைவருமே சிவகுருநாதன் பேரில் மாறாத அன்பு வைத்திருக்கிறார்கள்.

தமிழ் இலக்கிய பரப்பிலும் சர்ச்சையான விஷயங்களை எழுப்புபவராக இருந்தார்.

சர்ச்சையான விஷயங்களை எழுதும் போது எதிர்ப்புகள் வருவதும், நிறுவனத் தலைவருக்கு புகார் கொடுக்கப்படுவதும், பத்திரிகைக் கவுன்சிலுக்கு மனு அளிக்கப்படுவதும் வழமை.

ஆசிரியர் என்பவர் இந்த எதிர்ப்புகளை சந்திக்கவும், எதிர்வாதம் செய்யவும், தன் தரப்பு நியாயங்களை தெரிவிக்கவும் தயாராக இருக்கவேண்டும். அந்தத் துணிச்சல் அவரிடம் இருந்தது. முத்துலிங்கம் தொண்ணூறுகளில் மத நம்பிக்கைகளை சாடியும் கட்டுரைகள் தீட்டியிருந்தார். அவற்றுக்கு எதிர்ப்புகள் எழுந்திருக்க வேண்டும்.

எனது கடற்கரைக்கு காதலர் கட்டுரைக்கும், பொது இடத்தில் காதலிப்பதை எப்படி ஒரு பத்திரிகை ஆதரிக்கலாம் என்ற வகையில் எதிர்ப்பு கிளம்பியது. சிவகுருநாதன் தான் ஒரு பண்பட்ட பத்திரிகையாளன் என்ற வகையில் தன் பக்க நியாயத்தைச் சொல்லி எழுத்தாளன் பக்கம் நின்றார். என்னிடம் "நீ பயப்படாமல் எழுதும் ஐசே!" என்றார்.

ஒரு எழுத்தாளனுக்கு ஊக்கமளிப்பது, நான் பார்த்துக் கொள்கிறேன், நீ உன் வேலையைச் செய் என்ற உத்தரவாதம் தான்! அது அவரிடம் இருந்தது.

அதனால்தான் 1994 இல் அவர் ஓய்வு பெற்ற பின்னரும் அவர் மறைந்து 20 ஆண்டுகள் கடந்த பின்னரும் நாம் அவரை மனதில் இருத்திக் கொண்டாடுகிறோம்.

ஆனால் பேசாப் பொருள் பேசவும், குரலற்றோருக்கு குரல் கொடுக்கவும் தமிழ்ப் பத்திரிகைகள் பின்னடிப்பதைக் காணும்போது, நீ செய், நான் பார்த்துக் கொள்கிறேன் என்ற சிவகுருநாதனின் துணிச்சல் வார்த்தைகளே பின் மண்டையில் ஒலிக்கிறது!




## மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

குருவுக்கு கேந்திரமான சுகஸ்தானத்தில் சூரியனும் புதனும் இருக்கிறார்கள். அது வலிமை. சூரியனும் புதனும் சேர்ந்து புத ஆதித்ய யோகத்தை ஏற்படுத்துகிறார்கள். எடுத்த செயலில் வெற்றி கிடைக்கும். அலுவலகத்தில் வேலைச் சிக்கல்கள் நீங்கும். உறவுகள் சகஜமாக இருக்கும். குடும்பத்தில் அன்பு அதிகரிக்கும். வீடு, மனை பதிவு செய்பவர்களுக்கு இது நல்ல யோகமான காலம். கலைஞர்களுக்கு புது அனுபவங்களும், ஒப்பந்தங்களும், லாபமும் கிடைக்கும். தொழில் முன்னேற்றமாக இருக்கும்.

எதிலும் கவனமாக இருங்கள். வாரக்கடைசியில் எதிர்பாராத சில பழிச் சொற்களை அல்லது அவமானங்களை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கலாம். வார்த்தைகளை கவனமாகக் கையாள வேண்டும்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

பக்தி சம்பந்தமான செயல்கள் அதிகரிக்கும். கோயில் பயணங்கள் மேற்கொள்ளும் வாய்ப்பும் உண்டு. இராசிநாதன் சுக்கிரன் பலம். கேந்திரத்தில் செவ்வாயோடு சேர்ந்து குருவால் பார்க்கப்படுகிறார். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். பண நெருக்கடிகள் குறையும். கொடுக்கல் வாங்கல்கள் சீராக இருக்கும். பிள்ளைகளின் கல்வி நல்ல முறையில் இருக்கும். சகோதரர்கள் உதவி கிடைக்கும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் சனி வக்கிரமடைந்து இருப்பதால் புதிய முதலீடு வேண்டாம். அகலக்கால் வைக்க வேண்டாம். தந்தைவழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்) மிக நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். தகவல் தொழில் நுட்பம், கணக்கு சம்பந்தமான துறைகளில் முன்னேற்றம் உண்டு. உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை தேவையான ஒத்துழைப்பைத் தருவார். நீண்டநாளாக எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. உங்களுடன் கருத்து வேறுபாடு கொண்டு விலகிச் சென்ற உறவினர்கள், வந்து சேருவார்கள். குருவின் பார்வை செவ்வாய் மீது விழுவதால் திருமணமாகாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமண யோகம் கைகூடி வரும்.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

தனஸ்தானத்தில் ஐந்துக்குரிய செவ்வாயும் சுக லாபாதியான சுக்கிரனும் இணைந்து அவர்களை குரு பார்ப்பது என்பது அற்புதமான அமைப்பு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள். அஷ்டமச் சனி தோஷத்தை குரு பார்ப்பது கட்டுப்படுத்தி முன்னேற்றத்தைத் தரும். சகோதர உறவுகள் பலப்படும். வழக்குகள் சாதகமாக முடியும். முயற்சிகள் வெற்றி பெறும். புனிதப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். நீங்கள் எதிர்பார்த்த அதிர்ஷ்டமும், பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்களும் நடைபெறும். சூரியன் இராசியில் இருப்பதால் அலைச்சல் அதிகரிக்கும். அரசாங்க அலுவலகங்களில் பின்னடைவும், தாமதமும், இடர்ப்பாடுகளும் உண்டு.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

இராசிநாதன் விரய ஸ்தானத்தில் இருக்கின்றார். கைக்காசு கெட்டியாக வைத்திருக்க வேண்டும். இராசியில் செவ்வாயும் சுக்கிரனும் இருப்பதும் குரு அவரைப் பார்ப்பதும் பாக்கிய அதிபதி செவ்வாய் இணைவதும் கணவன், மனைவி உறவுகள் நல்லபடியாக இருக்கும் என்பதை உணர்த்தும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சியும் ஆதாயமும் தரும். சுபகாரியங்கள், குறிப்பாகத் திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிலருக்கு தெய்வ தரிசன வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கும் வாய்ப்புண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. எக்காரணத்தை முன்னிட்டும் உங்கள் வேலையை நீங்கள் பிறரிடம் கொடுத்துச் செய்யாதீர்கள்.

## கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

கணவன் – மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு மறைந்து, அன்பும் ஒற்றுமையும் அதிகரிக்கும். சூரியன், 11ஆம் இடத்தில் வலம் வருவதால், அரசாங்கக் காரியங்களில் சகாயமும் லாபமும் உண்டாகும். வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகையால் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். தொழில் உத்தியோகத்தில் வளர்ச்சி இருக்கும். அரசாங்க தேர்வுகளில் வெற்றி பெறும் வாய்ப்பு உண்டு. தேவையான உதவிகள் கிடைக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இரண்டில் கேது இருப்பதால் எதையாவது பேசி சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டாம். அஷ்டமத்தில் ராகு. குடும்ப ஸ்தான கேது குடும்ப பிரச்சினைகளை பிறரிடம் பேசி குழப்பம் செய்ய வேண்டாம். சுக்கிரன் பெண்களால் சில பிரச்சினைகளைத் தூண்டுவார். பயணங்களில் எச்சரிக்கையோடு இருங்கள். பொருட்கள் தவறவிடும் வாய்ப்பு உண்டு.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

தொழில் வளர்ச்சி அற்புதமாக இருக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு சாதகமான நேரம். உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் உண்டு. பழைய பிரச்சினைகள் ஓயும். புதிய கூட்டணிகள் சேருவார்கள். பொதுவாழ்வில் பொறுப்பு மிக்க பதவி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். புகுந்த வீட்டு உறவினர்களுடன் சிக்கல் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

ராகு ஏழில் இருப்பதால் புதிய முதலீடுகளை தவிர்க்க வேண்டும். உடல் நலனில் கவனம் தேவை. 5ஆம் இடத்தில் சனி வக்கிரகதியோடு இருக்கிறார். பிள்ளைகளால் திடீர் செலவுகள் ஏற்படும். குழந்தைகள் சம்பந்தமான சிறிய மனத் தடைகள்,

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

இராசிக்கும் 6க்குமுரிய செவ்வாய், சுக்கிரனோடு இணைவதால் விபரீத இராஜயோகம் ஏற்படும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும் வாய்ப்பு உண்டு. ராகுபகவான் ஆறாம் இடத்தில் இருந்து வளர்ச்சிக்கு உதவுவார். சிலருக்கு அவர்கள் விரும்பிய இடத்துக்கு பணி மாற்றம் கிடைக்கும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். மனக் குழப்பம் அகலும். பணப்புழக்கமும் நன்றாக இருக்கும். இராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் இருக்க, அவரை குரு பார்க்கிறார். இராசிநாதன் பலம் பெற்று இருப்பதால் எல்லாச் செயல்களிலும் வெற்றி உண்டாகும். 6 ஆம் இடத்தில் இருப்பதால் தேவையற்ற முதலீடுகளை தவிர்க்கவும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் நண்பர்களின் சந்திப்பு இருக்கும். குரு 5 ஆம் இடத்தில் இருக்கிறார். தொழில் ஸ்தானத்தைப் பார்வையிடுகின்றார். தொழில் ஸ்தானத்தில் செவ்வாயும் சுக்கிரனும் இருக்கின்றார்கள். அலுவலகத்தில் சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். புதன் 9 இல் இருப்பதால் புதிய ஆடை ஆபரணச்சேர்கை உண்டு. தொழிலில் இலாபம் ஏற்படும். வெளிநாட்டு உத்தியோகம் மற்றும் முயற்சிகள் பலிக்கும். சுபயோகப் பேச்சுக்கள் கைகூடும். சூரியன் அஷ்டமத்தில் இருக்கிறார். தந்தைவழி உறவினர்களால் பிரச்சினைகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் – மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. ராகு 5ஆம் இடத்தில் இருப்பதால் குழந்தைகள் சம்பந்தமான பிரச்சினைகள் மனத்தாங்கல்கள் ஏற்படலாம்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

இராசிநாதன் சனி இரண்டில் இருக்க லாபாதிபதி செவ்வாய் அவரைப் பார்க்கிறார். சுக்கிரனும் அவரைப் பார்க்கிறார். பணவரவு திருப்திகரமாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் நற்செய்திக்கும் வாய்ப்பு உள்ளது. நட்பு ஓங்கும். கருத்துவேறுபாடுகளும் கசப்பு உணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படும். வாழ்க்கைத் துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். பங்குதாரர்களால் தேவையான உதவி கிடைக்கும். இடம், வீடு வாங்கும் முயற்சிகள் கைகூடும்.

4 ஆம் இடத்தில் ராகு இருக்கிறார். அவரோடு குரு இணைந்திருக்கிறார். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பு உண்டு. உணவுக் கட்டுப்பாடுகள் அவசியம்.

## கும்பம்

(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்) கடன் சுமை குறையும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் சாதகமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு நீங்கி ஒற்றுமை நிரந்தரமாகும். சுறுசுறுப்பாக காரியங்கள் நடைபெறும். அதற்கு துணையாக 3 இல் ராகுவும் இருக்கிறார். புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. பயணங்கள் பலன் தரும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பதவி கிடைக்கும். வியாபாரம் தொழில் வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். சுக்கிரன் அமைப்பாலும், அவரை சனி பார்ப்பதாலும் புதிய முதலீடுகளை செய்ய வேண்டாம். ஆடம்பர செலவுகளைக் குறைக்கவும். அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க வேண்டாம். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் மட்டுமே கவனமாக இருக்கவும். தேவையில்லாமல் பேசினால் சிக்கல்.

## மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

புதிய முயற்சிகள் வெற்றியாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். தந்தை வழி உறவினர்களால் நன்மை உண்டாகும். பிரிந்திருந்த கணவன் – மனைவி ஒன்று சேர வாய்ப்பு ஏற்படும். 6 இல் செவ்வாய் இருப்பதால் நிலம், வீடு யோகம் உண்டு. கடன் வாங்கியாவது வீடு வாங்கிவிடும் வேகம் வரும். குரு 2 ஆம் இடத்தில் இருப்பதால் காரியத் தடைகள் அகலும் சிலருக்கு குழந்தை பாக்கியமும் கிடைக்கும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சம்பந்தமில்லாத வேலையைத் தருவார்கள். சிலருக்கு எதிர்பாராத இட மாற்றம் ஏற்படக்கூடும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் வேண்டாம். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். சுக்கிரனால் பெண்கள் மூலம் மறைமுகமான பிரச்சினைகள் உண்டு.

---

# யாழ்ப்பாணத்தில் பக்கவாதத்தால் அதிகளவில் பாதிக்கப்படும் இளவயதினர்





யாழ்ப்பாணத்தில் போதைப்பொருட்களை பயன்படுத்தி உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. அதேவேளை 500க்கும் அதிகமானவர்கள் மீது போதைப்பொருள் தொடர்பிலான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஐஸ் மற்றும் ஹெரோயின் போன்ற உயிர்க்கொல்லி போதைப்பொருள் பாவனை யாழ்ப்பாணத்தில் திடீரென அதிகரித்துள்ளது. அது பெரும்பாலும் 18 வயது தொடக்கம் 23 வயதுக்கு இடைப்பட்டவர்களிடமே அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்வாறான போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் சிறிய வகை ஊசிகள் மூலம் தமது இரத்த நாளங்களின் ஊடாக போதைப்பொருளை உட்செலுத்திக் கொள்கின்றனர்.

இவ்வாறு ஊசி மூலம் போதைப்பொருளை உட்செலுத்துவதனால் கிருமி தொற்று ஏற்படுவதனாலும், அதிகளவான போதைப் பொருள் உட்செலுத்தப்படுவதாலும் மரணங்கள் சம்பவிக்கின்றன.

ஒருவர் பாவித்த ஊசியை ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் சுழற்சி முறையில் பாவிக்கின்றனர். அது மட்டுமின்றி நீண்ட நாட்களாக உரிய பராமரிப்பின்றி ஒரே ஊசியினை பலரும் சுழற்சி முறையில் பாவிப்பதனால் கிருமித் தொற்று ஏற்படுகின்றது.

கிருமிகள் ஊசி மூலம் இரத்த நாளங்கள் ஊடாக இரத்தத்தில் கலந்து நுரையீரல், இருதயம் உள்ளிட்ட உறுப்புகளைத் தாக்குகின்றது. அதனால் அவை செயலிழந்து மரணங்கள் சம்பவிக்கின்றன.

அண்மையில் யாழ்ப்பாணம் தாவடி பகுதியை சேர்ந்த தர்மலிங்கம் எனும் இளைஞன் உயிரிழந்துள்ளார். இளைஞனின் சடலம் காணப்பட்ட இடத்திற்கு அருகில் தேசிக்காய், பீடி, தீப்பெட்டி, மதுபானப் போத்தல், ஊசி (சிரிஞ்) உள்ளிட்டவை காணப்பட்டுள்ளன.

இளைஞனின் உடற்கூற்று பரிசோதனையில் இளைஞன் அதிகளவான போதையை நுகர்ந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலைமை காணப்படுகின்ற சூழ்நிலையில், நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜா அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்த போது,

வடக்கு மாகாணத்தில் அதிகரித்த மது பாவனை காரணமாக நரம்பியல் சார்ந்த நோய் தாக்கங்களுக்கு பலர் உள்ளாகி இருப்பதாகவும், அதனால் மாரடைப்பு மற்றும் பக்கவாத நோய்த் தாக்கங்களுக்கு இளவயதினர் பலரும் உள்ளாகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பக்கவாதம் உலகளாவிய ரீதியில் மரணத்தை ஏற்படுத்தும் நோய்களில் மூன்றாவது இடத்தில் உள்ளது. அது தொடர்பிலான




விழிப்புணர்வு மக்கள் மத்தியில் இருப்பது அவசியமாகும்.

பக்கவாதம் ஏற்பட்ட உடனேயே, அதாவது நான்கரை மணி நேரத்திற்குள்ளாகவே அதற்குரிய சிகிச்சை வழங்கக்கூடிய வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும்.

அங்கு சிகிச்சையின் போது, நோயாளியின் மூளையில் எவ்வாறான பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதனை கண்டறிவோம். அதாவது மூளையில் இரத்த அடைப்பா? அல்லது இரத்தப் பெருக்கா என்பதனை முதலில் கண்டறிவோம். பின்னர் அதற்கு ஏற்றவாறு சிகிச்சை வழங்குவோம்.

குறிப்பாக 85 வீதமான பக்கவாதம், மூளையில் ஏற்படும் இரத்த அடைப்பினால் ஏற்படுகின்றது. இந்த இரத்த அடைப்பினால் ஏற்படும் பக்கவாத நோயினை குணப்படுத்துவதற்கான சிகிச்சை முறைகள், மருந்துகள் உலகளாவிய ரீதியில் உண்டு. அது யாழ். போதனா வைத்தியசாலையிலும் உண்டு.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தட்டுப்பாடு காணப்படுகின்ற போதிலும் வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கியே வருகின்றோம்.

அதேவேளை இன்சுலின் குறைபாடுகள் வெகு சொற்ப அளவானவர்களுக்கே இயற்கையாவே காணப்படும். இதில் பெரும்பாலானவர்களுக்கு அதிகரித்த மது பாவனை காரணமாகவே இன்சுலின் குறைபாடுகள் காணப்படுகின்றன.

அதிகரித்த மது பாவனையால் சதையி என்ற அங்கம் பாதிக்கப்படுகிறது. இந்த சதையி குளுக்கோஸின் அளவினை கட்டுப்படுத்த இன்சுலினை உற்பத்தி செய்கிறது. ஆகவே இந்த சதையி அதிகரித்த அல்கஹோல் பாவனையால் பாதிக்கப்பட, இன்சுலின் உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது.

மதுபாவனை, போதைப்பொருள் பாவனையினால் அவர்களை அறியாமலே அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

அதிகரித்த மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையால் பெரும்பாலான இளையோர் இளவயதில் நரம்பியல் சார்ந்த நோய்த் தாக்கங்களுக்கும் பக்கவாதம், மாரடைப்பு போன்ற நோய்த் தாக்கங்களுக்கும் உள்ளாகி முடங்குகின்ற அதேவேளை இளவயதில் மரணிக்கின்றனர் என்றார்.

போதைப்பொருள் பாவனை அதிகரித்து செல்லும் நிலையில், யாழ்.போதனா வைத்திய சாலை சமூகம் அண்மையில், ஐந்தம்ச கோரிக்கையை முன் வைத்தது.

1. போதைப்பொருள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முப்படைகளையும் உடனடியாக வலியுறுத்துதல்.

2.போதைப் பொருள் விநியோகம் தொடர்பான தகவல்களை வழங்குவோரை பாதுகாப்பதற்கான பொறிமுறையை உருவாக்குதல்.

3. போதைப்பொருள் சம்பந்தமான தகவல்களை தயக்கமின்றி வழங்க பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதலும், அவர்களைப் பாதுகாத்தலும்.

4. போதைப் பொருள் பாவனைக்கு எதிரான மக்கள் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து பொலிஸாருடன் இணைந்து போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு உதவியளித்தலும், ஊக்கப்படுத்துதலும்.

5. போதைக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்குவதும், அதன் தொடர்ச்சியான செயற்பாடுகளை உறுதிப்படுத்தலும், ஆகிய கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

எனவே யாழ்ப்பாணத்தில், தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் இந்த போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் முன்வரவேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மயூரப்பிரியன்**

---

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் மௌலவி இப்ழால்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி (01.08.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில், முஸ்லிம் சேவைக்கு சன்மார்க்க ரீதியாக வளம் சேர்த்து புகழ்சேர்த்தோர் வரிசையில் வெலிகமையை பிறப்பிடமாக கொண்ட மௌலவி எம்.ஏ. முஹம்மத் இப்ழால் (பாரி) அதிதியாக கலந்து கொள்கிறார்.

1985 களில் இஸ்லாமிய நற்சிந்தனை மூலம் முஸ்லிம் சேவையில் சன்மார்க்க பணியாற்றத் தொடங்கி, பின்னாட்களில் பல்வேறு சன்மார்க்க நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார்.

முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர் அல்ஹாபிஸ் எஸ்.எம். ஹனிபாவால் அறிமுகப்படுத்தப்பட்ட "பிரார்த்தனை" நிகழ்ச்சியை தொடராக சுமார் நான்கு ஆண்டுகள் வழங்கி அதிக நேயர்களின் கவனத்தை தனதாக்கிக்கொண்டார்.

அரசாங்க ஆசிரியர், ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி ஓய்வு பெற்ற இப்ழால் மௌலவி 1989 ஆம் ஆண்டு தொடக்கம், கொழும்பு பெரிய பள்ளி வாசலில் கதீபாக பணியாற்றி வருகிறார். நீண்டகாலமாக கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் ஹாஜிகளுக்கான, ஹஜ் உம்ரா பயண வழிகாட்டியாகவும் கடமையாற்றிவருகிறார்.

நிகழ்ச்சியை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# படித்ததும் பகர்வதும் 153



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### முதலாம் தரத்தில் மாணவர்கள்!

அடுத்த கல்வி ஆண்டில் மாணவர்களை முதலாம் தரத்தில் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை பாடசாலைகளுக்கு சமர்ப்பிக்கின்ற காலம் இது. முன்னைய காலம் போலல்லாது, பெரிய பாடசாலைகளுக்கு மட்டுமன்றி, கிராமிய மட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கும் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.



நகரப் பிரதேச பாடசாலைகளிலும், பிரபலமான, ஜனரஞ்சகமான பாடசாலைகளிலும் மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் இன்றைய காலத்தில் மிகவும் அத்தியாவசிய தேவையாக இருப்பதைக் காண முடிகிறது.

உரிய நேரத்தில் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது, உரிய முறையில் விண்ணப்பங்களை நிரப்புவது, அவற்றோடு தேவைப்படும் ஆவணங்களை சமர்ப்பிப்பது போன்ற விடயங்கள் முதலாம் தரத்தில் மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்களில் முக்கியத்துவம் பெறுவதோடு, சவால் மிக்கவையாகவும் காணப்படுகின்றன.

எனினும், பெரும்பாலான பெற்றோர்கள் இவ் விடயத்தில் போதிய தெளிவு இல்லாதவர்காளாக இருப்பதனால், இத்தகைய விண்ணப்பங்களை முறைப்படி சமர்ப்பிப்பதில் தவறிழைக்கின்றனர்.

இத்தகைய தவறுகள் குறித்த மாணவனின் எதிர்காலத்தை பாரிய அளவில் பாதிப்படைய செய்யக் கூடியவை என்பதை ஒவ்வொரு பெற்றோரும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, இவ்விடயத்தில் பெற்றோர் அதிகூடிய கவனத்துடனும், அக்கறையுடனும் செயல்படுதல் அவசியம்.

ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள கற்றறிந்தவர்களும், போதிய அறிவுடையவர்களும், மற்றும் அனுபவம் மிக்கவர்களும் இவ்விடயத்தில் கரிசனை கொண்டு தமது நெருங்கிய, தூர உறவுக்காரர்களின் பிள்ளைகளையும், அயலவர்களின் பிள்ளைகளையும் பொருத்தமான பாடசாலைகளில் சேர்க்கும் விடயத்தில் உரிய அறிவுறுத்தல்களையும், ஆலோசனைகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்கி உதவிட முன்வர வேண்டும்.

கிராம, நகர, பிரதேச மட்டங்களில் செயல்படுகின்ற சமூக சேவை இயக்கங்கள் இவ்விடயத்தில் சரியான திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டும். குறித்த காலகட்டத்தில் முதலாம் தரத்தில் மாணவர்களை சேர்க்கும் விடயத்தில் தமது பகுதி பெற்றோர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை, இயலுமான, பொருத்தமான, பரவலான முறையில் வழங்கிட வேண்டும். அவசியமானவர்களை நேரில் சந்தித்து சரியான அறிவுறுத்தல்களை வழங்குவதோடு அவசியமான உதவிகளை செய்திட வேண்டும். இவ்விடயத்தில் இளைஞர்கள் அதிக பங்களிப்புகளை வழங்க முடியும். இவ்வகையான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம், மாணவர்கள் முதலாம் தரத்தில் உரிய முறையில், தவறாமல், பொருத்தமான பாடசாலைகளில் அனுமதிகளை பெற வழி ஏற்படும். அதன் மூலம் அவர்களது எதிர்காலம் வளம் பெற உதவிகள் வழங்கியவர்களாக ஆக முடியும். இது மகத்தான நற்பணியாகும்.

## நெஞ்சுக்கு நீதி

மாணவர்க்கு நற்கல்வியேவாழ்வின் அடித்தளம்
நன்றாயதை வழங்க பாடசாலையில் சேர்க்கணும்
உணர்ந்தால் உலகிலே கல்வியேதான் கருந்தனம்
உணர்வோடு செயற்படுவீர் மாணவர் படிக்கணும்

## பிரிந்தார் பெருமை

### 'கலாபூஷணம்' ஸைபுல்லாஹ் மஹ்தூம்

இலங்கையின் பிரபல பாடகரும், நாடறிந்த 'காரி'யுமான ஸைபுல்லாஹ் மஹ்தூம் கடந்த ஜூலை 24ம் (2023.07.24) திகதியன்று காலமானார்.

பிரபல இஸ்லாமிய கீத பாடகர் 'மூஸிக்தூரி' மஹ்தூம் ஏ. காதர், ஹாஜியாணி ஐனுல் ஸேக்கியா தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையாக கொழும்பு 12 அப்துல் ஹமீத் வீதியில் 1957 ஆம் ஆண்டு பிறந்தவர் இவர். கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியின் பழைய மாணவர். தனது தந்தையிடம் அல்குர்ஆனை 'தஜ்வீத்', முறைப்படி ஓதக் கற்றுக்கொண்டவர்.



நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட பல அல்குர்ஆன் ஓதல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்.

தனது 18 வது வயதிலேயே, அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட கிராஅத் போட்டியொன்றில், முதலிடம் பெற்று, இலங்கையின் முதலாவது ஜனாதிபதி வில்லியம் கொபல்லாவின் கரங்களினால் தங்கப் பதக்கம் பெற்றமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

மலேசியா, ஈரான், லிபியா, சவுதி அரேபியா போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட சர்வதேச கிராஅத் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தி கலந்து கொண்டுள்ளார். சவுதி அரேபிய கிராஅத் போட்டியில், மூன்றாவது இடத்தை சுவீகரித்து, இலங்கைக்குப் பெருமை தேடித்தந்தவர் ஸைபுல்லாஹ் மஹ்தூம்.

1977களின் இறுதிப் பகுதியில் இலங்கையில், சிங்களப் பாடல் துறையில் "த்ரீ சிஸ்டர்ஸ்" என்ற பெயரில் மூன்று சகோதரிகள் இணைந்து பாடி புகழ் பெற்றனர். அக்காலத்தில் இலங்கை வானொலியின் பிரபல பாடகராக விளங்கிய இவரது தந்தை 'மூஸிக்தூரி' மஹ்தூம் ஏ. காதர், தனது புதல்வர்களான உபைதுல்லாஹ் மஹ்தூம், ஸைபுல்லாஹ் மஹ்தூம், கலைக்கமல் ஜமால்தீன் மஹ்தூம் மூவரையும் "த்ரீ பிரதர்ஸ்" ("Three Brothers" ) எனப் பாடல் துறைக்கு அறிமுகப்படுத்தி மக்கள் அபிமானம் பெற வைத்தார்.

இலங்கை வானொலியின் 'ஏ' தரப் பாடகராக இருந்த ஸைபுல்லாஹ் மஹ்தூம், இலங்கையின் பிரபலமான மோகன்ராஜின் "அப்சராஸ்" இசைக் குழுவின் பாடகராக விளங்கியதோடு அக்குழுவோடு பிரான்ஸ், லண்டன் போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று பாடல்களைப் பாடியுள்ளார். ஜனரஞ்சகமான ஹிந்திப் பாடல்களை அச்சொட்டாகப் பாடுவதில் இவர் அதிகம் பிரபலமடைந்தார்.

பிற்காலத்தில் ஹிந்தி மற்றும் திரைப்படப் பாடல்கள் பாடுவதை முற்றாக தவிர்த்து, சன்மார்க்கப் பணியாற்றுவதிலேயே அதிக ஆர்வம் செலுத்தியதோடு, 'தஜ்வீத்' முறைப்படி அல்குர்ஆனை ஓதக் கற்றுக்கொடுக்கும் ஆசானாகவே தனது அந்திம காலத்தைக் கழித்தார்.

மர்ஹூம் ஸைபுல்லாஹ் மஹ்தூமும் நானும் ஒன்றாக அடுத்தடுத்த ஆசனங்களில் அமர்ந்திருந்து, கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் அரசின் 'கலாபூஷணம்' விருதினைப் பெற்றுக் கொண்ட நிகழ்வு இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது. எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் மறு உலக வாழ்வை வளமாக்கியருள்வானாக!

## சிந்தனை செய் மனமே

### 'டயர் பஞ்சர்!'

நன்கு கற்றுத் தேர்ந்த பொறியியாளர் அவர். தனது காரில் தனியே பயணம் செய்து கொண்டிருந்தார். இடை வழியில் காரின் ஒரு டயர் பஞ்சர் ஆகிவிட்டது. இறங்கிப் பார்த்தார். கண்ணுக்கு எட்டிய தூரத்தில் கடைகள் ஏதும் தெரியவில்லை. ஒரு டயர் கடையைக் காண குறைந்தது ஓரிரு கிலோ மீட்டர்களாயினும் செல்ல வேண்டும். கூட யாரும் வராத



தால் தானே டயரை மாற்ற ஆரம்பித்தார்.

பஞ்சரான டயரின் அனைத்துப் 'போல்ட்' ஆணிகளையும் கழற்றி விட்டு, மாற்று டயரை எடுக்கப் போகும் போது, அவரது கால் இடறிக் கீழே விழுந்தார். அவரது கையில் வைத்திருந்த போல்ட் ஆணிகள் அனைத்தும் அருகிலிருந்த வடிகாலில் விழுந்து விட்டது.

செய்வதறியாது, 'என்ன செய்யலாம்?' என்று யோசித்து கொண்டு சுற்றும் சூழ பார்த்துக் கொண்டிருந்தார்

அப்பொழுது கிழிந்த ஆடையோடு ஒரு வழிப்போக்கன் அந்த வழியாக வந்தான்.

அவன் அவரைப் பார்த்து, "ஐயா என்ன ஆச்சு...?" என்று வினவினான். அவரோ, 'இவனுக்கு என்ன தெரியும்? இவனிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது?' என்று எண்ணியபடி, "ஒன்றும் இல்லை... நீங்கள் போகலாம்" என்றார்.

அந்த வழிப்போக்கன் கிளம்ப எத்தனித்தான். அப்பொழுது அந்த பொறியியலாளருக்கு திடீரென ஒரு எண்ணம் தோன்றியது.

'இந்தச் சாக்கடை நிரம்பிய வடிகாலில், இவனை விட்டால் வேறு யாரும் இறங்க மாட்டார்கள், அதனால் இவனையே இறங்கச் சொல்லலாமே' என்று எண்ணி உடனே அவனிடம்,

"இந்த டயரின் போல்ட் ஆணிகள் எல்லாம் வடிகாலில் விழுந்து விட்டன. நான் உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன், இந்த வடிகாலில் விழுந்த என்னுடைய போல்ட் ஆணிகளை எடுத்துத் தாருங்கள்" என்றார்.

உடனே அவன், "ஓ! இது தான் உங்கள் பிரச்சினையா? நான் அதில் இறங்கி எடுத்து தர முயற்சிப்பதில் ஆட்சேபணை ஏதும் இல்லை. ஆனால் அதை விட ஒரு இலேசான வழி இருக்கிறது.

உங்கள் காரின் மீதமிருக்கும் மூன்று சக்கரங்களில் ஒவ்வொரு டயரிலிருந்தும் தலா ஒவ்வொரு போல்ட் ஆணிகளை கழற்றி இந்த டயரை பொருத்தி இப்போதைக்கு உங்கள் காரை எடுத்துச் செல்லுங்கள். வழியில் வரும் டயர் கடையில் நாலு போல்ட்டு ஆணிகளை வாங்கி எல்லா டயர்களிலும் ஒவ்வொன்றாக மாட்டிக் கொள்ளுங்கள்" என்றார்.

தான் படித்துப் பொறியியலாளராக இருந்தும், தனக்கு இந்த இலேசான வழி தெரியாமல் போய் விட்டதே என்று எண்ணிய பொறியியலாளர், கிழிந்த ஆடையோடு வந்த வழிப்போக்கனை 'இவனுக்கு என்ன தெரியும்?' என்று தவறாக, தாழ்வாக நினைத்ததற்கு தனக்குள்ளேயே வெட்கித் தலை குனிந்தார்.

## பேசும் படம்




**மற்றவரின் வெற்றியில் மகிழ்கின்றீர்களா? பொறாமை கொள்கிறீர்களா?**
**உலகில் நேர் எதிரான சிந்தனைகளைக் கொண்ட இருவர்!**

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

---



# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 49

# திருவள்ளுவத்தில் நிதிமுகாமைத்துவம்

உண்மையில் முகாமையாளர் தனது நிறுவனத்தின் நிதி நிலைமைகளை ஆராய்ந்து அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச நிதி வரம்புகளை நிறுவி அதற்குள் தனது நிறுவனத்தின் உற்பத்திகளை உற்பத்தி செய்ய வேண்டும். அப்போதுதான் நிறுவனம் முறையற்ற நிதி முகாமைத்துவம் காரணமாக திவாலாகும் நிலையினைத் தவிர்க்க முடியும். அதாவது ஒரு நிலையான உற்பத்திக் கொள்கையைப் பின்பற்ற வேண்டிய (*Follow a policy of level production*) நிலைமை அந்த நிறுவனத்தில் இருக்கின்றதை முகாமையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும். அதாவது நிறுவனத்தின் ஒவ்வொரு உற்பத்திச் செயல்முறைப் படிநிலையும் வாடிக்கையாளர் தேவை விகிதத்துக்கு சமமான நிலையான விகிதத்தில் ஒருங்கிணைந்து செயல்படுவதனை உறுதி செய்ய வேண்டும்.

இக்கருத்துகளைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

**"அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்". (குறள் 474)**

அதாவது மற்றவர்களோடு தனக்கு இயல்பாக அமைந்துள்ள வலிமைக்கு பொருந்தும்படி ஒத்து நடக்காமல் தன் வலிமையின் அளவையும் அறியாமல் தன்னை வியந்து மதித்து மிகைப்பட எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டிருப்பவன் விரைவில் கெடுவான் என்பது இக்குறளின் பொருளாகும்.

அதாவது நிறுவனம் ஒன்றில் காணப்படும் உண்மையான நிதி வளங்களைப் பொறுத்து நிதி தொடர்பான துல்லியமான வரம்புகளை நிர்ணயம் செய்து அந்த வரம்புகளை முகாமையாளர் பின்பற்றவேண்டிய தேவையினைத் திருவள்ளுவர் இங்கு வலியுறுத்துகின்றார். தனது நிறுவனத்தின் எல்லை கடவாமல் அடங்கி இருக்கத் தெரியாத அல்லது தனது நிறுவனத்திற்குரிய நிதி ஆற்றலுக்குள் அடங்கி மற்றவர்களோடு ஒத்து இயங்காத அல்லது தனது நிறுவனத்துக்கு உள்ள நிதி நிலைமைக்கு ஏற்றவாறு வேலை செய்யாத ஒரு முகாமையாளர் இருப்பானாயின் அவனைத் திருவள்ளுவர் அமைந்தாங்கு ஒழுகான் என்கிறார். அதேபோன்று தனது நிறுவனத்தின் நிதி ஆற்றலை அறியாதவனை அதனை ஒப்பிடத் தெரியாத முகாமையாளரை அளவறியான் என்றும், அதேபோன்று தனது நிறுவனத்தைப் பற்றி மிகப் பெரிதாக எண்ணி ஏனைய நிறுவனங்களைக் காட்டிலும் தனது நிறுவனம் சிறந்தது என்று தன் முதுகைத் தானே தட்டிப் பாராட்டிக் கொள்ளும் முகாமையாளரை தன்னை வியந்தான் என்றும் சொல்கிறார் திருவள்ளுவர்.

எனவே முகாமையாளர் என்பவர் தனது நிறுவனத்திற்கு நிதி தொடர்பான வரம்புகளை நிறுவி அதற்குள் செயல்படத்தக்க ஒருவராக இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். உண்மையில் நிறுவனம் தேவையில்லாமல் மிக அதிகமாக உற்பத்தி செய்யாமல் இருப்பதனை முகாமையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும். பொருட்கள் மலிவாக இருந்தாலும் அவை அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுமாயின் அது நிறுவனத்தின் செயற்பாட்டுச் சுழற்சியை அல்லது பணச் சுழற்சியினைப் பாதிக்கும்.

அதேவேளை முகாமையாளர் நிறுவனத்தின் இயக்க செயல்திறனை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும் (*Improve operating efficiency*). இக்கருத்துக்களைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

**"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்**
**சால மிகுத்துப் பெயின்" (குறள் 475)**

அதாவது மயிலிறகு ஏற்றிய வண்டியே ஆனாலும், அந்தப் பண்டமும் அளவோடு ஏற்றாமல் அளவுகடந்து மிகுதியாக வண்டியில் ஏற்றினால் அதன் அச்சு முறியும் என்கிறார் திருவள்ளுவர். மிக மென்மையான மயிலிறகைக் கூட அளவுக்கு அதிகமாக ஏற்றினால் வண்டி அச்சு முறிந்துவிடும் என்று சொல்வதன் மூலம் திருவள்ளுவர் தேவையற்ற அதிகரித்த உற்பத்தி நிறுவனத்திற்கு கூடாது என்கிறார்.



எனவே முகாமையாளர் தனது நிறுவனத்தின் நிதி ஆற்றலை அறிந்து அதற்கேற்ப உற்பத்தியினை மேற்கொள்ள வேண்டும். ஒருபோதும் கடனுக்கு மேல் கடன் வாங்கி உற்பத்தியை மேற்கோள்ள முடியாது. அது ஒருகட்டத்தில் நிறுவனத்தை நட்டத்தில் மூழ்கச் செய்துவிடும் என்பது திருவள்ளுவரின் அறிவுரையாகும்.

எனவே முகாமையாளர் தனது நிறுவனத்தின் நிதி வரம்புகளின் எல்லைகளைக் கடந்து அல்லது திறன் வரம்புகளைக் கடந்து அதன் செயற்பாடுகளையோ அல்லது உற்பத்திகளையோ அதிகரிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

நிறுவனம் ஒன்றின் நிதி முகாமையாளரின் முக்கிய கடமைகளில் ஒன்று நிறுவனத்தின் பண வரவுகளைத் துரிதப்படுத்தல். உதாரணமாக நிறுவனத்தின் செலவைக் குறைப்பதன் மூலம், கூடுதல் வருமான வழிகளை உருவாக்குவதன்மூலம், விரைவான கட்டணங்களுக்கு தள்ளுபடியை வழங்குவதன் மூலம், முன்கூட்டியே செலுத்துவோருக்கு வெகுமதிகளை வழங்குவதன் மூலம், உற்பத்தி அளவுகளைக் கண்காணிப்பதன் மூலம், விலை உயர்வுகளைக் கண்காணிப்பதன் மூலம் என்று நிதி முகாமையாளர் நிறுவனத்தின் வரவுகளை அதிகரிப்பதற்கு பல்வேறு உத்திகளைக் கையாளலாம். இவ்வாறு உத்திகளைக் கையாளும் போது நிறுவனத்தின் நிதி வரம்புகளை அந்த நிறுவனத்தின் அதிகபட்ச செயல்பாட்டுத் திறனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இக் கருத்தினைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியின் மூலம் தெளிவாக விளக்குகின்றார்.

**"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்**
**உயிர்க்கிறுதி ஆகி விடும்" (குறள். 476)**

ஒரு மரக்கொம்பின் நுனியிலே ஏறிய ஒருவர் ஊக்க மிகுதியால் தொடர்ந்தும் ஏற முயன்றால் அவர்தம் உயிருக்கு முடிவை உண்டாக்கும் என்பது இக்குறளின் பொருளாகும். பொதுவாக பழம் பறிப்பதற்காகவோ அல்லது இலைகள் கொய்வதற்காகவோ அல்லது கொப்புகளை ஒடிப்பதற்காகவோ மரத்தில் ஏறுவது வழக்கம். ஒரு கிளையின் நுனிவரை சென்று அதன் மேல் கிளைகளிலுள்ள பழத்தைப் பறிக்க முயலும் ஒருவர் பழம் கைக்கு எட்டவில்லை என்று அக்கிளையில் இன்னும் நடந்து மேலே செல்ல முயன்று நுனி வரை சென்றால் அவரின் எடை தாங்காமல் அந்தக் கிளை முறிந்து விடும். அந்தக் கிளையின் நுனிதான் அவர் நடக்கக்கூடிய உச்ச பட்ச எல்லை அதையும் மீறினால் கிளை உடைந்து விடும். இது போலத்தான் நிறுவனத்தின் நிதி வரம்பு எல்லை மட்டுமே ஒரு நிறுவனம் தனது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். எனவே தனது நிறுவனத்தின் நிதி ஆற்றல் வரம்பினை அறிந்து அதன் வலிமையினை அறிந்து முகாமையாளர் செயற்படவேண்டும். அதற்கேற்றாற் போல பண வரவினை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்பது திருவள்ளுவரின் அறிவுரையாகும்.

பொதுவாக முகாமைத்துவத்தில் 'வெளியேறும் உத்தி' (*exit strategy*) என்ற ஒன்று உண்டு. அதாவது நிறுவனம் தனது நிதி ஆற்றலின் எல்லையினை அடைந்து விட்டால் உற்பத்தி தொடர்பான தொடர் முயற்சிகளில் இருந்து வெளியேறுவதே பயன் மிக்க ஒன்றாகும். அதனையே திருவள்ளுவர் இங்கு குறிப்பிடுகின்றார்.

எனவே உற்பத்தியை அதிகரிப்பதற்காகத் தொடர்ந்து கடன் வாங்கினால் நிறுவனம் மீள முடியாத சிக்கலில் மாட்டிக்கொள்ளும் என்பதனை முகாமையாளர் உணர்ந்து கொள்ள வேண்டும். நிறுவனத்தின் பொருட்களின் விநியோகம், என்பது பண வரவுகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும். பண வரவினை அதிகரிப்பதற்கு விநியோகம் உதவி செய்தாலும் வழங்கல் என்பது வரவுகளின் அளவுக்கு ஏற்பவே இருக்க வேண்டும். நிறுவனத்தில் இருந்து பொருட்களின் வழங்கல் என்பது நிறுவனத்தில் இருந்து நிறுவனத்தின் நிதி வெளியேற்றத்தினைக் குறிக்கின்றது. எனவே பொருள் வழங்கலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பண வெளியேற்றத்தினைக் கட்டுப்படுத்தலாம் (*Decelerate cash outflows*). இக்கருத்துக்களைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

**"ஆற்றின் அறவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கு நெறி". (குறள். 477)**

அதாவது தக்க வழியில் பிறர்க்குக் கொடுக்கும் அளவு அறிந்து கொடுக்கவேண்டும். பணம் வரும் வழியின் அளவு தெரிந்து அதற்கேற்ப கொடுக்கவேண்டும் அதுவே பொருளைப் போற்றி வாழும் வழியாகும் என்கிறார் திருவள்ளுவர்.

நிறுவனத்திற்கு பணம் வரும் வழியின் அளவு தெரிந்து கொள்ளல் என்பதனை ஆற்றின் அறவறிந்து என்று கூறும் திருவள்ளுவர் நிறுவனத்தில் இருக்கும் பணத்தின் அளவிற்கு ஏற்ப வழங்கலை கட்டுக்குள் கொண்டுவரவேண்டும். என்கிறார். வழங்கலை அதிகரிக்க வேண்டும் ஆயின் பணவரவினை அதிகரிக்க முகாமையாளர் முயல வேண்டும். அப்போதுதான் மேலும் மேலும் வழங்கலைச் செய்ய முடியும். முதலீட்டில் கைவைக்காதவாறு வழங்கலைச் செய்வதே சிறந்த நிதி முகாமைத்துவம் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். இவ்வாறு நிறுவனத்தின் பண இருப்பினை அதன் வரவினை உறுதி செய்துகொண்டு வழங்கலைச் செய்வதைத்தான் திருவள்ளுவர் 'போற்றி வழங்கு நெறி' என்கிறார்.

(தொடரும்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 73

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | |
| 05 | | 06 | 07 | 08 | 09 |
| 10 | 11 | 12 | | 13 | |
| | 14 | | 15 | 16 | 17 |
| 18 | | 19 | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ..............................................
வகுப்பு ..............................................
தொலைபேசி இல ..............................................
பாடசாலை பெயர் ..............................................
வதிவிட முகவரி ..............................................
..............................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் பெயர்.
(3) சிற்பிகளால் செதுக்கப்படும் கலைப்படைப்பு. (தலைகீழான சொல்)
(6) மக்களைக் காவல் காக்கின்றவன் என்பதால், அன்றைய காலத்தில் அரசனை இவ்வாறும் குறிப்பிட்டனர்.
(10) சிங்கத்தின் இளமைப்பருவத்து மரபுப்பெயர்ச்சொல்.
(15) சூரியனைக் குறிக்கும் சொல்.
(19) பாட்டி, நரி, காகம் சம்பந்தப்பட்ட அக்காலக் கதையொன்றை நினைக்கும் போது இந்த உணவுப்பண்டமும் நினைவுக்கு வந்து விடும். (தலைகீழான சொல்)
(22) இறைச்சிக்காகவும், முட்டைக்காகவும் வளர்க்கப்படுகின்ற பறவையினம். ஆனால் இப்பறவையினால் பறக்க முடியாது. (தலைகீழான சொல்)
(24) குழந்தைகள் பேசுகின்ற இனிய மொழி. (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) சுவையரும்புகள் கொண்ட உடலங்கம். நாம் பேசுவதற்கும், உணவை மெல்லுவதற்காக ஏற்றவாறு புரட்டிக் கொடுப்பதற்கும் உதவுகின்ற உறுப்பு.
(3) மீனவர்கள் பயன்படுத்துகின்ற மீன்பிடி உபகரணம். (தலைகீழான சொல்)
(4) தனது உடலின் விசேடமான சுரப்பு ஒன்றைப் பயன்படுத்தி வலை பின்னி, சிறுபூச்சிகளை அதில் சிக்கவைத்து அதனை உணவாக்கிக் கொள்ளும் பிராணி.
(6) ஆண்மாட்டையும், இளைஞனையும் குறிக்கின்ற பொதுச்சொல்.
(11) அறிவு புகட்டும் ஆசான். (தலைகீழான சொல்)
(15) உள்ளத்தை வாட்டும் துயரநினைவு. இதனை உள்ளத்திலிருந்து அகற்றினாலேயே நிம்மதி.
(17) தாவரத்தின் இலிங்க உறுப்பு. அழகான தோற்றம் கொண்டது. (தலைகீழான சொல்)
(18) பார்வைப் புலனாங்கம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 72

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தலதா மாளிகை 10. களை 14. கர்வம்
19. கமலம் 23. நாக்கு

**மேலிருந்து கீழ்**

01. தங்கம் 03. மாதா 05. உளி 11. வளை
12. மகன் 13. கரும்பு 16. நாகர்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 71

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ.எப். அலீனா**
தரம் 08B, க/ பதிஉதீன் மகளிர் வித்தியாலயம், இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

**2. தி. சயந்தவி**
தரம் 06, மட்/ வின்சன்ட் ம.உ. தேசிய பாடசாலை, இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

**3. கு. துவாரகன்**
தரம் 06C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி, இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை 01.

**4. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி, இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.

**5. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, வெலிப்பன்னை ரஹ்மானியா ம.வி, இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**6. எஸ்.பி. ஹரிஜித்**
தரம் 03, மோதரை இந்து கல்லூரி, பலகல வீதி, ஹெந்தல வத்தளை.

**7. சாரான் அப்துல் றகீம்**
தரம் 06, அல் அமான் மு.ம. வித்தியாலயம், கல்லொலுவ, மினுவாங்கொடை.

**8. ஏ.ஏ. பாத்திமா ஸனா**
தரம் 03, தி/ கிண்ணியா மு.ம. வித்தியாலயம், நகர சபை வீதி, கிண்ணியா 04.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 73
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**இனியவை கூறல்: இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

**தெளிவுரை :**
அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்...

## இறையருள் பெற மக்கள் சேவை செய்திடுவோம்

இந்தியாவிலே ஒரு வனத்தினுள் ஓர் ஆசிரமம் இருந்தது. அங்கு பல சிஷ்யர்கள் பல கலைகளையும் சாஸ்திரங்களையும் கற்று வந்தனர். வேதம், தியானம், யோகம், சித்த வைத்தியம் போன்றவைகள் முறையாக அங்கே போதிக்கப்பட்டன.

பயிற்சிகள் அதிகாலையிலேயே ஆரம்பித்து இரவுவரை தொடரும். அந்த ஆசிரமத்தின் போதனை முறைகளும் ஒழுக்க கட்டுப்பாடுகளும் யாவராலும் புகழப்பட்டன. பயிற்சிகள் முடிவுற்ற பின்னர் சிஷ்யர்கள் ஒரு வருட காலம் மக்கள் சேவை செய்ய வேண்டும். அப்போது சிஷ்யர்கள் பெறும் அனுபவங்கள், பிரச்சினைகள் பேசப்பட்டு அதற்கான தீர்வுகள் குருவினால் வழங்கப்படும்.

சிஷ்யர்கள் ஆசிரமப் பயிற்சிகளை நிறைவு செய்து விட்டதால், ஒரு வருடம் மக்கள் சேவைக்காக ஆயத்தமாகினர். குருவை வணங்கி விட்டு அவரவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஊர்களுக்கு பயணத்தை ஆரம்பித்தனர்.

பல மாதங்களுக்கு பிறகு ஒரு சிஷ்யர் தன் குருவை சந்தோசப்படுத்துவதற்காக ஏதாவது ஒரு விசேட சாதனை ஒன்றை செய்ய விரும்பினார். கடுமையாக பல மாதங்கள் பயிற்சி செய்து நீரில் நடக்கின்ற ஒரு வித்தையை கற்றுக் கொண்டார். பின்னர் ஒரு வருடம் பூர்த்தியானதும் சகல மாணவர்களும் ஆசிரமத்திற்கு திரும்ப வந்து சேர்ந்தனர். தத்தமது அனுபவங்களை பரிமாறிக் கொண்டனர்.

நீரின் மேல் நடக்கும் வித்தையை தெரிந்த சிஷ்யர் குருவிற்கு தனது சாதனையைக் காட்டி அவரின் நல்லாசியையும் பாராட்டையும் பெற விரும்பினார். மறுநாள் காலை சிஷ்யர் அந்த ஊரிலுள்ள ஆழமான அகலமான ஆற்றைக் கடக்க ஏற்பாடுகளை செய்தார். தனது திறமையைக் கண்டு களிக்க குருவையும் ஏனைய சக சீடர்களையும் நதிக்கரைக்கு அழைத்துச் சென்றார். அதனைக் கேள்விப்பட்ட ஊர் மக்களும் நதிக்கரையில் ஒன்று கூடினர். சீடரும் குருவை வணங்கி விட்டு தனது சாதனையை காட்ட ஆரம்பித்தார்.

என்ன புதுமை! சர்வ சாதாரணமாக பாதையில் நடப்பது போல நீரில் நடந்து இக்கரையிலிருந்து அக்கரைக்கும், அக்கரையிலிருந்து இக்கரைக்கும் சென்று வந்ததைக் கண்ணுற்ற சகலரும் வியந்தனர். சிஷ்யரை போற்றி புகழ்ந்தனர்.

ஆனால், குரு ஏதும் சொல்லாமல் ஆசிரமத்தை நோக்கி சென்று விட்டார். இது சிஷ்யருக்கு பெரும் கவலையை கொடுத்தது. ஆசிரமத்தில் எல்லா சிஷ்யர்களும் ஒன்று கூடி இருந்த வேளை, குரு சாதனை புரிந்த சிஷ்யரை அழைத்து, "நதியைக் கடக்க ஓடக்காரர் ஒருவரிடம் கூலியாக எவ்வளவு பணம் வாங்குகிறார்?" எனக் கேட்டார்." ஒரு அனா குருவே என்றார் சிஷ்யர். குரு சிஷ்யரைப் பார்த்து, ஓர் அனா பெறுமதியான இந்த வித்தைக்காக நீ எத்தனை மாதங்களை வீணாக்கினாய்! இச்செயலால் மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லையே! அதனால் உனக்கு இறை அருள் எப்படி கிடைக்கும்?" எனக் கேட்க சிஷ்யர்கள் எல்லோரும் அப்போது தான் சிந்திக்கலாயினர்.

எனவே, நாம் கற்கும் கல்வி, கலைகள், சாஸ்திரங்கள் எல்லாமே எதிர்காலத்தில் மக்களின் நன்மைக்கு பயன்பட வேண்டும். அப்போது தான் எமக்கும் இறையருள் சிறுவயதிலேயே எல்லாவற்றையும் கசடறக் கற்று எதிர்காலத்தில் பயன்படும் பணிகள் செய்ய ஆயத்தமாகுவோமாக.

**என். மொஹமட் லாபீர், பதுளை**

## இவ்வார மழலை



ருவிஷா
**கணேஷ் / தயாவதி**
**வவுனியா**

## குதிரைகள் பற்றிய சுவாரஸ்ய தகவல்கள்

உலகில் மனிதர்கள் வாழ, பல உயிரினங்களின் உதவியும் தேவைப்படுகிறது. அது போன்று தான் குதிரைகள் மனிதனுக்கு ஒரு வகையில் உதவியாக இருக்கின்றன. குதிரைகள் மனிதர்களுக்கு சவாரி செய்யவும், பொருட்களை சுமந்து செல்லவும் உதவுகின்றன. அரசர்கள் காலத்தில் குதிரைப்படை என்று தனி பிரிவே இருந்தது. அந்த அளவு குதிரைகள் மனித வாழ்வில் முக்கியப் பங்காக இருக்கின்றன.

குதிரைகள் பெரும்பாலும் நின்று கொண்டு உறங்குகின்றன. நள்ளிரவில் மட்டும் படுத்துறங்கும் வழக்கம் கொண்டது. குதிரைகளின் வயதுக்கேற்ப உறக்க நேரம் மாறுபடுகிறது.

குதிரைகளின் உணவுப் பாதை வித்தியாசமானது. அது மனித உடல் அமைப்பை போன்றது அல்ல. குதிரைகளால் வாந்தி எடுக்கவோ, வாய் வழியாக சுவாசிக்கவோ முடியாது.

குதிரைகள், தாவர வகைகளையே அதிகம் உண்ணுகின்றன.

ஆண் குதிரைகளின் வாயில் 40 பற்களும், பெண் குதிரைகளின் வாயில் 36 பற்களும் உள்ளது.

குதிரைகளின் வயதை அதன் பற்களை கொண்டு கணக்கிட முடியும். சில குதிரைகள் பற்களின் வயதை விட அதிக காலம் உயிர் வாழும்.

குதிரைகள் பிறந்து சில மணி நேரத்தில் நடக்கத் துவங்கும்.

குதிரைகள் மொனோகுலர் பார்வை கொண்டுள்ளது. இதன் மூலம் அவை



வேட்டையாடுபவர்களை அடையாளம் காண்கின்றன. அவை ஆபத்தை விரைவாக உணர்ந்து தப்பிக்கின்றன.

குதிரைகள் தொலை தூரத்தில் உள்ள பொருட்களை எளிதில் கண்டறியும். ஆனால், ஒரு மீற்றருக்கு குறைவாக உள்ள தூரத்தில் இருக்கும் பொருட்களை அடையாளம் காண்பது அவற்றுக்கு மிக சிரமமாக இருக்கும்.

சிறந்த உடல் அமைப்பு கொண்ட உயிரினமான குதிரைகள், நம் நாட்டில் பெருமளவில் தற்போது பயன்பாட்டில் இல்லை என்றாலும், அமெரிக்கா, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளில் இன்னும் அதிக அளவு பயன்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**தர்ஷா...**



இது ஒரு பறவை அல்ல, யூலன் மெக்னோலியா என்ற மலர்.



பாலைவனத்தில் வாழும் கங்காரு எலி வாழ்நாள் முழுவது தண்ணீர் குடிப்பதில்லை. இது தேவையான அனைத்து நீரையும் அதன் உணவில் இருந்து பெற்றுக் கொள்கிறது.

## உயர்வோம் நாம்

காலையில் எழுந்திடு சின்னத்தம்பி – நீ
கருத்தாய் படித்திடு நல்ல தம்பி!
வேளையில் உண்டிடு சின்னத்தம்பி – நன்கு
விளையாடிக் களைத்திடு நல்ல தம்பி!

அன்பே தெய்வம் சின்னத்தம்பி – நல்
அறிவே துணையாம் நல்லதம்பி!
கண்கள் போன்றதே சின்னத்தம்பி – நற்
கல்வியும் நமக்கு நல்லதம்பி!

கடமைகளைப் புரிந்திடு சின்னத்தம்பி – இரு
கைகளும் உன்னை நல்லதம்பி!
மடமையைப் போக்கிடு சின்னதம்பி – நீ
மதியைப் பெருக்கிடு நல்லதம்பி!

அடிமையாய் இருந்தோம் சின்னத்தம்பி – நாம்
அன்றைய நாளினில் நல்லதம்பி!
படிப்படியாகவே சின்னத்தம்பி – நாம்
பாரினில் உயரணும் நல்ல தம்பி!

**கல்லொளுவை பாரிஸ்**
**மள்வானை**

## சூரியன்

சூரிய குடும்பத்தின் மையத்தில் உள்ள மிகப்பெரிய நட்சத்திரம் சூரியன். பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் மிக முக்கியமான ஆற்றல் சூரியனிலிருந்தே பெறப்படுகிறது.

- சூரியனின் வயது 4.603 பில்லியன் வருடம்.
- சூரிய ஒளி பூமியை அடைய 8.3 நிமிடங்கள் ஆகும்.
- பூமியிலிருந்து சூரியன் சுமார் 148.06 மில்லியன் கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.
- சூரியனின் விட்டம் சுமார் 14,00,000 கிலோமீற்றர் . அதாவது, பூமியின் விட்டம் போல் 109 மடங்கு அதிக விட்டம் உடையது.
- சூரியனின் ஈர்ப்பு சக்தி பூமியை போல் 28 மடங்கு அதிகம்.
- சூரிய குடும்பத்தின் மொத்த நிறையில் 99.86 % நிறையை கொண்டது.
- சூரியன் ஒரு பெரிய நட்சத்திர குடும்பத்தைச் சேர்ந்தது.
- பூமிக்கு மிகவும் அருகிலுள்ள நட்சத்திரம் (விண்மீன்) சூரியன்.
- பூமி சூரியனை சுற்றிவர எடுத்துக்கொள்ளும் காலம் 365 1/4 நாட்கள்.
- சூரியனுக்கு மிக அருகில், உள்ள மிகச்சிறிய கோள் புதன்.

## கண்டுபிடிப்பாளர்கள்

## மின்சார 'தீர்க்கதரிசி' நிகோலா டெஸ்லா



நிக்கோலா டெஸ்லா (Nikola Tesla இயந்திரப் பொறியியலாளரும், மின்பொறியியலாளரும் ஆவார். இவர் சேர்பிய இனத்தவர். இவர் ஜூலை 10, 1856 – ஜனவரி மாதம் பிறந்தார். ஆஸ்திரியப் பேரரசின் குடிமகனாக இருந்த இவர் பின்னாளில் அமெரிக்கக் குடியுரிமை பெற்றார். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மின்னியல், காந்தவியல் ஆகிய துறைகளில் இவர் செய்த புரட்சிகரமான பங்களிப்புக்களினால் இவர் மிகவும் புகழ் பெற்றார். தெஸ்லாவின் காப்புரிமைகளும், கோட்பாட்டுகளும் பன்னிலைமை மின் வழங்கல் முறைமைகள், மாறுதிசை மின்னோட்ட மோட்டார்கள் என்பன உள்ளிட்ட, தற்கால மாறுதிசை மின்னோட்ட மின்வலு முறைமைகளின் அடிப்படையாக அமைந்தன. இவற்றின் மூலம் இவர் இரண்டாம் தொழிற்புரட்சி ஒன்று உருவாவதற்கு உதவினார். இவரது சமகால வரலாற்றாளர்கள் இவரை "இயற்பியலின் தந்தை" என்றும், "இருபதாம் நூற்றாண்டைக் கண்டுபிடித்தவர்" என்றும், "தற்கால மின்னியலின் காப்பாளர்" என்றும் போற்றினர்.

1894 இல் கம்பியில்லாத் தொடர்பு (வானொலி) பற்றிய இவரது செயல்முறை விளக்கம், "மின்னோட்டப் போரில்" இவர் பக்கம் வெற்றிபெற்றது போன்ற நிகழ்வுகளுக்குப் பின்னர், அமெரிக்காவில் பணிபுரிந்த மின்பொறியியலாளர்களில் மிகச் சிறந்தவர்களில் ஒருவராக டெஸ்லா மதிக்கப்பட்டார். இவரது தொடக்கப் பணிகள் தற்கால மின் பொறியியலுக்கு முன்னோடியாக அமைந்ததுடன், இவருடைய பல கண்டுபிடிப்புக்கள், திருப்பங்களை உண்டாக்குமளவு முக்கியத்துவம் பெற்றவையாக அமைந்தன. அக்கால அமெரிக்காவில், டெஸ்லாவின் புகழ் வேறெந்த கண்டுபிடிப்பாளர் அல்லது அறிவியலாளரின் புகழுக்குக் குறையாது இருந்தது. எனினும் இவரது கிறுக்குத்தனமான போக்கும் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து இவரது நம்பத்தகாத கூற்றுக்களும் இவர் ஒரு பைத்திய அறிவியலாளர் என்னும் கருத்தை ஏற்படுத்தியது.

நிகோலா டெஸ்லாவின் காப்புரிமைக் கண்டுபிடிப்பைப் பயன்படுத்தி, நயாகரா நீர்வீழ்ச்சியிலிருந்து உயர் அழுத்த மின்சாரம் தயார் செய்து பல மைல்கல் தூரத்திற்கு அதைக் கொண்டு செல்ல முடிந்தது. அமெரிக்கத் தொழிற்துறை வளர்ச்சியில் இவருக்குப் பெரும் பங்குண்டு.

மார்க்கோனிக்கு 1909ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்ட பிறகு, 1915ஆம் ஆண்டு தோமஸ் அல்வா எடிசன் மற்றும் டெஸ்லாவிற்கும் இயற்பியலுக்கான நோபல் பரிசு, பகிர்ந்தளிப்பதாக வெளியான தகவல் மிகப்பெரிய பிணக்குகளை உருவாக்கியது. இருவருக்குமான பகைமையையும் இது வளர்த்தது, இருவரும் அப்பரிசினை ஏற்றுக்கொள்ள விருப்பம் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமல்லாது பரிசினை பகிர்ந்து கொள்ளவும் மறுத்துவிட்டனர்.

# மஞ்சரி விளையாட்டு



## விளையாட்டின் மறுபக்கம்

# சச்சினி பெரேரா

கோலூன்றி பாய்தலில் தேசிய சாதனைக்கு சொந்தம் கொண்டாடும் சச்சினி பெரேரா இப்போது டுபாயில் பணிப் பெண்ணாக வேலை பார்க்கிறார். அங்கிருக்கும் குடும்பம் ஒன்றில் பிள்ளையை பார்த்துக் கொள்வதுதான் அவரின் பிரதான வேலை.

கடந்த ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி எல்லோரையும் பாதித்தது. அதனால் அந்த ஆண்டில் மாத்திரம் வேலை தேடி வெளிநாட்டுக்கு, அதுவும் குறிப்பாக மத்திய கிழக்குக்கு சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை 311,000க்கும் அதிகம். அதில் சச்சினியும் ஒருவர்.

திடீரென்று தாய்க்கு பக்கவாதம் தாக்க, நாட்டில் வாழ்க்கைச் சுமை அதிகரித்து, மருந்துகளின் விலை வானைத் தொட்டபோது தனது விளையாட்டுக்கு முடிச்சுப் போட்டுவிட்டு வெளிநாடு செல்ல சச்சினி தீர்மானித்தது காலத்தின் கட்டாயம். கடந்த ஆண்டு ஜூலையில் அவர் வேலைக்காக டுபாய் புறப்பட்டுச் சென்றார்.

“எனது குடும்பத்திற்காகவே நான் டுபாய் வந்தேன். ‘நீ ஒரு விளையாட்டு வீராங்கனை. நீ பணிப் பெண் அல்ல. இப்படிச் செய்தால் உனது விளையாட்டு வாழ்க்கை முடிந்துவிடும்’ என்று அப்போது எனது பெற்றோர்கள் எச்சரித்தனர்” என்று தனது நிலை பற்றி குறிப்பிடுகிறார் சச்சினி.

ஆரம்பத்தில் ஒரு ஜிம்னாஸ்டிக் வீராங்கனையாக இருந்த 24 வயதான சச்சினி பெரேரா 2014இல் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டியிலும் பங்கேற்றார். பின்னர் ஒரு தடகள வீராங்கனையாக மாறிய அவர் 2018 தொடக்கம் கோலூன்றிப் பாய்தலில் அவதானம் செலுத்தினார்.

இலங்கை இராணுவ தொண்டர் படையில் இணைந்ததன் மூலம் அவர் பயிற்சி பெறுவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. இதனால் கோலூன்றிப் பாய்தலில் இலங்கையில் முறியடிக்க முடியாத சாதனை வீராங்கனையாக மாறினார். அடுத்தடுத்து தேசிய சாதனையை முறியடித்தார்.

கடைசியாக அவர் 2022 ஆம் ஆண்டு 3.71 மீற்றர் உயரம் பாய்ந்ததே தற்போது தேசிய சாதனையாக இருக்கிறது.

“கோலூன்றிப் பாய்தலில் சர்வதேச பதக்கம் வெல்லும் இலங்கை வீராங்கனையாக நான் இருக்க விரும்புகிறேன். பணிப் பெண்ணாக இருப்பது எனது வேலை. ஆனால் அது என் துறை சார்ந்த வேலையல்ல. நான் ஒரு ஜிம்னாஸ்டிக் மற்றும் தடகள வீராங்கனை” என்று டுபாய் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் சச்சினி பெரேரா தெரிவித்திருந்தார்.

சச்சினிக்கு இப்போது தனது விளையாட்டு வாழ்வை தொடர ஆசை வந்திருக்கிறது. “இப்போது இதுதான் எனது உலகம் என்று நான் உணர்கிறேன். ஆனால் படிப்படியாக நான் பறப்பேன். எனது பறக்கும் கனவுக்காக ஒரு படி மற்றப் படி என நான் முயற்சிப்பேன்” என்கிறார் சச்சினி.

சச்சியினியின் கதையை கேட்ட டுபாயில் உள்ள இலங்கையின் கொன்சுல் நாயகம் அலெக்சி குணசேகர அவருக்கு உதவும் முயற்சியை ஆரம்பித்திருக்கிறார். அவர் தனது வேலைக்கு அப்பால் விளையாட்டை தொடர்வதற்கான பயிற்சிகளுக்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக டுபாய் விளையாட்டு நிர்வாகத்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

“இலங்கை தேசிய சாதனையை வைத்திருக்கும் ஒருவர் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு வந்து பணிப் பெண்ணாக வேலை பார்க்கிறார் என்ற செய்தி கிடைத்ததும் துணைத் தூதரக அதிகாரிகள் உடன் செயற்பட ஆரம்பித்தார்கள்.

டுபாய் விளையாட்டு நிர்வாகங்களால் என்ன செய்ய முடியும் என்பதை நாம் முயற்சிக்கிறோம். அவர் தனது தாயை கவனித்துக்கொள்ள வேண்டி இருப்பதால் அவருக்கு தொழில் வாய்ப்பு தேவையாக இருப்பதோடு பயிற்சிக்கான காலமும் தேவையாக உள்ளது” என்று அலெக்சி குணசேகர ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

கிரிக்கெட் போன்ற பிரபலமான விளையாட்டு வீரர்களுக்கு தனது குடும்பம், மருத்துவ செலவுகளையும் பார்த்துக்கொள்ள போதுமான வருவாய் கிடைக்கின்றபோதும் மற்ற விளையாட்டு வீரர்களுக்கு தமது செலவுகளை பூர்த்தி செய்ய முடியாதிருக்கிறது என்று கவலைப்படுகிறார் குணசேகர. இந்த கவலை எல்லோரிடமும் இருந்தபோதும் அதுதான் யதார்த்தம்.

சச்சினியின் கதை என்பது சச்சினிக்கு மாத்திரம் பொருந்தாது. தேசிய சாதனை படைத்த அனைத்து வீர, வீராங்கனைகளும் இப்போது அதற்கான அங்கீகாரத்துடன் இருக்கிறார்கள் என்று குறிப்பிட முடியாது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையை இன்னும் மோசமாக்கி இருக்கிறது.

குறிப்பாக கிரிக்கெட் போன்ற பணம் கொட்டும் விளையாட்டுகளை தவிர்த்து மற்ற வீர, வீராங்கனைகள் இலங்கைக்காக சர்வதேசத்தில் வெற்றிபெற்று வருகிறார்கள் என்றால் அதில் அவர்களின் தனிப்பட்ட முயற்சி, காலம், பணம் எல்லாமே பின்னணியில் இருக்கும்.

“இப்படி கஷ்டப்படும் ஏனையவர்கள் பற்றியும் மக்கள் தெரிந்திருக்க வேண்டும். எனது கதை ஒரே ஒரு கதை மாத்திரம்தான். உதவி தேவைப்படும் பல கதைகள் இலங்கையில் உள்ளன.

துணிச்சலான முடிவாக இருந்தபோதும் விளையாட்டை விட்டு வெளியேறுவது இலகுவானதல்ல. எனது போட்டிகள், கனவு, எதிர்காலத்தை இழந்திருக்கிறேன். அது மிகக் கடினமானது. எனது பயிற்சியாளரிடமும், அப்பாவிடமும் நான் சில நேரம் அழுதிருக்கிறேன். எனது விளையாட்டை நான் மீண்டும் ஆரம்பிக்க விரும்புகிறேன்” என்கிறார்.

நல்லவேளை சச்சினி வேலை பார்க்கும் இடத்தில் அவருக்கு போதிய உதவி கிடைக்கிறது. வேலை நேரம் தவிர்த்து பயிற்சி பெற அவரது முதலாளியே அவரை மைதானத்திற்கு, பூங்காவுக்கு அழைத்துச் செல்கிறார். “அவர்கள் என்னை நன்றாக நடத்துகிறார்கள். எனது மோசமான கடந்த காலத்தை கடந்து வந்தது அவர்களால் தான்” என்கிறார்.

இலங்கையில் தடகள விளையாட்டுக்கான நிதி என்பது போட்டிகளுக்கு வீர, வீராங்கனைகளை கலந்துகொள்ளச் செய்வது, போட்டிகளை நடத்துவதற்கே போதுமானதாக இருக்கிறது. வீர, வீராங்கனைகளின் ஊட்டச்சத்து மற்றும் அவர்களை பராமரிப்பதிலும் எத்தனையோ சிக்கனங்கள் இருக்கின்றன. அதிலும் பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. இதற்கு யாரை குற்றம் செல்வது என்பது தெரியவில்லை.

“இது எனது தனிப்பட்ட வாழ்வு, நான் டுபாய் வந்து பணிப் பெண்ணாக வேலை பார்க்கிறேன். எனது குடும்பத்தை பராமரிப்பதற்காக நான் இந்த வேலைக்கு வரும்போது எனது தடகள வாழ்க்கை பற்றி யாரும் கவலைப்படவில்லை.

இப்போது ஏன் பணிப் பெண்ணாக வேலைக்குச் சென்றாய் என்றும் மீண்டும் நாட்டுக்கு திரும்பி வரும்படியும் கோட்கிறார்கள். ஏன் இலங்கை பற்றி மோசமான செய்தியை கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆனால், எனது தாயையும் குடுபத்தையும் பார்த்துக்கொள்வதற்காகவே நான் இங்கு வந்தேன் என்று கூறிக்கொள்கிறேன்.”

என்றாலும் தடகள நிர்வாகத்தின் தவறால் சச்சினி இந்த நிலைக்கு தள்ளப்படவில்லை என்கிறார் இலங்கை தடகள நிறுவனத்தின் பொதுச் செயலாளர் சமன் குமார குணவர்தன.

“ஒரு தடகள நிர்வாகியாக எம்மால் அவருக்கு எதுவும் செய்ய முடியாது. அவர் பங்கேற்கும் போட்டியில் (கோலூன்றிப் பாய்தல்) இலங்கைக்கான சர்வதேச போட்டிகள் இல்லை என்பதே பிரதான காரணமாகும்.

அந்தப் போட்டி 2019 தெற்காசிய விளையாட்டு போட்டியிலும் இடம்பெறவில்லை. அதேபோன்று ஆசிய விளையாட்டுப் போட்டி அல்லது ஆசிய தடகள சம்பியன்சிப் போட்டிகளில் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியின் தரம் உயர்ந்த மட்டத்தில் உள்ளது.

உதாரணமாக தாய்லாந்தில் அண்மையில் முடிவுற்ற 2023 ஆசிய தடகள சம்பியன்சிப் போட்டியின் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டி நிகழ்ச்சியில் தங்கம் (4.66 மீற்றர்), வெள்ளி (4.51 மீற்றர்) மற்றும் வெண்கல (4.51) பதக்கங்கள் வென்றவர்களை குறிப்பிடலாம்.

அதேபோன்று ஆசிய விளையாட்டுப் போட்டி அல்லது ஆசிய சம்பியன்சிப் போட்டிகளில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு ஒதுக்கப்படும் பங்கு மிகக் குறைவாக உள்ளது.

பதக்கங்களை வெல்ல முடியுமான போட்டி நிகழ்ச்சிகளை முன்வைத்தே தடகள தேர்வுக் குழுவினர் தடகள வீர, வீராங்கனைகளை தேர்வு செய்கின்றனர். எமது தடகள வரலாற்றை பார்த்தால் குண்டெறிதல், பரிதிவட்டம், ஈட்டி எறிதல், கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் பங்கேற்பது மிகக் குறைவாகும்.

சச்சினி பெரேரா பல தடவைகள் இலங்கை சாதனையை முறியடித்திருக்கலாம், ஆனால் அவரது சிறந்த உயரம் 3.71 மீற்றர்தான். உள்ளூர் மட்டத்தில் நாம் அவரின் திறமையை பாராட்டுகின்றபோதும் சர்வதேச மட்டத்தில் பதக்கம் வெல்ல அந்த திறமை இன்னும் போதுமானதாக இல்லை” என்று சமன் குமார குணவர்தன தன் பக்க நியாயத்தை சொல்கிறார்.

ஆனால் சச்சினி பெரேராவுக்கு இன்னும் வயதிருக்கிறது, அவர் ஒரு முறையல்ல பலமுறை இலங்கை சாதனையை முறியடித்திருப்பது அவர் தொடர்ந்து வளர்ந்து வருகிறார் என்பதை காட்டுகிறது. எனவே அதற்கு ஊக்கம் கொடுப்பதும் சர்வதேசத்தை வெல்ல தேவையானது என்பதை மறந்துவிடக் கூடாது.



**எஸ்.பிர்தௌஸ்...**

# மாற்றத்திற்கான நேரம்

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை 0–2 என முழுமையாக இழந்தது மாத்திரமல்ல பலவீனமான ஆட்டத்தையும் வெளிப்படுத்தியது. கடைசி நாள் வரை நீடித்த முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி கடைசிவரை போராட்டத்தை வெளிப்படுத்தியபோதும் இரண்டாவது டெஸ்டில் துடுப்பாட்டம், பந்து வீச்சு இரண்டிலுமே சோபிக்காது சொந்த மண்ணில் மிக மோசமான தோல்வியை சந்தித்தது.

பந்துவீச்சில் இலங்கை அணியின் வேகப்பந்து கடைசி வரை எடுபடவில்லை. முதல் டெஸ்ட்டில் விஷ்வ பெர்னாண்டோ மற்றும் கசுன் ராஜித்த எதிரணி துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி கொடுக்கத் தவறிய நிலையில் இரண்டாவது டெஸ்டில் தனது கன்னி போட்டியில் ஆட அழைக்கப்பட்ட டில்ஷான் மதுஷங்க விக்கெட் வீழ்த்தத் தவறினார்.

அண்மைக் காலத்தில் இலங்கை டெஸ்ட் அணியின் முக்கிய வேகப் பந்து வீச்சாளராக மாறி இருக்கும் அசித்த பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் அது பாகிஸ்தான் அணியில் பெரிதாக எந்தத் தாக்கமும் செலுத்தவில்லை.



எஸ்.எஸ்.சி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை (27) நான்கு நாட்களுடன் நிறைவடைந்த இந்த டெஸ்டில் சந்தித்த இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களால் தோல்வி என்பது ஒரு மேசமான சாதனையில் சேர்க்கக் கூடியது. அதாவது டெஸ்ட் வரலாற்றில் இலங்கை அணி சந்தித்த மூன்றாவது மிக மோசமான தோல்வி இதுதான். ஆனால் சொந்த மண்ணில் எதிர்கொண்ட மோசமான தோல்வியாக இருந்தது.

இதற்கு முன் 1993 ஆம் ஆண்டு அதாவது சுமார் 30 ஆண்டுகளுக்கு பின் இதே எஸ்.எஸ்.சி மைதானத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக இன்னிங்ஸ் மற்றும் 208 ஓட்டங்களால் தோற்றதே இது வரையில் மோசமாக இருந்தது.

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இரு இன்னிங்ஸ்களிலும் 200 ஓட்டங்களைக் கூட தொட முடியாத நிலையில் பந்துவீச்சில் எதிரணிக்கு எந்த சவாலும் கொடுக்கவில்லை. இதனால் பாக். அணி முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை இழந்து பெற்ற 576 ஓட்டங்களும் வெற்றிக்கு மிக அதிகமாக இருந்தது.

துடுப்பாட்டத்தை பார்த்தால் பெரும்பாலான விக்கெட்டுகள் தேவையற்ற முறையில் துடுப்பை சுழற்றி பறிபோனவை. நிஷான் மதுஷ்க மற்றும் சதீர சமரவிக்ரம போன்ற அனுபவம் அற்ற வீரர்கள் தொடர் முழுவதும் சோபிக்கவில்லை என்பதோடு அணித் தலைவர் திமுத் கருணாரத்னவுடன் அனுபவ வீரர்களான தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ் ஒரு இன்னிங்ஸில் கூட நின்று பிடித்து ஆடவில்லை.

அஞ்சலோ மத்தியூஸ் தொடரின் கடைசி இன்னிங்ஸில் நிதானமாக ஆடினாலும் அது காலம் கடந்ததாக இருந்தது. இந்தத் தொடரில் இலங்கை துடுப்பாட்டத்தில் சோபித்த ஒரே ஒரு வீரராக தனஞ்சய டி சில்வா இருக்கிறார். முதல் டெஸ்டில் சதம் மற்றும் அரைச்சதம் பெற்ற அவர் இரண்டாவது டெஸ்டில் அரைச் சதம் ஒன்றை சேர்த்தார்.

சுழற்பந்தில் பிரபாத் ஜயசூரிய இலங்கை டெஸ்ட் அணியின் முதல் நிலை பந்துவீச்சாளராக செயற்படுகிறார். முதல் டெஸ்டில் அவர் மொத்தம் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி நெருக்கடி கொடுத்தாலும் இரண்டாவது டெஸ்டில் தாக்கம் செலுத்த தவறினார். ரமேஷ் மெண்டிஸின் நிலையும் இதுதான்.

“எமது துடுப்பாட்டம் படு மோசமாக இருந்தது. இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் நாம் நாணய சுழற்சியில் வென்ற நிலையில் நல்ல ஓட்டங்களை பெற்றிருக்க வேண்டும். ஆனால் எமது விக்கெட்டுகளை அநாவசியமாக பறிகொடுத்து அதற்கான விளைவை சந்தித்தோம். பெரும் ஏமாற்றமாக உள்ளது. இந்த டெஸ்ட் தொடர் எமக்கு பெரிதாக சாதகமாக இருக்கவில்லை” என்று இரண்டாவது டெஸ்ட் முடிவடைந்த பின்னர் இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன தெரிவித்தார்.

இலங்கையில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டுடன் ஒப்பிடுகையில் டெஸ்ட் அணி ஸ்திரமாகவே உள்ளது. என்றாலும் அணியில் மாற்றங்கள் செய்ய வேண்டிய நேரம் வந்திருப்பதாகவே பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் காட்டுகிறது. அதனை அணித் தலைவர் திமுத் கருணாரத்னவும் வலியுறுத்தி வருகிறார்.

ஐ.சி.சி புதிய டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திற்கு புதிய அணித் தலைவர் ஒருவரை நியமிக்கும்படி கருணாரத்ன மீண்டும் ஒரு முறை தேர்வுக் குழுவினரை வலியுறுத்தி இருக்கிறார். தனக்கு துடுப்பாட்டத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருப்பதாக கூறுகிறார்.

இலங்கைக்கு நெருங்கிய மாதங்களில் டெஸ்ட் போட்டிகள் எதுவும் இல்லை. இந்த இடைவெளி அணியில் மாற்றங்களை செய்வதற்கு போதிய அவகாசமாக இருக்கும்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
# செந்தூரம்
2023 ஜூலை 30 ஞாயிற்றுக்கிழமை





கல்லூரி நட்சத்திரங்கள் 04



ஹரிபூரணி சுபாகரனின் அரங்கேற்றம் 07




LGM: சிறப்பு தோற்றத்தில் தோனி 08

# அமெரிக்க வரலாற்றை மாற்றிய சிறுமி



அமெரிக்க சிறப்பு பாதுகாப்பு அதிகாரிகள் புடைசூழ கடும் பாதுகாப்புடன் இந்த சிறுமி செல்வது வேறு எங்கும் அல்ல பாலர் பாடசாலைக்குத்தான். அமெரிக்காவில் நிறப் பாகுபாடு காட்டும் காலம் முடிந்த பின் வெள்ளை இனத்தவர்களை மாத்திரம் கொண்ட பாலர் பாடசாலைக்கு சென்ற முதல் கறுப்பின சிறுமி இவர்தான்.

இந்த சிறுமியின் பெயர் ரூபி பிட்ஜஸ். 1960 இல் இந்த சிறுமி வெள்ளையின பாலர் பாடசாலைக்கு சென்றார். ஆனால் அது சாதாரணமாக இருக்கவில்லை. சுற்றி இருக்கும் வெள்ளையின சிறுவர்கள் மாத்திரம் அல்ல பெரியவர்கள் கூட அந்த கறுப்பின சிறுமியை எதிர்ப்பது, நையாண்டி செய்வதாகத்தான் இருந்தது. ஆனால் ரூபி அழவில்லை. தனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் முக்கிய பிரமுகர் போல பாடசாலை செல்லும் இந்தக் காட்சி அமெரிக்க வரலாற்றின் பெரும் திருப்பமாக இருந்து.



# உலகின் மிகப்பெரிய முந்திரி மரம்

உலகின் மிகப்பெரிய முந்திரி மரம் பிரேசிலில் இருக்கிறது. அது 80,000 சதுர அடி பகுதியில் பரந்திருப்பதோடு ஒவ்வொரு ஆண்டும் 60,000க்கும் அதிகமான பழங்களை உற்பத்தி செய்கிறது. உண்மையில் இரு மரபணு பிரச்சினை தான் இந்த மரம் இத்தனை பெரிதாக வளரக் காரணம். ஒன்று இந்த மரம் மேல் நோக்கி வளர்வதற்கு பதில் வெளிப்புறமாக தாழ்வாக வளர்கிறது. இதனால் அதன் கிளை நிலத்தை தொடும் போது அங்கேபுதிதாக வேர் விடுகிறது. இதுவே இந்த மரம் உலக சாதனை படைப்பதற்கு காரணமாகும்.

# வாகன அனுமதிப் பத்திரம் பெற 15 ஆண்டுகளா?




தென் கொரியாவைச் சேர்ந்த 80 வயதை தாண்டிய சா சா சூன் வாகன அனுமதிப்பத்திரம் எடுப்பதற்கு செலவிட்ட காலம் 15 ஆண்டுகள். அதற்காக 13,400 டொலர்களுக்கு மேல் செலவு செய்திருக்கிறார். வாகன அனுமதிப் பத்திரம் பெறுவது அத்தனை கடினமா என்றால், அந்த பெண்ணுக்கு கடினமாகத்தான் இருந்திருக்கிறது. தனது மரக்கறி வர்த்தகத்தை வளர்ப்பதற்கு திட்டமிட்ட சூன் வாகன அனுமதிப் பத்திரம் பெறுவது அவசியம் என்று நினைத்தே 2005 ஆம் ஆண்டு அந்த முயற்சியை ஆரம்பித்தார். முதலில் எழுத்து பரீட்சையை எழுதிப் பாத்தார் சித்தி பெறவில்லை.

ஆனால் அவர் விடுவதாக இல்லை. சித்தி பெறும் வரை பரீட்சை எழுத முடிவெடுத்தார். வாரத்தில் ஐந்து நாட்களும் ஒரு நாள் தவறாமல் பரீட்சை எழுதினார். மூன்று ஆண்டுகள் இப்படி தொடர்ச்சியாக எழுதியும் வெற்றி அளிக்கவில்லை.

பின்னர் அவர் வாரத்திற்கு இரண்டு முறை பரீட்சை எழுதினார். கடைசியில் 950 ஆவது முயற்சியில் சித்திபெற்றார். அடுத்து அவர் வாகனத்தை செலுத்தி காட்டும் நடைமுறை பரீட்சைக்கு முகம்கொடுத்தார். 10 முயற்சிக்கு பின்னர் அதிலும் வெற்றி பெற்று எப்படியோ வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றார்.

இந்தக் கதை தென் கொரியா எங்கும் பிரபலமானதை அடுத்து அதனை பார்த்த கார் உற்பத்தி நிறுவமான ஹுன்டாய் அவருக்கு கார் ஒன்றையே பரிசாக வழங்கியது.

# போரின் கொடூரம்



கி.பி 1014 இல் பைசாந்திய மற்றும் பல்கேரிய பேரரசுகளுக்கு இடையில் வெடித்த பயங்கரப் போரில் பல்கேரிய பேரரசு படுதோல்வி கண்டது. சுமார் 15,000 பல்கேரிய படையினர் சிறைபிடிக்கப்பட்டார்கள். பைசாந்திய பேரரசர் இரண்டாவது பசில் கொடுத்த தண்டனை மிகக் கொடுமையானது.

அதாவது இந்த பல்கேரிய வீரர்களை 100 பேர் கொண்ட குழுக்களாக பிரித்தார். 99 பேரின் இரண்டு கண்களையும் குருடாக்கிவிட்டு ஒருவரின் ஒரு கண்ணை மாத்திரம் விட்டுவிட்டார். அந்த ஒரு கண்ணை வைத்து அந்த நபர் எஞ்சிய 99 பேரும் வீடு செல்வதற்கு வழிகாட்ட வேண்டும். இதனைப் பார்த்த பல்கேரிய பேரரசர் சாமுவேல் மாரடைப்பு வந்து உயிரிழந்ததாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகிறார்கள்.

# கொலைகார மூதாட்டி

பாபா அனுஜ்கா என்பவர் செர்பியாவைச் சேர்ந்த தொடர் கொலைகார பாட்டி. அவர் 50 தொடக்கம் 150 வரையான ஆண்களை கொலை செய்திருப்பதாக நம்பப்படுகிறது. அதாவது திருமணப் பிரச்சினை இருக்கும் பெண்களுக்கு அவர் கொடுக்கும் மருந்து அவர்களின் கணவர்களுக்கு வினையாகி இருக்கிறது.





தனது கணவரிடம் பிரச்சினை இருந்தால் பெண்கள் இந்த மூதாட்டியிடம்தான் உதவி கேட்டு வருவார்கள். அவரும் பிரச்சினையை கேட்டறிந்து, கணவரின் உடல் எடை, ஆரோக்கியம் எல்லாவற்றையும் கேட்டு அதற்கு ஏற்ப மருந்து தயாரித்து கொடுப்பார். மனைவிக்கு வேலை அந்த மருந்தை கணவருக்கு கொடுப்பதுதான். மருந்தை கொடுத்த கணவர்மார் எட்டு நாட்களுக்குள் உயிரிழந்துவிடுவார்கள். துன்புறுத்தல், கட்டாய திருமணம் போன்ற துன்பங்களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு உதவியாகவே பாபா அனுஜ்கா இந்த வேலையை செய்திருக்கிறார்.

1928 ஆம் ஆண்டு தனது 90 ஆவது வயதில் அனுஜ்கா பொலிஸாரிடம் சிக்கினார். இரு கொலைகள் நிரூபிக்கப்பட்ட நிலையில் 1929 ஆம் ஆண்டு அவருக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் வயது முதுர்ச்சி காரணமாக எட்டு ஆண்டுகள் சிறையிருந்த அவர் விடுவிக்கப்பட்டார்.

# ஓர் இரவில் காணாமல் போன 83 கிராமங்கள்

# பேய்கள் நிறைந்த இடமானது எப்படி?

குல்தரா, ஆள்நடமாட்டம் இல்லாத கிராமப் பகுதி. ராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டத்தில் அமைந்திருக்கிறது இந்த கிராமம். இந்த பகுதி 13ம் நூற்றாண்டில் கட்டமைக்கப்பட்ட இடமாக வரலாற்று கூற்றுகள் மூலம் அறியப்படுகிறது. ஒரு காலத்தில் வளமான பகுதியாக இருந்தது குல்தரா கிராமம். இங்கு, ராஜஸ்தானின் பாலி எனும் பகுதியில் இருந்து வந்த பாலிவால் பிராமண (Paliwal Brahmins) சமூகத்தை சேர்ந்தவர்கள் வசித்து வந்துள்ளனர்.

19ம் நூற்றாண்டின் ஆரம்பிக்காலத்தில் தான் குல்தரா கிராமம் காலியானதாக அறியப்படுகிறது. இதற்கு பல்வேறு அறியப்படாத காரணங்கள் கூறப்பட்டு வந்தாலும், குடிநீர் தட்டுபாடு, அதனால் ஏற்பட்ட பஞ்சம், பூகம்பம், ஜவான் ஒருவரது கொடூரமான ஆட்சி என சில காரணங்கள் அழுத்தமாக காலங்கள் கடந்து இன்றளவிலும் கூறப்பட்டு வருகின்றன.



குல்தரா கிராமம் காலியான சில ஆண்டுகளில் அமானுஷ்ய இடம் என பெயர்பெற துவங்கியது. 2010களில் ராஜஸ்தான் மாநில அரசால் இப்பகுதியை சுற்றுலாத்தலமாக மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன...

ஜெய்சால்மர் மாவட்டத்தில் இருந்து 18 கி.மீ தொலைவில் அமைந்திருக்கிறது குல்தரா கிராமம். இந்த ஊர், பெண் தெய்வத்தை மையமாகக் கொண்டு அமைந்திருக்கிறது. இந்த கிராமம் மொத்தமே 3 முக்கிய சாலைகளிலும், அதை சார்ந்து அமைந்துள்ள சில தெருக்கள் மட்டுமே கொண்டுள்ளது.

குல்தரா கிராமத்தின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் பாழடைந்த கட்டிட சுவர்கள் மட்டுமே மிஞ்சி இருக்கின்றன. கிழக்கு பகுதியில் வறண்டு போன ஆற்றின் கிளை வழி காண இயல்கிறது. மற்றும் மேற்கு பகுதி, கிராமத்தை பாதுகாக்கும் எல்லை சுவர்கள் கொண்டுள்ளன.

குல்தரா கிராமத்தில் பாலில் இருந்து ஜெய்சால்மர் மாவட்டத்திற்கு குடிபெயர்ந்த பிராமணர்கள் வசித்து வந்தனர். 17ம் நூற்றாண்டுகளில் 400க்கும் மேற்பட்ட வீடுகளும், 1500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வந்த இந்த கிராமத்தில், அதற்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் மக்கள் எண்ணிக்கை கணிசமாக குறைய ஆரம்பித்தது.

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மக்கள் எண்ணிக்கை 800ஆக இருந்துள்ளது. 19ம் நூற்றாண்டின் இறுதியில் இங்கு வெறும் 37 பேர் மட்டுமே வசித்து வந்ததாக வரலாற்று தகவல்கள் மூலம் அறியப்படுகிறது. கடைசியாக கணக்கெடுப்பு நடந்த பொழுது இங்கு 117 வீடுகள் எஞ்சி இருந்தன.

குல்தரா கிராமத்தில் பெரும்பாலும் வைஷ்ணவ வகுப்பை சேர்ந்தவர்கள் வசித்து வந்துள்ளனர்.

இங்கு, விஷ்ணு, மகிஷாசுரமர்த்தினி சிலைகள் அதிகம் காணப்படுகின்றன. மற்றும் பல கல்வெட்டுகளில் கணேஷா எனும் வார்த்தையும், சிறிய சிறிய விநாயகர் உருவங்களும் காணப்படுகின்றன.

மேலும் இந்த கிராம மக்கள், காளை மற்றும் குதிரையில் அமர்ந்திருக்கும் தெய்வ சிலைகளையும் வணங்கி வந்துள்ளனர்.

குல்தரா கிராமத்தின் நீர் ஆதாரமாக இருந்தது, இந்த ஊரில் இருந்து சில கி.மீ தொலைவில் இருந்த கக்னி/ கக்னேயா (Kakni/Kakneya) ஆற்றின் இரண்டு கிளைகளும், சில கிணறுகளும் மட்டுமே ஆகும். இந்த நீர் ஆதாரங்கள் குறைய குறைய, விவாசாயத்தை அடிப்படையாக கொண்ட குல்தரா ஊர் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர்.

இந்த காரணத்தால் 19ம் நூற்றாண்டில் கணிசமான அளவில் மக்கள் இந்த ஊரைவிட்டு வெளியேற துவங்கினர். ஒருபக்கம் குடிநீர் தட்டுப்பாடு கூறப்பட்டாலும், இங்கு ஆட்சி புரிந்து வந்த சலீம் சிங் எனும் ஜவானின் கொடூரமான செயல்களால் மக்கள் ஊரை விட்டு சென்றதாகவும் செவிவழி செய்தியாக அறியப்படுகிறது.

1815ம் ஆண்டில் இருந்தே படிப்படியாக கிணறுகள் வற்றத்துவங்கின. 1850களில் ஓரிரு கிணறுகளில் மட்டுமே தண்ணீர் இருந்துள்ளது.

ஒருபுறம் நீர் பஞ்சம் மறுபுறம் ஜவான் விதித்து வந்த கொடுமையான வரி என பல்வேறு இன்னல்களுக்கு ஆளான குல்தரா கிராம மக்கள் வேறு வழியின்றி இந்த ஊரை காலி செய்து சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

பெண்ணாசை கொண்ட ஜவான் ஒரு நாள் குல்தரா கிராமத்தில் வசித்து வந்த அழகான இளம் பெண் மீது ஆசைப்பட்டுள்ளார். தனது காவலர்களை குல்தராவிற்கு அனுப்பி, ஊர் மக்கள் அந்த பெண்ணை காவலர்களிடம் ஒப்படைக்கவும் கட்டளை விடுத்துள்ளார்.

காவலர்களை மறுநாள் காலை வந்து பெண்ணை அழைத்து செல்ல கூறி, அன்று இரவே கிராம மக்கள் மொத்தமாக ஊரைவிட்டு காலிசெய்து சென்றதாக ஒரு கதை உலாவி வருகிறது. இதேப்போல செவிவழி செய்தியாக அறியப்படும் மற்றொரு கதையில், குல்தரா மட்டுமின்றி சுற்றி இருந்த 83 கிராமங்களும் ஒரே இரவில் (காலி செய்து) காணாமல் போனதாக கூறப்படுகிறது.

2017ம் ஆண்டு ஏ.பி.ராய் என்பவர் மேற்கொண்ட ஆய்வின் மூலம் கிடைக்கப்பட்ட தகவல் என்ன என்றால், குல்தரா மற்றும் பாலிவால் மக்கள் வசித்து வந்த அக்கம்பக்கத்து கிராமங்கள் பூகம்பத்தின் காரணமாக அழிந்திருக்கலாம் என்பதே ஆகும்.

இந்த ஆய்வு மேற்கொண்ட ஆய்வாசிரியர்கள் அழிந்த கட்டிடங்களின் அமைப்பு வைத்து பார்க்கும் போது, அவற்றில் பூகம்பம் போன்ற இயற்கை பேரழிவுகள் மூலம் ஏற்படும் தாக்கம் வீட்டு கூரைகள், தூண்கள் போன்றவற்றில் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், இத்தகைய தாக்கம், காலநிலை மாற்றம் அல்லது கட்டிட அரிப்பு போன்றவற்றால் ஏற்படும் வாய்ப்பு இல்லை எனவும் கூறியுள்ளனர்.

2010 களில் ராஜஸ்தான் மாநில அரசால் குல்தரா பகுதி சுற்றுலா தலமாக மற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 2011ம் ஆண்டு சாயப் அலிகானின் ஏஜென்ட் வினோத் என்ற திரைப்படத்தின் சில காட்சிகளும், 2017ம் ஆண்டு கார்த்தி நடிப்பில் உருவான தீரன் அதிகாரம் ஒன்று திரைப்படத்தின் க்ளைமாக்ஸ் காட்சிகளும் இங்கு படமாக்கப்பட்டன.



# ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் "கல்லூரி நட்சத்திரங்கள்"










இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் "கல்லூரி நட்சத்திரங்கள்" எனும் நிகழ்ச்சியின் முதலாவது நிகழ்வு (26) புதன்கிழமை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் கேட்போர்கூடத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வு கேட்போர்கூடத்தில் இருந்து நேரலையாக ஒலிபரப்பு செய்யப்பட்டது. இதில் பாடல்களை பாடிய ஆறு மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமருடன் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜெ.யோகராஜா, புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா, பாடசாலை அதிபர் திருமதி யோகராணி சிவபாலன் ஆகியோருடன் நிறுவனத்தின் உயர் அதிகாரிகளும் இணைந்து இப்பரிசில்களை வழங்குவதையும் இதில் பாடசாலை மாணவிகள் கலந்து கொண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.





குருணாகல், அரக்கியால ரவ்ழதுல் ஹாபிழ் அரபுக்கல்லூரியின் பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றதாக மொஹமட் ஸாஹிர் தெரிவித்தார்.






கத்தார் நாட்டில் இயங்கும் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் அனுசரணையில் ரிஹானா அன்வர்ஷா இஷாக் எழுதிய இலட்சியம் (ஒரு தந்தையின் சபதம்) சிறுகதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் கம்பளை சாஹிரா கல்லூரி மஹ்மூத் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடக செயலாளர் எம். ஆர். ஹஷிம்தீன் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக கலாபூஷணம் இலக்கியத் தாரகை நயீமா சித்தீக், ஆசிரியர் மா. கோகுலதீபன், கண்டி கார் டிரேடிங் உரிமையாளர் இப்திகார் அலி, வழக்கறிஞர் பிரசித்த நொத்தாரிஸ், எம். டி. நிஹால் அகமட், ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் இணை ஆசிரியருமான ஷிஹானா நௌபர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். முதல் பிரதி நூலாசிரியரின் தாயார் ஆயிஷா உம்மா அன்வர்ஷா அவர்களுக்கு வழங்கப்பட்டது. நிகழ்வின் போது நூலாசிரியர் அறிமுகத்தை கலாபூஷணம் நயீமா சித்தீக் நிகழ்த்த . நூலின் நயவுரையை ஆசிரியர் மா. கோகுல தீபன் வழங்கினார். பிரதம அதிதி கல்வி இராஜாங்க அமைச்சின் ஊடக செயலாளர் எம். ஆர் ஹஷிம்தீன் சிறப்புரை ஆற்றினார். ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஷிஹானா நௌபர் வாழ்த்துரை வழங்கினார். கம்பளை சாஹிரா கல்லூரியின் 1994 ஆம் ஆண்டைச் சேர்ந்த பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான ஷிஹானா நௌபரின் வழிகாட்டலின் கீழ் இந்நிகழ்வு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



மனைவி : உங்க அம்மா என்ன இப்படி எல்லாம் திட்டறாங்களே.. கொஞ்சமாவது கேட்க மாட்டீங்களா ?
கணவன் : நல்லா கேட்டுட்டு தான் மா இருக்கன் ?



ஆசிரியர்: நான்லாம் தினமும் 7 மைல் நடந்து போய் படிச்சன்...
மாணவன்: அப்பவே உங்களுக்கும் படிப்புக்கும் ரொம்ப தூரமா சார்...

ஆசிரியர்: அமெரிக்கா எங்கே உள்ளது.
மாணவன்: தெரியாது சார்.
ஆசிரியர்: பெஞ்ஜின் மேல் ஏறி நில்லுடா.
மாணவன்: ஏறி நின்னா தெரியுமா சார்.





ஆசிரியர்: என் வகுப்பு நேரத்துல வெளியில நில்லு அப்போ தான்டா உனக்கு அறிவு வரும்.
மாணவன்: அப்போ நீங்க பாடம் நடத்தி அறிவு வரப்போறது இல்ல ?



மாணவி 1: நீ ஒரு லூசுடி
மாணவி 2: நீ தான்டி லூசு
ஆசிரியர் : அங்க என் னங்கடி சத்தம் இங்க நா ஒருத்தி இருக்கறது உங்க கண்ணுக்கு தெரி யலையா



கணவன் : ஊரெங்கும் ஒரே காய்ச்சலா இருக்கு! குடிக்க வெந்நீர் கொடு!
மனைவி : ஏங்க இப்படி பயப்படுறீங்க? மூளைக் காய்ச்சல்தான் பரவுது! அது எப்படி உங்களுக்கு வரும் ?

ஆசிரியர் 1: ஏன் சார் அந்த மாணவன பெஞ்ச்ல நிக்க வச்சிட்டீங்க?
ஆசிரியர் 2: வீரபாண்டிய கட்டபொம்மன தூக்குல போட்டது எங்கடா னு கேட்டா கழுத்துன்னு சொல்றான்...

ஆசிரியர்: ஏன்டா.... நான் வகுப்புக்குள் நுழையும் போது எல்லாரும் சிரிக்கிறீங்க?
மாணவன்: நீங்க தான் சார் நேத்து சொன்னீங்க துன்பம் வந்தா சிரிக்கனும்னு, அதான்...... சார்





ஆசிரியர் : இரண்டாம் புலிகேசி எப்போது முடிசூட்டிக் கொண்டார்..?
மாணவன் : முதலாம் புலிகேசி இறந்த பிறகு சார்..!





ஆசிரியர்: கிணத்துல கல்லைப் போட்டா கல்லு மூழ்கிடும் ஏன் ?
மாணவன்: ஏன்னா, அதுக்கு நீச்சல் தெரியாது சார் !



மகன் : அப்பா நம்ம வீட்டில காக்கா கத்துனா ரிலேடிவ்ஸ் வருவாங்கால ?
அப்பா: எஸ்
மகன்: அப்படின எப்போ திரும்பி போவாங்க?
அப்பா: உங்க அம்மா கத்தினா போய்டுவாங்க.

# மன ரணங்களைப் படைப்பாக்குவதே கனதி சேர்க்கும்

## கலாபூசணம் கவிஞர் ஏ. பீர்முகம்மது



**சமூக வலைத்தளங்களுக்காக படைப்பிலக்கியம் படைப்பதை விடுத்து மன ரணங்களைப் படைப்பாக்குவதே கனதி சேர்க்கும் என்கிறார் கிழக்கு மாகாண முதல் அமைச்சர் விருது பெற்ற கலாபூசணம் கவிஞர் ஏ. பீர்முகம்மது**

***நீண்ட காலமாக இலக்கியச் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறீர்கள். எந்தத் தளங்களில் உங்களைத் தேட முடியும்? வரலாற்றுத் தேவையின் பொருட்டு உங்களது இலக்கியப் பயணத்தை சுருக்கமாக தாருங்கள்?***

பத்தாம் வகுப்புக் காலத்தில் இளம்பிறை என்ற சஞ்சிகையில் சந்தாவுடன் இணைந்து இலக்கியத்தை நுகரத் தொடங்கினேன். முதலாவது ஆக்கம் கவிதை. இளம்பிறை ஊடாக பயணம் ஆரம்பம். நான் கல்வி கற்ற கல்முனை சாஹிரா கல்லூரி சஞ்சிகையான மாணவ மஞ்சரியில்1966 இல் கட்டுரை வெளிவந்தது.சிறுகதை தினகரனிலும் திறன் நோக்கு கட்டுரை செங்கதிரிலும் பிரசுரமாயின. நிறையவே ஆய்வு கட்டுரைகளும் எழுதியுள்ளேன்.

கவிதை, கட்டுரை, சிறுகதை ,திறன் நோக்கு ,ஆய்வு , முஸ்லிம் அரசியல் என்று பல தளங்களில் என்னைத் தேட முடியும். இயங்கு நிலையும் உறங்குநிலையுமாக எனது இலக்கியப் பயணம் அமைந்தது. அதற்கு விதை போட்டது இளம்பிறை . வெளிச்சம் தந்தது செங்கதிர்.

***உங்களின் கவிதைவெளி மற்றும் அநுபவ வெளிப்படுத்தல் பற்றி ?***

மேலே குறிப்பிட்டதுபோல இளம்பிறை சஞ்சிகையில் எனது முதலாவது ஆக்கம் கவிதை என்ற கோலம் புனைந்து 1965 செப்ரம்பரில் வெளியானது.

அது ஒரு குறும்பா, கவிஞர் மஹாகவியின் குறும்பாக்களை

வாசித்துப் பெற்ற அருட்டுணர்வினால் எழுதியது. அதன் மூலம் கவிஞர் மஹாகவிக்குப் பிறகு உரிய முறையில் குறும்பா எழுதிய முதலாமவர் என்ற பெருமை எனக்



குக் கிடைத்தது. . இந்தத் தகவலை ஜீவநதி சஞ்சிகையில் (மே 2019) குறும்பா என்ற கட்டுரையில் காணலாம்.

பல பத்திரிகைகளும் சஞ்சிகைளும் எனது கவிதைகளைப் பிரசுரித்தன.

உனையெண்ணித் தனித்திருந்து □ என்ற கவிதைக்கு 1ம் இடம் கிடைத்து 1972இல் வெள்ளிப் பதக்கம் வென்றேன்.

" கடல் ஒரு நாள் எங்கள் ஊருக்குள் வந்தது" என்ற சிறுவர்களுக்கான தொடர் கவிதை 2010இல் நூலாகக் கனிந்தது. கவிதைக்கான கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது 2011ம் ஆண்டு கிடைத்தது.

வானொலி தொலைக்காட்சி.என்பவற்றிலும் மேடைகளிலும் என்னால் கவிதைகள் வாசிக்கப்பட்டன. பல கவியரங்குகளை தலைமையேற்று நடத்தியதும் உண்டு.

தெற்காசிய நாடுகளின் இலக்கியப் பெருவிழா புதுடில்லியில் 2019 அக்டோபரில் 3 நாட்கள் இடம்பெற்றபோது முதல் நாள் முதல் அமர்வில் (தண்ணீரின் மரணம்) *death of water* என்ற எனது ஆங்கிலக் கவிதையை வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அய்ம்பதுக்கு மேற்பட்ட சர்வதேச விருதுகள் பெற்ற பங்களாதேசத்தின் முகம்மது நூறுல் ஹுதா தலைமையில் இந்தியா, மாலைதீவு ஆப்கானிஸ்தான் ஆகிய தேசங்களின் கவிஞர்கள் என்னுடன் பங்கேற்றனர்

அண்மைக் காலமாக ஆன்மீகம் சார்ந்து கவிதைகளை எழுத மனம் விழைகின்றது.

கவிதை தொடர்பில் நான் கண்டடைந்த புதிய அநுபவம் இதுதான்.

தலைப்பு இல்லா கவிதைகளே கனதியானது.தலைப்பு



போடப்பட்ட கவிதைகள் பலவீனமானவை. அவை உள்ளடக்கத்தை காட்டிக் கொடுக்கின்றன. வாசகனின் தானே முயன்று தேடும் இறைமையை மீறுகின்றது .

சிறுகதைத் துறையிலும் இருந்ததாகச் சொல்கிறீர்கள். அத்துறையில் நீங்கள் பேசப்பட்டதாக இல்லை என்று கருதுகின்றேன். உங்கள் நிலைப்பாடு என்ன?

**பேசப்படுதல் என்பதன் எல்லை எது? ஆறு ஏழு கதைகளை எழுதி தொகுதியாக்கி நூலாக வெளியே தந்தால் பேசப்பட்டதாக ஆகிவிடுமா?**

நான் தொகுதி போட்டால் பேசப்படுவேனா? பேசப்படுதல் என்பது பகிர்வுக்குப் பின்னரான வாசகனின் வெளிப்பாடு.

இலட்சியங்கள் நிறைவேறுகின்றன என்ற எனது முதல் சிறுகதை1986 இல் தினகரன் வாரமஞ்சரியில் வெளியானது. கல்வி அமைச்சு 1987இல் நடத்திய சர்வதேச ஆசிரியர் தின சிறுகதைப் போட்டியில் ஒரு கடலை வியாபாரியின் கனவு என்ற கதை ஆறுதல் பரிசு பெற்றது.

மெய்நிகர் நிகழ்வொன்றின்போது ஞானம் சஞ்சிகையின் □. ஆம் இதழை ஆய்வு செய்த பிரபல பெண் ஆளுமை ஒருவர் கொரோனா தொடர்பான எனது வம்மிப்பூ என்ற சிறுகதையை சிலாகித்துப் பேசினார்.

பேரா. செ.யோகராசா சிறுகதை மஞ்சரியில் வெளிவந்த தைலாப் பொட்டி என்ற கதையை பாராட்டி எழுதியுள்ளார்.

சிறுகதையில் பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடுவதுமுண்டு

கிழக்கிலிருந்து வெளியான செங்கதிர் சஞ்சிகையில் 2011இல் வெளிச்சத்துக்கு வராத வெள்ள நிவாரணம் என்ற கதையை எழுதினேன். இக்கதை ரிங்லோடன் உத்தியின் சாயலில் எழுதியது. அந்தச் கதையில் நான் அடைந்த திருப்தி காரணமாக ரிங்லோடன் உத்தியிலேயே கதையொன்றை எழுத எத்தனித்தேன்.

ரிங்லோடன் உத்தி என்பது ஒரு பாத்திரம் மட்டும் பேசும் தன்மை கொண்டது. இவ்வுத்தியைக் கையாள்வது கொஞ்சம் சிரமம்

சிறுகதைத் துறையில் பல பரிசோதனைகளைச் செய்த எஸ்.பொன்னுத்துரை அணி என்ற சிறுகதையை இந்த ரிங்லோடன் உத்தி யிலேதான் எழுதினார். முடி திருத்தும் ஒருவன் முடிதிருத்த வந்தவனிடம் அவன் மட்டும் பேசிக்கொண்டே முடி திருத்துவான். அங்கே ஒரு கதை நகரும்.

எஸ்.பொ.வின் அணி தொடர்பான எனது அநுபவத்தை வைத்துக்கொண்டு ரிங்லோடன் உத்தியில் ஜெனிவாவுக்குப் போன ஜமீன்தாரு என்ற கதையை எழுதினேன். தொலைபேசியின் ஒரு முனையில் பாத்திரம் கதைப்பதை ஒட்டியே கதை நகரும். புனைவு மொழி யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்ததால் புலம்பெயர் பிரதேசத்தை மனதில் உன்னி அரங்கம் நியூஸ் இணைய இதழுக்கு அனுப்பினேன். பிரசுரம் செய்தார்கள்.

மறுவாசிப்புக் கதை ஒன்றும் எழுதினேன். எஸ்.பொன்னுத்துரை உலகப்புகழ் பெற்ற சொலக்கோவ் எழுதிய சிறிய மீன் பெரிய மீன் கதையை எஸ்.பொ ஞானரதம் என்ற தலைப்பில் சிறிய மீன் பெரிய மீன் என்பவற்றோடு கொக்கு ஒன்றையும் கதையில் அறிமுகம் செய்து மறுவாசிப்பு செய்திருந்தார்.

எஸ். பொவின் கதையை நான் மறுவாசிப்பு செய்து இறைவனின் சித்தம் என்ற தலைப்பில் சிறிய மீன் பெரிய மீன் கொக்கு விவசாயி ஒருவனையும் அறிமுகம் செய்திருந்தேன்.

இப்பொழுதெல்லாம் எனது சிறுகதையின் புனைவு மொழி வேறு கோலம் பூணுகின்றது.ஞானம் சஞ்சிகையில் 2022 இற்குப் பின்னரான காலத்தில் வெளியான மரக்கறிக் கெழவி ,மொலப்பால் , நோக்காடு ஆகிய கதைகளும் ஜீவநதி (ஏப்ரல் 2023) யில் வெளியான சிலேட்டுப் பலக என்ற கதையும் மண்ணின் மொழியில் எழுந்த மக்களின் கதைகளாகும். அத்தகைய பன்னிரெண்டு கதைகள் தொகுதியாக விரைவில் வெளிவர உள்ளது.

முதலில் எனது சிறுகதைக் கோர்வை வெளியில் வரட்டும். அதன்பின்னரே எனது கதைகள் பேசப்படுமா இல்லையா என்பது தெரியவரும்.

நேர்காணல்
இக்பால் அலி

சிறுகதை என்பது சிறிய கதை அல்ல. அதன் முடிவில்தான் பெரிய கதையொன்று தலைகாட்டும்.

பத்திரிகைக் காரியாலயத்தில் கதையைக் கொண்டு போய் வலிந்து திணித்து பின்னர் அது பிரசுரம் கண்டதும் போட்டா பிரதி ஊர்வலம் வருவதும் தனக்குத் தானே குஞ்சம் சூடிக் கொள்வதும் என்று இன்றைய சிறுகதை உலகம் சிக்கலுக்குள் மாட்டியிருக்கிறது.

அதனை மீட்டெடுக்க அனைவரும் முயல்வோம்.

**சிறுகதைத் துறையிலும் இருந்ததாகச் சொல்கிறீர்கள் . அத்துறையில் நீங்கள் பேசப்பட்டதாக இல்லை என்று கருதுகின்றேன். உங்கள் நிலைப்பாடு என்ன? பேசப்படுதல் என்பதன் எல்லை எது ? ஆறு ஏழு கதைகளை எழுதி தொகுதியாக்கி நூலாக வெளியே தந்தால் பேசப்பட்டதாக ஆகிவிடுமா?**

நான் தொகுதி போட்டால் பேசப்படுவேனா? பேசப்படுதல் என்பது பகிர்வுக்குப் பின்னரான வாசகனின் வெளிப்பாடு.

இலட்சியங்கள் நிறைவேறுகின்றன என்ற எனது முதல் சிறுகதை1980இல் தினகரன் வாரமஞ்சரியில் வெளியானது. கல்வி அமைச்சு 1987இல் நடத்திய சர்வதேச ஆசிரியர் தின சிறுகதைப் போட்டியில் ஒரு கடலை வியாபாரியின் கனவு என்ற கதை ஆறுதல் பரிசு பெற்றது. மெய்நிகர் நிகழ்வொன்றின் போது ஞானம் சஞ்சிகை இதழை ஆய்வு செய்த

(7 ஆம் பக்கம் பார்க்க)



# ஹரிபூரணி சுபாகரனின் பரத நாட்டிய அரங்கேற்றம்













பரத சூடாமணி ஸ்ரீமதி ஜீவா ரட்ணராஜாவின் மாணவியும் திரு. திருமதி சுபாகரனின் புதல்வியுமான ஹரிபூரணி சுபாகரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் கொழும்பு, பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபல பெண் ஆளுமை ஒருவர் கொரோனா தொடர்பான எனது வம்மிப்பூ என்ற சிறுகதையை சிலாகித்துப் பேசினார். பேரா. செ.யோகராசா சிறுகதை மஞ்சரியில் வெளிவந்தது

**நூல் மதிப்பீட்டுத் துறையில் திறனாய்வு என்ற சொல்லுக்கு எதிராக நீங்கள் குரலை உயர்த்தியுள்ளதாக ஒரு தகவல் உள்ளது. அதுபற்றி விளக்கம் தாருங்கள்.?**





மிக்க நன்றி. நான் எதிர்பார்த்திருந்த கேள்வியே இதுதான். முதலில் திறனாய்வு என்ற சொல் பயன்பாட்டுக்கு வந்த சூழ்நிலையை விளங்கிக் கொள்ள வேண்டும். நாற்பதுகளின் மத்திய கந்தாயத்தில் *Critism* என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாக தமிழில் விமர்சனம் என்ற சொல் இருந்தது. விமர்சனம் என்ற சொல் பொருத்தமற்றது என்று கருதிய தமிழகப் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் திறனாய்வு என்ற சொல்லை அறிமுகம் செய்தார். இலங்கையில் அதனை பரவலான பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் பேரா. க.கைலாசபதி அவர்கள்.

அன்றைய குழ்நிலையில் மதிப்பீட்டுத் துறை பேராசிரியர்களின் கைகளிலேயே இருந்தது. திறனாய்வு என்பதில் உள்ள ஆய்வு காரணமாக எஸ்.பொன்னுத்துரை மு.தளையசிங்கம் கே.எஸ்.சிவகுமாரன் போன்ற பிரபலங்கள் தவிர பல்கலைக் கழகத்துக்கு வெளியில் இருந்தவர்கள் அத்துறையில் ஈடுபட விரும்பவில்லை.ஆனால் இன்று அப்படியல்ல. நூல் மதிப்பீடுகளில் பல்கலைக்கழகத்துக்கு வெளியில் உள்ளவர்களே பெரும் எண்ணிக்கையில் ஈடுபடுகின்றனர்.

எனவேதான் திறனாய்வு என்ற சொல் திறன்நோக்கு என்ற சொல்லால் பிரதியீடு செய்யப்பட வேண்டும் என்று குரல் எழுப்பினேன். வேறு காரணங்களும் உள்ளன. இது தொடர்பில் கட்டுரைகள் எழுதினேன். பத்திரிகைகளில் பேட்டி கொடுத்தேன். பல்கலைக் கழகத்து தமிழ் பிரதானிகள் எவரும் அதுபற்றிப் பேச முன்வரவில்லை. புலமைத் திமிர் காரணமோ தெரியாது.

பேரா.செ.யோகராசா அவர்கள் மாத்திரம் திறனாய்வு என்ற சொல்லுக்குப் பதிலாக இரண்டாம் விசுவாமித்திரன் திறன் நோக்கு என்ற சொல்லைப் பயன்படுத்தி வருவதாக சொன்னதை அறிந்தேன்.

ஆனால் நூல் வெளியீட்டு அழைப்புகள் சிலவற்றிலும் முகநூல் மதிப்பீடுகளிலும் திறன்நோக்கு என்ற சொல் இடம்பிடித்து வருவதை அவதானித்துள்ளேன்.

அது மட்டுமல்ல 2011 இல் இருந்து 2013 வரையான இரு வருடகால இடைவெளியில் கிழக்கில் இருந்து வெளியான செங்கதிர் சஞ்சிகையில் விசுவாமித்திர பக்கத்தில் இரண்டாம் விசுவாமித்திரன் என்ற புனைபெயரில் இருபதுக்கு மேற்பட்ட நூல்கள் பற்றி திறன்நோக்குக் கட்டுரைகளை எழுதினேன். நோக்கல் என்ற தலைப்பையே பயன்படுத்தினேன்.

செங்கதிருக்கு வெளியிலும் பத்திரிகைகளில் அவ்வாறான எனது கட்டுரைகள் பிரசுரமாயின.

அவற்றையெல்லாம் தொகுத்து நூலாக்கியபோது நோக்கல் என்பதை விடுத்து திறன்நோக்கு என்று பயன்படுத்தினேன். கிழக்கு மாகாண கலாச்சாரத் திணைக்களம் திறன் நோக்கு என்ற அந்நூலைப் பதிப்பித்து உதவியது.

நூல் மதிப்பீடு என்பது யாகம் போன்றது. தைக்கும் முள்ளாக அல்லாமல் தராசு முள்ளாக மதிப்பீடுகள் அமைதல் வேண்டும்.இறக்குமதி கோட்பாடுகளை கையில் எடுத்து சுழற்றுவதும் முதுகிலும் முகத்திலும் குத்துவதும் சிறந்த மதிப்பீடாக அமையாது.

**இரண்டொரு வாக்கியங்களில் தங்களின் ஆய்வு முயற்சிகள் பற்றி ?**

அண்மைக் காலமாக ஆய்வுத்துறை என்னை மிகவும் ஈர்த்தது.

பாரதியார் யானை தாக்கி மரணம் அடையவில்லை.குறும்பாவே மஹாகவியை அறிமுகப்படுத்தியது இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார் ?

போன்ற கட்டுரைகளை எழுதினேன்.. விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும் (2013) எஸ்.பொன்னுத்துரை : முஸ்லிம்களுடனான உறவும் ஊடாட்டமும் (2021) . இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான் : இருட்டடிப்புகளில் இருந்து வெளிச்சத்துக்கு வந்தவர் (2022)

ஆகிய மூன்று ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளேன்

ஆய்வு என்பது தகவல்களைச் சொல்வது மட்டுமல்ல மாற்றுத் தகவல்களை முன்வைத்து தொடர்நடவடிக்கைகளைப பிரேரிக்கவும் வேண்டும்

**இறுதியாக இலங்கையின் தமிழ் இலக்கியச் செயற்பாடுகள் பற்றி ?**

இன்னும் ஒரு தசாப்த காலத்தில் இலங்கையின் தமிழ்ப் படைப்பிலக்கியத்தை மலையகத் தமிழ் இலக்கியம் தலைமை தாங்கும். மலையக இலக்கியத்தைக் கரைத்துக் குடித்துவிட்டு இதனைச் சொல்லவில்லை .மாறாக சமகால மலையகத்து இலக்கியச் செயற்பாடுகளை ஊன்றிக் கவனித்ததில் இதனை ஊகித்துக் கொண்டேன். இதனைச் சொன்னதற்காக யாரும் மடித்துக் கட்டிக்கொண்டு சண்டைக்கு வரத் தேவையில்லை. ஊகிக்கவும் ஊகித்ததைப் பகிரவும் எனக்கு உரிமை உண்டு.

இன்றைய இளைய தலைமுறையினரை நோக்கி என்ன சொல்ல விரும்பு கிறீர்கள்?

இளைஞர்களைப் பொறுத்தவரையில் இலத்திரனியல்வெளி மிகுந்த பயனுடையது. தொகுதிகள் போடுவதற்கென்றே சிலர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது விசனத்துக்குரியது. மன ரணங்களைப் படைப்பாக்குவதே கனதி சேர்க்கும்.

இன்றைய இளைய தலைமுறையினரை நோக்கி என்ன சொல்ல விரும்பு கிறீர்கள்?

இளைஞர்களைப் பொறுத்தவரையில் இலத்திரனியல்வெளி மிகுந்த பயனுடையது. தொகுதிகள் போடுவதற்கென்றே சிலர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவது விசனத்துக்குரியது.


2023 ஜூலை 30 ஞாயிற்றுக்கிழமை 9



# சூர்யாவுக்கு வில்லனாக பொபி தியோல்

'கங்குவா' படத்தில் பிரபல இந்தி நடிகர் பொபி தியோல் வில்லனாக நடிக்கிறார். தமிழ் சினிமாவில் இந்தி நடிகர்கள் வில்லன் வேடத்தில் நடித்து மிரட்டியிருக்கிறார்கள். 'தளப தி ' படத்தில் அம்ரிஷ்புரி, '2.0' படத்தில் அக்ஷய்குமார், 'காலா'வ் படத்தில் நானா படேகர், 'விக்ரம்' படத்தில் அம்ஜத்கான் என இந்தி நடிகர்கள் கலக்கியிருக்கிறார்கள். 'கே.ஜி.எப்.2' படத்தில் கொடூர வில்லனாக நடித்து கவனம் ஈர்த்த சஞ்சய் தத், தற்போது விஜய்க்கு வில்லனாக 'லியோ' படத்தில் நடித்து வருகிறார். அந்தவகையில் மேலும் ஒரு இந்தி நடிகர், தமிழ் படத்தில் வில்லனாக நடிக்கிறார். சிறுத்தை சிவா இயக்கத்தில் சூர்யா நடிக்கும் 'கங்குவா' படத்தில் பிரபல இந்தி நடிகர் பொபி தியோல் வில்லனாக நடி க்கிறார். இதுகுறித்து படத்தின் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா கூறுகையில், "கங்குவா படத்தில் சூர்யாவுக்கு இணையாக ஆளுமைமிக்க வில்லனாக மிரட்டக்கூடிய நடிகரை தேடினோம். அப்படி சிந்திக்கும்போது பொபி தியோல் அந்த கதாபாத்திரத்துக்கு பொருத்தமாக இருப்பார் என்று நம்பினோம். கதையை சொன்னதும் அவரும் உடனடியாக ஒப்புக்கொண்டார்" என்றார். மேலும் அவர் கூறும்போது, இதுவரை பார்க்காத பொபி தியோலை ரசிகர்கள் பார்ப்பது நிச்சயம். அவரது உடல்மொழியிலும், தோற்றத்திலும் ரசிகர்களுக்கு மாறுபட்ட அனுபவம் காத்திருக்கிறது. ஓகஸ்ட் மாதம் பாங்காக்கில் நடைபெறும் படப்பிடிப்பில் அவர் இணைகிறார்" என்றார்.





# தமன்னாவுக்கு திருமணம்?




இந்தி ய சினிமாவின் முன்னணி நடிகையாக திகழும் தமன்னா, பாலிவுட் நடிகர் விஜய் வர்மா இடையே காதல் என பேச ப்பட்டது. கிசுகிசுக்கப்பட்ட காதல் விவகாரத்தை தமன்னாவே உறுதி செய்து அறிவித்தார். சமீபத்தில் வந்த 'லஸ்ட் ஸ்டோரிஸ்2' படத்தில் தமன்னாவிஜய் வர்மா நடித்த நெருக்கமான காட்சிகள் இணையதளமே சூடாகும் அளவு கிளுகிளுப்பாக அமைந்திருந்தது. இருதரப்பிலும் தங்களது காதலை ஒப்புக்கொண்ட நிலையில் 'எப்போது திருமணம் செய்துகொள்ள போகிறீர்கள்?' என ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகிறார்கள். ஆனாலும் இருவரும் சிரிப்பையே பதிலாக்கி வருகிறார்கள். தற்போது அந்த கேள்வியை தமன்னாவின் வருங்கால மாமியாரே கேட்க தொடங்கிவிட்டாராம். மாமியாரின் ஆசையை நிறைவேற்றுவது தன் கடமை என்று நண்பர்களிடம் தமன்னா பெருமையாக பேசிவருகிறாராம். இதனால் விரைவில் தமன்னாவிஜய் வர்மா தரப்பில் இருந்து நல்ல செய்தி வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரஜினிகாந்த் ஜோடியாக தமன்னா நடித்துள்ள 'ஜெயிலர்' படம் அடுத்த மாதம் திரைக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.



# நான்தான் நம்பர் வன்..!

கீர்த்தி சுரேஷ் நடிப்பில் சமீபத்தில் மாமன்னன் படம் வெளிவந்தது. மாரி செல்வராஜ் இயக்கத்தில் உதயநிதி, வடிவேலு ஆகியோர் நடித்திருந்த அப்படம் சில விமர்சனங்களை பெற்றிருந்தாலும் வசூல் ரீதியாக தல தப்பியது. அதைத் தொடர்ந்து தற்போது கண்ணிவெடி என்ற படத்தில் லீட் ரோலில் நடிக்க கீர்த்தி கமிட்டாகி இருக்கிறார். இது மட்டுமல்லாமல் இன்னும் பல வாய்ப்புகள் அவரைத் தேடி குவிந்து கொண்டிருக்கிறதாம். மேலும் பாலிவுட்டில் அட்லியின் தயாரிப்பில் அறிமுகமாகவும் இருக்கிறார். விஜய் நடிப்பில் வெளிவந்த தெறி படத்தின் ஹிந்தி ரீமேக்கில் தான் கீர்த்தி சுரேஷ் சமந்தா கேரக்டரில் நடிக்க உள்ளார். இந்த விஷயம் தற்போது ஒரு நடிகையின் வயிற்றில் தீயை பற்ற வைத்திருக்கிறது. அதாவது இப்போது தமிழ், தெலுங்கு, ஹிந்தி என அனைத்து மொழிகளிலும் ராஷ்மிகாவுக்கு மவுசு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஒட்டு மொத்த ரசிகர்களின் கிரஷ் நடிகை என்ற பெயரும் இவருக்கு உள்ளது. மேலும் டாப் ஹீரோக்கள் எல்லாம் இவரை ஜோடியாக போட விரும்புவதால் அம்மணிக்கு தலையில் கொம்பு வைத்தது போல் ஆகிவிட்டது. அதனால் ஓவர் ஆட்டம் ஆடி வந்த இவருக்கு சரியான ஆப்பு கிடைத்திருக்கிறது. அதாவது இந்த தெறி படத்தில் ராஷ்மிகாதான் முதலில் நடிக்க இருந்தாராம். ஆனால் அம்மணியின் ஓவர் ஆட்டத்தால் இந்த வாய்ப்பு கைநழுவி போயிருக்கிறது. அது மட்டுமல்லாமல் ஹிந்தியில் இவர் கைவசம் ஒரு படம் தான் இருக்கிறது. மேலும் தமிழ், தெலுங்கில் புது படங்களும் வருவது குறைந்து விட்டதாம். இதற்கு முக்கிய காரணம் பாலிவுட் பக்கம் போய் தென்னிந்திய படங்களை அவர் தாறுமாறாக குறை சொன்னது தான். அதன் காரணமாகவே தற்போது வாய்ப்பு இல்லாமல் இருக்கும் இவர் உள்ளதும் போச்சே என்று புலம்பித் தவிக்கிறாராம். அது மட்டுமல்லாமல் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று கடும் அப்செட்டில் வேறு உள்ளாராம். அந்த வகையில் நான் தான் நம்பர் ஒன் என தலையில் கொம்போடு அலைந்த இவரை இப்படி புலம்ப வைத்து கீர்த்தி சுரேஷ் டாப் இடத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறார்.





# கதாநாயகியாக அறிமுகமாகும் சாரா

அவரை குழந்தை நட்சத்திரமாக அறிமுகப்படுத்திய விஜய்தான் கதாநாயகியாகவும் அறிமுகப்படுத்த இருக்கிறார். 2011ம் ஆண்டில் வெளியான 'தெய்வ திருமகள்' படத்தில் விக்ரமின் மகளாக 'நிலா' என்ற கதாபாத்திரத்தில் நடித்து கவனம் ஈர்த்தவர் சாரா. அதனைத்தொடர்ந்து மீண்டும் விஜய் இயக்கத்தில் 'சைவம்' படத்தில் சாரா நடித்தார். 'பொன்னியின் செல்வன்2' படத்தில் இளவயது நந்தினியாக நடித்து அட்டகாசப்படுத்தி இருந்தார். சமீபகாலமாகவே இணையதளத்திலும் சாரா தனது கவர்ச்சி படங்களை வெளியிட்டு வந்தார். இதனால் அவர் கதாநாயகியாக நடிக்க போகிறார் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்படி, தமிழ் சினிமாவில் சாரா கதாநாயகியாக நடிக்க போகிறார். இது குறித்து விஜய் கூறுகையில், 'பொன்னியின் செல்வன்2' படத்தில் மணிரத்னம் சாராவை தெய்வீக அழகுடன் சித்தரித்துவிட்டார். இனி சாரா தைரியமாக ஹீரோயினாக நடிக்கலாம். அவரை நான் 2025ம் ஆண்டு தமிழில் கதாநாயகியாக அறிமுகப்படுத்த இருக்கிறேன் என்றார். விஜய் தற்போது அருண் விஜய் நடிப்பில் 'மிஷன்: சேப்டர்1' என்ற படத்தை இயக்கி வருகிறார்.



# வில்லன் கதாப்பாத்திரத்தில் கமல்


நடிகர் பிரபாஸ் தற்போது நடித்து வரும் திரைப்படம் 'புராஜெக்ட் கே' (Project K). இந்த படத்தில் முக்கிய பிரபலங்கள் பலர் நடிக்கின்றனர். இயக்குனர் நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'புராஜெக்ட் கே' (Project K). இந்த படத்தில் பிரபாஸ், தீபிகா படுகோனே, அமிதாப் பச்சன், கமல், திஷா பதானி, உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். சயின்ஸ் ஃபிக்சன் படமாக உருவாகும் இப்படத்தை வைஜெயந்தி மூவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. அதன்படி, இப்படத்திற்கு 'கல்கி 2898 ஏடி' (KALKI 2898AD) என தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து படக்குழு கிளிம்ப்ஸ் வீடியோவை வெளியிட்டுள்ளது. மேலும் இதில் நடிகர் பசுபதி முக்கிய கதாபாத்திரத்தில் இடம்பெற்றுள்ளார். இந்நிலையில் இப்படத்தில் கமலின் கதாப்பாத்திரம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி இப்படத்தில் கமல் வில்லனாக நடிப்பதாக கூறப்படுகிறது. மேலும் நெகடிவ் ரோல் இல்லாமல் பாசிட்டிவ் ரோல் கிடையாது. ஒரு படத்திற்கு நெகடிவ் ரோல் மு க் கி ய ம ா னது என்று கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.





# LGM சிறப்பு தோற்றத்தில் தோனி

கிரிக்கெட் வீரர் தோனியும், அவரது மனைவி சாக்ஷியும் இணைந்து 'தோனி எண்டர்டெயின்மெண்ட்' என்ற தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் தமிழில் 'லெட்ஸ் கெட் மேரிட்' என்ற படத்தை தயாரித்துள்ளனர். ரமேஷ் தமிழ் மணி இயக்கியுள்ள இப்படத்தில் ஹரிஷ் கல்யாண், இவானா, நதியா, யோகி பாபு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படம் வரும் ஜூலை 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக இருப்பதாக படக்குழு சமீபத்தில் அறிவித்திருந்த நிலையில் தற்போது புதிய அப்டேட் ஒன்று வெளியாகியுள்ளது. இப்படத்தில் தோனி சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளதாக சினிமா வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. இதனால் தோனி ரசிகர்கள் உற்சாகம் அடைந்துள்ளனர்.



# அதிதி ஷங்கருக்கு கொடுத்த பெரிய டிமிக்கி

பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கரின் இளைய மகளான அதிதி, கார்த்தியின் விருமன் படத்தின் மூலம் கதாநாயகியாக தமிழ் சினிமாவில் அறிமுகமானார். முதல் படத்திலேயே ஆடல், பாடல் என ரசிகர்களை குஷிப்படுத்தினார். அடுத்ததாகவே சிவகார்த்திகேயனின் மாவீரன் படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்த படத்தில் அதிதி ஷங்கருக்கு பெரிய ஸ்கோப் எதுவும் இல்லை. படத்தில் சில காட்சிகள் மட்டுமே வந்து சென்றிருக்கிறார். மேலும் படத்தையும் சிலர் விமர்சித்து வருகிறார்கள். ரொம்ப சீரியஸான கதைகளம் கொண்ட இப்படத்தை காமெடி செய்து வைத்திருக்கிறார்கள் என பலரும் கிண்டல் அடித்து வருகிறார்கள்.

அதிதி இந்த படத்தில் ஏன் நடித்தார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஏனென்றால் இயக்குனரின் மகள் என்பதால் சின்ன வயதிலிருந்தே சினிமாவில் ஊறிப் போய் இருப்பார். கதை கேட்காமல் கண்டிப்பாக நடித்து இருக்க முடியாது. அப்படி இருக்கும்போது மாவீரன் படத்தில் வேண்டுமென்றே நடித்து தனது பெயரை கெடுத்துக் கொள்ள என்ன விஷயம் என்றது தெரியவந்துள்ளது. அதாவது மாவீரன் கதையை கேட்டுவிட்டு முதலில் அதிதி ஷங்கர் மறுப்பு தெரிவித்து விட்டார். ஆனால் அதன் பிறகு நீங்கள்தான் இந்த படத்தில் ஹீரோயினாக நடிக்க வேண்டும், அது மட்டுமல்லாமல் இந்த படத்தில் நடித்தால் அடுத்த படத்திலும் உங்களுக்கு வாய்ப்பு தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதுவும் அடுத்த படம் கதாநாயகிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும், அதன் மூலம் பெரிய இடத்திற்கு செல்லலாம் என்ற எதிர்பார்ப்பில் மாவீரன் படத்தில் அதிதி நடித்திருக்கிறார். ஆனால் இப்படக்குழு ஆசை வார்த்தை சொல்லி அதிதிக்கு அல்வா கொடுத்திருக்கிறது. விவரம் தெரியாத பிள்ளையாய் எல்லாத்தையும் நம்பி ஏமாந்து போய்விட்டார். மேலும் மாவீரன் படத்தின் ரிலீஸுக்கு முன்பாக அதிதிக்கு நிறைய பட வாய்ப்புகள் தொடர்ந்து வந்து கொண்டிருந்ததாம். ஆனால் இந்த படத்தை பார்த்த பிறகு அவரது முகத்தில் எந்த ரியாக்ஷனும் வரவில்லை, அது மட்டுமல்லாமல் வெறுமனே இவரை பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அதிதிக்கு பட வாய்ப்பு தர மறுத்து வருகிறார்கள்.

# மாமியார் மருமகள் உறவில் விரிசல் ஏன்?




பெண்களுக்கு எப்போதுமே இரு வீடு. பிறந்த வீடு, புகுந்த வீடு என்பது காலத்தின் வரமா கட்டாயத்தின் சாபமா புரியவில்லை!

ஆனால் பெற்றோர் வீட்டில் நன்றாக வாழ்ந்து மாமியார் வீட்டில் கொடுமைகளை அனுபவித்த பெண்களும் இருக்கிறார்கள். பெற்றோருடன் வாழ்ந்ததை விட மாமியார் வீட்டில் நன்றாக வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

புகுந்தவீட்டில் மகிழ்ச்சியாக வாழும் மருமகளைப் பற்றியோ மருமகளை மகளாக தாங்கும் மாமியாரை பற்றியோ இந்த சமூகம் பேசுவதும் இல்லை எழுதுவதும் இல்லை. அதனால் தான் என்னவோ திருமணம் என்று பெண்களின் பருவம் வரும் போது 'ஐயோ மாமியார் இருக்காங்களா கவனமாயிரு' என்று திருமணமாகும் முன்பே ஒரு பயத்தினை மணமகளுக்குள் உருவாக்கி விடுகிறது இந்த சமூகம்.

அதேப்போல மகனை பெற்ற மகராசிகளிடமும் 'ஒனக்கு வரப் போற மருமகள முதல்லேய அடக்கி வைச்சிடு.அப்படி இல்லாட்டி பின்னாடி நீதான் அவஸ்தபடுவ" என்கிற எச்சரிப்பு தானும் ஒருவீட்டின் மருமகளாக இருந்தே வந்தோம் என்கிற நிலையை மறக்க வைத்து வரும் மருமகளை எதிர் கொள்ளும்மனோபக்குவத்திற்குதயாராகிறார் அந்த மணமகளின் மாமியார்.

இது ஏன் புரியவில்லை!

அண்மையில் எனக்கு தெரிந்த உறவினர் ஒருவரை ஐந்து வருடங்களுக்கு பின் சந்திக்கு வாய்ப்பு கிடைத்தது.அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்த மகள் பல்கலைக் கழகம் எதிர் பார்த்து காத்திருக்கிறார். அந்த பெண்ணுக்கு நல்ல இடத்தில திருமணம் கூடி வந்ததால் அடுத்த மாதம் திருமணம். மருமகன் வெளிநாட்டில் இருப்பதால் வருடத்திற்கு ஒருமுறை வருவார் என அந்த தாய் குறிப்பிட்டார்.

நானும் "அப்படியா மகிழ்ச்சி. மகளும் திருமணம் முடித்து வெளிநாடு சென்று விடுவாரா. படிப்பு 'என்று கேக்க "தெரியல ஆனா அவங்க வாழ்க்கை தனியா இருந்தா நல்லது. இந்த மாமியார் கூட இருப்பதெல்லாம் சரி வராது.என ஆதங்கம் பட்டார்.

எனக்கு புரியவில்லை "ஏன்! நல்ல படித்த பிள்ளையை படிக்காத குடும்பத்தில் திருமணம் முடித்து அனுப்ப போகிறீர்களா ' என்றேன். "இல்லையில்லை அவங்க குடும்பத்தில் எல்லோரும் பட்டதாரிகள் தான். இவளின் மாமியாரும் பட்டதாரி ஆசியைத்தான். தொடர்ந்து படிக்க வைப்பார்கள் இருந்தாலும் மாமியார் கூடவெல்லாம் வாழ கூடாது'. எனக்கு என்ன சொல்வதென தெரியவில்லை. காரணம் என்னிடம் கதைத்த அந்த உறவின பெண் இறக்கும் வரை தன் மாமியாரை வேறு மருமகள் வீட்டுக்கு அனுப்பி வைக்காமல் பார்த்தவர். அந்த மாமியாரும் தாய் போல இறக்கு வரை கொடுப்பதை சாப்பிட்டு இருப்பதை உடுத்தி யாரிடமும் தன் மருமகளை குறை பேசாத அம்மணி. இந்த பெண்ணும் வறுமையில் வாழ்ந்த குடும்பத்திலிருந்த வந்து பின் மாப்பிளை வீட்டில் மகாராணியாக வலம் வந்தவர். பின் ஏன் இந்த வெறுப்பு

மாமியார் மருமகள் என்றாலே எதிரும் புதிருமான சிந்தனையை நாம் உருவாக்கி கொள்வதே. மாமியாரும் மருமகளும் வெவ்வேறு கிரகத்தில் பிறந்து வாழ்த்து வந்தவர்களா! அதனால் அவர்களின் உறவில் பிரச்சனை என்று எப்போது எதிர் பார்க்கிறது இந்த சமூகம். இந்த எதிர்மறை சிந்தனையை மாற்ற வேண்டுமெனில் முதலில் நாம் ஒவ்வொருவரும் நம் எண்ணங்களை மாற்ற வேண்டும்.

திருமணமாகும் பெண்ணும் மனதில் நினைக்க வேண்டும். கணவனின் தாய் எனக்கும் இன்னொரு தாய். அவரின் குடும்பமும் எனது சகோதர்களே. என் வீட்டில் அம்மா ஏசினால் பின் மறந்து விட்டு நான் பேசவில்லையா.அல்லது அம்மா ஏசினார் என்பதற்கா உறவினர்களிடம் போய் முறையிட்டது உண்டா இல்லையே. அதுபோல மாமியார் வீட்டில் ஆரம்பத்தில் சின்ன சின்ன புரிந்துணர்வுகள் இல்லாத பல பிரச்சனைகள் வரும். மனம் விட்டு பேசி நம் நிம்மதி குலையாதவாறு கடந்து செல்லுதல் சுகம். மாமியார் ஏசுவதை விட நம் தாய் அதிகமாக ஏசியிருப்பார். நமக்கு அவை நினைவில் இருக்காது. ஆனால் மாமியார் என்கிறபோது நமக்கு சின்ன சின்ன விடயத்திற்கும் கோபம் வந்துவிடும்.

எதனால் நம் அவர்களின் நிம்மதி போகிறதோ இல்லையோ பெண்களாகிய நம் நிம்மதி போய்விடும். அதற்கு வழி கொடுக்காமல் நாம் திருமண வாழ்க்கையை வாழப்பழகுவோம். அதுபோல மாமியார்கள் பக்கம் பார்த்தல்.

**தொடரும்...**




கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# நெய்ல் பாலிஷ்

இன்றைய நவ நாகரீக உலகில் பெண்களுக்கான ஒப்பனை பொருட்கள் அதிக அளவில் இருக்கின்றன. பெண்கள் தங்கள் முக அழகை எந்த அளவுக்கு பாதுகாக்கிறார்களோ, அதேபோல அழகான மற்றும் வண்ணமயமான நகங்களை நேசிக்கிறார்கள். இதற்காக ஒவ்வொரு ஆண்டும், மேட் நகங்கள் முதல் கிளாசிக் பிரஞ்சு நகங்கள் என இன்னும் பலவிதமான நகங்களை நெய்ல் ஆர்ட் நிறுவனங்கள் வகைப்படுத்தத் தொடங்கியுள்ளன. இதன் உதவியுடன் பெண்கள் தங்கள் கை விரல்களை அழகாக காட்டுவதற்கு நெய்ல் பாலிஷ் பயன்படுத்துகின்றனர். அது மிகவும் சிம்பிளாக இருந்தாலும் நெய்ல் பாலிஷ் போட்டுக்கொண்ட ஒரு சில நாட்களிலேயே கொஞ்சம் கொஞ்சமாக உதிரத் துவங்கும். சிலருக்கு நெய்ல் பாலிஷ் போட்டுக்கொண்ட சில மணி நேரங்களிலேயே உதிரலாம். இதற்கு கைகளை தொடர்ந்து கழுவுதல் அல்லது சமயலறையில் வேலை செய்தல், பாத்திரங்களை கழுவுதல் போன்ற வீட்டு வேலைகள் காரணமாக இருக்கலாம்.

எனவே, உங்கள் நெயில் பாலிஷ் நகங்களில் இருந்து உதிராமல் அப்படியே இருப்பதை உறுதிசெய்ய கீழ்காணும் உதவிக்குறிப்புகளை பின்பற்றினால் போதும், நீண்ட நாட்களுக்கு உங்கள் விரலில் நெய்ல் பாலிஷ் அப்படியே இருக்கும். எப்போதும் ஒரு டாப் கோட் பயன்படுத்துங்கள்.இ து உங்கள் வண்ணமயமான விரல்களை நீண்ட நாட்களுக்கு அப்படியே பாதுகாப்பதில் உதவி புரிகிறது. நெய்ல் பாலிஷ் மீது பொருந்தக்கூடிய டாப் கோட்டை பயன்படுத்துவது அவசியம். வழக்கமாக நீங்கள் உங்களுக்கு பிடித்த நெய்ல் கலரை தேர்ந்தெடுத்து அதனை உங்கள் நகங்களில் பூசிய பிறகு அதனை நன்கு காய வையுங்கள். வண்ணப்பூச்சு காய்ந்தபின் அதன் மேல் டாப்கோட் போடுவது நீண்ட நேரம் நீடிக்க உதவும் மற்றும் உங்கள் நகங்களுக்கு பளபளப்பான ஷைனிங்கை கொடுக்கும். எந்தவொரு வகை நெயில் பாலிஷுடனும் சேரக்கூடிய டாப் கோட்டை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

எப்போதும் ஒரு டாப் கோட் பயன் படுத்துங்கள் : இது உங்கள் வண்ணமயமான விரல்களை நீண்ட நாட்களுக்கு அப்படியே பாதுகாப்பதில் உதவி புரிகிறது. நெய்ல் பாலிஷ் மீது பொருந்தக்கூடிய டாப் கோட்டை பயன்படுத்துவது அவசியம். வழக்கமாக நீங்கள் உங்க



ளுக்கு பிடித்த நெய்ல் கலரை தேர்ந்தெடுத்து அதனை உங்கள் நகங்களில் பூசிய பிறகு அதனை நன்கு காய வையுங்கள். வண்ணப்பூச்சு காய்ந்தபின் அதன் மேல் டாப்கோட் போடுவது நீண்ட நேரம் நீடிக்க உதவும் மற்றும் உங்கள் நகங்களுக்கு பளபளப்பான ஷைனிங்கை கொடுக்கும். எந்தவொரு வகை நெயில் பாலிஷுடனும் சேரக்கூடிய டாப் கோட்டை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.4/ 7

ஹாண்ட் கிரீம் பயன்படுத்துங்கள்: ஹாண்ட் கிரீம்கள் அடிப்படையில் சன்ஸ்கிரீன் போல வேலை செய்கின்றன. ஹாண்ட் கிரீம்களை ஒரு நாளைக்கு இரண்டு முறை பயன்படுத்துவது உங்கள் கைகளை ஈரப்பதமாகவும், நகங்களை ஆடம்பரமாகவும் வைத்திருக்க உதவும். இது உங்கள் நகத்தின் ஓரப் பகுதிகளை ஈரப்பதமாக வைத்திருக்க உதவுகிறது. இதனால் அவை உங்கள் சருமத்தை உலர்த்துவதற்கும், கூடுதலாக வளர்ந்த நகங்களை ஷேப் செய்வதற்கும் எளிதாக இருக்கும்.

நகங்களின் நுனி வரை நன்றாக பாலிஷ் செய்யுங்கள்: நீங்கள் உங்கள் விரல் நகங்களில் பாலிஷ் வைக்கும் போது அனைத்து ஓரங்கள் மற்றும் நுனி வரை நன்றாக கோட் செய்யுங்கள். ஒரு முறைக்கு இருமுறை நன்கு கோட் செய்வதால் பாலிஷுகள் எளிதில் உதிராது.

ஒரு பேஸ் கோட்டைப் பயன்படுத்துங்கள்: நீங்கள் உங்கள் நகங்களுக்கு எப்படி ஒரு டாப் கோட்டை பயன்படுத்துகிறீர்களா அதை போலவே பேஸ் கோட்டையும் பயன்படுத்துவது முக்கியம். நெய்ல் பாலிஷ் பயன்படுத்துவதற்கு முன்பு ஒரு பேஸ் கோட்டைப் பயன்படுத்துவது, உங்கள் நகங்களில் நீண்ட நேரத்திற்கு பாலிஷ் ஒட்டிக்கொள்ள உதவி புரியும். இது உங்கள் நகங்களை நீண்ட காலமாக அழகாகவும் ஷைனிங்காகவும் தோற்றமளிக்க உதவுகிறது.

ரப்பர் கையுறைகளை அணியுங்கள்: நீங்கள் தினசரி வீட்டு வேலைகளைச் செய்பவராக இருந்தால், உங்கள் நகங்களைப் பாதுகாக்க ரப்பர் கையுறைகளை அணிந்து கொள்ளுங்கள். பாத்திரங்களை கழுவும் போது நீரின் தொடர்ச்சியான ஓட்டம் மற்றும் சோப்பின் பயன்பாடு ஆகியவை உங்கள் நகங்களிலிருந்து வண்ணப்பூச்சுகளை உதிரச் செய்கிறது. அதுவே ரப்பர் கையுறைகளை அணியும் போது உங்கள் நகங்கள் பாதிக்கப்படாமல் நீண்ட நேரம் பாலிஷ் அப்படியே இருப்பதை உறுதி செய்ய முடியும்.

# கர்ணன் படைப்பகம் நடத்திய குறும்படப் போட்டி விருது விழா

கர்ணன் படைப்பகம் நடத்திய குறும்படப் போட்டி விருது விழா குவியம் மீடியா ஊடக அனுசரணையில் கர்ணன் படைப்பகம் நடாத்திய குறும்படப்போட்டியில் கிஷாந்தின் இயக்கத்தில் உருவான "கேளன்" குறும்படம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

குறும்படப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் யு.எஸ். ஹோட்டலில் இடம்பெற்றது. குவியம் மீடியா நிர்வாக இயக்குனர் கனகநாயகம் வரோதயன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி ரகுராம் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி சிவன் சுதன் (தயாரிப்பாளர் – தூவானம் திரைப்படம்), முன்னாள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம், கர்ணன் படைப்பக நிறுவுனர் சண்முகநாதன் சபேசன், யாழ். பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துறைத்தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்தக் குறும்படப் போட்டியில் முதலிடத்தை கிஷாந் இயக்கிய "கேளன்" குறும்படம் பெற்றுக் கொண்டது. அவர்களுக்கு










வெற்றிக் கேடயம் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கி வைக்கப்பட்டது. இரண்டாமிடத்தை ஜனா மோகேந்திரனின் "வெற்றிக்கதை" குறும்படமும் 3 ஆம் இடத்தை ஷாஜாவின் "புதிய பாதை" குறும்படமும் பெற்றுக் கொண்டது.

இவர்களுக்கு வெற்றிக்கேடயமும் முறையே 30 ஆயிரம் மற்றும் 20 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகையும் வழங்கி வைக்கப்பட்டது. தவிர, முதல் 10 இடங்களுக்குள் தெரிவான ஏனைய 7 குறும்படங்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் சான்றிதழ் மற்றும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



### ஸ்ரீல. இஸ்லாமிய கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில்

# கவிஞர் என். நஜ்முல் ஹுசைனின் "வேறாகா வேர்கள்" நூல் வெளியீடு




ஸ்ரீலங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் என். நஜ்முல் ஹுசைன் எழுதிய "வேறாகா வேர்கள்" சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் (06) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு நடைபெறும். கொழும்பு 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, அல் ஹிதாயா கல்லூரியின் எம்.சீ. பஹார்தீன் கேட்போர் கூடத்தில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழாவுக்கு மன்றத் தலைவர் கலாபூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமை தாங்குகிறார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார். இலக்கியப் புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்கும் இந்நிகழ்வில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் விசேட அதிதியாக கலந்து கொள்கிறார்.

நூலின் முதல் பிரதியை பிரபல தொழில் அதிபர் அல்ஹாஜ் டாக்டர் எம்.சீ. பஹார்தீன் பெற்றுக் கொள்கிறார்.


மன்றச் செயலாளர் எம். எஸ். எம். ஜின்னா வரவேற்புரை நிகழ்த்த விசேட அதிதி தே. செந்தில் வேலவர், இலக்கியச் செம்மல் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். கலை ஞானச் சுடர் சுபாஷினி பிரணவன் கவி வாழ்த்து வழங்குவார். கவிஞர் ரஷீத் எம். றியாழ் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிப்பார்.

**கொ/அல் ஹிதாயா கல்லூரியில் ஆகஸ்ட் 06 ஆம் திகதி**


கௌரவ அதிதிகளாக டாக்டர் ஞானம் ஞானசேகரன் (பிரதமர் ஆசிரியர், ஞானம்), ஸ்ரீ கஜன் (பிரதம ஆசிரியர் வீரகேசரி நாளிதழ் மற்றும் வாரவெளியீடு), சிவா ராமசாமி (பிரதம ஆசிரியர், தமிழன்), அல்ஹாஜ் எம். கே. எம். யூனுஸ் (பணிப்பாளர், ரூபவாஹினி முஸ்லிம் பிரிவு), சிரேஷ்ட எழுத்தாளர் கலாபூஷணம் மு.சிவலிங்கம், கலாபூஷணம் பேராதனை ஏ.ஏ. ஜுனைதீன் (திரைப்பட இயக்குனர்) ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக டாக்டர் எம். எஸ். எம். ஜலால்தீன் (முன்னாள் பீடாதிபதி அரபு மொழிப் பிரிவு, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்), எம். ஜே பாத்திமா ரினூஸியா (பணிப்பாளர், முஸ்லிம் சேவை இலங்கை வானொலி), ஹாபிஸ் எஸ். எம். ஹனீபா (முன்னாள் பணிப்பாளர், முஸ்லிம் சேவை இலங்கை வானொலி), முஹம்மது ரஸூல்தீன் (பிரதம ஆசிரியர், கொழும்பு டைம்ஸ்), கவிமாமணி அல் அஸூமத், சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி, தேசமான்ய பவாஸா தாஹா (வை. டப். எம். ஏ. தலைவர்), இசைக் கோகிலம் நூர்ஜஹான் மர்சூக் ஆகியோரும் ஊடக அதிதிகளாக என். எம். அமீன், (தலைவர், முஸ்லிம் மீடியா போரம்), எம்.இஸட். அஹமத் முனவ்வர் (முன்னாள் பணிப்பாளர், இலங்கை வானொலி முஸ்லிம் சேவை)

யூ.எல். யாக்கூப் (உதவி பணிப்பாளர் இலங்கை ரூபவாஹினி செய்திப் பிரிவு), எம்.ஏ.எம். நிலாம் (லேக்ஹவுஸ் தமிழ்ப் பத்திரிகைகளின் முன்னாள் ஆலோசகர்), சித்தீக் ஹனீபா (வசந்தம் டிவி/வசந்தம் எப்.எம். பிரதிப் பணிப்பாளர் செய்திப் பிரிவு), எம்.பி. எம். பைரூஸ் (பிரதம ஆசிரியர், விடிவெள்ளி), ஏ.எச். சித்தீக் காரியப்பர் (சிரேஷ்ட ஊடகவியலாளர்), மனிதநேயன் இர்ஷாத் ஏ. காதர் (சிரேஷ்ட ஒலிபரப்பாளர்), ஷியாஉல் ஹசன் (அலைவரிசை பிரதானி, கெப்பிட்டல் எப்.எம்.), திருமதி ஜீவா சதாசிவம் (பொறுப்பாசிரியர், தமிழ் முரசு) மபாஹிர் மஸூர் மௌலானா (முன்னாள் தயாரிப்பாளர் ரூபவாஹினி), முபாரக் மொஹிதீன் (தயாரிப்பாளர் ரூபவாஹினி) நௌஷாத் மொஹிதீன் (சிரேஷ்ட ஊடகவியலாளர்), கே. ஈஸ்வரலிங்கம் (சிரேஷ்ட ஊடகவியலாளர்), றினூஸா நௌஷாத் (CGC Talk Shop), ஷம்ஸ் பாஹிம் (சிரேஷ்ட ஊடகவியலாளர்) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## நிறம் தீட்டுங்கள்




## வழிகாட்டுங்கள்




## சரியான விடையை கண்டுபிடியுங்கள்

| 5 + 5 | 8 + 4 | 7 + 3 |
|---|---|---|
| 10 · 9 · 12 | 14 · 12 · 10 | 9 · 10 · 11 |

| 8 - 6 | 10 - 7 | 9 - 2 |
|---|---|---|
| 3 · 4 · 2 | 4 · 5 · 3 | 8 · 7 · 5 |

## தொடர்புபடுத்துங்கள்



## 8 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







# எழுத்துப் பயணத்தில் 'வைர விழாக்' கண்ட ஊவாவின் முத்து! 'இலக்கிய மாமணி, கலாபூஷணம்' பதுளை சாரணா கையூம்

சாரணா கையூம் எனும் இலக்கியத் திருநாமம் நாடறிந்ததோர் அபிமானத்திற்குரிய பிரபலமானதொரு நாமம். மலையகத்தின் மூத்த எழுத்து முத்து. ஊவா மாகாணத்தில் பல் ஆவணச் சொத்து. (ஓய்வு நிலை) ஆசிரியர், கவி(கதை)ஞர், நூலா (நாடகா) சிரியர், பத்திரிகையாசிரியர், எழுத்தாளர் சங்கத் தலைவர், நடுவர், ஜுரி என பல்துறை ஆளுமையாளர். பட்டங்கள், விருதுகள் பல பெற்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவர். 60 வருடங்கள் கடந்தும் ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாக இன்றும் சளைக்காமல் எழுதிக் கொண்டிருப்பவர்.

**முதலில் உங்களைப்பற்றிச் சொல்லுங்கள்?**

பதுளை மு.ப. யூசுப் அன்ட் சன் உரிமையாளர் (1920) யூசுப் அவர்களின் தலைமகன் நூர் சாலிம் மர்ழியா தம்பதியின் மூத்தமகன் நான். முத்தியங்கன – விஹாரகொட சந்திக்கருகில் லோவர் வீதியில் வசிக்கிறேன். பதுளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (ப/அல்அதான் தேசிய பாடசாலை) முன்னாள் மாணவன். எனது துணைவி நோனா ஜரூன். எமக்கு ஓர் ஆண். இரு பெண்கள். மகன் அப்துல் காதர் பசறையில் பிரதியதிபராக பணிபுரிகிறார். கஹகொல்ல அரசினர் தமிழ் சிங்கள கலவன் பாடசாலையில் 16-06-1958இல் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றேன். பதுளை, ஹாலிஎல, ஹீல்ஓய, தம்பாளை (பொலன்னறுவை) பாடசாலைகளில் கற்பித்து, கடைசியாக பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து ஓய்வு பெற்றேன்.

**அப்துல் கையூம் எனும் பெயரோ 'சாரணா' (கையூம்) புனைபெயர் எப்படி வந்தது?**

'அடைக்கலம்' என்ற சொல்லாகிய 'சரண்' என்ற சொல்லை 'சாரணா' என்று திரிவுப்படுத்தி, இறைவனின் (99) அழகுத் திருநாமங்களில் ஒன்றான 'கையூம்' ஐ இணைத்து புனைபெயராக 'சாரணா கையூம்' என வைத்துக் கொண்டேன்.


**உங்கள் எழுத்துலக பிரவேசம் பற்றி குறிப்பிடுங்கள்?**

மட்/ காத்தான்குடி கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்கள் பதுளைக்கு (அல் அதான் கல்லூரிக்கு) இடமாற்றம் பெற்று வந்தபோது, அவர்பற்றி எதுவும் எமக்குத் தெரியாது. கவிஞர் எம்.ஸி.எம். சுபைர் பண்டாரவளை ஸாஹிரா கல்லூரிக்கு மாற்றலாகி வந்தபோது அவர் மாணவர்களுக்கான ஒரு பத்திரிகையை வெளியிட பதுளைக்கு வந்த சமயத்தில் கவிஞர் அப்துல் காதர் லெப்பையை சந்திக்க வந்தார். அதன் பின்னர்தான் அப்துல் காதர் லெப்பை பிரபல்ய கவிஞர் என்பதை அறிந்து கொண்டோம். சுபைரால் வெளியிடப்பட்ட மணிக்குரல் பத்திரிகையில் கவிஞரின் ஆக்கங்கள் வெளிவரலாயின.

இதன்போது எனக்கும் எழுத வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. 1960ஆம் ஆண்டு வீரகேசரியில் முதன்முதலாக பாரதியாரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதினேன். அக்கட்டுரை பிரசுரமாகியிருந்த வீரகேசரி பத்திரிகை ஒன்று தபாலில் எனக்கு வந்தது. அன்று எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பலமுறை படித்தேன். பரவசமானேன். தொடர்ந்து எழுத உந்தப்பட்டேன். இன்றுவரையிலும் ஆறு தசாப்தங்களாக எழுதிக் கொண்டிருக்கின்றேன். 'எல்லாப் புகழும் இறைவனுக்கே'







**நூலுருப்பெற்ற உங்கள் நூல்கள் பற்றிக் கூறுங்கள் ?**

ஆரம்பத்தில் சிறுவர்களுக்கான பாடல்களையே எழுதி வந்தேன். கண்டி ஹிரஸ்ஸகல ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கற்கும் போது ஆக்க வேலை சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. எல்லா மாணவர்களும் பல்வேறு ஆக்கங்களைச் சமர்ப்பித்தனர். நானும் ரூஹுல் மௌலவியும் நூல் எழுதிச் சமர்ப்பித்தோம். இதையடுத்து குழந்தை இலக்கியம், நபிகள் நாயகம், குர்ஆன் ஹதீஸ், கவிதை நெஞ்சம், சிறுவர் பாட்டு, நன்னபி மாலை, என் நினைவில் ஒரு கவிஞர் ஆகிய நூல்களையும், கல்வித் திணைக்கள வெளியீடாக சிறுவர் பாட்டு இவைகள் பேசினால், சிறுகதைகள், விஞ்ஞான மேதைகள் ஆகிய நூல்கள் வெளிவந்தன. 1964ஆம் ஆண்டு அல்லாமா இக்பால் அவர்களின் நினைவுமலர் ஒன்றையும் வெளியிட்டேன்.



**நூல்களைத் தவிர வேறேதும் ஆக்கங்கள் உண்டா?**

1972ஆம் ஆண்டு 'சிறுவர் பாரதி' என்றொரு சிறுவர் பத்திரிகையை நடத்தினேன். 1974ஆம் ஆண்டு 4வது சர்வதேச இஸ்லாமிய ஆராய்ச்சி மாநாட்டில், மௌலானா அப்துல் வஹ்ஹாப் M.A.B.Th அவர்களின் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்களில், 'அரபுத் தமிழின் வளர்ச்சியும், வீழ்ச்சியும்' எனும் ஆய்வுக்கட்டுரையை வாசித்தேன். முற்றத்து மல்லிகை 1994 மணிவிழா மலரில் 'ஊவா மாகாண முஸ்லிம்களின் கலை இலக்கியப் பங்களிப்பு' என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதினேன். மற்றும் ஊவா மாகாண சாஹித்திய விழாக்களில் தமிழ்த்தினப் போட்டிகள் பரிசுபெற்ற நாடகங்களையும் எழுதியுள்ளேன். முன்னாள் அதிபரும், கலைஞருமான "கலைக் கூத்தன்" B.M.M.A. காதரின் நெறியாள்கையில் "ஆண்டவன் கட்டளை", "ஜான்ஸி ராணி" ஆகிய நாடகங்கள் 1963, 1964 காலப்பகுதிகளில் மாகாண கலை இலக்கிய மேடைகளில்பெயர் பதித்தவை.

**உங்கள் ஆக்கங்கள் வெளிவந்த பத்திரிகைகள்?**

வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, தினபதி, மித்திரன், தேசாபிமானி, தொழிலாளி, இன்ஸான், எழுச்சிக் குரல், நவமணி, ஈழநாடு, சுதந்திரன், அபியுக்தன், தினக்குரல், விடிவெள்ளி ஆகிய பத்திரிகைளில் எழுதியுள்ளேன். மற்றும் பல்வேறு சஞ்சிகைகளிலும் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

**வெளிநாட்டு சஞ்சிகைகளில் எழுதியுள்ளீர்களா?**

தீபம், நல்வழி, தமிழ், முஸ்லிம் முரசு, ஆதவன், அம்மா, பாரத முழக்கம், பூர்ணிமா, மணிவிளக்கு, கோகுலம் ஆகிய சஞ்சிகைகளில் கவிதைகள் பிரசுரமாகின.

**உங்கள் இலக்கிய காலத்தில் அறிமுகமானவர்களை குறிப்பிடுங்கள்?**

எச்.எம்.பி. மொஹிதீன், அப்துல் லத்தீப் (இன்ஸான்), எம்.பி.எம்.அஸ்வர், வி.ஆர்.எம். செட்டியார் (காரைக் குடி) கவிஞர் எம். எச்.எம். ஷம்ஸ், இளங்கீரன் அன்பு முகைதீன், மேமன்கவி, கவிஞர் காத்தான்குடி பௌஸ் மௌலவி, பேராசிரியர் எம்.ஏ. நுஹ்மான், எம்.ஸி.எம். சுபைர் பட்டர் வொர்த் ஜெய்னுத்தீன் (மலேசியா), மு. நித்யானந்தன் (லண்டன்) திக்வெல்ல கமால், பாவலர் பஸீல் காரியப்பர், கவிஞர் யுவன், கவிஞர் ஏ. இக்பால், சி.எம்.ஏ. அமீன் (நளீமி), எஸ்.ஐ. நாகூர் கனி, மானா மக்கீன், அ.ஸ. அப்துஸ் ஸமத், புரட்சிக் கமால், எஸ்.எச்.எம். ஜெமீல், புயல் ஹமீட், கலாநிதி அமீர் அலி (அவுஸ்திரேலியா), பேராசிரியர் சந்திரசேகரன் ஆகியோர் நினைவில் உள்ளனர்.

**உங்கள் எழுத்துப் பயணத்திற்கு உறுதுணையென யாரைக் கருதுகிறீர்கள்?**

எனது ஆசான் அப்துல் காதர் லெப்பை. அவர்களே என்னை எழுதத் தூண்டியவர் எனலாம். அடுத்து பத்திரிகை சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் எனது ஆக்கங்களை வெளியிட்டு எனக்கு ஊக்கமூட்டினர். அவர்கள் அனைவருக்கும் என்றும் என் நன்றிகள்.

**இலக்கியத் துறையில் நீங்கள் பெற்ற பட்டம், பாராட்டு, கௌரவம், விருதுகள் பற்றி?**

குழந்தைக் கவிஞர், இலக்கிய மாமணி (மலேசியா), இலக்கியச் சுடர், கவிமணி நஜ்முஸ்ஸுஹரா, கலாபூஷணம், இலக்கிய வாரிதி, மல்லிகை ஞானம் சஞ்சிகைகள் முகப்பட்டையில் அதிதியாகப் பிரசுரித்து கௌரவித்தன. அண்மையில் பதுளை ஹுமைரா அல் அமீனின் 'செம்பனிச் சிதறல்கள்' கன்னி நூல் வெளியீட்டு விழாவிலும் பிரதம அதிதியான என்னை "வாழ்நாள் சாதனையாளர்" பொன்னாடை மானா மக்கீனால் பொன்னாடை போர்த்தி, கல்ஹின்னை பவ்மி ஹலீம்தினால் கிரீடமும் அணிவித்து பாராட்டிக் கௌரவித்தமை.

**போட்டிகளில் பங்குபற்றி பரிசுகள் ஏதும் பெற்றுள்ளீர்களா?**

ஆரம்பத்தில் என் சொந்தப் பெயரில் இரண்டொரு போட்டிகளில் பங்கேற்று முதலிடம் பெற்றுள்ளேன். பின்னர் போட்டிகளில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொண்டேன்.


கோட்டைமுனை 'முத்துமணி'
—வாஹிட் குத்தூஸ்—

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

# சட்டகத்துள் அலைதல்



குறிப்புப் புத்தகத்தில் பக்க இலக்கங்களில்லை, திகதிக் குறிப்புகளில்லை, நேர வகுப்புகளுமில்லை, எவரெவரென்ற நாம வரிசையுமில்லை, நிதியறிக்கை, செலவு விபரம், எதுவுமிருக்கவில்லை.

ஆனாலும் எல்லாமிருந்தது. எண்ணம், உணர்வு, உண்மை, பொய், ஏற்றம், இறக்கம் எல்லாமிருந்தன.

எண்ணிப் பார்த்தால் நூறாவது பக்கத்தில் ஒரு சட்டகம் இருந்தது. அதற்குள் சிலகோடுகள்; மேலும் கீழுமான கிறுக்கல்கள்; கறுப்பு, சிவப்பு, வெள்ளையென நிறக்கலவை.

அடுத்தடுத்த பக்கத்தில் இருபத்தோராம் நூற்றாண்டின் கவிதையாக இருக்க வேண்டும் கொதிகொதித்துக் கொண்டிருந்த சொற்களில் இடறி விழுந்தவன் எழுந்திருக்கவில்லை.

தீ அவனையும் பற்றியிருக்க வேண்டும். முன்பக்கமுள்ள சட்டகத்துள் நுழைய முயன்று தோற்றுக்கொண்டிருந்தான். சட்டகத்தின் எல்லைக்கோடுகளும் தீக்கோடுகளாயிருந்தன. சட்டகத்தை உடைத்து உள்நுழையும் விடுதலை வேட்கை வலுத்தது.

உந்தினான் இருபத்தோராம் நூற்றாண்டுச் சொற்களை அள்ளி வீசினான். எல்லைக்கோட்டில் சில விழுந்து கருக; வேறுசில சிதறின; மேலும் சில நிறம்மாறின. வெள்ளை கறுப்பாகிற்று; கறுப்பு சிவப்பாகிற்று; சிவப்பு வெள்ளையாயிற்று. சட்டகத்துள் நிறமாற்ற நிகழ்வு வலுத்தது.

அவன் கோடுகளில் நகர்ந்தான். மேலும் கீழுமாக அலைந்தான். அவனைக் கிறுக்கனென்றனர்;. கிறுக்கல்கள் அவனாகின.

குறிப்புப் புத்தகத்தின் சகல பக்கங்களிலும் அவனது கிறுக்கல்கள் பரவின. அர்த்தமற்ற கிறுக்கல்கள் என்றனர், அர்த்தத்தின் உச்சமிது என்றான். குறிப்பு புத்தகத்தில் எவையெல்லாம் இருக்கவில்லையோ அவற்றையெல்லாம் உருவாக்கினான். வரலாற்றுக் குறிப்புகளோடு ஒரு நாவலானான்.

ஆச்சரியப்பட்டனர் எல்லோரும். அவன் குறிப்புப் புத்தகத்துக்கு எழுதிய முன்னுரையே நாவலென நவீன விமர்சகரொருவர் குறிப்பெழுதினார். அவனது நாவலில் 3023ஆம் பக்கத்தில் ஒரு குறிப்பிருந்தது. அதில் புள்ளியிருக்கவில்லை; கோடிருக்கவில்லை; நிறமிருக்கவில்லை; மணம், குணம் எதுவுமிருக்கவில்லை. உற்றுக் கவனித்தேன் மொழியில்லை. அவன் மட்டுமிருந்தான். உயிரிருந்தது; உணர்விருந்தது.

மொழியில்லையேல் ஏது இதுவெல்லாமென்றேன். மொழியை ஒருநூற்றாண்டு தின்றதென்றான். அவன் நாவலின் மடியில் புதுமகவு மொழிப்பாலருந்திக் கொண்டிருந்தது.

**பொன்மீரா**

# கவிதை நிலவியல் வரைபடம்

ஆதி வடிவமான கவிதை உலகின் எல்லா மொழிகளிலும் நிலத்தின் வரைபடக்கருவியாகவே இருந்துள்ளது. தமிழில் ஐந்நில வரைபடத்தைக் கவிதையே வரைந்து தந்தது. முதல், கரு, உரி என்கிற அளவுகோல் கொண்ட அதன் வரைவு ஒரு வரலாற்று ஆவணமாகிறது.

இப்படியே காலம் முழுதும் கவிதை நிலவியல் சார்ந்தெழுகிறது. இந்தப்போக்கு கவிதைகளுக்கும் வாழ்தலுக்குமிடையேயான அண்மையை அல்லது கவிதை வாழ்தலின் கூறு என்கிற உண்மையை வெளிப்படுத்துகிறது.

நிலவியலில் மனித சமூகம், அதன் வாழ்வியல் கோலம், இருப்புநிலை, அதற்கெதிரான கிளர்வுகளின் கொடூரம், கொடூரத்தின் சிவப்புவரிகள், பெயர்வு, மண் இழப்பின் வலி, வலிகடக்கும் பெருந்துயர், அலைந்துழல்வின் கனதியென நிலமும் நிலமிழப்புமாக கவிதை வரைந்து தரும் நில வரைபடம் முக்கியமானது. அது வெறும் எல்லைப்படுத்தல் கோடுகளாலானதுவல்ல மாறாக உணர்வின் இழைகளாலானது.

அதனால் தான் மற்றெல்லாக் கவிதைகளைக் காட்டிலும் நிலவியல்சார் கவிதைகள் முக்கியம் பெறுகின்றன.

சமூக அரசியல் பொருளாதார கலாசாரப் பண்பாட்டின் வடிவமாக நிலவியல் கவிதைகள் நிற்கின்றன. எனவே இத்தகைய கவிதைகள் குறித்த கதையாடல் மற்றும் ஆய்வுகள் கவிதையியல் வரலாற்றில் மட்டுமல்லாது மானுட வரலாற்றிலும் முக்கியம் பெறுகின்றன.

ஈழத்தில் எண்பதுகளுக்குப் பிறகான கவிதைகளில் நிலவியல் வரைபடம் துலக்கமாகத் தோன்றத்தொடங்கிற்று. முன்னரெப் போதுமில்லாத வகையில் தொண்ணூறுகளில் இந்தத் திசைமீது கவிதை மையம் கொண்டது. போரிலங்கை அதற்கு காரணமாயிற்று. குறிப்பாக தேசத்துக்குள்ளும் புலம்பெயர் தேசத்திலம் கவிதை நிலவியல் வரைபடமாக நின்றது. ஐந்நிலத்திற்கு அப்பால் பனிநிலமும் பனிவயல் உழவாக நிலவியல் வரைபடத்திற்குள் அமைந்தது. இவ்வாறு நோக்கும்போது கவிதையில் நிலவியல் முக்கியம் பெறுகிறது.

## மறுவால்



**முல்லை முஸ்ரிபா**


## யாருமற்ற வெளி

ஔவன் கவிதை
யாருமற்ற வெளி
யாருமற்ற நான்
யாருமற்ற வெளி
கரைந்துருகுமொரு
பனிக்கட்டி இதயத்தைக்
கவ்விப் பறந்த கழுகின்
காலிடுக்கில் மெல்லிய துடிப்பு
அதிகாரத்தின் உரத்ததொனியை
வெளியெங்கும் கேட்கிறேன்
முகங்கனன்ற வெம்மை பரவிற்று
பனிக்கட்டி இரத்த நிறத்தில் உதிர்கிறது
கழுகு கரும் நிறத்தை வரைகிறது
யாருமற்ற வெளியில் நான் மட்டுமாய்
பனிக்கட்டியாகி
கழுகாகி
பின்
யாருமற்ற வெளியாகிக் கரைகிறேன்
தூரத்தெரிகிறது
கரும்புள்ளியாய் வெளி

# விதிக்கப்பட்ட கதை 8

கம்பியூட்டர் அனுபவம் இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வாழக்கிடைத்தவர்களுக்கு ஒரு புதிய தொழில்நுட்ப அனுபவமாக வந்து கிடைத்தது. இந்தக் கடைசிப்பகுதியினரின் கம்பியூட்டர் காலம் ஆச்சிரியமானது. தூரநின்று தொட்டுப்பார்த்து புதினப்பட்டு ஆச்சரியப்பட்ட காலத்தவருள் ஒருவன்தான் நானும். எனது வாப்பா, வாப்பாவின் வாப்பா காலத்தவர்களுக்கு கம்பியூட்டர் காணக்கிடைக்காத ஆச்சரியம்தான். அது ரிவி பெட்டியின் இன்னொரு பணி வடிவம்தான்.

நான் பெரும்பெட்டி வடிவமாக அதற்கு முன்னால் நின்று பார்த்தேன். ஆச்சரியம் திரையில் ஓடியது. அத்தகைய ஆச்சரியத்தோடுதான் அ.முத்துலிங்கம் என்கிற உலகக்கதை சொல்லியின் கம்பியூட்டர் கதை இடைவினை தொடங்குகிறது.



''அதனுடைய பார்வை எனக்கு துண்டாய்ப் பிடிக்கவில்லை. அது இருந்தவிதமும் தோற்றமும் வெறுப்பைக்கூட்டியது. மேசைமேல் சவடாலாகப் பரப்பிக்கொண்டு கல்லுளி மங்கன் போல சப்பளிந்து போய் இருந்தது' கம்பியூட்டர் கதையை இப்படித்தான் தொடங்குகிறார் அ.மு. கடைசிக் கைங்கரியம் கதையோடு 1958இல் கதை சொல்லத்தொடங்கிய அ.முத்துலிங்கம் உலக வரைபடத்தில் கதை சொல்லுபவர்.

2016இல் முத்துலிங்கம் கதைகளின் பெருந்திரட்டு வந்தது. முத்துலிங்கத்தின் கதையுலகு அற்புதமானது. புதிய உலகத்தை புதிய வாழ்வை புதிய மனிதர்களைக் கதைக்குள் கொண்டுவரும் அற்புதர் அவர்.

உலகெங்கும் தொழில்புலத்தில் அலைவு கொண்ட அ.மு. அந்தப் புலங்களின் வாழ்வியலை அதன் உயிர்சொட்ட மொழிக்குள் பாய விட்டவர். அவரது கதைமொழி உற்சாகமூட்டவல்லது: புன்னகை பூப்பது; காஷ்யம்மிக்கது; வாழ்வின் குறுக்கும் நெடுக்குமான அனுபவங்களைத் தொற்றவைப்பது. 'புன்னகையே அ.முத்துலிங்கத்தின் இலக்கியத்தின் அடிப்படை. ஒரு புன்னகைக்கு அப்பால் போகும் ஏற்றம் இந்த வாழ்க்கையில் இல்லை என்ற பிரக்ஞையில் பிறக்கும் கலை அவருடையது'' என ஜெயமோகன் எழுதுகிறார்.

முத்துலிங்கத்தின் கதைக்கேயுரிய எள்ளலான சிரிப்பூட்டும்படியான கதைக்குள் அடுக்கிச் செல்லும் அனுபவ – சம்பவக் கோர்ப்புகளின் தொகுப்பாக கம்பியூட்டர் அனுபவக்கதை விரிகிறது.

கம்பியூட்டர் எனும் புதிய கருவியுடனான உறவைப் பெய்கிறார். ''ஆணா? பெண்ணா? என்று கூட சரியாகத் தெரியவில்லை.... என்று கதை சொல்லியாக அ.மு. கதையோடுகிறார்.

கம்பியூட்டர் வாங்கப்போன அனுபவத்தை அ.மு வேறு பல வாங்கப்போன அனுபவங்களோடு பின்னுகிறார். அமெரிக்காவில் தூண்டில் வாங்கப்போனமை, அதற்குள் வெலிங்கன் தியேட்டர் டிக்கட் கதை, கம்பியூட்டர் வாங்கியமை, கொண்டு வந்து இறக்கியமை, முதல் கம்பியூட்டர் இயக்கிப் பார்த்த அனுபவம், அதில் செய்த வேலைகள், அது பொழுது போக்காக மாறியவிதம், இடையில் தட்டச்சுப்பொறியின் உபகதை, கம்பியூட்டரின் ரகசிய பாதைகளை மகன் கண்டுபிடித்தமை, கதை ரைப்பண்ணியமை என அனுபவத்தின் பரிமாறலாக கம்பியூட்டர் கதை ரசிக்கச் செய்கிறது.

இருதுபர்ணர் கதை, புலவரின் பாக்குவெட்டி தொலைந்தகதை என உபகதை அனுபவங்களில் கதை சொல்லி வாசகரை தன் வசமாக்குகிறார்.

கம்பியூட்டரில் ரைப் செய்த கதை. காணாமல் போவதும், அதன் துயரில் மூழ்குவதும், பிறகு மகன் கணிப்பொறியுடன் சல்லாபம் செய்யும் போது அதே தொலைந்த கதை திரையில் விழுவதும் சந்தோச ஆச்சரியமாய் விரிகிறது. ''என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. நீத்துப்பூசணிக்காய் போல கொழுத்து திரை முழுக்க அடைத்துக்கொண்டு கிடந்தது என்னுடைய கதை. குண்டு குண்டான எழுத்து; தடித்த தலைப்பு. அதே தான். என்னுடைய கதைதான்' தொலை என்ற தலைப்பில் கம்பியூட்டரில் எழுதிய கதை தொலைந்துவிட்ட கதை மீள வந்ததில் பூரிக்கிறார் கதை சொல்லி.

''நான் இரண்டு தரம் வாயைத்திறந்து மூடினேன். காற்றுத்தான் வந்தது. 'விட்டிர்ராதே! விட்டிர்ராதே! பிடி'' என்று கத்தினேன் .ஏதோ கன்றுக்குட்டி ஒன்று அறுத்துக்கொண்டு ஓடுகிறது போலவும் தும்பைப்பிடி என்று நான் கத்துகிறது போலவும் அது இருந்தது' என வாசிக்கும்போது அ.மு வின் கதை சொல்விதத்தின் எள்ளலில் வாசக ஈர்ப்பு தகிக்கிறது. இவ்வளவு நாளும் என் கதையை தன் வயிற்றிலே வைத்திருந்து இரை மீட்டு தந்திருந்தது இந்தக் கம்பியூட்டர் என கதை வளர்க்கிறார். அனுபவக்கதை சொல்வி அ.முத்துலிங்கம்.

பொதுவாக அவரது எல்லாக் கதைகளிலும் புனைவுக்கும் அபுனைவுக்குமிடையிலான மெல்லிய பிரிகோடே இருக்கும். சம்பவங்களின் கோர்வைகளின் கோர்வையாக நீட்சியாகக் கதை சொல்ல வல்லவர் அவர்.

முத்துலிங்கம் கதைக்கென தெரியும் பொருளும், சொல்லும் விதமும், சொல்லும் சேதியும் கதை மாந்தர் தோற்றமும் அந்நியத்தின் அண்மையாய் வாசகரை ஈர்த்து விடுவன.

கதைகளை வாசித்து முடிகையில் ஒருவித புத்துணர்வு தொற்றும் சாயலை உணரமுடியும். கம்பியூட்டர் கதையும் அத்தகையதேயாம்.

கதை முடிவது இப்படி 'பெற்றோரை ஏமாற்றிக்களவாக ஓடிவந்த காதலியைக்கண்டது போல ஆசை தீரப் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஆனந்தத்தில் என் கண்ணில் நீர் தளும்பி நின்றது'' வந்து விட்டாயா வந்து விட்டாயா! என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டேன். நான் கம்பியூட்டரைப் பார்த்தேன். அதுவும் பார்த்தது. அதன் பார்வையில் இப்போது கொஞ்சம் நட்பு இருந்தது' நவீன பாணிக் கதை சொல்லி அ.முத்துலிங்கத்தின் கதையுலகு வாசகருடன் நட்பிலிருப்பதொன்றாகும்.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் - 18



கேரளாவில் பாலக்காட்டில் "குழல் மந்தம்" எனும் ஊரிலே திருமணம் நடைபெற்றது. கேரளாவில் இரவில்தான் திருமணம் நடைபெறுவது வழக்கம். குழல் மந்தம் ஊரின் சரித்திரத்திலேயே அன்று தான் முதன் முறையாக பகலில் திருமணம் நடைபெற்றதாம்.

எம்.ஜி.ஆர். – சதானந்தவதி திருமணத்திற்கு வந்த கூட்டம் அன்று வரை குழல் மந்தம் ஊரில் எந்த திருமணத்திற்கும் வரவில்லையாம். நடிகராகப் பிரபலம் பெற்றமையே அதற்கு காரணம் என்பதனை அறிந்து கொண்ட எம்.ஜி.ஆர். உள்ளம் கொஞ்சம் பெருமைப்பட்டது.

மணமேடையில் எம்.ஜி.ஆரும் சதானந்தவதியும் தம்பதியாக வீற்றிருக்கும் போது எம்.ஜி.ஆரின் அருகே சக்கரபாணி நெருங்கி, "ராமச்சந்திரா! அம்மாவுடன் சென்று பெண்ணைப் பார்த்து சம்மதம் கொடுத்தாயல்லவா? அந்தப் பெண்தானா இது?" எனக் கேட்டார். "ஆமாம் அண்ணா" என்று எம்.ஜி.ஆர். பதில் கூறினார். மீண்டும் சக்கரபாணி "சரியாகப் பார்த்துச் சொல்லு... இவதானா நீ பார்த்த பொண்ணு...?" எனக் கேட்டார். "ஆமாம்... அண்ணா... இவ தான்..." என எம்.ஜி.ஆர். அழுத்தம் திருத்தமாக பதில் கூறினார்.

திருமணம் முடிந்ததும் எம்.ஜி.ஆர். – சதானந்தவதி தம்பதியினர் சென்னை திரும்பினர். ஒரு சில நாட்களின் பின்னர் எம்.ஜி.ஆரும் சக்கரபாணியும் கதிரையில் அமர்ந்து கொண்டு படப்பிடிப்புக்களை பற்றி கதைத்துக் கொண்டிருந்தனர். இடை நடுவிலே சக்கரபாணி எம்.ஜி.ஆரை நோக்கி "சதானந்தவதி பார்வைக்கு அழகோ நிறமோ உயரமோ கவர்ச்சியான உடற்கட்டோ இல்லாதவள். இப்படிப்பட்ட பெண்ணை மணக்க நீ எப்படி சம்மதித்தாய்?" என வெளிப்படையாகக் கேட்டார். "அண்ணா! எனது முதல் மனைவி தங்கமணியை இழந்தபோது இன்னொரு மனைவி எனது வாழ்க்கையில் கிடையாது என்றுதான் நினைத்திருந்தேன். உறுதியாகவும் இருந்தேன். அம்மாவின் கட்டாயத்தில்தான் சம்மதித்தேன். அம்மாவுக்கு சதானந்தவதியை மிகவும் பிடித்து விட்டதை அறிந்து கொண்டேன். பெண்ணைப் பார்க்க அம்மாவுடன் சென்றபோது இரண்டு நாட்களாக இடது கண்ணில் வலி காரணமாக வெளிச்சத்தைக் கூட பார்க்க முடியாத நிலையில் இடது கண்ணில் கக்கட்டி. எனவே ஒரு கண்ணால் மாத்திரம்தான் பெண்ணைப் பார்த்தேன். எது எப்படியோ அம்மாவிற்காக மாத்திரம் தான் சம்மதித்தேன்" என்று எம்.ஜி.ஆர். பதில் கூறினார். ஒரு கண்ணால் மாத்திரம்தான் பெண்ணைப் பார்த்தேன் என்று சொன்னதும் சக்கரபாணி சிரித்து விட்டார். சிரிப்பை அடக்கி விட்டு பொறுப்புடன் "ராமச்சந்திரா! அம்மாவுக்காக சம்மதித்தேன் என்கிறாய். பரவாயில்லை. எப்படியோ சதானந்தவதி உனது மனைவி. என்னென்ன கடமைகள் இருக்கிறதோ அதை ஒழுங்காக செய். மனைவியை அன்புடன் நடத்து. நல்ல கணவராக இரு" என்று கூறி பேச்சை முடித்துக் கொண்டார்.

சத்தியபாமா எம்.ஜி.ஆர். நடித்த எந்தப் படத்தையும் பார்க்கத் தவற மாட்டார். ஒருநாள் சத்தியபாமா எம்.ஜி.ஆரை நோக்கி "ராமச்சந்திரா! சினிமாவில் நடிக்கும் நடிகர்கள் அழுவது போன்ற காட்சிகளில் தத்ரூபமாக நடிக்கிறார்கள். ஆனால் நீ அவ்வாறில்லை. அழுவது போன்ற காட்சிகளில் முகத்தை மறைக்கிறாய். ஏன்?" என கேட்டார். அதற்கு எம்.ஜி.ஆர். அம்மாவை நோக்கி "அம்மா... நான் எனது ரசிகர்களிடையே ஓர் அழகானவனாகவும் ஒரு வீரனாகவும் என்னைக் காட்ட விரும்புகிறேன். அழகானவன் அழுதால் முகம் அழகற்றதாக தோன்றும். வீரன் அழுதால் மக்களுக்கு வலிமையில் நம்பிக்கை போய் விடும். இந்த இரு காரணங்களை உத்தேசித்துத்தான் அழுவது போன்ற காட்சிகளில் முகத்தை கைகளால் மூடிக் கொள்கிறேன்" என்றார்.

சத்தியபாமாவுக்கு எம்.ஜி.ஆருக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டும் என்ற ஆசை மிக அதிகம். எம்.ஜி.ஆரின் முதல் மனைவியிடம் இருந்து குழந்தை கிடைத்தும் உயிருடன் இல்லை. எனவே இரண்டாவது மனைவி சதானந்தவதியிடம் இருந்தாவது பெற விரும்பினார்.

சதானந்தவதி மிகவும் பலவீனமாக இருப்பதைக் கண்டு ஒருநாள் சத்தியபாமா டாக்டரிடம் அழைத்துப் போய் உடல் வலுவடைய ஊசி போட செய்தார்கள்.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# நடிப்புக்கலையில் உச்சத்தை தொட்டவர் டி.எஸ். பாலையா

இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சுண்டாங்கோட்டை என்ற சின்னஞ்சிறு கிராமம்தான் டி.எஸ். பாலையாவின் சொந்த ஊர். சர்க்கஸில் சேர்ந்து பெரிய கலைஞனாக வேண்டும் என்ற உந்துதலோடு, அப்பா அம்மாவிடம் சொல்லாமல் 14 வயதில் வீட்டை விட்டு ஓடி வந்தவருக்கு அடைக்கலம் கொடுத்தது மதுரை மண். அங்கே பிரபலமாக இருந்த மதுரை ஒரிஜினல் பாய்ஸ் நாடக கம்பெனியில் சேர்ந்துவிடத் துடித்தவருக்கு ஒரு வாய்ப்பு அமைந்தது. பாய்ஸ் கம்பெனியிலிருந்து விலகி, பல இளம் நடிகர்கள் ஒன்றிணைந்து ஆரம்பித்த 'பாலமோஹன சபா'வில் இடம் கிடைத்தது.

அப்போது பாலையாவுக்கு 15 வயது. அந்த சபாவில் பாலையாவுக்கு நடிப்புக் கலையைச் சொல்லிக்கொடுத்தவர் அவரது வாத்தியார் கந்தசாமி முதலியார். அவர் ஒரு திரைப்படத்துக்கு வசனம் எழுதினார். அந்தப் படம் எல்லீஸ் ஆர். டங்கன் முதல்முறையாக இயக்கிய 'சதி லீலாவதி'(1936). அந்தப் படத்தில், தனக்கு மிகவும் பிடித்த மாணவன் பாலையாவுக்கு வாய்ப்பு வாங்கிக் கொடுத்தார். அறிமுகப் படத்திலேயே வில்லன் வேடம் என்பதுதான் பாலையா திரை வாழ்க்கையில் ஆச்சரியமான தொடக்கம்.

எம்.ஜி.ஆர். சுயசரிதையில் பாலையா சதி லீலாவதி எம்.ஜி.ஆருக்கு மட்டும் முதல் படம் என்று நினைத்துவிடாதீர்கள்.

எம்.கே.ராதா, என்.எஸ்.கிருஷ்ணன், டி.எஸ்.பாலையா, கே.ஏ.தங்கவேலு ஆகியோருக்கும் கூட முதல் படம் 'சதி லீலாவதி' தான்.

அந்தப் படத்தில் ஒல்லியான வில்லனாக டி.எஸ்.பாலையா வருவார்.

பி.யூ.சின்னப்பா நடித்த ஆரிய மாலா (1941), ஜகதலப் பிரதாபன் (1944) போன்ற படங்களிலும் வில்லனாக நடித்தார் பாலையா. மீரா படத்தில் பாலையாவுடன் வரும் தாடி வைத்த இளைஞர்தான் எம்.ஜி.ஆர். ஒரு படத்தில், எம்.ஜி.ஆருக்கு ஒரு நல்ல பாத்திரம் கிடைத்து கல்கத்தாவுக்குப் படப்பிடிப்புக்காகப் போன போது, பாலையா அங்கு வந்தாராம். எம்.ஜி.ஆருக்கு ஒதுக்கப்பட்ட அந்தப் பாத்திரம் பாலையாவுக்குப் போய்விட்டது. எம்.ஜி.ஆருக்குச் சின்ன கதாபாத்திரம் கிடைத்தது. "அந்த ரோலை அன்று பாலையா செய்த மாதிரி என்னால் நிச்சயமாகச் செய்திருக்க முடியாது" என்று 'நான் ஏன் பிறந்தேன்?' சுயசரிதையில் எழுதினார் எம்.ஜி.ஆர்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் விரக்தியில் சாமியாராகப் போய் விட்டார் பாலையா. பாண்டிச்சேரிக்குப் பட வேலையாகச் சென்றிருந்த மாடர்ன் தியேட்டர் டி.ஆர். சுந்தரம் கண்ணில் பட்டிருக்கிறார். 'யார்டா அந்தச் சாமியார். பாலையா மாதிரி தெரியுதே' என்று 'கண்டு' அவரைப் 'பிடித்து' அந்தக் கணமே அவரை வலுக்கட்டாயமாகத் தனது காரில் ஏற்றிக்கொண்டு சேலம் வந்து சேர்ந்து விட்டார். அடுத்தநாளே அங்கே படப்பிடிப்பு நடந்துவந்த 'பர்மா ராணி' என்ற படத்திலும் நடிக்க வைத்து விட்டாராம்.



மாடர்ன் தியேட்டர்ஸ் 'சித்ரா' படத்தில் பாலையா கதாநாயகனாக நடித்தார். ஒரு மலையாளப் படம் 'ப்ரசன்ன'. லலிதா, பத்மினி நடித்த அந்த மலையாளப் படத்திலும் பாலையா கதாநாயகனாக நடித்தார். இதன் பிறகு பாலையா தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத நடிகரானார்.

வேலைக்காரி (1949) படத்தில் பாலையா செய்த பகுத்தறிவாளன் பாத்திரம்தான் பின்னாட்களில், எம்.ஜி.ஆர்., சிவாஜி, எஸ்.எஸ்.ஆர். செய்த பகுத்தறிவுக் கதாபாத்திரங்களுக்கு முன்னோடி என்று அசோகமித்திரன் சொல்வார். இதில் விசித்திரம் என்னவென்றால் பாலையா ஒரு பழுத்த காங்கிரஸ்வாதி! என்றாலும் பகுத்தறிவு இயக்கத்தின் அபிமானியாகவும் இருந்தார். திரையில் பகுத்தறிவு பீரங்கியாக இருந்த நடிகவேள் எம்.ஆர். ராதாவுடன் கடைசி நாட்கள் வரை இணை பிரியாத நண்பராக இருந்தார்.

1956ல் 'மாமன் மகள்' படத்தில் ஜெமினி, சாவித்திரி, சந்திரபாபு, டி.எஸ்.துரைராஜ் ஆகியோருடன் பாலையா நடித்தார். அதே வருடம் மதுரை வீரன் படத்தில் எம்.ஜி.ஆருக்கு வில்லனாகி ஆக்ரோஷமாகக் கத்தியை உருவி "இன்று என்ன கிழமை?" என்பார். வெள்ளிக்கிழமை என்று அல்லக்கை சொல்லவும் "அடடா! இன்று விரதம்" என்று மீண்டும் உறையில் போட்டு விடுவார்.

"அரசே! நாங்கள் 'பின் தொடர்ந்து' போனோம். ஆனால் அவர்கள் 'முன் தொடர்ந்து' போய்விட்டார்கள்!" என்பார்.

'புதுமைப்பித்தன்' (1957 ) படத்தில் எம்.ஜி.ஆர் "அதோ வருகிறது வஞ்சகத்தின் மொத்த உருவம்" என்பார். அப்போது, பாலையா குண்டாகக் கொழுகொழுவென்று நடந்து வருவார்.

வில்லனாக நடித்ததில் அவர் கலந்து செய்த நகைச்சுவை எம்.ஆர்.ராதாவின் பாணிக்கு முற்றிலும் மாறானது.

(தொடரும்)



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# Thinakaran 91th Anniversary




***M. Hasn Team leader, Dr Rumei Hashim Patron, M. Badiudeen Chairman, M. Murthala Pracident, H Jazook Secretary , M. Husain Treasurer, Ummar Mehilar Manager, M. Fasly Captain, M. Mulaffer Former National player, Amees Zakariya, Mashoor Mawlana, M. Rizvi, Kamarul Zaman, Rizvi Hussain, M. Fawmy, M. Ikram, M. Ansar, M. Munsif, M. Fawsan, M. Mumthas, M. Nasir, M. Risha, M. Riyas, M. Zahirak, M. Hazeel, M. Rifas, H. Bashar, M. Ali***

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுலை மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.